Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஒலிகள் எதிரொலிகள்

ஆரார்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

ஒலிகள் எதிரொலிகள் — ஆரார்

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri D 6884

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

Forwarded free of cost and with the compliments of the Department of Education Government of India, New Delhi.

ஒலிகள் எதிரொலிகள்

66884

பாரதியாரின்
பாடல்கள் சிலவற்றுக்கு
விமரிசனம் விளக்கம்

DONATION

ஆரார்

पुस्तकालय
गुरुकुल कांगड़ी विश्वविद्यालय

அறிவரங்கம்
திருப்புத்தூர் 623 211

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஒலிகள் எதிரொலிகள்

ஆரார்

முதற்பதிப்பு: நவம்பர் 1985

வெளியீடு
அறிவரங்கம்
ஆறுமுக நகர்
திருப்புத்தூர் 623211

அச்சும் அமைப்பும்
மீரா அச்சகம்
6, கணேஷ்நகர் 4ஆம் வீதி
புதுக்கோட்டை 622001

பக்கம் 6+316
விலை ரூ. 32-00

□

Oligal Ethiroligal (Voices and Echo)
A Detailed Consideration of
Selected Poems of
The Great Tamil Bard
Subramania Bharati

Aaraar

First Edition: Nov. 1985

Publishers
Arivarangam
Arumuga Nagar
TIRUPPATTUR 623 211
P. M. Dt.

Printers
Meera Printers
6, Ganesh Nagar 4th street
Pudukkottai 622 001

Pages 6+316

Price. Rs. 32/-

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

குறிப்பு

பாரதியாரின் பாடல்களில் தேசிய கீதங்கள் தனிச் சிறப்பு உடையவை. அவற்றுள் 26 பாடல்களுக்கு இங்கே பொருளும் இக்காலத்துக்கான பொருத்தமும் ஆராயப் படுகின்றன.

அவரது நூற்றாண்டு விழாவின் போது இந்த நூலை வெளிக்கொணர விரும்பினேம். அப்போது கவிஞரைப் பற்றி வெளிவந்த நூல்களின் பெருக்கமும் வெளிவந்த வேகமும் மலைப்பை உண்டாக்கின. ஆகவே தயக்கம் ஏற்பட்டது. இப்பொழுது அவரது நூற்று மூன்றாவது ஆண்டின் போது வெளிக் கொணர்கிறேம்.

இதற்கிடையில் இந்தியாவிலும் சூழ்ந்த உலகிலும் ஆறுகளில் எவ்வளவோ வெள்ளம் பெருகி ஓடிவிட்டது. ஆயினும் இந்நூலகத்துத் திறம் தெரிந்து கூறப்பட்ட கருத்துக்கள் இன்றும் சிறப்போடு மிளிர்வதை வாசகர்கள் படித்து மகிழ்வார்கள்.

இது பாரதி நூற்பரப்பில் தனிவகையான ஒரு புது நூல்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பாரதியாரின்
தேசிய கீதங்கள்
இருபத்தாறு

※

I பதிப்புக் குறிப்பு

II ஒலிகள் எதிரொலிகள்

1. வந்தேமாதரம் ○ என்போம் எங்கள்
2. வந்தேமாதரம் ○ ஜய ஜய பாரத
3. நாட்டு வணக்கம் ○ எந்தையும் தாயும்
4. பாரத நாடு ○ பாருக்குள்ளே நல்ல
5. பாரத தேசம் ○ என்று பெயர் சொல்லு
6. எங்கள் நாடு ○ மன்னும் இமயமலை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

7. ஜய பாரத ○ சிறந்து நின்ற சிந்தை
8. பாரத மாதா ○ முன்னை இலங்கை அரக்கர்
9. எங்கள் தாய் ○ தொன்று நிகழ்ந்த தனைத்
10. வெறிகொண்ட தாய் ○ பேயவள் காண்
11. பாரத மாதா திருப்பள்ளி யெழுச்சி ○ பொழுது
12. பாரத மாதா நவரத்தினமாலை ○ வீரர்முப்
13. பாரத தேவியின் திருத்தசாங்கம் ○ பச்சை
14. மாதாவின் துவஜம் ○ தாயின் மணிக்கொடி
15. புது வருஷம் ○ வாழிய செந்தமிழ் வாழ்க
16. பாரத ஜனங்களின் தற்கால நிலைமை ○ நெஞ்
17. மறவன் பாட்டு ○ மண்வெட்டிக் கூலி
18. பிஜித் தீவிலே ஹிந்து ஸ்திரீகள் ○ கரும்புத்
19. நிகழ்கின்ற ஹிந்துஸ்தானமும் போகின்ற ஹிந்துஸ்தானமும் ○
20. பாரத சமுதாயம் ○ வாழ்கவே வாழ்க
21. மாஜினியின் சபதம் ○ பேரருட் கடவுள்
22. பெல்ஜியத்திற்கு வாழ்த்து ○ அறத்தினால் வீழ்
23. புதிய ருஷியா ○ மாகாளி பராசக்தி உருசிய

பிற்சேர்க்கை

24. குருகோவிந்தர் ○ ஆயிரத் தெழுநூற்றைம்
25. பூபேந்திர விஜயம் ○ பாபேந்திரியஞ் செறுத்த
26. வ. உ. சி.க்கு வாழ்த்து ○ வேளாளன் சிறை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

1

வணக்கம் தாயே!

○

இந்த நூற்றுண்டின் தொடக்க காலம்...

வந்தே மாதரம்!

அப்படிக் கூப்பாடு போடாதே, அது எங்களுக்கு எதிரான கூச்சல்:

— இவ்வாறு, ஆளவந்த அயல் நாட்டார் கூற

வந்தே மாதரம்!

அப்படிக் கத்தாதே, உனக்கும் சும்மா இருக்கும் எங்களுக்கும் ஆபத்தை உண்டாக்காதே:

— இவ்வாறு உள்நாட்டில் உள்ள அயல்நாட்டு அடியார்களும் அப்பாவிகளும் அலமந்து கூற

வந்தே மாதரம்!

தேச பக்தர்கள் வீராவேசமாக முழங்க விரைந்து நிறைந்து எதிரொலி செய்கிறது அந்த மந்திரம்:

வந்தே மாதரம்!

இந்தியா எங்கும் எழுந்து பரவி அலை மோதி எல்லாரையும் ஒன்று படுத்தி உயிர்த்து எழச் செய்த மந்திரம் ஆனது:

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வந்தே மாதரம்!

○

இந்த முதற் பாடல்
அயல் நாட்டாரை நோக்கி அவர்கட்கு மறுமொழியும் உள் நாட்டாரை நோக்கி அவர்கட்கு உண்மை விளக்கமும் உரைப்பதாகிய நாடகப் பாங்கில் உணர்ச்சி கொழிக்க அமைந்துள்ளது.

---

1. வந்தே மாதரம்

எங்கள் மாநிலத் தாயை வணங்குதும்

பாடலின் பொருளமைதி.

ஒன்று இரண்டு

சாதி மதங்களைப் பொருட்டாக நினைக்க மாட்டோம். இந்த நாட்டில் சிலர் உயர்குடிப் பிறப்பு என்பதை அடைந்துள்ளனர். அவர்கள் வேதியர்களாக இருந்தாலும் சரி வேறு எவராக இருந்தாலும் சரி; எல்லாரும் ஒரு நிகர் தான். தாழ்ந்த குடிப்பிறப்பினர் எனச் சிலரை இழிவு படுத்தி வைத்திருக்கிறோம். அவர்களும் எம்முடன் பிறந்து இங்கு வாழ்ந்திருப்பவர்களே; சீன நாட்டவர்கள் அல்லர். மற்றும் பிற தேசத்தாரும் நமக்குத் தீங்கு இழைக்கிறார்கள்; நம்முடன் பிறந்த தணிந்த நிலை மக்கள் அப்படித் தீங்குகளா செய்கிறார்கள், இல்லையே?

மூன்று

இந்த நாட்டில் ஆயிரம் சாதிகள் இருக்கலாம். அது எங்கள் சொந்த விஷயம்; உள்நாட்டுக் கதை. அதற்காக அன்னியர் வந்து இங்கே புகுவதில் என்ன நியாயம் இருக்கிறது?

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஒரு தாயின் வயிற்றிற் பிறந்தோர் தம்முள் சண்டையிட்டுக் கொள்ளுதல் உலகிற் காணப்படாதது அன்று. அங்ஙனம் சண்டையிட்டுக் கொண்டாலும் அவர்கள் உடன் பிறந்தார் தாமே? மீண்டும் கூடிக் கொள்வர் அல்லவா?

நான்கு

ஒன்று பட்டாலே நமக்கு வாழ்வு. ஒற்றுமை குலைந்தால் அடியோடு தாழ்வு தான்.

இந்த உண்மையை இந்திய நாட்டார் நன்கு உணர வேண்டும். இது தான் ஞானம். இந்த ஞானம் — மெய்யறிவு — நமக்கு வந்து வாய்த்து விட்டாற் போதும், வேறெதுவும் கூட வேண்டுவதில்லை; விடுதலை வந்து விடும், பிற எல்லா நலங்களும் வந்து சேர்ந்து விடும்

ஐந்து

ஒற்றுமை உரம் பெற்று நிரந்தரமாக இருக்க வேண்டுமென்றால் நம்மிடையே சமத்துவ உணர்வு வேண்டும். நல்லதோ கெட்டதோ எல்லாமும் நம் அனைவர்க்கும் பொதுவாக வேண்டும். வாழ்விலும் தாழ்விலும் ஒருயிராக வாழும் உளத் திண்மை இங்கு அத்தனை பேருக்கும் இன்றியமையாதிருக்க வேண்டும்.

ஆறு

அடிமைத் தொழில் அற்பத் தனமானது. ஆனால் அந்த அடிமைத் தொழிலை மதிப்பிற்குரியதாகக் கருதி நாம் வாழ்க்கை நடத்திய பண்டைய நாட்களுக்காக மனப்பூர்வமான நாணம் கொள்ளுவோம். தொல்லையும் இகழ்ச்சியும் தரும் அந்த நிலைமாறுவதற்கு இன்றைய அடிமைப் பிழைப்பைத் 'தூ' வென்று உமிழ்ந்து தள்ளுவோம்.

எண்ண அலைகள்

○

இந்தப் பாட்டின் முதலிரு சரணங்களும் நம் நாடு இருந்த நிலையினை அப்படியே காட்டுகின்றன.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சீனத்தராய் விடுவாரோ?—

என்ற அதிலுள்ள தற்செயலான கேள்வியானது பின்பு நம் நாட்டின் மீது சீனு படையெடுத்தகாலை உண்மையாகவே நடைபெற்று, சீனத்தாரோடு நாம் எவ்வளவு தான் உடன் பிறப்பாகக் கருதிப் பழகினுலும், சம தரும உறவின்முறை கொண்டாடினுலும், இயல்பிலே ஆதிக்க வெறி ஊறப் பெற்ற அவர்கள் நம்மைக் கீழ்நிலைக்குத் தள்ளவே பார்ப்பார்கள் என்பது நடைபெற்று—நம் தேசமெங்கும் எதிரொலி செய்தது; பாரதியாரைத் திடீரென்று நினைவுகூர வைத்தது!

'பிற தேயத்தார் தீங்கிழைத்தல்' என்பது இந்தியாவிற்கு நிரந்தரமான தலைவலி அல்லது அதன் தலைவிதி என்பது நாம் அனைவரும் அறிந்த உண்மையாகும்.

இந் நிலைக்குக் காரணம் இங்கிருக்கும் சாதிக் கொடுமைகள், பொருளாதாரச் சுரண்டல்கள் என்பதும் அவை நீங்கப் பெற்று ஒற்றுமையும் உண்மையான சமத்துவ உணர்வும் உள்ளத்துள் உரம் பெற வளருமாயின் பிற தேயத்தார் தீங்கு இழைக்கத் துணியார்; மேலும் மதிப்பு அளிப்பர் என்பதும் அடுத்து வரும் சரணங்களால் புலப்படுத்தப் பட்டுள்ளன.

○

மூன்ருவது சரணம், ஆதிக்கம் கருதி வந்து இங்கே கிடக்கும் அயலாரை நோக்கி 'அன்னியர் வந்து புகல் என்ன நீதி?' என்று அதட்டிக் கேட்கிறது.

அதே சமயம், இங்குள்ளார், தாங்கள் சகோதரர்கள் என் பதை மனப் பூர்வமாக உணர வேண்டும்; பிறர்க்கும் அதனைத் தம் செய்கையாற் காட்டி மெய்ப்பிக்க வேண்டும் என்பதை நம் நாட்டார்க்கு அறிவுறுத்துகிறது.

○

ஒன்றுபடுவதே சுதந்திர வாழ்வுக்குரிய நல்வழி; அதைத் தெரிந்து கொள்வதே ஞானம் என்கிறது அடுத்த சரணம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நாட்டு விடுதலைக்கும் ஆன்ம விடுதலைக்கும் அதுவே—ஒன்று படுதலே—வழி என்பது இங்கு உறுதிபெற உரைபெறுகிறது. ஆன்ம விடுதலைக்கான ஒன்றுபடுதல் யோகம் எனப்படும். விடுதலை என்பதனை வீடுபேறு அல்லது முத்தி என்று சொல்லு வார்கள்.

பாரதியார் இலக்கியக் கவிஞர் என்று அரும்பாகித் தேசபக்திக் கவிஞர் என்று போதாகிப் பின்பு தெய்வபக்திக் கவிஞர் மலராகி மணங் கமழ்ந்தார். அவர் தேசபக்திக் கவிஞர் என்று நாட்டன்பில் எடுப்பாக இருந்த காலத்தும் தெய்வ பக்தியின் தொனி இழையவே பாடியுள்ளார்; பின்பு தெய்வபக் தியைத் தூக்கலாகத் துதைந்து பாடிய காலத்தும் அதனைத் தேசபக்தியின் ஆவேசச் சாயலிலே பாடியுள்ளார்; அதற்குக் காரணம், அவை இரண்டும் ஒன்றே என்ற அடிப்படையின் பேரில் தான் இந்திய மறுமலர்ச்சி தோன்றி வளர்ந்தது என்பதே யாகும்.

பங்கிம் சந்திரரின் வந்தே மாதரப் பாடல் இதனை வெளிப் படையாகவே விளம்புகிறது. திருமகள் கலைமகள் மலைமகள் மற்றும் 'ஆலயம் தோறும் அணிபெற விளங்கும்' தெய்வ சக்திகள் எல்லாமும் நீயே என்று இயற்கை யழகோடு இந்தியத் தாயைப் புகழ்ந்தேத்துகிறது அந்தப் பாடல்.

அந்தக் கொள்கையைச் சிக்கெனப் பிடித்துக் கொண்டார் பாரதியார். அவரது கவிவாழ்வின் இறுதிக் காலம் வரையும் அந்த இழைபு — இயைபு — இருந்து கொண்டே வந்தது; வளர்ந்து கொண்டே வந்தது.

அதனால் தான்,

ஒன்றுபட்டா லுண்டு வாழ்வு

என்று அவர் கூறும் பொழுது சமுதாயப் பொருளோடு சமயப் பொருளும் தொனிக்கிறது.

அவ்வாறே,

அச்சமில்லை அச்சமில்லை

எனவும், (பண்டாரப் பாட்டு)

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

யார்க்கும் குடியல்லேன் யானென்ப
　　தோர்ந்தனன் மாயையே - உன்றன்
போர்க்கஞ்சு வேனே பொடியாக்கு
　　வேனுன்னை மாயையே

எனவும் (மாயைப் பழித்தல்)

பற்றறுக்க முயலும் பண்டாரமாகவும் மாயையொடு போராடும் ஞானியாகவும் அவர் கொடுத்த குரல்கள் அன்னிய ஆதிக்கத்தை எதிர்த்து எழுப்பிய முழக்கங்களாகவும் கருதப் பட்டு மேடைகளிலும் சிறைக் கூடங்களிலும் எதிரொலி செய்யப் பட்டன.

O

அடுத்து, ஒருமைப்பாடு என்பதன் செயன்முறையை அழகாக உணர்த்துகிறது,

எப்பதம் வாய்த்திடு மேனும்—நம்மில்
　　யாவர்க்கும் அந்த நிலைபொது வாகும்;
முப்பது கோடியும் வாழ்வோம்—வீழில்
　　முப்பது கோடி முழுமையும் வீழ்வோம்

என்ற இனிய சரணம்.

ஒற்றுமை மட்டும் போதாது. அஃது ஒருமைப்பாட்டால் உரம் பெறவேண்டும். உயிரிலே ஒன்றிய சமத்துவப் பண்பே—இன்ப துன்பங்களைச் சமமாகப் பகிர்ந்து பங்குகொள்ளும் பக்குவமே—ஒருமைப்பாட்டின் பிறப்பிடம்.

இத்தகைய ஒருமித்த உணர்ச்சியே, முன்னால் இருக்கும் சரணங்களிற் புகலப்பெற்ற சகோதரத்துவம், சுதந்திரம் என்ற இரண்டு கொள்கைகளுக்கும் அடிப்படையாகும்.

O

ஆறுவது கண்ணியாக

தேவி நம் பாரத பூமி—எங்கள்
　　தீமைகள் யாவையும் தீர்த்தருள் செய்வாள்
ஆவியுடல் பொருள் மூன்றும்—அந்த
　　அன்னைபொற் றளினுக் கர்ப்பித மாக்கி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

என்ற ஒரு சரணம் முதற்பதிப்பின் போது வெளிவந்திருந்தது. அது பின் வந்த பதிப்புகளில் எதனாலோ விடப்பட்டது.

அந்தச் சரணம், பாரதி பாடல்கள் அனைத்தினுள்ளும் ஓடுகின்ற கருத்துநாடி ஒன்றனை மறைமுகமாக அறிமுகம் செய்துள்ளது.

புகழ் பெற்ற மேதை ஒருவர் எழுதிய ஆங்கில நாடகங்களின் முதற்காட்சிகள் அந்தந்த நாடகம் முழுமைக்குமான சிறிய அறிமுகமாக — கருத்துச் சூத்திரமாக — இருக்கும் என்பர். அவ்வாறே பாரதியின் படைப்புகள் அனைத்துக்கும் அறிமுகச் சூத்திரமாக உள்ளது 'தேவி நம் பாரத பூமி' என்ற சரணம்.

பாரதி பாடல்தொகையில் முதலாவதாக உள்ள இந்த வந்தே மாதரம் என்ற பாடல் முதலாக இறுதியில் உளதாகிய பாஞ்சாலி சபதம் வரை இருக்கும் யாவிலும் உள்ளொலியாக — அந்தர நாதமாக — இருக்கும் நாட்டுப்பற்று, தாய் வழிபாடு, திண்ணிய நம்பிக்கை தியாக உணர்ச்சி என்ற பண்புகள் நான்கினையும் அசைத்து இசைக்கிறது அந்தச் சரணம்.

இந்தப் பண்புகளே, பாரதி பாக்களின் பொதுப் பண்பாக, நாளாக ஆக அவரது படைப்புக்களில் ஊறித் தோய்ந்து கனிந்து நாத வெள்ளமாகப் பரவி வருகின்றன.

○

1907 ஆம் ஆண்டு வெளிவந்த சுதேச கீதங்கள் என்ற பதிப்பில் இல்லாத ஒரு சரணம் தற்போதைய பதிப்புகளில் இருக்கிறது. பாரதியாரே பாடற் பகுதிகளைக் கூட்டியும் குறைத்தும் திருத்தம் செய்தாரோ என்பது ஆராய்ச்சிக் குரியது என்று ரா. அ. பத்மநாபன் குறிப்பிடுகின்றார்.

அந்தச் சரணம்

புல்லடி மைத்தொழில் பேணி—பண்டு
    போயின நாட்களுக் கினிமனம் நாணி
தொல்லை இகழ்ச்சிகள் தீர—இந்தத்
    தொண்டு நிலைமையைத் தூவென்று தள்ளி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

என்பதாகும். தமது புதிய ஆத்திசூடியில் கவிஞர் 'வெடிப்புறப் பேசு' என்று விளம்பியதற் கொப்ப இந்தச் சரணத்தில் சொற்கள் வெடித்துக் கொண்டு வருவன போல் இருக்கின்றன.

வெடிப்பும் துடிப்பும் பாரதி நடையின் சிறப்புக் கூறுகள் என்பதைக் காட்டும் இந்தச் சரணத்தில் இனிய சந்தமும் இணையவே அது அதிக வேகம் பெற்று விடுகிறது.

O

'தாயுமானவரின் ஆனந்தக் களிப்பு மெட்டு; இராகம் நாத நாமக் கிரியை, தாளம் ஆதி' என்று குறிப்பிடப் பட்டுள்ளது இந்தப் பாடலின் தொடக்கத்தில்.

தாயுமானவர் உலகறிவும் மெய்யறிவும் வாய்க்கப் பெற்ற பேரறிஞர். தெய்வ பக்தரும் தேச பக்தருமான அவரது செல்வாக்கு பாரதியாரிடம் மிகுதியாகக் காணக்கிடக்கின்றது.

'சங்கர சங்கர சம்போ' என்ற ஆனந்தக் களிப்பு, நுண்மை மிக்க கருத்தினை இசை எளிமையில் குழைத்துக் கொடுக்கும் வல்லமை உடையது; பரதேசிகள் பாடிப் பாடிப் பரப்பிய பைந்தமிழ்ப் பாங்கு உடையது.

வந்தே மாதரம் என்ற இந்தப் பாடல் தாயுமானவரின் ஆனந்தக் களிப்பு மெட்டில் அமைந்து காட்டுத் தீயென அந்தக் காலத்தில் யாண்டும் விரைந்து பரவி மக்களின் கவனத்தைப் பிணித்தது. இது மட்டுமல்லாது தமிழுலகு நன்கு அறிந்த தாயின் மணிக்கொடியும் தமிழில் விஞ்ஞானம் வளர வேண்டும் என்ற வேட்கையைக் கிளரும் பாடல் ஒன்றை எழுதித் தருமாறு அந் நாளில் ராஜாஜி வேண்டிக் கொண்ட மாத்திரத்தில் கவிஞர் எழுதிக் கொடுத்த தமிழ்த் தாய் தன் மக்களைப் புதிய சாத்திரம் வேண்டுதல் என்ற (ஆதிசிவன் என்று தொடங்கும்) பாடலும், மனப் பக்குவம் மிக்குப் பகுத்தறிவு ஒளி திகழப் பாடிய உயிர்பெற்ற தமிழர் என்ற பாடலும் ஆனந்தக் களிப்பு மெட்டில் அமைவு பெற்றுள்ளன. விரைந்தும் உணர்ச்சி கலந்தும் கருத்தோட்டத்தை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வெளிப்படுத்தற்குப் பாரதியார்க்கு நொண்டிச் சிந்து போன்றே ஆனந்தக் களிப்பும் வாய்ப்பான எளிய, வலிய, கருவியாகக் கைகொடுத்தது என்று தோன்றுகின்றது.

○

இயற்பா எழுதுவதைக் காட்டிலும் இசைப்பா எழுதுவதையே பாரதியார் மிகுதியும் மேற்கொள்ளுகிருர்.

கல்வியறிவு இல்லாத மாந்தர் மிகுந்து இருக்கின்ற நாட்டில் கருத்துக்களைப் பரப்பச் செவியே சிறந்த சாதனம் என்பதை அவர் கண்டு கொண்டார்.

தமது திறனையும் கடனையும் இசைத் தமிழை உயிர்ப்பிப்பதில் தான் உள்ளன, அத்துறை தான் தமக்கு வெற்றி தரும் என்பதனை அவர் நன்கு அறிந்து கொண்டார். குறிப்பாக அதிலும் நாட்டுப்புறமக்கள் பாடும் எளிய மெட்டுகள், இல்லத்தில் இருக்கும் மகளிர் பாடும் இசை மரபுகள் தமக்கு இசைவான வாய்க்கால்கள் என்பதனை உணர்ந்து கொண்டார்.

கருநாடக இசை எனப்படும் முதிர்ந்த பழைய இன்னிசை மரபையும் அவர் ஏற்ற பெற்றி தழுவிக் கொண்டார். அவருடைய பாடல்கள் பல மேற்கூறிய இருவகை இசை நிலைக்கும் பாலமாக அமைந்துள்ளன. இந்தச் செய்திகளை யெல்லாம் நமக்குச் சொல்லாமற் சொல்லுகின்றது **வந்தே மாதரம்** என்போம் எனும் பாடல்.

இராகம் தாளம்—இசைப் பழக்கம் உடையார்க்கு ஏற்ப அவை இப்பாடலுக்கும் தரப்பட்டுள்ளமை அறியத் தக்கதாகும்.

○

வணக்கம் தாயே எனப் பொருள் தரும் வந்தே மாதரம் என்ற மந்திரம் வங்க தேசத்தில் முன்பு எழுச்சி கொண்ட ஆனந்த மடத்து வீர சன்னியாசிகளிடமிருந்து போந்து இந்தியா வெங்கும் மின்சக்தி ஊட்டிய வடமொழித் தொடர் ஆகும். அதனைத் தமிழகத்துக் கவிஞர்கள், தேசபக்தர்கள், நூலாசிரியர்கள் ஆகியோர் செவி குளிர, அகங் குளிரக் கேட்டுத் தாமும் முழக்கமிட்டார்கள்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பாரதியார் அதனைப் போற்றிக் கொண்டு, மாநிலத்தாயை வணங்குதும் என்று அழகாக விரித்துத் தமிழாக்கம் செய்து பாடலில் தந்துள்ளார். மாநிலம் என்பது உலகினையும் குறிக்கும் உரிச்சொற்றொடராகும்.

அவ்வாறே சகோதரர் — சக உதரர் — என்ற வடசொல் ஒரு தாயின் வயிற்றிற் பிறந்தோர் என்று நல்ல தமிழாக்கம் பெற்றுள்ளது இந்தப் பாடலில்.

பாரதியார் காலத்தில் தனித் தமிழ் இயக்கம் தோன்றியது. அதன் முதல் ஆர்வலர்களில் ஒருவர் சுப்பிரமணிய சிவா என்ற தேசிய வீரர். அவர் 1915 இல் தமது ஞான பாநு என்ற திங்கள் இதழில் பின் வருமாறு ஒரு விளம்பரத்தை வெளியிட்டார்.

''உங்களால் தனித் தமிழ் எழுத முடியுமா? முடியுமானால் முந்துங்கள்.

சமஸ்கிருதம் முதலிய அன்னிய பாஷைச் சொற்களில் ஒன்றும் கலவாது தனித் தமிழில் நமது ஞான பாநுவில் எட்டுப் பக்கத்திற்குக் குறையாது வரும்படியாகத் தமிழ்ப் பாஷையின் சிறப்பைப் பற்றியாவது திருவள்ளுவ நாயனாரின் சரித்திரத்தையாவது எழுதுவோருக்கு ரூபா ஐந்து இனமளிப்பதாகத் தமிழபிமானி யொருவர் முன் வந்திருக்கிறார்.

சமஸ்கிருதச் சொல்லாகிய கஜம் திரிந்து தமிழில் கயம் என்றிருப்பது போன்ற திரிபுச் சொற்களும் உபயோகப் படுத்தலாகாது. சுருக்கத்தில், எந்தப் பாஷையின் சொற்களுக்கும் சம்பந்தமில்லாத தனித் தமிழ்ச் சொற்களே. உபயோகிக்க வேண்டும்...

இந்தப் பகுதியை மேற்கோளாகக் காட்டி வியப்புத் தெரிவித்து வரைகிறார் ம.பொ.சி தமது நூல் ஒன்றில்.

மறைமலையடிகள் 1916 இல் தனித் தமிழ் இயக்கத்தைத் தோற்றுவித்தார். பரிதிமாற் கலைஞர் அவருக்கு வழிகாட்டி போல் அமைந்தார்.

பாரதியாரின் இந்தப் பாடல் இதற்கெல்லாம் ஏழெட்டு ஆண்டுகட்கு முந்தியது. அவரிடம் தனித்தமிழும் உண்டு,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வடமொழித் தொடரும் உண்டு, அழகிய மொழி பெயர்ப்பும் உண்டு, புதுச் சொல் லாக்கமும் உண்டு.

தமது காலத்தில் பொது வாழ்வு, தேசியம், சர்வ தேசியம், சமயம், மொழி, பண்பாடு பற்றி என்னென்ன இயக்கங்கள் எழுந்தனவோ அவற்றை யெல்லாம் ஆர்வத்தோடு தெரிந்தும் உணர்ந்தும் தமக்கு ஒத்துக் கொள்ளக் கூடியவற்றை ஏற்ற இடத்தில் அறிமுகம் செய்துள்ளார், அரங்கேற்றியுள்ளார் அவர்.

இங்கே அழகிய தமிழாக்கம் — தனித் தமிழ் — என்பவற்றுக் கான ஆர்வத்தின் சான்றுகளைக் காண்கிறோம்.

○

பாரதியார் எழுதி அச்சேறிய முதற் செய்யுள் **தனிமை யிரக்கம்** என்பதாகும். அது மதுரை விவேக பாநு இதழில் 1904 இல் வெளிவந்தது.

சுதேச மித்திரனில் அவர் வெளியிட்ட முதற் பாடல் **வங்கமே வாழிய** என்பதாகும். அது 1905 இல் வெளிவந்தது. தேசியப் பாடல்களில் அவர் ஈடுபாடு உற்றதன் எழுவாய் அந்தப் பாடல் தான்.

அதே ஆண்டில் அவர் பங்கிம் சந்திரரின் வங்கப் பாடலான வந்தே மாதரத்தைத் தமிழாக்கினர். 1906 இல் வந்தே மாதரம் என்ற மகுடத்தில் வேறொரு பாடல் வரைந்து அந்த மந்திரத்தின் மேன்மையை விளக்கியுள்ளார்.

ஆயினும் முதன் முதலாக அவரது கவித்தொகுப்பு 1907 இல் தான் வெளிவந்தது. அதில் மூன்றே பாடல்கள் தாம் இருந் தன. அது முதலாக இந்நாள் வரை பாரதியாரின் தேசிய கீதங்கள் என்று வெளிவந்துள்ள யாவற்றிலும் முதலிடம் பெறுவது 'வந்தே மாதரம் என்போம்' என்று தொடங்கும் இந்தப் பாடலே யாகும்.

○

அந்தக் காலத்தில் சுதேச மித்திரன், இந்தியா இதழ்களில் 'மிக உயர்ந்த' சுதேசியப் பாடல்களைச் சிலர் எழுதி வந்தமை கண்டு 'அவை யாவரும் அறியத் தொகுக்கப் படின் பெரிதும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

உபயோகமாம்' என்று விரும்பி எழுதிய மதுரை (த் தமிழ்ச் சங்கத்து ஏடான) செந்தமிழ் (1908) இதழ்

''இப்போது பாரதியார் தாமியற்றிய தேச கீதங்களைத் திரட்டிச் சிறு புத்தகமாக வெளியிட்டிருப்பது எமக்குப் பெருமகிழ்ச்சி விளைத்தது''

என்று மகிழ்ந்து மதிப்புரை வரைந்திருந்தது. மேலும் அந்த இதழ்,

''...அத்தகைய பாடல்களும் கீதங்களும் தமிழ் மக்கட்கும் இன்றியமையாதனவா யிருத்தலோடு, அவை நாடெங்கும் பரவி ஊக்கத்தை விளைக்கக் கூடியனவாயு மிருத்தல் வேண்டும்''என்று ஆலோசனையும் கூறியிருந்தது.

அந்தச் செந்தமிழின் சிந்தனையைப் போலச் சிந்தித்த தமிழ்க் கவிஞர் பலர் ''பாடல்களும் கீதங்களும்'' இயற்றினர்.

அங்ஙனம் இயற்றியோருள் முன் நின்றவர் பாரதியார் என்பதில் ஐயமில்லை. மற்றவர்களின் தேசிய கீதங்களும், செந்தமிழ் இதழ் கூறியவாறு 'தொகுக்கப் பட்டிருப்பின் பெரிதும். உபயோகமாக' இருந்திருக்கும் என்பதில் ஐயமில்லை. அவற்றைப் பற்றி நாம் இந் நாளில் அதிகம் அறிய முடியாவிடினும், மதுரைக் கந்தசாமிக் கவிராயர், சோழவந்தான் அரசஞ் சண்முகனர் எழுதிய பாடல்களை அந்நாளைய இந்தியா இதழ் வெளியிட்டிருந்தமையைப் பாரதி தரிசனம் என்ற நூலில் காண முடிகிறது.

வந்தே மாதரப் பெருமை பற்றி அன்று கவிதை வரைந்த பாரதியார், கந்தசாமிக் கவிராயர், அரசஞ் சண்முகனர் ஆகிய மூவரது பாக்களையும் எடுத்துக் காட்டி பெ.சு. மணி என்பார் மூன்றையும் ஒப்பீடு செய்பவராக,

''இம் மூவரிலே கந்தசாமிக் கவிராயரின் கவிதையில் வந்தே மாதரத்தின் மாண்புகள் சற்று விரிவாக, அழுத்தமாக இசைக்கப் பட்டுள்ளன''

என்று எழுதுகிறுர். அதற்கு அவர் சான்று தந்து, முடிவாக,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கந்தசாமிக் கவிராயரின் கவிதை உயர்ந்து நிற்பதாகிய மதிப்பீட்டைத் தெரிவிக்கிறார்.

பெ. சு. மணி அங்ஙனம் எழுதியுள்ளமை பாரதியாரும் தமிழ்ப் புலவர்களும் என்ற நூலில் ஆகும். அதே நூலில் அவர் இப்போது அச்சில் இல்லாத மறைமலையடிகள் எழுதிய தேசபக்திப் பாவின் பகுதி ஒன்றையும், மாதவையா எழுதிய இந்தியக்கும்மி' முழுவதையும் தேடி வெளியிட்டு வாசகரை வியப்பிலும் உவப்பிலும் சிலிர்க்க வைத்துள்ளார்.

இவ்வாறுகக் கவிஞர்கள் சிலர் பலர் அந் நாளில் தேசியப் பாடல்களும் கீதங்களும் வரைந்தனர் என்று அறிகின்றோம். அவர்களுள் பாரதியாரைத் தவிர்த்த மற்றையோர் மற்றைய புலமைத் துறைகளில் முனைந்து தமிழுக்குச் சிறப்புச் சேர்த்து வந்தனர். பாரதியாரோ தம் திறமனைத்தையும் தேசிய விருப்பினுக்கே ஆகுதியாக்கித் தம்மையும் அதற்கே 'மீளா ஆளா' ஆக்கிக் கொண்டார்.

அதன் விளைவாக அவர் இந்திய தேசியத்தின் தனிப் பெருங் கவிஞராக மலர்ச்சியுற்றார்.

பின்னாளில் அவருக்குக் கிடைக்க விருந்த கவிதை வெற்றிகளுக்கு முதல் சின்னமாக—அச்சாரமாக—எக்காள ஒலியாக—இந்த வந்தே மாதர கீதம் இனிது அமைந்து கால்கோள் நடாத்தியது.

○

இன்றைக்கு—கவிதை தோன்றி எழுபத்தைந்து ஆண்டுகட்குப் பிறகு—அதே வந்தே மாதர கீதத்தை வாசித்துப் பார்க்கிறோம். மாசுமறுவற்ற இளைய கவிஞரின் மின்னல் வேகத்தையும் நாட்டுப் பற்றையும் நன்னெறி முழக்கத்தையும் காண்கிறோம்.

இருப்பினும் கால மாறுதல் நமது கவனத்தில் நிழலாடுகிறது. சில பகுதிகள் பயனற்றன போல் தென்படுகின்றன.

> சாதி மதங்களைப் பாரோம்......
>
> ஈனப்......

என்று தொடங்கும் இரு சரணங்களும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஆயிரம் உண்டிங்கு சாதி

என்ற அடியும் 'அந்தக்' காலத்தன என்று தோன்றுகின்றன. இந்தக் காலத்திற் பயனற்றன, ஒவ்வாதன என்று நமக்கு எண்ணத் தோன்றுகிறது.

ஒரு வேளை அவை பயனற்றுப் போகாமல் இருந்தால் இப்பொழுதாவது போய்விடவேண்டும்.

அங்ஙனம் அவை பயனற்றுப் போதலே நாட்டுக்கு நன்மை; பாரதிக்குப் பெருமை; அவரது ஆர்வத்தின் ஆதாரமான கொள்கைகட்கு வெற்றி என்பது திண்ணம்.

O

இனி, இப் பாடலில் வந்துள்ள கருத்துச் சிறப்புடைய அடிகள் சில இன்றும் நாளையும் நின்று நிலவி இந்தியர்க்கு வழி காட்டும் வல்லமை பெற்றுள்ளன என்பது கருதற்குரியதாகும்.

எப்பதம் வாய்த்திடு மேனும் — நம்மில்
யாவர்க்கும் அந்த நிலைபொது வாகும்
முப்பது கோடியும் வாழ்வோம் — வீழில்
முப்பது கோடி முழுமையும் வீழ்வோம்

என்பதும்

ஒன்றுபட் டாலுண்டு வாழ்வே - நம்மில்
ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே

என்பதும், (மக்கள் தொகை எண்ணிக்கைப் பகுதி தவிர)

இன்றைக்கும் வழிகாட்டுவன; என்றைக்கும் ஒளி தருவன. உலகளாவிய சிந்தனை உறவு பொருந்தியன.

இவ்வாறே, நீகிரோ தேயத்துக் கவிவாணர் ஒருவர்,

வாழ்வோ மாயின் அனைவரும் வாழ்வோம்
வீழ்வோ மெனினும் அனைவரும் வீழ்வோம்

என்று பாடியுள்ளதை—முன்னை நாள் சென்னை உயர்நீதி மன்ற நீதிபதி ஒருவர் மொழி பெயர்த்திருப்பதை—நண்பர் ஒருவர் ஒரு சமயம் வாசித்துக் காட்டினர்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இத்தகைய உள்ளார்ந்த உணர்ச்சி தமிழகத்தில் வ. உ. சி காலத்திலும், பின்பு காந்தியடிகள் மக்களியக்கத்தைத் தலைமை தாங்கி நாடெங்கும் நடத்திய காலத்தும் ஓரளவு நிலவியது.

தேசம் விடுதலை பெற்றதும் நிலை மாறியது. சமத்துவம் சார்ந்த ஒற்றுமை, தியாக உள்ளம் என்பன அடியோடு மாய்ந்தன. தேசிய வாதிகள் எனப்பட்டோர் சாதிய வாதிக ளாயினர். அகப்பட்டதைச் சுருட்டுவதில் விதேசியத்துக்கும் சுதேசியத்துக்கும் வேற்றுமை இல்லாது போயிற்று. 'விடுதலை யும் கெடுதலையும் ஒன்றே யாகும்' என்றும் கவிஞர் ஒருவர் பாடிய நிலையே பொதுநிலைமை ஆயிற்று.

அவ்வாறே, அந்தச் சமத்துவ உணர்ச்சி ஆழ் மனத்துள் வேரூன்றிப் பண்படாத காரணத்தால் நாட்டில் முற்போக்கு எனவும், புரட்சி எனவும் சமதருமம் எனவும் முகங்காட்டிய இயக்கங்களும் சுயநலச் சுழற்சியில் அகப்பட்டு முக்குளித்து முக்குளித்து எழுந்தன; எழுந்து கொண்டே இருக்கின்றன!

'எல்லாச் சாலைகளும் உரோமாபுரியை நோக்கிச் செல்லுகின் றன' என்றாற் போல நம் நாட்டில் எல்லா இயக்கங்களும் அந்தரங்கத்தில் சுயநலனை நோக்கியே செல்லுகின்றன.

பாவம், இந்திய மக்கள்! முன்னேறுகிறார்களா, இருந்த இடத்தில் இருக்கிறார்களா, கீழே ஆழ்ந்து மூழ்கிக்கொண்டிருக் கிறார்களா என்பது தெரியவில்லை.

○

விடுதலைப் போராட்ட காலத்தில் தமிழகத்தின் தெருக்களில், பொதுக் கூட்டங்களில், மகாநாடுகளில், சிறைக் கோட்டங் களில் ஆவேசத்துடன் எதிரொலி எழுப்பிய பாரதி பாடல்களில் இந்த வந்தே மாதரமும் ஒன்று. இதன் சிறப்பு

எப்பதம் வாய்த்திடு மேனும்—நம்மில்
யாவர்க்கும் அந்த நிலை பொதுவாகும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

முப்பது கோடியும் வாழ்வோம்—வீழில்
முப்பது கோடி முழுமையும் வீழ்வோம்

o

ஒன்றுபட் டாலுண்டு வாழ்வே—நம்மில்
ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே

என்ற சரணங்களில் அடங்கியிருக்கும் அடிப்படைக் கருத்து வலிமையின் மேல் எழுந்தது என்பது சரியான மதிப்பீடு ஆகும்.

o

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

2

வீரிய வாசகம்!

C

வீரிய வாசகம்

—எவ்வளவு அழகான சொற்றொடர்!

பாரதி எழுத்தே வீரிய வாசகம் தானே!

---

2. வந்தே மாதரம்

ஜய ஜய பாரத ஜய ஜய பாரத

என்ன சொல்கிறது இந்தப் பாடல்?

இந்தியா வெற்றி பெறுக எனப்போற்றி செய்து, அதற்காக வந்தே மாதரம் எனும் வீரிய வாசகத்தை எந் நிலையிலும் ஓதுவோம் என்று உரத்து முழங்குகிறது இந்தக் கீதம்.

ஒன்று

ஜய ஜய பாரத என்று அடுக்கி மொழிவது முதற் கண்ணி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இரண்டு

ஆரிய பூமியில் வாழும் மாதரும், ஆடவராகிய சூரியரும் சொல்லும் வீரிய வாசகம் வந்தே மாதரம் ஆகும்.

மூன்று

நொந்தாலும் வெந்தாலும் நந்தேசத்தவர்—இந்தியர்— துன்பு நெருக்குகளுக்கு இடையிலும் உவந்து சொல்வது வந்தே மாதரம் என்பதாகும்.

நான்கு

இனி ஒன்ருய் நின்று. வெற்றி பெறும் பொழுதும், அதனை அடையுமுன் உயிர் பிரிய நேரும் பொழுதும் வலிமை குறை யாது நாம் வந்தே மாதரம் என்று ஓதுவோம்,

பாடலைப் பற்றிச் சில சொற்கள்

○

முதல் இரண்டு சரணங்கள் (ஒரு சொல் தவிர) எல்லாமும் வடசொல்லாக இருக்கின்றன என்ருே ஆரிய பூமி என்று பாடுகின்ருரே என்ருே கருதாமல், விடுதலைப் போராட்ட நாட்களில் நாட்டன்பர் பலரும் ஓங்கிப் பாடிய பாட்டு இது. நெஞ்சுக்கு உரமும் ஊக்கமும் அளித்த ஒரு பாட்டு இஃது என்பதும் உண்மையே.

○

இதில் துள்ளி வரும் உணர்ச்சிக்கு ஒரு முக்கியமான காரணம், நறுக்குத் தறிப்பது போன்று இயங்கும் இசையமைப்பு ஆகும். எதுகை ஒழுங்கு அதற்குத் துணைபோகிறது. வஞ்சித் துறை அப்படித் தானே அமையும்?

சாரயல் நின்ருர்
வீரர்வி ரைந்தார்
நேருதும் என்ருர்
தேரினர் சென்ருர்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri
என்பது கவிதையிற் பெரிய கம்பர் பெருமானின் பாடல் களில் ஒன்று, இந்த ஜய ஜய பாரதமும் வஞ்சித்துறை வழியில் தானே வரு கிறது?

O

இன்றைக்கு,

வந்தே மாதரம் என்ற பீடுமிக்க சொற்றொடர் தனது ஆவேச இயைபுகளை இழந்துவிட்டது.

தேச பக்தி பொங்கி வழிந்த காலத்திலும் அந்த வீரிய வாசகத்தை நம் நாட்டின் இந்து சமயத்துத் தேச பக்தர்கள் மட்டுமே கர்ச்சனை செய்து வந்தார்கள். தாய் வணக்கம் என்பது முகமதியக் கோட்பாடுகளுக்கு முரணானது. ஆகவே அவர்கள் வந்தே மாதரத்தைக் கூறுவதில்லை. வந்தே மாதரப் பண் இசைக்கப் பெறும் பொழுது எழுந்து நின்று மதிப்புக் கொடுத்தனர்; ஆவேசத்தில் பங்கு கொண்டனர். ஆனால் அதனை ஓதுவது மட்டும் செய்வதில்லை.

விடுதலைப் போர் உச்ச நிலையை எட்டும் பொழுது, சர்வதேச அமைப்பைச் சார்ந்த பொதுவுடைமை முதலிய இயக்கங்கள் வந்தே மாதரத்தை விட்டு விலகிக் கொண்டன.

தமிழகத்தில் தேசிய இயக்கத்தினின்றும் விலகிச் சென்று சுயமரியாதை, திராவிட இயக்கம் ஆகியவற்றைத் தோற்று வித்த பெரியவரை எதிர்த்துக் கூட்டங்களில் வந்தே மாதரம் என்று தேசிய வாணர் குரல் கொடுத்த நேரங்களில் அவர் அந்தத் தொடரை வேறொரு விதமாகப் பிரித்து, 'வந்து யாரை ஏமாத்தப் பார்க்கிறீங்க?' என்று வினவினர்!

தேசம் விடுதலை யடைந்த பிறகு. தேசிய இயக்கத்தை நடத் திய மகாசபை தானும் ஆட்சிக்கு வேட்பாளர்களை நிறுத்தும் கட்சிகளில் ஒன்றாகியது. வந்தே மாதரம் தானும் மக்கள் மன்றை விட்டு விடைபெற்றுக் கொள்ளலாயிற்று.

இவ்வாறு, வந்தே மாதரம் என்பது சென்ற காலத்தின் சரித் திரச் செய்திகளில் ஒன்றாகி விடவே, அதன் சிறப்பை விதந்து பேசும் இந்தப் பாட்டும் அவ்வாறே சென்ற காலத்துக்கு உரிய தாகி விடுகின்றது.

O

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

3

மகிழ்ந்து குலாவி

○

புயலாக வீசும் கவிதை
மெல்லிய பூங்காற்ருக ஒரு கணம் மாறி
நம் நெஞ்சிற் புகுந்து
மெய்சிலிர்க்க வைக்கிறது!

---

3. நாட்டு வணக்கம்

சுதேச வந்தனம்

○

இந்தப் பாடலுக்கும் வந்தே மாதரம் என்பதே ஈற்றடியாக வருகின்றது.

ஆனல் அந்தத் தொடரின் முக்கியத்துவத்தைக் குறிப்பிட வந்தது என்பதை விடவும், தாய்நாடு— முந்தையர் நாடு— என்ற சிந்தனைகளை எழுப்பி அதனை வணங்குவோம் என்று குறிப்பிட வந்திருக்கிறது என்னுமாறு உள்ளது.

○

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நாட்டு வணக்கம் என்று பாரதியார் தந்த தமிழ்த் தலைப்பும் சுதேச வந்தனம் என்ற வடமொழித் தலைப்பும் இதற்கு உரிமை பூண்டு வந்துள்ளன.

சில பதிப்பாளர்கள் இதற்கும் வந்தே மாதரம் என்றே தலைப்புக் கொடுத்து வெளியிட்டுள்ளார்கள்.

கருத்து இனிமை

ஒன்று

எம்மைப் பெற்று வளர்த்த தந்தையும் தாயும் வாழ்ந்த நாடு அவர்கள் மகிழ்ந்து அளவளாவி இருந்த நாடு, இந்த நாடு.

அவர்களுக்கு முன்னோரும், முன்னோரின் முன்னோரும் ஆயிர மாயிரம் ஆண்டுகள் வாழ்ந்ததும் இந்த நாட்டிலே தான்.

வாழ்ந்து முடிந்த அவர்கள், வையகத்திற் சிறந்திருந்த காலை, சிந்தையில் ஆயிரமாயிரம் எண்ணங்கள் வளர்ந்து அறிவு முதிர்வு பெற்றதும் இந்த நாட்டில் தான்.

11688

இங்ஙனம் வாழையடி வாழையென எம்மவர்க்கு வாழ்வும் சிந்தையும் வழங்கிய இத் திருநாட்டை வணங்கி மனத்தில் இருத்தி வாய்மையோடு வாழ்த்துவேன்.

வந்தே மாதரம் வந்தே மாதரம்
எந்தாய் வாழ்க எந்தாய் வாழ்க

என்று வணங்குவேன்,

पुस्तकालय
पुस्तकालय
गुरुकुल कांगड़ी विश्वविद्यालय

இரண்டு

இனிதாகிய உயிரைத் தந்து எம்மை ஈன்று வளர்த்ததோடு நாங்கள் அருள் நலம் பெறவும் காரணமாக இருந்தது இந்த நாடேயாகும். எங்களின் தாய்மார்கள் பிறந்தது இந்த நாட்டிலே தான்.

அவர்கள் பிறந்து மழலைகள் மொழிந்து வினைத் தெரிந்ததும் இங்கேயே தான். பொன் போலும் தங்களது அழகிய மேனி இன்புறுமாறு புனலிடை மூழ்கி விளையாடிப் பின் இல்லம் புகுந்ததும் இங்கேயே தான்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இவ்வாறு பிணைப்பும் பற்றும் மிக்க எங்கள் தாய் நாட்டை— தாய்மார் பிறந்து இன்புற்ற திருநாட்டை— தொழுது வணங்குவேன்

தாய்க்கு வணக்கம் தாய்க்கு வணக்கம்
வந்தே மாதரம் வந்தே மாதரம்

என வழுத்தி வணங்குவேன்.

மூன்று

அவர்கள் (எங்கள் அன்னையர்) மங்கைப் பருவம் அடைந்ததும், மங்கலம் என்னும் மணமாட்சியைப் பேணிக் காத்ததும் இந்த நன்னாட்டிலே தான். அவர்கள் நன் கலம் என்னும் தங்கக் குழந்தைகளைப் பெற்று அமுதூட்டி மெய் தழுவி இன்புற்றதும் இந்த நாட்டிலே தான்.

மக்கள் யாவரும் மேன்மையுறுமாறு திருக்கோயில்கள் ஓங்கி உயர்ந்து சூழ்ந்துள்ளதும் இங்கே தான். தாயாகிய சிறந்த கோயிலும் 'தாயிற் சிறந்த தயாவான தத்துவனு'கிய இறைவனின் கோயிலும் மிக்க நாடு இந் நாடு.

பெற்றவர்கள், பேறு பெற்றவர்களாக, பொன்னுலகு அடையுங்கால் தத்தம் யாக்கையை இப்பெரு நாட்டகத்துப் பூந்துகள்களாகக் கலந்து கரையுமாறு உதிர்த்து விட்டுப் போனதும் இம் மாநிலத்தில் தான். இதனைத்

தாயே வணக்கம் தாயே வணக்கம்
வந்தே மாதரம் வந்தே மாதரம்

என்று வாய் நிரம்ப வாழ்த்துவேன்.

பாடலைப் பற்றி

O

அன்பு கனிந்த பெற்றோரும், அவர்களுடைய பெற்றோரும் என்று எண்ணமுடியாத் தொலைவுச் சேய்மை நாள் முதல் நமக்குக் குருதி கொடுத்த வழி மரபினோர் தோன்றி வளர்ந்து மணந்து மகிழ்ந்து வாழ்ந்ததோடு இனிவரும் எண்ணருஞ்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சேய்மைக் காலமெலாம் அந்தாதியாக இரத்தப் பிணைப்புடன் யாக்கையும் மன உயர்வும் கொண்டு வாழக் களம் தந்து வருவது இந்த நாடு.

ஈறிலாக் காலம் நமக்கு அழிவிலா வாழ்வைத் தரும் நாடு, அமர நாடு இஃது; இதனை வாழ்த்தி வணங்குவேன் என்று வியப்பாவேசம் ஆக (ரொமான்டிக் ஆக) இந்தியர் அனைவரது இதயத்தையும் தம் இதயத்தொடு பொருத்தி ஒருமித்த குரலாகக் கூறுவது நமது உள்ளத்தைச் சிலிர்க்க வைக்கிறது.

○

இந்த இனிய பாட்டு நம்மவர் நெஞ்சமெலாம் தேசபக்தி என்னும் மெல்லிய நறுமணத்தை பரப்புகிறது. அதில் நமக்கு ஒரு மயக்கம் உண்டாகிறது நம் முன்னோர் வாழ்ந்த வாழ்வு வண்ணச் சித்திரங்களாக வடிவு கொண்டு எளிய சொற்களில் உயிர்பெற்றெழுந்து நம் கண்முன் காட்சி தரு கின்றது.

நம் முந்தையர் பிறந்ததும் வளர்ந்ததும் மகிழ்ந்து மகப்பேறு எய்தி அமுதூட்டி ஆளாக்கிப் பின் அனைத்தையும் பின்வரு வாரிடம் ஒப்படைத்து விட்டுப் பற்று விடுத்துப் பூந்துகள் களாகச் சிதறிப் படிந்து சிறந்ததுமான பண்பாட்டை இந்தப் பாட்டு, பண் சுமந்திசைக்கிறது.

சீறிப் பாய்ந்தெழும் பாரதியின் ஆவேச முழக்கம் இதில் இல்லை. சிற்றோடையிற் புகுந்து வெளிவரும் பூங்காற்றின் குளிர்மை தழுவி மகிழ்விக்கிறது இது.

○

பெற்றோரின் இன்ப வாழ்வைப் பாடும் பழக்கம் தண்டமிழ்ப் பாவலரிடம் இருந்ததாக நமக்குத் தெரியவில்லை. பெற்றோ ரின் அந்தரங்கம் புனிதமானது என்பதனால் அது பற்றி மைந்தரோ மகளிரோ பேசுவது நாகரிகம் ஆகாது என்று நம்மவரிடைக் கருதப்பட்டது.

தலைவன் தலைவியரைப் பற்றி நிரம்பப் பாடுவது உண்டு. புனலிடை மூழ்கிப் பொழிலிடை உலவல் என்பது பெருங் காப்பியங்களில் மட்டு மன்றி அன்றாட வாழ்விலும் தென்னாட் டிற் காணப்படும் இனிய பழக்கங்களே ஆகும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பாரதியார் நம் தாய்மாரின் இளம் பருவத்து இனிமைப் பண்பாடுகளை அழகாகக் கூறுவதுடன் நம் பெற்றோரின் அன்பு வாழ்க்கையையும் கோதிலா நயத்துடன் குறிப்பிடுகின்றார்.

○

இந்தப் பாட்டகத்து வந்துள்ள செய்திகள் எல்லா நாட்டவர்க்கும் எல்லாக் காலத்துக்கும் பொருந்துவன; ஆகையால் மொத்தத்தில் பொதுமையாகவும் அவரவர்க்குச் சிறப்பாகவும் உரிமை உடையனவாகும்.

எனவே நாட்டுப் பற்று என்பது இயல்பானது, அது வளர்ந்து நாளடைவில் நாடு முதலிய எல்லைகளைக் கடந்து மானிடம் முழுவதையும் தழுவத் தகும் படிமுறை கொண்டது என்பதற்கான மெய்ப்பாடுகள் இந்தப் பாடலில் இனிமையாக மருவியுள்ளன.

○

பாரதியார் எழுதி அச்சேறிய முதல் கவிதைத் தொகுப்பில் இருந்த மூன்றே பாக்களில் இந்தப் பாடலும் ஒன்றாகும்.

பழிப்பதும் அழிப்பதும் இறுமாப்பதும் ஆன வெறியின் நிழல் சிறிதுமின்றி, இயல்பூக்கமான அன்பின் வீச்சுக்கு அறிவுவழியில் உரங்கொடுத்து ஆராத இன்ப ஊற்றம் நல்கும் சொல்லேருழவினைச் சுவையோடு நடத்தும் திறம் பாரதியார்க்குக் கைவரத் தொடங்கி விட்டது என்பதனை இப் பாடல் எடுத்தியம்பி நிற்கிறது.

○

இராகம் காம்போதி எனக் கவிஞர் குறிப்பிட்டிருப்பினும் வேறு பல இராகங்களிலும், ஏன், வழிநடைப் பாட்டாகவும் கூடப் பாடி மகிழ்தற்கு ஏற்றதாக உளது இந்தப் பாட்டு. அவரவர் விருப்பிற் கேற்பப் பாடிக்களிக்குமாறு தானே பாரதியாரின் பாடல்கள் பலவும்—பெரும்பாலும்—இருக்கின்றன?

○

எந்தையும் தாயும் என்ற தொடக்கமே கேட்பாரது கவனத்தை ஈர்த்துச் செவி மடுக்கச் செய்யும் திறம் உடைய

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தாக இருக்கின்றது. ஒவ்வொரு பகுதியின் இறுதியிலும் வரும் 'வாழ்த்தி வணங்கேனோ?' என்ற முடிப்பு, வினுப் போல் எழுந்து நம்மை அவரொடும் உடன்பட வைக்கிறது.

○

இந்தப் பாடலும், தேசிய கீதத் தொகுப்பிலுள்ள இன்னும் இரண்டோர் பாடலும் ஆங்கிலக் கவிஞர் பைரனின் பாடற் கருத்துக்களோடு நெருக்கமான நட்புறவு கொண்டிருப்பதாக ஆய்வாளர்கள் தெரிவிக்கிருர்கள்.

○

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

4

உயர் உயர் நாடு

○

பாம்பாட்டிகள் மந்திர வாதிகள் செப்படி வித்தைக்காரர்கள்
குப்பை நாற்றம் இரைச்சல் மிகுந்த நாடு இந்தியா

—இங்ஙனம் எழுதியது அன்னியம்.

பாருக்குள்ளே நல்ல நாடு எங்கள் பாரத நாடு

—இவ்வாறு எதிரடி கொடுத்துப் பேசியது புதிய இந்திய தேச பக்தி.

○

அரை நிர்வாணப் பக்கிரிகள், சாதிகள், மூட நம்பிக்கைகள்
விநோதமான பிராணிகள் மிகுந்த நாடு இந்தியா

என்றது முன்னது.

ஞானத்திலே பர மோனத்திலே ஆக்கத்திலே தொழில்
ஊக்கத்திலே உயர்ந்த நாடு இந்தியா

என்று மார்தட்டிப் பேசியது பின்னது.

○

இந்திய மா நாட்டை இழித்துரைத்தோர்க்குச் சுடச் சுடத்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தெளிவுரையும், தன்னம்பிக்கை இழந்து தள்ளாடும் தன்னுட்டவர்க்குத் தற்சிறப்புப் பாயிரமும் தந்து மொழிந்தது விடுதலை வேட்கை; அந்த வேட்கையின் ஒளிக் கதிர் கற்றை கற்றையாக இந்தப் பாடலில் கண்ணி தோறும் கட்டி வைக்கப் படுகிறது.

4. பாரத நாடு

பாருக்குள்ளே நல்ல நாடு எங்கள்

○

இந்திய நாட்டின் முதற் பெருமை, தலையாய பெருமை, தொன்று தொட்டு வரும் அதன் ஞானம் ஆகும். 'வறுமை சிறுமை வருத்தம் பொய்' என்பவற்றிடை இந் நாடு திணறிக் கொண்டிருந்த காலத்தும் ஞானச் சுடர் அதன் அழகிய முகத்தில் பொலிந்தவாறிருந்தது.

வங்கப் பேராசிரியர் ஒருவர் தக்க சான்று காட்டிப் பின்வருமாறு எழுதியுள்ளார்:

If the christian missionaries were shocked by what they saw in this country, the Orientalists were enthralled by what they discovered in their study of a new philosophy, religion and literature.

பாரதியாரின் கருத்தில், வேறு எல்லாமும் அழிய நேர்ந்தாலும் மறுபடியும் அவ்வவற்றைப் பெற்றுக் கொள்ளலாம்; ஆனல் ஞானம் பொய்க்க நசிக்குமோர் சாதி; ஆகவே அது தனக்குரிய சாத்திரத்தை உயிரினும் பெரிதென ஓம்புதல் வேண்டும். சாத்திரம் கண்டாய் சாதியின் உயிர்த்தலம் என்று அவரே தமிழச் சாதியில் அழுத்தமாகக் கூறினர்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஆகவே வீரம் தீரம் என்பவற்றோடு, சாரத்திலே, மிகு சாத்திரம் கண்டு தருவதிலே உயர் நாடு எனவும் உண்மையிலே தவருத புலவர் உணர்விலே உயர்ந்த நாடு எனவும், கானத்திலே அமுதாக நிறைந்த கவிதையிலே உயர்ந்தது எனவும் சாத்திரச் சார்புக்குப் பெருமையும் தலைமையும் தருகிருர்.

பாடலின் இறுதியில் உள்ள இரு சரணங்கள் மட்டுமே அடிப்படையான இயற்கை வளத்தின் செழுமையை இயம்பி நிறைவு செய்கின்றன.

பாடலில் வரும் அடுக்கடுக்கான பெருமைகள்

முதலாவது

மெய்யறிவு, மேலாம் மௌனம், உயர் மானம், அன்ன தானம், அமுதாக இசை பொங்கும் கவிதை ஆகியவற்றில் உயர்ந்த நாடு இந்தியா.

இரண்டாவது

தனித் தீரம், படை வீரம், நெஞ்சில் ஈரம், உபகாரம், சாரம் மிகும் சாத்திரத்தைப் புதிது புதிதாகக் கண்டு தருதல்— இவற்றில் உயர்ந்த நாடு இந்தியா.

மூன்ருவது

நன்மைகள், உடல் வன்மை, செல்வ வகைகள், மறத் தன்மை, பொன் மயில் போலும் அழகும் அதே சமயம் கற்பும் உடைமையால் மிளிரும் பெண்மைப் புகழ்—இவற்றில் ஏற்றம் உடைய நாடு இந்தியா.

நான்காவது

ஆக்கம், தொழிலூக்கம், தோள் வலிமை, உயர்ந்த நோக்கம், காவல் திறமிக்க மல்லர்களைக் கொண்ட கடலனைய பெரும்படை—இவற்றில் சிறந்த நாடு இந்தியா.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஐந்தாவது

கொடைப் பண்பு, உள்ளத்து உறுதி, மனத் திட்பம், அறிவு நுட்பம், பொய்யா நாவிற் புலமையும் உணர்வும் பொலியும் புலவர்களின் பெருக்கம்—இவற்ருல் சிறந்த நாடு இந்தியா.

ஆருவது

யாகம், தவ வேக்ம், தனித்த யோகம் ஆகிய துறவு நலங்கள் பல்வகை இன்ப நுகர்ச்சிகள் கொண்ட குடும்ப நலங்கள், நெஞ்சிலே உறைந்த தெய்வ பக்தியுடையாரின் அருளாட்சி— இவற்றிலே உயர்ந்த நாடு இந்தியா.

ஏழாவது

ஆறு, சுனே, தென்றல், மலேபடு பொருள் வளம் காளே கன்று ஆநிரை ஆகியவை மிக்குள நாடு இந்தியா.

எட்டாவது

தோட்டம், மரக் கூட்டம், கனிக் குவியல் பயிர் ஊட்டம்— இவற்ருல் நாடா வளத்தன வாகி, நாடியபொழுது அடங்காப் பெருநிதியை அளிக்கும் நீர் நில இயற்கை வளங்களில் உயர்ந்த நாடு இந்தியா.

இவ்வளவு உயர்வுகளின் காரணமாகப் பாருக்குள்ளே நல்ல நாடாக விளங்குகிறது பாரதமாகிய இந்தியா.

பாடலேப் பற்றி

○

பாருக்குள்ளே நல்ல நாடு பாரத நாடு என்ற இந்தப் பாடலே வாசிக்கும் பொழுது, நாம், தீமையற்ற, திறமை மிக்க போக புவனம் ஒன்றில் வாழ்வது போன்ற பிரமை உண்டாகிறது.

மறுபடி மறுபடி வாசிக்க வாசிக்க, வறுமை அச்சம் தாழ்வு மனம் என்பவற்றிலிருந்து விடுபட்டு மேலே மேலே பறந்து செல்லுதல் போன்ற உணர்வை அடைகிறோம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

திரும்பத் திரும்ப இசையோடு பயிலவே, பாடலின் எதுகையோடு இயைபுத் தொடையாக வரும் ஏகாரமும் [லே-லே என்பது] சேர்ந்து ஏதோ ஒரு மலை அடுக்கத்திலிருந்து எதிரொலி போல் வந்து நம் செவி வழியே புகுந்து சிந்தை கிறங்குமாறு செய்கிறது. கவிதையின் காரிய நோக்கம் அதில் இயைந்துள சொல்திறத்தால் பூரணமான வெற்றி பெறுகிறது.

○

ஆர அமரப் பார்க்கும் பொழுது, இதில் கூறப்பட்டுள்ளன எல்லாம் உண்மையா என்று ஓர் ஐயம் தலை தூக்குகிறது.

வருணிக்கப் பட்டுள்ளது ஒரு கற்பனை வளநாடா, ஒரு 'யுடோபியா'வா, புராண காவியங்களில் உரைக்கப்படும் நாட்டுப் படலங்களின் கருத்துக்கோவையா என்று ஒரு வினாக்குறி எழுகிறது.

இல்லா தில்லை இளங்குமரா! என்று இராமபிரான் எங்கோ ஓரிடத்தில் சொன்னது போல இந்தியாவில் இல்லாதது எதுவும் இதிற் கூறப்படவில்லை என்பது உறுதி.

ஆனால் இதில் உள்ளவை எல்லாமும் எல்லாக் காலத்தும் இந்தியாவின் எல்லாப் பகுதியிலும் இருந்தன என்று கூறவியலாது.

இந்தப் பாடலை வாசிக்கும் பொழுது, இளம் பூரணர் என்ற உரையாசிரியர் 'அகத்திணைக்கு இன்றியமையாத செய்யுளை வரையறுத்து உணர்த்து மிடத்து' எழுதிய தெளிவுரை விளக்கம் நினைவுக்கு வருகின்றது.

'நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்' என்பதற்கு அவர் உரை எழுதும் பொழுது, 'நாடக வழக்காவது சுவைபட வருவனவெல்லாம் ஓரிடத்து வந்தனவாகத் தொகுத்துக் கூறுதல். அஃதாவது செல்வத்தானும் குலத்தானும் ஒழுக்கத் தானும் அன்பினானும் ஒத்தார் இருவராய்த் தமரின் நீங்கித் தனியிடத்து எதிர்ப்பட்டார் எனவும் அவ்வழிக் கொடுப்போரு மின்றி அடுப்போரு மின்றி வேட்கை மிகுதியாற் புணர்ந்தார் எனவும், பின்னும் அவர் களவொழுக்கம் நடத்தி இலக்கண வகையான் வரைந்தெய்தினர் எனவும் பிறவும் இந் நிகரன வாகக் கூறுதல்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

உலகியல் வழக்காவது, 'உலகத்தார் ஒழுகலாற்ருேடு ஒத்து வருவது'

என்று எழுதினர் அவர்.

நாடக வழக்கு என்பதற்கு அவர் கூறினது போல, இந்தப் பாட்டு ஆங்காங்கு அவ்வப் பொழுது அமைந்தவற்றிற் பிரகா சமான பகுதிகளை ஒருங்கு தொகுத்துக் கூறுகிறது எனலாம்.

○

அங்ஙனமாயின், பழம் பெருமை என்னும் மொந்தைப் பழைய கள்ளில் மயங்குவது தான் இந்தப் பாடலால் வரலாகும் பயனே என்ற கேள்வி எழுகின்றது.

நாடக வழக்காக ஒருங்கு திரட்டிக் கூறும் அகப் பொருளிலக் கியம் இன்ப விழைவிற்கு ஓர் ஆற்றங்கால் அமைத்தல் போல இந்தப் பாடலும் இளம் இந்தியரின் உளக் காட்சியில் ஓர் இலட்சிய இந்தியாவை முன் நிறுத்திக் காட்டி, 'எதிர்காலத்து உங்கள் நாட்டை விழுமியதாக உருவாக்க இங்ஙனம் உளங் கொள்வீராக, எந் நிலையிலும் தேசத்தை நேசித்து அதன் மேன்மைக்கு மனமொழி மெய்களால் ஆவன புரிவீராக' என்று உய்த்துணரச் செய்வதை இலக்காகக் கொண்டுள்ளது என்பது உரிய பதிலாகத் தோன்றுகின்றது.

○

பாடலில் உள்ள பாரத நாடு, கற்பனை வளநாடு தான் என்பதனை அதன் முதல் சரணத்தைக் கவனிக்கும் பொழுதே உணர முடிகிறது.

ஞானத்தி லேபர மோனத்திலே—உயர்
மானத்தி லேஅன்ன தானத்திலே
..........உயர் நாடு—இந்தப் (பாருக்)

இதில் உயர் மானத்திலே அன்ன தானத்திலே என்பது முரண் கூற்றாக உள்ளது. உயர்மானமுள்ள ஒரு நாட்டில் அன்ன தானத்துக்கு—அதுதானும் ஒரு சிறப்பியல்பாக— அதுவும் தண்டச் சோற்றையும் சாதிக்கு ஒரு நீதி என்பதை யும் இழித்துப் பழிக்கின்ற இந்தக் காலத்தில் நினைந்து

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பார்த்து ஒரு சிறப்பியல்பாகக் கூறும் அளவுக்கு இடமிருக்க முடியாதல்லவா?

இதனை வாசிக்கும் பொழுது ''எல்லாரும் எல்லாப் பெருஞ் செல்வமும்'' எய்திக் ''கொள்வாரும் இல்லை கொடுப்பாரும் இல்லை'' என்று இருந்ததாகக் கூறப்பட்ட கோசல நாட்டு வருணனைப் போதையில் மகிழ்ந்த வாசகரை நாடக உலகி னின்று நீக்கி நனவுலக வழக்கிற்குக் கொண்டு வருதல் போன்று அமைந்துள்ள காட்சிப் படலத்துச் சீதையின் நினைவு களில் ஒன்று நமக்கும் நினைவுக்கு வருகிறது.

அது வருமாறு:

பட்டம் துறந்து காட்டுக்கு ஏகும் சக்கரவர்த்தித் திருமகன் கொடைகள் புரிகிறன். அங்கே வேதியன் ஒருவன் பாற்பசு வாங்க வந்துள்ளான். அவனுக்குப் பசுக்கள் வழங்கப் படுகின் றன.

அவனுக்கு மனநிறைவு உண்டாகவில்லை. பசுக் கூட்டங்கள் வழங்கப் படுகின்றன. அப்பொழுதும் வேதியனின் ஆசை அடங்கவில்லை. அவனது அடங்கா ஆசை கண்டு, அடக்கமே உருவான இராமனுக்கும் அடக்க முடியாச் சிரிப்பு வ்ந்தது, சிரித்தே விட்டான்!

இதனை அசோக வனத்தில் இருக்கும் சீதை நினைவு கூர்கிறள்.

கம்பரது கற்பனைச் சமதரும சமுதாயத்திற் காணப்படும் முரண்பாடு இது!

கற்பனை உலகில் மெல்ல நுழைந்து கண் சிமிட்டும் முரணனது காரிய உலகின் உண்மை நிலையை அப்படியே காட்டி விடத் தான் செய்யும். வலிந்தும், கவிஞரால் அதனை மறைத்து விட முடியாது. அந்த முரணை 'முதலாளித்துவ முரண்' என்று பொருளியல் சமத்துவ நெறியாளர் குறிப்பிடுவர்.

பாரத நாட்டில் நிரந்தரமாக உளதாய பொருளாதார முரண் புதுமைக் கவி பாரதியாரின் பாடலிலும் புகுந்து கண் சிமிட்டத் தான் செய்கிறது.

இவ்வாறு கூறுவது பாடலிற் புகுந்துள்ள குறை என்று நாம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கூறுவதாகக் கருத வேண்டுவதில்லை. பாடலுக்கும் பாடலாசிரியருக்கும் பெருமையே தான் அது.

○

எனவே, எல்லாக் குற்றமும் தீர்ந்த செய்யுள் என்று குறுந்தொகை முதற் செய்யுளைக் கற்றறிந்தார் காட்டுவது போன்று, எல்லாத் தீங்கும் நீங்கிய இந்திய தேச மாண்பினைக் காட்டுகிறது இந்தப் பாடல் என்று திண்ணமாக எடுத்துக் காட்டலாம்.

இதனை இளையோர் ஓதி ஓதி உளத்தொடும் உள்ளுயிரொடும் ஒன்றுமாறு பதித்துக் கொள்வது இந்திய நாட்டுக்கு நன்மை நனி பயக்கும்.

○

என்றும் உளதாய ஒரு பூலோக சுவர்க்கத்தின் வரிப் படம் இதில் உள்ளது என்பதனுல் இந்தப் பாருக்குள்ளே நல்ல நாடு, கற்பனை நாட்டுப் பாடல் வரிசையிலே நல்ல ஒரு பாடல் என்று, என்றென்றும் நிலைபெறும் கவியமுதாக நிலவி வரும்.

○

திடீரென்று தாடி மீசையை எடுத்து விட்டு ஒரு நாள் புதுவையை விட்டுச் சொல்லாமற் கொள்ளாமல் புறப்பட்டுப் போன பாரதியார், பத்துப் பதினைந்து நாள் கழித்துத் திரும்பி வந்தாராம்.

அதனுல் அவரது குடும்பத்தில் ஏற்பட்ட பாடுகளை அப்படியே குறிப்பிட்டு எழுதும் யதுகிரி அம்மாள் அவரைப் பார்த்து, 'எங்கே போயிருந்தீர்கள்...... புதிய பாட்டு ஒன்றும் இல்லையா என்று தாம் குழந்தைப் பருவத்து நிலையிற் கேட்ட கேள்விகளையும் பாரதியாரின் பதிலையும் நினைவு கூர்கிருர்:

அதற்கு அவர், 'ஜெயிலில் கட்டியாகிவிட்டது. எங்கே உரக்கப் பாடிவிடுவேனே என்று (ஜெயிலில்) அடிக்கடி என்னையே அடக்கிக் கொண்டேன். நாளைக்குப் பாடுகிறேன் அந்தப்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பாட்டை...இன்று ஜல தோஷம்...தொண்டை கம்மி யிருக்கிறது? என்று கூறினர்.

மறு நாள் பாரதியார் தாம் சொன்னபடி தமது புதிய பாட்டைப் பாடினர். அது பாருக்குள்ளே நல்ல நாடு எங்கள் பாரத நாடு என்று ஆரம்பிக்கும் தேசிய கீதம். அவர் பிரயாணமாகும் போது ஒரு ஹிந்துஸ்தானிப் பாடல் ரெயிலில் ஒரு பிச்சைக்காரப் பெண் பாடினளாம். அதே மெட்டில் இவர் கவிதை இயற்றி யிருந்தார்...

இங்ஙனமாகப் பாடல் பிறந்த சூழ் நிலையையும் (புதுவையிலிருந்த காலமாகிய 1914-18) காலத்தையும் யதுகிரி அம்மாளின் பாரதி நினைவுகளிலிருந்து தெரிந்து கொள்கிறோம். இராகம் ஹிந்துஸ்தானி தோடி என்று காணப் படுவதும் பொருத்தமாக உள்ளது.

○

புகை வண்டிப் பயணத்தின் போது பிச்சைக்காரப் பெண் பாடிய மெட்டில் அமைத்ததாகப் பாரதியார் சொன்னலும், அவர் இந்தப் பாடலை இசைக்கும் பொழுது அவரது அடிமனத்தில் அவரை அறியாமல் அமர்ந்திருந்த சித்தர் பாடல்களே இத்தகு பாட்டமைவுக்கு அடிப்படை கொடுத்திருக்கும் என்று தோன்றுகின்றது.

தமது அருமையான கட்டுரை ஒன்றில் தி. வ. கலியாணராமன் என்பார், பாரதியாரின் பாருக்குள்ளே நல்ல நாடு என்ற பாடல்களில் 'சரணம் நடைபோடுவது'

ஞானத்தி லேபர மோனத்திலே—உயர்
மானத்தி லேஅன்ன தானத்திலே
கானத்தி லேஅமு தாகநிறைந்த
கவிதையி லேஉயர் நாடு

என்று. அதற்கு

'ஆதார மூலம்' போல் இருக்கும் கொங்கண நயினர்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வாலைக் கும்மியிலிருந்து ஒரு சரணத்தை எடுத்துக் காட்டி நம்மை வியப்பில் ஆழ்த்துகிறர். அவர் காட்டும் சரணம்

ஆலத்தி லேயிந்த ஞாலத்தி லேவருங்
காலத்தி லேயனு கூலத்திலே
மூலத்தி லேபிரமன் தானிருந் துவாசி
முடிக்கிருன் பிண்டம் பிடிக்கிருன்

என்பதுவாகும்.

இது போலவே மேலும் இரண்டு மூன்று சரணங்கள் வாலைக் கும்மியில் அடுத்து வந்துள்ளன.

அவற்றை அடியொற்றி நம் தேசியக் கவிஞர் எவ்வளவு கச்சிதமாகப் பாடியுள்ளார்! இந்துஸ்தானி தோடியிலென்ன, நமது உள்நாட்டுக் கும்மிக்கும் இந்தப் பாட்டு வளைந்து கொடுத்துக் கைகொட்டி இசைந்து நடக்கும் இயல்பில் இருக்கிறது.

○

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

5

பகை வெல்லுவார்

○

மகுடியின் இசைக்குப் பாம்புகள் மயங்கும்
என்று சொல்கிறார்கள். அப்படி இல்லை
என்கிறார்கள் அறிவியல் வல்லவர்கள்.

எப்படி இருந்த போதிலும் இந்தப் பாடலின் மகுடியிசை பாம்பை மட்டுமல்ல, விஞ்ஞானிகளையும் மயக்கிவிடும். குழந்தைகள் முதியோர் மகளிரை மட்டுமல்ல, அரசியல்வாதிகளையும் மயக்கிவிடும்.

○

நாதர்முடி மேலிருக்கும் நல்ல பாம்பே என்று விளித்தார் ஆன்ம ஞானச் சித்தர் ஒருவர்.

வெள்ளிப் பனிமலையின் மீதுலவுவோம் என்று நம்மை அழைக்கிறார் தேசியக் கவிஞானச் சித்தர்.

பாம்பை எழுப்பினால் மகாசக்தி என்கிறார்கள்.

அவ்வாறே இந்தப் பாடலின் உட்கிடையை எழுப்பினால் தேசிய மகா சக்தி எழாமலா போகும்? அரிதான ஒருமைப்பாடு தோன்றி உறுதிப்படாமலா போகும்?

ஆனால் அது நடக்க வேண்டுமே!

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

5. பாரத தேசம்

பெயர் சொல்லுவார் மிடிப் பயங்கொல்லுவார்

○

பட்டயம் பெருத பாராளுமன்ற உறுப்பினர்கள் என்று கவிஞர்களுக்கு உரிமம் வழங்கினர், பாரதியாரின் உள்ளங் கவர்ந்த ஷெல்லி.

தாம் கண்டது கேட்டது கற்றது கருதியது என்பவற்றை, உண்டு உறங்கி உறங்காத் துயிலில் கவின்பெறத் திட்டமாகத் தீட்டுகிருர்கள் கவிஞர்கள்.

○

ஷெல்லியிடம் புரட்சிகரமான சிந்தனைகள் உண்டு. ஆனுல் அவர் தன் பொன்மயமான ஒளிச் சிறகுகளை வெறுமனே சூனிய வெளியில் படபடக்கச் செய்து கொண்டிருந்தார் என்ற குறை நவிற்சியும் அவர்மீது உண்டு.

ஆனுல் பாரதியாரோ, வேட்ஸ்வர்த்தின் வானம்பாடியானது கவிதை வானில் வட்டமிட்டாலும் பூமியிலே ஒரு பார்வை பதிந்திருக்கிறது என்னுமாறு நடைமுறைக் கொத்த உணர்வோடு இருக்கிருர்.

○

பாரதியார் என்ற 'தேசியத் திட்டப்பணிக் குழு' ஆக்கிய நீண்டகால — குறுகிய கால — திட்டங்களின் உணர்ச்சிப் பட்டியல் இந்தப் பாரத தேசம் என்ற பாட்டு.

கவிஞருக்குரிய கற்பனைக் காட்சியோடும், இசைக் குழைவோ

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

டும் உணர்ச்சி வேகத்தோடும் அதே சமயம் சிந்தனைத் துணிவுடன் கூடிய நடை முறைக்கான தெளிவோடும் பாடல் எழுந்து கொண்டலாகப் பொழிகிறது.

○

வீறுணர்ச்சி (தலைமை, பெருமிதம்) பொலிந்து சிறக்கும் இந்தப் பாடலானது வல்லார் வளமுடையார் என்பாரை மட்டுமின்றி எழுத்தாளி ஏமாளி உழைப்பாளி என்ற நிலையிலுள்ளார் ஆகிய எல்லாரையும் தலைவருள் தலைவராகக் கருதி, நாட்டின் நாற்புறமும் அழைத்துச் சென்று வெவ்வேருகிய வினைசெயல் வகைகளையும் திட்ட நடப்புகளையும் அறிமுகம் செய்து பங்கும் கொள்ள வைக்கிறது!

கரும்பு தின்னக் கூலியா கேட்போம்? சேர வாருங்கள், சென்று காண்போம், கை கொடுப்போம்!

எங்கெங்குக் காணினும் இடைத்தரகும் கையூட்டும் குத்தகையும் கள்ள விழிகளும் அவற்றின் பின் தானே பிடித்து வரும் அரசியல் படைகளும் அவற்றுக்குக் கவரி வீசும் அறிவுலகக் கோமாளிகளும் உங்களைத் தடுக்கும் என்று தயங்குகிறீர்களா?

தயக்கம் வேண்டா. இஃது ஒரு கவிப் பயணம், கருத்துப் பயணம், இசைப் பயணம்.

இதற்குக் காசுபணம், மேலிடங்களின் கடைக்கண் நோக்கு என எதுவும் வேண்டா. குறுகிய கலவரங்கள் குறுக்கிட்டு விட மாட்டா. சமநோக்கோடு தொலை நோக்கிக் காணவல்ல கவிவலவர் வழிகாட்டுகிருர் எனவே எவரும் காணலாம், கண்டு கேட்டுக் களிப்புறலாம், வாருங்கள்.

கவிதைப் பயணம்

பாரத தேசம் என்று பெயர் சொல்லுகிருர்கள். சொன்ன அளவிலே எவ்வளவு பலமும் பராக்கிரமமும் வந்து சேர்கின்றன! அவ்வாறு பலமும் பராக்கிரமமும் வந்து சேர்ந்த

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அளவிலே அவர்கள் வறுமை என்ற அச்சத்தையும் துயரம் என்ற பகையையும்—துயரம் தரும் பகையையும் அடித்துக் கொல்லுகிறுர்களே!

ஆகா, அந்தத் திறம் பாரத தேசம் என்ற மந்திர வாசகத் தினின்றும் வெடித்து வந்ததா? அல்லது அதைச் சொல்லும் புதிய மாந்தரிடமிருந்து துள்ளித் துடிப்புடன் வந்ததா?

> பாரத தேசமென்று பெயர்சொல்லுவார் - மிடிப்
> பயங் கொல்லுவார் துயர்ப் பகை வெல்லுவார்

இது பல்லவி. இந்தப் பல்லவியின் வெடிப்போசை பாரதி காலத்துக்குப் பின் வந்தவரும் ஐந்தாண்டுத் திட்டங்களின் நாயகருமான ஜே. வி. ஸ்டாலின், தலைவர் லெனின் மறைவு நினைவைப் போற்றி வஞ்சினம் உரைத்தாரே அந்த வாசக வரிசையை நினைவு படுத்துவதாக உள்ளது. அதில் ஒன்று

Fight and vanquish the enemies, internal and foreign, as Lenin taught us

என்பதாகும்.

ஸ்டாலின் வாக்கில் அளவு கடந்த தெம்பு இருக்கிறது. கவிஞரின் பாடலில் அதன் ஒரு விளிம்பு இருக்கிறது. அவ்வளவு தானே அன்றைக்கு அவரால் சாத்தியமாகும்?

சரி, பயணத்தை மேற்கொள்ளுவோம்.

முதற் சரணம்

வெள்ளிப் பனிமலையின் மேலே உலவுவோம். நமக்கு உண்டாகும் கட்டற்ற களிப்பில் அங்குள்ள கடுங்குளிர் நம்மை எதுவும் செய்து விடாது.

இமய வரம்பன் நெடுஞ்சேரலாதன், கரிகாற் பெருவளத்தான், செங்குட்டுவன் முதலானோர் வெள்ளிப்பனிமலையின் மீதுலவிய காலம் ஒன்று உண்டு. கரிகால் வளவன் உலா வந்ததன் சின்னமாக அங்கே இமயமால் வரையில் 'சோழ மலைத் தொடர்' என்ற ஒரு தொடர் வழங்கி வருவதாக மு. இராகவையங்கார் சான்று தருகிருரே!

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இந்தக் காலத்தில் இங்கிருந்து திருக்கைலாயத்திற்குப் புனித யாத்திரை போய்த் திரும்புகிருர்கள். ஆனல் அந்தப் பயணத்திற்கு நம் நாட்டுக்கு வடபாலுள்ள ஒரு நாட்டின் அனுமதி வேண்டும் போல் தெரிகிறது. அந்த நாட்டுக்கும் நமக்கும் நட்புறவு இல்லாத காரணத்தால் பல ஆண்டுகளாகப் புனிதப் பயணம் தடைப்பட்டு இருந்ததாகவும், இப்பொழுது நட்புறவு முயற்சிகள் நடப்பதாகவும் கைலாயம் செல்ல அனுமதி கிடைப்பதாகவும் சொல்லிக் கொள்கிருர்கள்,

நம் இந்தியப் பெருநாடு சுதந்திரம் பெற்ற உடனே வடக்கு எல்லேயைக் கண்டளந்து வலுப்படுத்தி இருக்க வேண்டும்; கண்டறிந்தாவது உறுதிப்படுத்தி இருக்கவேண்டும். ஒரு நிலப்பரப்புக்கு உரிமை பெற்ற ஒருவன் அதற்கு எல்லேகளேத் தெளிவுபடுத்தி, விவகாரம் அகற்றி, வேலிகளே வலுவாக அமைத்துக் கொள்ளுதல் அன்ருட உலகில் நாம் காணக் கூடிய நடைமுறைப் பழக்கமாகும். அந்தக் கடப்பாட்டை நினேவு படுத்துவது போலவும் இருக்கிறது,

வெள்ளிப் பனிமலேயின் மீதுலவுவோம் என்ற வீருர்ந்த அழைப்பு. அத்துடன், இமய முடியில் உள்ள 'திபெத்'துக்குத் தனி ஆட்சி உரிமை கிடைத்திருக்க நம்மால் ஆனதைச் செய்திருக்க வேண்டும் ... எல்லாம் முடிந்து விட்ட பழங்கதை ... அவை நமக்கு எதற்கு?

அடுத்து, வாருங்கள்.

மேலேக் கடல் முழுதும் கப்பல் விடுவோம்

நமது நாவாய்கள் மேலேக் கடலில் பேரரசி போல் உலா வர வேண்டும்.

எவ்வளவு அருமையான ஆசை!

உள்நாட்டில் பள்ளிக் கூடம் முதலான கல்வித் தலங்கள் யாவற்றையும் கோவிலாக மேம்படச் செய்வோம். அதே வேகத்தில்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பாரத தேசம்—இது எங்கள் தேசம் என்று
தோள் கொட்டுவோம்.

○

இந்தச் சரணம் — முதற் சரணம் —பற்றிச் சில வார்த்தைகள்:

அடி—மேலைக் கடல் முழுதும் கப்பல் விடுவோம்

என்றுரா கவிஞர்? அடி என்பதற்கு ஆதி காலத்து — பழைய காலத்து — கடலான வங்கக் கடல் என்று பொருள் எழுதியிருக்கிறார்கள். அதுவும் சரிதான். கிழக்குக் கடல் நமக்கு மிகப் பழக்கமான கடல். தமிழர்கள் கிழக்கிலும் தெற்கிலும் கொடி கட்டி ஆண்டதற்கு அவர்களின் கீழ்கடல் ஆதிக்கமே உதவியாக இருந்தது.

மேலைக் கடல் இருக்கிறதே. அங்கு இருந்த கடற் குறும்பர்களான கடம்பர்களைச் சேர வேந்தன் செங்குட்டுவன் அந்தக் காலத்தில் வென்றுனும்; அதனுல் கடம்பறுத்த காவலன் என்று சிறப்புப் பெற்றுனும்.

இன்றைக்கு இந்தியாவின் பொதுப் பொருளாதாரத்தை அந்தரங்கத்திலிருந்து இயக்கும் கடத்தல் சாம்ராச்சியம் அங்கே—மேலைக் கடலில்—தான் இராசதானி கொண்டு இயங்கி வருவதாகச் சொல்லுகிறுர்கள்.

ஆனுல் பாரதியார் மேலைக் கடலில் கப்பல் விடச் சொன்னது, இந்திய தேசியக் கப்பல்களை யாகும். அன்று. 'வந்தால் கப்பலோடு வருவேன், இல்லாவிட்டால் இந்த மேலைக் கடலில் விழுந்து உயிர்துறப்பேன் என்று தன் மனைக்கு மடல் வரைந்தாரே வ உ. சி அது இந்தியாவின் மேற்குத் தலைவாசலாக உள்ள நகரத்திலிருந்து தானே?

இனி, அந்தச் சரணத்தில்,

பள்ளித் தலமனைத்தும் கோயில் செய்குவோம் என்பதற்கு, 'ஒவ்வொரு கிராம வாழ்வையும் கோயில் வாழ்வாக்கிச் சிறந்து திகழ்ந்து தீரமுடன் தோள் கொட்டி ஓங்குக!'' என்று உரை தந்துள்ளார் சுத்தானந்த பாரதியார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஆதி காலத்தில் முனிவர்களின் பள்ளித் தலங்களே—தங்கும் இடங்களே—கல்வித் தலங்களாக விளங்கின. பின்னர், கோயில்கள் கல்வித் தலங்களாயின.

இந்தக் காலத்தில் பள்ளிகளின் நூலறிவும் கோயில்கள்—முனிவர்களின் வாலறிவும் போய்விட்டன. பள்ளிகளும் சரி, கோயில்களும் சரி வாணிபத் தலங்களாகி விட்டன.

எனவே பள்ளித் தலமனைத்தும் கோயில் செய்குவோம் என்று அவை இரண்டின் நிலையும் உயர்தற்குக் குரல் கொடுத்தது நியாயம் தானே?

... நமது பயணம் பாடலை விட்டு விலகிச் செல்கிறதே...

முதலில் பயணத்தைச் செய்வோம், பிறகு விமரிசனத்தைப் பார்ப்போம் வாருங்கள்.

மலையேற்றம், கடலோடல், சுற்றுலா, கல்வித் தரம் உயர்த்தல் என்பனவற்றைக் கவிச் சுவையோடு இந்தச் சரணத்தில் துய்த்தோமா? இனி அடுத்தது ...

இரண்டாவது

சிங்களத் தீவினுக்கோர் பாலம் அமைப்போம். அதற்கும் தாய்த் தமிழ் நாட்டுக்கும் இடையே உள்ள நீர்ப்பரப்பை மேடாக்கி வீதியாகச் சமைப்போம்.

வங்க தேசத்தில் கங்கை பிரம்மபுத்திரா நதிகளிற் பெருகி வந்து அழிவு செய்து கண்ணீரோடு கடலிற் போய் விழுகின்ற பேராற்றுப் பெருக்கை, மக்கள் வானம் பார்த்துத் துயரக் கண்ணீர் துளிக்கும் நீர் வளமற்ற பகுதிகளில் திருப்பி விட்டு, ஆனந்தக் கண்ணீர் துளிக்க வளம் பெருக்குவோம்.

மூன்றாவது

நிலத்தினுள்ளிருந்து வெட்டியெடுக்கும் கனிப் பொருள்களுக்கான சுரங்கங்களை அகழ்ந்து தங்கம் முதலியவற்றைத்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தோண்டியெடுப்போம். எட்டுத்திக்கிலும் சென்று அவற்றை ஆங்காங்கு விற்று நம் நாட்டுக்குத் தேவையான பல பொருள்களையும் பெற்றுக் கொண்டு வருவோம்.

நான்காவது

முத்துக் குளிப்பு (சலாபம்) தென் கடலில் நடக்கிறது. வாருங்கள், காணுவோம். பல நாட்டு வணிகர்கள் வந்து இப்படி மொய்க்கிறார்களே! அங்கே பாருங்கள் மேலைக் கடற் கரையில் பல நாட்டவரும் வந்து நம் அருளை வேண்டி நிற்கிறார்கள்!

ஐந்தாவது

சிந்து நதியில்—இந்தியா, இந்து என்ற பெயர்கள் தோன்றக் காரணமான—அந்த நதியில் அழகிய நிலவொளியில் நிலவின் ஒளியோடு போட்டி போடும் மேனியழகு உடைய சேரநாட்டு இளம் பெண்களோடு, சுந்தரமான தெலுங்கு மொழியில் பாட்டு இசைத்து, நாம் தோணிகள் ஓட்டி விளையாடி மகிழ்ந்து இன்புற்றுத் திரும்பி (தமிழகம்) வருவோம்.

ஆறாவது

கங்கைப் பேராறு பாய்ந்து செழுமை கொழிக்க வைக்கும் பிரதேசத்தில் விளையும் கோதுமைப் பண்டங்களுக்குக் காவிரி பாய்ந்து செழிப்புறச் செய்யும் பிரதேசத்தின் சுவையான வெற்றிலையைப் பண்ட மாற்றாகக் கொடுத்து வாணிபம் செய்வோம்.

சிங்கம் போலும் அஞ்சா நெஞ்சம் உடைய மராத்தியரது பக்தி மிக்க கவிதைகட்குச் சேரத்துத் தந்தங்களைப் பரிசாக வழங்குவோம்.

ஏழாவது

காசியில் இருக்கின்ற அறிவாளர்கள் நிகழ்த்தும் உரையினைக்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

காஞ்சிமா நகரத்தில் இருந்தவாறு அப்படியே அப்பொழுதே செவிமடுக்கச் சிறந்த கருவி ஒன்று கண்டுபிடிக்கச் செய்வோம்.

இராசபுத்தானத்து வீரர்களின் அரிய செயல்களை நாம் அனைவரும் பாராட்டுவோம். அந்தப் பாராட்டுக்கு அடையாளமாகக் கன்னட தேசத்துத் தங்கத்தை அன்புடன் அளிப்போம்.

எட்டாவது

இன்றைய உலகம் ஆடை அலங்காரத்தில் தான் இருக்கிறது. ஆகவே பட்டிலே ஆடையும் பஞ்சில் உடைகளும் ஆயத்தம் செய்து மலைமலையாக வீதியெல்லாம் குவித்துப் போடுவோம். அவற்றை வாங்குதற்குத் திரவியங்களைக் கட்டி கட்டியாகக் கட்டிக் கொண்டு வருவார்களுக்கு நாம் அவற்றை விற்றுக் கொடுப்போம்.

ஒன்பதாவது

ஆயுதம், நல்ல காகிதம் என்பன செய்யவும் அவ்வாறே பல பொருளை உண்டு பண்ணவும் ஆலைத் தொழில்களை நிருமாணிப்போம். அவற்றைப் பற்றிய தொழில் நுட்பங்களைக் கற்பிக்கும் கல்விச் சாலைகள், பொறியியற் புலங்களை எழுப்புவோம்.

ஓய்ந்து போவதோ தலை சாய்ந்து வீழ்வதோ—எங்கள் அகராதியில்—இல்லை என்னுமாறு நடப்போம். உண்மையே பேசுவோம், உழைப்பால் வளம் பெருக்கி வண்மைகள் செய்குவோம்.

பத்தாவது

குடைகள் உழுபடைகள் கோணிகள் இரும்பாணிகள்—இப்படியாகச் சிறியனவும் பெரியனவுமான பொருள்களைப் படைக்கும் தொழில்வளம் பெருக்குவோம்.

நடக்கவும் பறக்கவும் உதவும்—தரைமேல் இயங்கவும் விண்மேல் விரையவும்— வல்ல ஊர்திகள் பலவற்றை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

உருவாக்குவோம். பூமாது நடுங்கப் பொன்மாது மகிழப் பெரும்பெருங் கப்பல்களைக் கட்டி விடுவோம்.

பதினொன்றாவது

அமைச்சியலுக்குரிய (ஆட்சிக் கலை, ஆலோசனைத் திறம், ஒற்றாடல், படையாட்சி, குடி தழுவிக் கோலோச்சுதல், சட்டம், அறத்தாறு என்பன) வற்றைக் கற்போம். வினை செயல்வகை, வினைத் திட்பம், வினை மாண்பு என்பவற்றை அறிகுவோம்.

வானை அளப்போம், கடல் மீனை அளப்போம் விண்வெளித் தொடர்புகளை வைத்துக் கொள்ள முதலில் பூமிக்கு அருகில் உள்ள சந்திரமண்டலத்தின் இயல்புகளைப் பலவகையாலும் நோக்கித் தெளிவு கொள்வோம்.

துப்புரவுப் பணிகளுக்கு இயந்திரங்களைக் கையாளும் அறிவியலைக் கற்போம் (துப்புரவுப் பணியானது காந்தியடிகள் காலத்திம் சஃபாய் விக்ஞான் என்று நிர்மாணத் திட்டக் கல்விப் பயிற்சியில் ஒன்றாகப்—பயில்வார் அனைவர்க்கும்—வற்புறுத்தப் பட்டது; துப்புரவு வேலைகளை மானிடர் செய்யலாகாது, இயந்திரங்களால் செய்ய வேண்டும் என்று வற்புறுத்தினார் விவேகானந்தர் என்பதும் ஈண்டு அறியத் தக்கன.)

பன்னிரண்டாவது

இயந்திரம் இயந்திரம் என்று எல்லாமும் இயந்திரமயமானாலும், மனித உளத்தைப் பண்படுத்தவும். மானிட நேயத்தைப் பலப் படுத்தவும் கவின்கலைகளைப் போற்றி வளர்த்துக் கையாள வேண்டும்.

காவியம் செய்வோம். நல்ல கலைகளை வளர்ப்போம். ஓவியம் செய்வோம். அவரவர் ஆற்றல் சிறக்க வல்ல கலைகளில் ஆர்வம் கொள்ளுவோம்

நல்ல காடு வளர்ப்போம். செடி கொடி மரம் மருந்து மழை மன அமைதி யோகம் எனப் பல வகை நலம் பயப்பவை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

காடுகள். கலைகளுக்கும் அவற்றுக்கும் நெருங்கிய உறவு உண்டு.

நல்ல ஊசிகள், கொல்லர் உலைகள் என்று இயந்திர உலகினை யும் மறக்காமல் படைப்புத் தொழில் நடந்துவர வேண்டும்.

சுருங்கச் சொன்னால், உலகத்தில் என்ன என்ன தொழிகள் இருக்கின்றனவோ அவற்றையும் இனி எவை எவை வரக் கூடுமோ அவ்வவற்றையும் கற்று உவந்து செய்வோம்.

பதின்மூன்றுவது

எல்லாம் இருந்தும், எல்லாம் தெரிந்தும்
[கீரியும் பாம்புமாய்ச் சண்டையிட்டுச்—சாதி
கீழென்றும் மேலென்றும் நாட்டிவிட்டுப்
பாரதத் தாய்பெற்ற மக்களென்று—நிதம்
பல்லவி பாடிப் பயனெதுவோ?

என்று பின்பு தேசிக விநாயகம் பிள்ளை பாடியது போன்று] நமக்குள் ஏற்றத் தாழ்வுகள்—சுரண்டல் சுருக்குக் கயிறுகள்—அவற்றுக்குச் சாதிச் சூத்திரதாரிகள் இருந்து வந்தால் சோக நாடகம் தானே தொடர்ந்து நடந்து வரும்? கண்ணீரால் தானே வழக்கம் போல் வரலாறு எழுதப்பட்டு வரும்?

ஆகவே தமிழ்ப் பெருமகள்—ஔவை என்ற மக்கள் கவிஞர்—சொல்லிய சொல்லை நாம் அமிழ்தமாகக் கருதிப் பருக வேண்டும். அதுவே சாவா மருந்து. அவ்வழியே அமர வழி. மற்றவை எல்லாம் தற்கொலை வழி.

அஃது என்ன வழி? சாதி இரண்டு; அவ்வளவே நீதிநெறியில் நிலைபெற்றுப் பிறர்க்கு உதவும் நேரியர் தாம் மேலோராவர். மற்றவர் மற்றவரே. இவ்வாறு சமுதாயத்தில் மதித்து ஒழுக வேண்டும்.

பாடல் தரும் சில எதிரொலிகள்

○

பாட்டுக்கொரு புலவன் பாரதி என்றனர் கவிஞர். அவர்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பாட்டுக்கொரு புலவர் மட்டுமலாது, நாட்டுக் கொரு கவிஞர்— திட்டக் கவிஞர்; கனவுக் கவிஞர் மட்டுமலாது காரியவுலகக் கவிஞர் என்பதை நிலை நாட்டுகிற மெய்ப்பாக இருக்கிறது இந்தப் பாட்டு.

○

சிந்து நதியின்மிசை நிலவினிலே
சேரநன் னாட்டிளம் பெண்களுடனே
சுந்தரத் தெலுங்கினில் பாட்டிசைத்து
தோணிக ளோட்டிவிளை யாடிவருவோம்

என்பது கவிஞரின் வளமான கற்பனையைத் தாங்கியுள்ள பாடற் பகுதியாகும். சிருங்காரக் கூறு அமைந்து புதுமைச் சுவை பொலியும் பெருமிதமான பாடல் இது.

இன்று சிந்து நதியின் மிசை ஆதிக்கம் பாகிஸ்தான் வசம் இருக்கிறது. இந்தப் பாடற் பகுதியோ பிளவுபடா இந்தியாவை நினைந்து பாடியது. லஜபதி திலகர், பால், வ. உ. சி. முதலியோரது கூற்று வேதமாகக் கருதப் பட்ட காலம் அது. அவருள் லஜபதியே பிற்பாடு, இந்தியாவைப் பிரிக்க வேண்டும் என்று குரல் கொடுத்த போது பாரதி உயிரோடு இருந்தாரா என்று தெரியவில்லை.

எப்படியாயினும், அவரது கவிதைக் கனவு மதமூப்புத் தலைவர்களின் ஆசையின் காரணமாக 1947 இல் மூளியாகப் போய்விட்டது. அண்ணல் காந்தியடிகளாலே அதைத் தடுத்து விட முடியவில்லை. அவருக்கு முந்திச் சென்ற கவிஞரால் அதற்கு என்ன செய்துவிட முடியும்?

ஆயின் இன்னமும், சிந்து நதியை இந்தியாவோடு சேர்த்து விடுவோம் என்ற ‘அகண்ட பாரத’ விரதம் கொண்டவர் சிலர் இருப்பதாக ‘நள்ளிரவில் சுதந்திரம்’ என்ற நூலிலிருந்து தெரிகிறோம்.

அது நடக்கிற காரியம் இல்லை.

இருந்தாலும் கவிதைப் பயணம் செல்லுவோர் சிந்து நதியில் தோணிகள் ஓட்டிவருவதை எவர் தாம் தடுக்க இயலும்?

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கற்பனை ஊர்தியில் போவதில் என்ன சிரமங்கள் சிக்கல்கள் வந்துவிடப் போகின்றன?

○

கலப்பு மணத்தையும் பன்மொழி அறிவையும் இந்தப் பாடற் பகுதி, திணிக்காமல் இனிப்பாக வலியுறுத்துகிறது.

குலக் கலப்பால் நாசம் ஏற்படும் என்று—பாரதப் போர் தொடங்கவிருக்கும் போது—அஞ்சுகிருன் அர்ச்சுனன். அர்ச்சுனனை இலட்சிய ஆன்மாவாகக் கொண்ட கவிஞர் இங்குக் குலக் கலப்பால் நலம் பிறக்கும், நாடு நன்மையுறும் என்று கருதுவது கவனிக்கத் தக்கது. வேதம் புதுமை செய் என்ற அவரது வாக்கு அவரது எழுத்தாண்மை யெல்லாவற்றிலும் மிளிருமல்லவா?

சேர நாட்டு நல்ல பெண்களுடன் சுந்தரத் தெலுங்கினில் பாட்டு இசைத்து வருவோம் என்று கூறுகிருர் கவிஞர்.

இந்த இனிய செயலைச் சேர நாட்டார் செய்வதிலோ தெலுங்க நாட்டவர் செய்வதிலோ தனிச் சிறப்பு கிடையாது. பாடுங் கவிஞர் வாக்கைக் கேட்கும் 'செந்தமிழ் மணி நாட்'டிடையுள்ளவர் தாம் செய்தல் வேண்டும். அப்பொழுதுதான் ஒருமை சிறப்புறும். சேர நாட்டவர் சிந்து நதியின் மிசை சுந்தரத் தெலுங்கினில் பாடி மகிழ்ந்தால் மூன்றன் இணைப்பு ஏற்படுகிறது; அவ்வாறே தெலுங்க நாட்டவர் சேர நாட்டுப் பெண்களுடன் சிந்து நதியின் மிசை பாடி மகிழ்ந்தாலும் மூன்றன் இணைப்புத் தான் ஏற்படும். தமிழர், சேரநாட்டுப் பெண்களுடன் சிந்து நதியின் மிசை தெலுங்கில் பாடி மகிழ்ந்தால் நான்கின் இணைப்பு ஏற்படுகிறது; நாற்புறத்துமான ஒருமிப்பு உண்டாகிறது.

இந்த அமைப்பை மட்டுமென்ன, இந்தப் பாடலில் வரும் திட்டங்கள், கருத்துக்கள், இலட்சியங்கள் ஆகியவற்றை இந்தியர் அனைவரும் கடைப்பிடிக்க வேண்டுமாயினும் தமிழர்கள் தலைமை தாங்கி நடத்த முன்வரவேண்டும். வால் பிடித்து வாழ்வதை அடியோடு கைவிட வேண்டும். ஆபத்துக்கு அஞ்சாத் துணிவோடு அறிவின் கூர்முனையாகத் திகழ்ந்து,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கோலோச்சும் இந்திய அரியணையைக் கைப்பற்ற வேண்டும் என்பதுதானே அந்தத் தமிழ்க் கவிஞரின் அந்தரங்க ஆசையாக இருக்க முடியும்? அதனால் தான் ஒருமை மணக்கும் இந்தப் பாட்டைத் தீந்தமிழில் பாடினர். ஆங்கிலத்திலோ பிரெஞ்சிலோ இந்துஸ்தானியிலோ வங்க மொழியிலோ அவரால் பாடியிருக்க முடியுமே, அவ்வாறு செய்ய வில்லையே!

இன்னொன்று

சுந்தரத் தெலுங்கினில் தமிழர்கள் பாட்டுப் பாடி மகிழ வேண்டும் என்பது கவிஞரது ஆசை. அதை அவர்கள் சிந்து நதியின் மிசை நிலவினில் தோணிகளில் இருந்து பாட வேண்டும் என்று ஆசைப்படுவது நியாயமானது; உசிதமானது.

ஏனென்றால் தமிழகத்தில் தமிழ்ப்பாட்டுப் பாடுவது தான் இயல்பானது, நியாயமானது.

தமிழ் நாட்டில் பிறந்த தியாகையர் தம் இதய ஒலியைத் தாமறிந்த தெலுங்கில் தான் பாட முடியும் என்ற நிலைமையில் கீர்த்தனங்களைத் தூய கடவுட் பற்றில் நின்று பாடினர்.

அவ்வாறே தமிழகத்தில் தமிழிசைப் புலவர்கள்—அடியார்கள்-தமிழில் பாடுவது தான் இயல்பானது; இறைவனுக்கு உரியது; நாட்டுக்கு உகந்தது; உளத்தோடு பொருந்துவது.

அவ்வாறின்றித் தியாகையர் போன தடத்தில் போவோம் என்று அவர் குதிரைக்குக் குர்ரம் என்றார், ஆகவே நாம் ஆனைக்கு அர்ரம் என்று கூறுவோம் என்பது போலப் பாடுவோரும் கேட்போரும் தலையசைப்பது குருடர்களாய்ச் செவிடர்களாய் நாமமது தமிழரெனக் கொண்டிங்கு வாழ்ந் திடுதல் என்பதற்குச் சான்றாகத்தான் இருக்கும்.

தமிழ் நாட்டில் தமிழ் இசை இந்தக் கதைக்குத் தான் ஆளாயிற்று. அதன் விளைவு தமிழிசை மறைந்தது; தமிழிசை நூல்கள் மறைந்தன. இது வரலாற்று உண்மை. இது பற்றி உ. வே. சா எழுதியதை டி. கே. சி அழகாக எடுத்து மேற் கோளாகக் காட்டியுள்ளார், பாருங்கள்;

"சங்கீதத்திலும் சாகித்தியத்திலும் வல்ல வித்துவான்கள்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பலர் தமிழில் கீர்த்தனங்கள் இயற்றியிருக்கிருர்கள். பாடுவோரும் பாராட்டுவோரும் இல்லாமையால் வர வர அக் கீர்த்தனங்கள் மறைந்து போயின.

ஆயிரக் கணக்கான தமிழ்க் கீர்த்தனங்கள் இந் நாட்டில் முன்பு வழங்கி வந்தன. கர்நாடக ராகங்களின் கதிக்கு மிகவும் பொருத்தமாக அவை அமைந்திருந்தன. அன்று நான் கேட்ட அவை இருந்த இடம் தெரியாமல் மறைந்து போய் விட்டன. 'தமிழில் கீர்த்தனங்களே இல்லை' என்று கூறவும் சிலர் அஞ்சுவதில்லை. எல்லாம் சற்றேறக் குறைய அறுபது வருஷத்தில் மாறுபாடு.''

தமிழிசை இயக்கம் என்று ஒன்று பின்பு தோன்றியது. எதையும் வியாபாரமாக்கி விடுவோரின் தலைமையில் அதுவும் ஒரு பொருளீட்டும் உத்தியாக மாறியதே அன்றிப் பெரிய மாறுதல்களை விளைத்து விடவில்லை. பாரதியார் பாரதிதாசன் போன்ருேரின் இனிய பாடல்கள் பலவும் ஆங்குப் பாடப்படுவதாகத் தெரியவில்லை. ஏதோ துக்கடா போல, போனுல் போகிறது, என்ற நினைப்பில் ஒன்றிரண்டு ஒரு சிலர் பாடுவர் போல் தெரிகிறது. சிங்கம் போன்ற பாரதி பாரதிதாசன் பாடல்களுக்கே அந்தக் கதை என்ருல் மற்றவர்கள் எழுதும் தமிழிசைப் பாடலுக்கு என்ன மதிப்பு கிடைத்துவிடப் போகிறது? ஒட்டக் கூத்தன் பாட்டுக்கு இரட்டைத் தாழ்ப்பாள் என்ற மதிப்புத்தான் கிடைக்கும்!

○

இந்த இடத்தில் இன்னெரு கேள்வி எழுகின்றது.

கலப்பு மணத்தை ஆதரிக்கிறவர்கள், மொழிக் கலப்பை எதிர்க்கிருர்களே என்பது அந்தக் கேள்வி.

பாரதியாரின் இக் கவிதை இவ்விடத்தில் கலப்பு மணத்தை ஆதரிக்கிறது. பன்மொழிப் பயிற்சியை ஆதரிக்கிறது. பொது மொழி பற்றி எதுவும் கூறவில்லை. மொழிக் கலப்புப் பற்றிய சிந்தனைக் கீற்று சிறிதளவும் இல்லை.

கலப்பு மணம் காதலால் வருவது, இயல்பானது, இனிப்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பானது; வரதட்சிணை முதலிய கொடுமைகளினின்றும் விடுபடுவதற்காக அமைவது.

மொழிக் கலப்புக்கு அப்படியொன்றும் காதலோ கொடுமையோ காரணமாகக் கூறுதற்கு இல்லை. உண்மையில் அது திகைப்பினை எழுப்பக் கூடியது, கெடுதியைக் கிளப்பக் கூடியது; கசப்பு தரக் கூடியது.

எதுவும், இயல்பாக— தன்னிச்சையாக— யதேச்சையாக நடந்தால் எதிர்ப்பதற்கு என்ன இருக்கிறது?

அப்படிப் பார்க்கும் பொழுது பிறமொழிக் கலப்பு இயல்பாக ஒன்றிரண்டு நடக்கும் பொழுது தமிழ் நூலார் எதிர்ப்பு தெரிவித்ததாகத் தெரியவில்லையே? ஆனால் அழிவு வேலை மட்டும் வேண்டாம், தமிழை அழிக்கும் நோக்கத்துடன் — மொழிக் கலப்பு என்ற பேரால் — நாச வேலை செய்ய வேண்டாம் என்று தானே சொல்லுகிறார்கள்?

பன்மொழிப் பயிற்சி என்பது வேண்டற்பாலது. அவரவர் விருப்பு சூழலுக்கு ஏற்பத் தமிழர்கள் தமிழோடு தெலுங்கு மலையாளம் கன்னடம் முதலிய மொழிகளை அவசியம் கற்க வேண்டும். அந்தக் கல்வியால் ஆங்காங்கு அவரவர்க்கு மேலாகவோ அன்றி நிகராகவோ வாணிபம் தொழில்நுட்பம் முதலியவற்றில் விளங்கப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். கூலி வேலை—கொத்தடிமைப் பிழைப்பு என்பவற்றுக்காக அன்று, பிறமொழிப் பயிற்சி என்பது. தமிழருக்காக, தமிழர்கள் மேம்பட வேண்டும் என்பதற்காகவே அது மிகவும் அவசியமாகும்.

○

சிங்களத் தீவினுக்கோர் பாலம் அமைப்போம்! என்ற அழகான அடி ஒன்று இந்தப் பாடலில் வருகிறது. பலரும் அறிந்து சுவைக்கும் பகுதிகளில் அதுவும் ஒன்று.

இந்தியாவும் அண்டைநாடுகளும் அடுத்தடுத்து விடுதலை அடைந்த பொழுது இந்தப் பாடல் யாண்டும் எழுந்து முழங்கியது. அப்போது இந்த அடி சிங்களத்தாரிடை ஒரு சிறு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கலக்கத்தை ஏற்படுத்தியது. இந்தியத் துணைக் கண்டத்தோடு தங்கள் தீவை இணைத்து விடுவார்களோ? தங்களது தனித் தன்மையை—ஆதிக்கத்தை—அழித்து விடுவார்களோ? என்று அஞ்சினர்கள் அவர்கள். பிறகு அது வெறும் பாட்டு, வேறென்றும் இல்லை என்று தெரிந்து கொண்டு பேசாமல் இருந்து விட்டார்கள்.

அதே சமயம் அஃது ஈழத் தமிழ் மக்களிடையிலும் கலக்கம் தரும் ஒரு வினக்குறியை எழுப்பியது.

ஈழ நாடு தமிழர்களின் சேய்நாடு எனப்படுவது. அது ஈழத்தில் மிகப் பழங்காலந் தொட்டு—பரம்பரையாக—இருந்து வரும் தமிழர்களின் தாய் நாடு. அதனைக் கவிஞர் 'சிங்களத் தீவு' என்று பாடி—தமிழை அழிக்க முயலும் சிங்களத்திற்கு, தமிழரை அழிக்க முனைந்துள்ள சிங்களத்தார்க்கு, அப்படியே 'பட்டா' பண்ணிக் கொடுத்திருப்பது போலச் செய்திருக்கி ருரே—அதன் வாயிலாகச் சிங்களத் தீங்கை நியாயம் என்பது போலக் கவிதைச் சாசனம் செய்திருக்கிருரே—என்று திகைப்பு உண்டாகியது ஈழத் தமிழருக்கு. அதுவே அவர்களது கலக்கத் திற்குக் காரணம் ஆகியது.

ஆனல் கவிஞர் இவற்றையெல்லாம் கருதியிருப்பார் என்று எண்ணற் கிடமில்லை. அவர் வாழ்ந்த காலத்தில் இருந்த 'பிரிட்டிஷ் இந்தியா' என்ற அரசியல் தேசப் படத்தில் இந்தியா இலங்கை பர்மா எல்லாமும் சிவப்பு வண்ணத்தால் பளிச்சிட்டு இருக்கும். அவற்றுள் பர்மாவை விட்டு விட்டு ஏனைய பகுதியை மகா பாரதமாக—பெரிய இந்தியாவாக—'கிரேட் இண்டியா' வாகக் கருதிக் கவிஞர் ஓவியம் வரைந் தாரோ என்னவோ தெரியவில்லை.

○

சேதுவை மேடுறுத்தி வீதி சமைப்போம் என்ற கனவுப் பகுதி ஒன்று அதனையடுத்து வருகிறது. சேதுவைப் பள்ள மாக்கிக் கால்வாய் ஆக்குவோம் என்பதே தமிழகத்துக்கு—இந்தியாவுக்கு—நன்மை தருவதாகும். கப்பல்கள் இலங்கை யைச் சுற்றிக் கொண்டு போகாமல் இடையிலுள்ள கால்வாய் வழியினல் எளிதாகப் போக்கு வரவு செய்ய இயலும். அது

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நமக்கு இலாபகரமானது. அந்தத் திட்டம் பலகாலம் இந்திய அரசின் ஆய்வில் இருந்து வரும்போல் தெரிகிறது.

○

காசிநகர்ப் புலவர் பேசுமுரை தான்
காஞ்சியிற் கேட்பதற்கோர் கருவி செய்வோம்

என்கிருர் கவிஞர். வானெலி வருவதற்கு முன்பே இது பாடப்பட்டது என்று எழுதுகின்றனர் ஆய்வாளர். கவிஞர் எதிர்பார்த்தது நடந்து விட்டது. இன்று தில்லி நகரத்துளார் பேசுவன திக்கெலாம் அஞ்சலாகிக் கேட்கின்றன.

பாடலில் காசி காஞ்சி என்ற ஊர்களின் பெயர்கள் வருகின்றன. அவை மோனைஎதுகை கருதிமட்டும் அமைந்தன அல்ல. தில்லி சென்னை போல்வன அரசியல் தலை நகரங்கள். காசியும் காஞ்சியும் சமயச் சார்புத் தலைநகரங்கள். சமயச் சார்பினை விட்டு விலகி நின்று இந்தப் பாடலைக் கட்டுக் கோப்புச் செய்த கவிஞர் அவரையும் அறியாமல் அவரது அடிமனத்துள் நங்கூரமாகக் கிடக்கும் சமயப் பிரக்ஞையால் தூண்டல் பெற்றுக் காசி காஞ்சியைக் குறிப்பிட்டு எழுதினுர் என்றே கூறல் வேண்டும்.

மதச் சார்பின்மை என்பதை நாத்திகம் எனவோ, மற்றவர்களின் சமயங்களுக்குப் பல்லக்குத் தூக்கிப் போற்றி யுரைத்துத் தமது சமயத்தை மரணப் படுக்கையிற் கிடத்தி விடுவது எனவோ, கருதுதல் கூடாது.

தத்தம் சமய நிலையில் வலுவோடும் தெளிவோடும் பற்ருேடும் இருப்பதே மதச் சார்பின்மையை வலுப்படுத்தும். இதனை நன்குணர்ந்தவர் பாரதியார். அதனுலே தமது சமயச் சார்பில் மிக அழுத்தமாகவும் திருத்தமாகவும் அறிவார அமைந்திருந்தார். அதே சமயம் தம் சமயத்தைத் தாண்டி வந்து—இஃது அரிதான ஒன்று—நோக்கும் திசையெல்லாம் நோக்குதலும் செய்து வந்தார்—அத்தகைய சீரான நெறிமுறைக்கு மிகச் சரியான ஒரு பிரதிநிதியாக இலங்கி வந்தார் அவர். அவரது போக்கு எடுத்துக்காட்டான—செவ்விய—சீரிய நெறியே யாகும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

O

வங்கத்தில் ஓடிவரும் நீரின் மிகையால்

மையத்து நாடுகளிற் பயிர் செய்குவோம்

என்பது ஒரு சிறந்த திட்டம், ஒப்பற்ற திட்டம் என்பதனை வல்லாரும் மாட்டாரும் எல்லாரும் ஒப்புக் கொள்வார்கள்.

இங்கே நினைக்கத் தக்கது ஒன்று உண்டு. அது கங்கை காவிரி இணைப்புத் திட்டம். சர் ஆர்தர் காட்டன் என்பார் அந்த நாளில் வைசிராய்க் கவுன்சில் உறுப்பினராக இருந்த காலை அன்றைய ஆட்சியாளரிடம் அதற்கு ஒரு திட்டத்தை வகுத்து வற்புறுத்தினர். அதனை அன்றைய இந்தியாவில் நாற்பாலும் புகைவண்டி நடத்திய கம்பெனி முதலாளிகள் கடுமையாக எதிர்த்தார்கள். அன்றைக்குப் புகைவண்டிகள் தனியார்—ஆங்கில முதலாளிகள்—வசம் இருந்தன. பல்லாற்றுனும் நன்மை பயக்கும் கங்கை காவிரி இணைப்பு தங்களுக்கு இழப்பை அளிக்கும் என்று அவர்கள் கணக்குப் போட்டார்கள். ஆகவே எதிர்த்தார்கள். அந்நிலையில் அன்றைக்குக் கோலோச்சிய ஆங்கில ஆட்சி அந்தத் திட்டத்தைக் கைவிட்டது என்று பா. நடராசன் ஓரிடத்தில் குறிப்பிட்டிருந்தார்.

அதற்குப் பிறகும் வைசிராய்க் கவுன்சிலில் சி.பி. இராமசாமி அய்யர் போன்ருேர் அந்தத் திட்டத்தை நினைவு படுத்தினர். ஆயினும் அது நடைபெருமலே போய்விட்டது.

பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் இந்தியாவை விட்டுப் போனது தான் போனர்கள், இந்த ஒரு திட்டத்தை நிறைவேற்றி விட்டுப் போயிருந்தால்—நினைக்கவே உள்ளம் குளிர்கிறது உரோமம் சிலிர்க்கிறது—அவர்களுக்குப் பிரயாகை முதல் திருச்சி வரை வாய்க்கால் வரும் வழியெல்லாம் கல்லெல்லாம் சிலை செய்து மாலை போட்டிருக்கலாம்.

அவர்கள் போய்விட்டார்கள்.

இப்பொழுதோ நிலை மாறி விட்டது. அந்தத் திட்டம் அரசியல் வாணர்க்குத் திடீரென்று நினைவில் வந்து விட்டால் பேசப் படுகிறது. பிறகு கிடப்பில் போடப்படுகிறது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இதற்கிடையில் கங்கைத் தண்ணீர் அந்த நதிக்கரையில் உள்ள இராச்சியங்களில் வாழ்வோருக்கே போதாது என்று சொல்லத் தொடங்கிவிட்டார்கள் வங்கத்தில் கங்கை யல்லாது பிரம்மபுத்திரா வரும்வழியெல்லாம் அவ்வப் பொழுது வெள்ளப் பெருக்கால் அழிவு நடந்து வருவது அனைவரும் அறிந்ததே.

வெள்ளப் பெருக்கால் அழிவு ஒரு புறமும் வரட்சியால் சாவு ஒரு புறமும் ஏற்படும் இந்த நாட்டில் ஆற்றுப் பெருக்கைச் சீராகப் பயன்படுத்துதல் என்பது நடவாதாகி 'அதுவன்றே நாய் பெற்ற தெங்கம் என்ற பழமொழிக்குச் சான்று தந்து விளக்கிக் கொண்டிருக்கும்போல் தெரிகிறது.

இது போன்ற ஒரு திட்டம்—மா நதிகளை இணைக்கும் திட்டம்—சோவியத் நாட்டில் அந் நாட்டின் இரும்பு மனிதன் ஆன ஸ்டாலினால் நிறைவேற்றப்பட்டது என்று அறிந்து இறும்பூது அடைகிறோம்.

இதை நாம் இங்குக் கூறும் பொழுது, தமிழ் ஆசிரியராகிய அன்பர் ஒருவர் தெரிவித்த அனுபவம் ஒன்று நினைவுக்கு வருகிறது.

இருபது ஆண்டுகட்கு முன்னால் அவர் உயர் நிலைப் பள்ளி ஒன்றில் பாரதிவிழாவில் பாரததேசம் என்ற இந்தப் பாடலை வியந்து பாராட்டிப் பேசுங்கால், பாடலின் பொருளை நன்கு உணர்ந்துகொள்ள வேண்டுமானால் துருக்கி ரஷியா சீனா ஆகிய நாடுகளின் வளர்ச்சி நிலைகளை—சான்றுகளைப்—பார்க்க வேண்டும் என்றாராம்.

விழாவிற்குத் தலைமை வகித்த 'தியாகி' ஒருவர்க்கு அந்த உதாரணங்களைக் கேட்டதும் கோபம் வந்து விட்டதாம். தம் தலைமை யுரையில் அவர், 'இங்குப் பேசிய தமிழாசிரியர் சர்வாதிகார நாடுகளை ஆதரித்துப் பேசி உதாரணமாகக் காட்டினார், நாம் இருப்பது ஜன நாயக நாடு—எல்லாம் மெல்ல மெல்லத் தான் நடக்கும். ஆகவே அந்த உதாரணங் களைப் பார்ப்பது ஜனநாயக விரோதமானது என்று கூறி முடித்தாராம்.'

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கூறி முடித்ததோடு அவர் நிற்கவில்லை. மேடையினின்றும் கீழே இறங்கி வந்து தம் 'தியாகிச்' செல்வாக்கைப் பயன் படுத்தி, அன்றிருந்த ஆட்சியாளரிடம் சொல்லி அந்தக் கூட்டத்திற்குப் பேச்சாளரை ஏற்பாடு செய்த தலைமையாசிரி யர் மீது நடவடிக்கை எடுக்க ஏற்பாடு செய்வேன் என்று அச்சுறுத்தியதோடு, பேச வந்த தமிழாசிரியரிடம் மன்னிப்பு எழுதி வாங்க வேண்டும் என்று கூறினூராம். தமிழாசிரியர் என்ன காதிலே பூவா வைத்திருக்கிருர்? அவரால் ஆனதைச் செய்யட்டும் என்று கூறிவிட்டாராம். பாவம், தலைமை ஆசிரியர், அந்த ஆண்டு ஓய்வு பெறுகின்றவர் மிகவும் வேதனைப் பட்டாராம்.

இதனை இங்குக் குறிப்பிடக் காரணம் இந்திய தேசிய வாணருக்கு—அரசியல் வாதிகளுக்கே பொதுவாக—பரந்து விரிந்து ஆழ்ந்த மனப்பான்மையோ அதற்கு அடிப்படையான படிப்பறிவு—உலகளாவிய நோக்கு—மனிதாபிமானம் என்ப னவோ மிகவும் குறைவு என்று நினைவு படுத்தற்காம். அவர்கள் கதை அப்படி யென்ருல் அவர்களிடமிருந்து எதை யாவது எதிர்பார்த்து இருக்கும் அறிவுலக—படிப்புலக வாணரிடம் மேற்குறித்த பண்புகள் எப்படி இருக்கும், ஒரு கால் இருந்தாலும் எவ்வளவு நாளைக்கு நிலைபெற்றிருக்கும்?

இந் நிலையில் இளைய தலைமுறையோ குப்பைப் பத்திரிகைகளை யும் கோணல் தனமான திரைப் படங்களையும் பார்த்து விட்டுத் தங்களுக்கு எல்லாமும் தெரிந்ததாக இறுமாந்து கொள்ளும் வேடிக்கையைக் காண்கிறோம்.

இந் நிலையில் பொதுமக்களுக்கு இலட்சியங்கள் ஆர்வங்கள் உலக நோக்குகளைப் பற்றி என்ன கூற முடியும்?

ஆகவே சிறந்த திட்டங்கள் என்பன கவியின் கனவாக — கற்பனையாக — இனிது இருந்து வருகின்றன.

'கேட்ட கீதம் இனியது; கேளாக் கீதங்கள் அதனினும் இனியன' என்று கீட்ஸ் சொன்னற் போல, நிறைவேறப் பார்க்கும் திட்டங்கள் நல்லன, நிறைவேருத் திட்டங்களோ மிகவும் நல்லன என்று எண்ணி ஆறுதல் அடையலாம்; வேறென்ன செய்வது?

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

○

மொத்தத்தில் இந்தப் பாட்டு, தேசிய ஒருமைப் பாட்டுக்கும் அதன் வாயிலாக உலக அரங்கில் இந்தியா பெறக் கூடிய வீறுர்ந்த மேன்மைக்கும் பல கோண முயற்சிகளைச் சுட்டிக் காட்டுகிறது.

சுற்றுலா, எல்லைப் பாதுகாப்பு, பன் மொழி அறிமுகம், கலப்பு மணம், பல்கலை — அறிவியல் — பயிற்சி, நதிகள் இணைப்பு வேளாண் பெருவளம் பண்டமாற்று. அயல் நாட்டு வாணிகம், அன்னிய நாணயப் பொருட் சேமிப்பு, அன்பளிப்பு, கடல் — தரை — வான — போக்கு வரத்து, ஆலைத் தொழில், சாலைத் தொழில் பெருக்கம், சீரான வழங்குமுறை, இயற்கை வளங்களைப் பெருக்குதல், வீரம் போற்றல், சமய உணர்வு, அண்டவெளி ஆராய்ச்சி, பிற மண்டலங்களோடு தொடர்பு, சமுதாய நேர்மையோடு பொதுநேயம் போற்றல் எனப் பலவாய — இன்றியமையாத் திட்டங்களை உரைக்கின்றது.

○

கற்பனையில் மிதக்கும் கவிஞர் இவ்வளவு பொருத்தமாக — நடப்புக்கு ஒத்த, நாட்டார் சிந்தனைகளைத் திட்பமாகக் கொடுக்கிருரே என்று ஒரு கணம் வியப்பு ஏற்படுகின்றது. விஞ்ஞானிகளுக்குக் கற்பனை இன்றியமையாது என்பதும், கவிஞர்களுக்கு விஞ்ஞானம் சேவகம் செய்யத் தவருது என்ப தும் அசைக்க முடியாத உண்மைகள்.

திருவள்ளுவர் 'ஐயறிவு மெய்யறிவு' என இரண்டையுமே வலியுறுத்துகிருர். கீதை 'ஞானம், விக்ஞானம்' என்னும் இரண்டையுமே இணைத்துக் கூறுகிறது. பிரபஞ்ச அறிவு முக் கியம் என வலியுறுத்தும் விவேகானந்தர் ஆன்மிக அறிவு அதனினும் முக்கியம் என்பர்.

பாரதியார் இவற்றை நன்கு அறிந்திருந்தார். அத்துடன் இந்த இணைப்புச் சிந்தனை அவருக்குப் பிறவிக் கூருகவே வாய்ந்திருந்தது என்பதும் உண்மையே யாகும்.

எட்டையபுரத்து நிலக்கிழாரின் அவையோரில் ஒருவராக இருந்த சின்னச்சாமி அய்யர் தம் மகனைக் கணித விஞ்ஞானத்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தில் வல்லுநராக்க ஆசைப்பட்டதும், தாமே தொழில் முனைப் பாளராக இயந்திரமணைச் சாலை ஒன்றை நிறுவியதும் அவற்றின் விளைவுகளாகச் சுப்பையா (கவிஞர்) கணிதத்தை அறவே வெறுத்துக் கவிஞராகியதும் சின்னச்சாமி அய்யர் கைப் பொருளை இழந்து அகால மரணத்துக்கு உள்ளாகிக் குடும்பம் குலைவுற்றதும் நிகழ்ந்தன. தன் சுயசரிதைப் பாடலிலும் கடுமையாகத் தந்தையை விமரிசிக்கிற கவிஞரின் ஆழ்மனத்தில், கணித விஞ்ஞானம் தொழில் முயற்சிகள் என்பன சுழன்று சுழன்று வெறுப்பில் தொடங்கி விருப்பில் மலர்கின்றன.

மிக வெறுப்பாரை மிக விரும்புவதும், மிக விரும்புவாரை மிக வெறுப்பதும் உலகியலிற்காணக் கூடிய உளவியற் சான்றுகளாகும். கவிஞர் தாம் ஆன்மநேயத்தோடு விரும்பி யேற்ற கவித்தொழிலோடு, தந்தையை வெறுக்கக் காரணமாக இருந்த அறிவியல் தொழில் முயற்சிகளையும் அதிகம் நேசித்தார் என்பதனை நாம் இவ்விடத்தில் அறிந்து அகமகிழ்கிறோம்.

அதனல் தான் கவிஞர் பலரிடம் காண முடியாத, இந்த அறிவியல் ஆர்வம், கற்பனைச் செழிப்பு என இரண்டன் கூட்டலைப் பாரதியாரிடம் காண முடிகிறது.

○

கடைசிச் சரணத்தில் உள்ள,

தமிழ்மகள் சொல்லிய சொல் அமிழ்த மென்போம் என்ற சொல்லொழுக்கு நம் செவிகளில் தேன் வந்து பாய்ந்தாற் போல் இனிக்கிறது.

ஔவையாரை மேற்கோள் காட்டுவதும், ஔவையாரொடு 'கவிதைப் போட்டி' போடுவதும் பாரதியாருக்கு விருப்பமான ஒரு செயலாகும். காரணம் இருவருமே மக்கள் கவிஞர் என்பது தான் என்பர் ம. பொ. சி. ஔவையார் கூழுக்குப் பாடுவார். பாரதியார் கூழுக்கும் இன்றித் தமிழர் நன்ருக இருந்தால் போதும் என்று பட்டினி கிடந்தும் பாடத் தயங்க மாட்டார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'நீதி வழுவா நெறிமுறையின் இட்டார் பெரியோர், இடாதோர் இழிகுலத்தார்' என்பது ஒளவை தந்த சீர்திருத்தம்.

அது அவர் காலத்தில் பெரிய சீர்திருத்தம். பாரதியார் காலத்தில் உலகம் கொஞ்சம் கூடுதலாக உருண்டு வந்து விட்டது. இட்டார் இடாதார் இழிகுலத்தார் என்பன சமுதாயப் பகையான சொற்களாகி விட்டன. ஆகவே பாரதி யார் ஓசைப்படாமல் ஒளவைக்கு ஒரு திருத்தம் கொடுத்து, 'நீதி நெறியி'னின்று என்பதை வைத்துக் கொண்டு 'பிறர்க் குதவும் நேர்மையர் மேலவர், கீழவர் மற்றோர்' என்று பாடு கிறார்.

அதற்குப் பின்பு பாரதியாரிடம் ஒரு வளர்ச்சி ஏற்பட்டது. அந்தப் பரிணமத்தால் அவர்

எல்லாரும் இந்நாட்டு மன்னர் என்ற ஒரே சமநிலை ஆட்சி யுரிமையைப் பின்னர் வழங்கினர் என்பதையும் மேலவர் கீழவர் என்பதை மாற்றி விட்டார் என்பதையும் அறிகிறோம்.

○

கடைசியாக ஒரு வார்த்தை.

எல்லாரும் இந்நாட்டு மன்னர் என இந்தியர் அனைவரும் உரிமை பெறற்கு, ஆதாரமான கடமை ஒன்றை இந்தப் பாட லில் கவிஞர் அமைத்துள்ளார் என்பதைக் காணும் போது பேரு வகை கொள்கிறோம்.

அதனை அறிவிக்கும் அடி மிக எளியது; மிக அருமையானது, அற்புதமானது. அஃது ஒவ்வோர் இந்தியருக்கும் இதய கீத மாக — தேசிய வாசகமாக — செயற்பாட்டுப் பண்ணாக இயக் கம் பெற வேண்டும். அஃது

உலகத் தொழிலனைத்தும் உவந்து செய்வோம் என் பதாம்.

இந்த வாசகமே இன்றைய சஞ்சீவி—வருண நாசம் ஏற்படுத்த

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வல்ல வாள்; வாய் வாள் (வாய்ப்புள்ள வாள்; வாய்மையான வாள்); தமிழனை—இந்தியனை—மனிதனுக்கும் எழுச்சி முரசு; நவீன கீதை, கண்ணனின் கருமயோகத்தைப் போதிக்கும் புதிய கீதம். தலைவரென்றும் தொண்டரென்றும், பொருளாளி என்றும் தொழிலாளி என்றும், மடாதிபதி என்றும் காணிக்கை தருவோர் என்றும் இருக்கக் கூடிய போலி அமைப்புகளைக்—கண் மூடித் திறக்கு முன்—தகர்த்துச் சமமாக்கித் தருமத்தினை ஏற்படுத்த உதவும் ஒரே புனித இயந்திரம்!

○

ஞாயிற்றுக் கிழமை தோறும் கடலிற் சென்று நீராடி வரும் பழக்கத்தில் இருந்த 'புதுவைச் சுதேசிகள்' (தேச பக்தர்கள்) —பராதியார், வவேசு அய்யர், ஸ்ரீ ஸ்ரீ ஆச்சார்யர், ஆச்சார் யருடைய குழந்தைகள் — ஒரு நாள் அவ்வாறு போய்க் கொண்டிருந்தார்கள்.

பாம்பாட்டி ஒருவன், வேடிக்கை காட்டிக் கொண்டிருந்தவன், இவர்களைக் கண்டவுடன் உற்சாகம் மிக்குக் குழலை ஊத, பாம்பும் சந்தோஷமாக ஆடியது. 'தர்மவான்களே!' என்று விளித்து, அவன் வழக்கமாகக் கேட்கக் கூடியவற்றைக் கேட்டிருக்கிறன். யதுகிரியின் அண்ணன் அவனிடம் காலணு வைக் கொடுத்தான். யதுகிரியின் கையில் காசு இருப்பதைப் பார்த்துவிட்ட பாம்பாட்டி 'இட்டிலி வாங்க' அதையும் கேட்டான். அந்தச் சிறுமியோ அதனைச்'சமுத்திர ராசா'வுக்குப் போட வைத்திருந்தாள்.

அச் சமயம் பாரதிக்கு என்ன தோன்றியதோ, தன் கிழிந்த மேல் வேட்டியை இடுப்பில் உடுத்துக் கொண்டு புதிதாக இருந்த வேட்டியை அவனுக்குக் கொடுத்து விட்டார்.

அது பற்றித் தன் பாரதி நினைவுகளில் எழுதும் யதுகிரி அம்மாள் 'பாரதியார் கொள்கை எங்களைத் திகைக்கச் செய் தது. முதல் நாள் வாங்கிய புது வேஷ்டியைத் தெருவில் போகும் பிச்சைக் காரனுக்குக் கொடுப்பது அவ்வளவு சரி யென்று எனக்குத் தோன்ற வில்லை. அந்தப் பாம்பாட்டியோ

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அவரை மனமார வாயார வாழ்த்திக் கொண்டு போனுன். என் மேல் அவனுக்குக் கோபம், காலணவைக் காட்டி விட்டுக் கொடுக்க வில்லை என்று' என்று எழுதுகிருர்.

நீராடல் முடிந்து வீட்டுக்கு வருகிருர்கள். பாரதிக்கு ஸ்ரீ ஸ்ரீ ஆச்சார்யர் இரண்டு வேட்டிகள் கொடுக்கிருர். (அவர் வாழ்க!) அப்பொழுது பாரதி ஸ்ரீ ஸ்ரீயின் தமையனைப் பார்த்து 'அண்ண, நான் பாம்பாட்டிக்கு வேஷ்டியைக் கொடுத்தது யதுகிரிக்குப் பெரிய கவலையாக இருந்தது... இதோ பார் யதுகிரி! ஒரு வேஷ்டியைக் கொடுத்தால் அதற்குப் பதிலாக ஐயா இரண்டு வேஷ்டிகளைக் கொடுத்து விட்டார். யார் தாராளம், இப்போது சொல்' என்கிருர். (பாரதியாரின் குழந்தையுள்ளம் நமக்கு வியப் பளிக்கிறது!)

அதற்கு, யதுகிரி ''சரி அந்தப் பாம்பாட்டி பாடிய மெட்டு நன்ருக இருந்தது. அந்த மெட்டில் நீர் பாடினல் எவ்வளவு நன்ருக இருக்கும் என்று கூற,

பாரதி: நாளைக்கு உனக்கு அந்த மெட்டில் சொல்லிக் கொடுக்கிறேன். இப்பொழுது, எங்களில் யாருடைய கை தாராளம் சொல்'' என்கிருர்.

அதற்குத் தகுந்தாற் போல் பதில் அளிக்கிருள் யதுகிரி.

மறு நாள் மாலை. பாட்டுடன் வந்துவிட்டார் பாரதியார். (இந்தப் பாடல் தோன்றுவதற்குக் காரணமாக இருந்த குழந்தை யதுகிரி வாழ்க!)

பதினன்கு பாக்கள் பாடியிருந்தார் பாரதி. யதுகிரி. குறுக்குக் கேள்விகள் சரியாகக் கேட்க அதற்குப் பாரதி விடை கூறிச் சமாளித்தார்! அதன் பின் அந்தப் பாடல் பற்றிய தம் நினைவுக் குறிப்பில்

''இப்போது வெளிவந்துள்ள புத்தகங்களில் முதல் பாவில் பின் இரண்டு அடிகளான

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பாரதப் போர்வென்ற கண்ண னருளால் — துயர்
பார மறுவார் செல்வர் பாரமுறுவார்

என்பனவும்,

பின்னால் இருந்த

பாரத ராணியின் கண்ண னருளால்— துயர்
பார மறுவார் செல்வ பாரமுறுவார்

என்ற இரண்டு அடிகளும் காணப் பெறவில்லை''

என்று எழுதியுள்ளார் **யதுகிரி அம்மாள்.**

இந்த அடிகளை எடுத்துவிட்டதால் பாடலின் கட்டுக் கோப்பு குலையவில்லை; மாறாகக் கூடி யிருக்கிறது என்று தான் கூற வேண்டும். இது பாரதியின் கட்டுமானத் தேர்வுக்கு நல்ல ஒரு சான்றாக உள்ளது.

○

பாம்பாட்டி மெட்டில் பாரத தேசப் பாடல் உருவாகும் பொழுது பாரதியாருக்குப் பழக்கமான பாம்பாட்டிச் சித்தர் அவருக்குக் கை கொடுக்காமலா போவார்?

அதனால் தி. சு. கலியாணராமன் எடுத்துக் காட்டுவது போல, பாரதியாரின் சரணம் நடப்பது,

பட்டினில் ஆடையும் பஞ்சி லுடையும்
பண்ணி மலைகளென வீதி குவிப்போம்
கட்டித் திரவியங்கள் கொண்டு வருவார்
காசினி வணிகருக் கவைகொடுப்போம்

என்று. **பாம்பாட்டிச் சித்தர்**

எட்டு மலைகளைப் பந்தா எடுத் தெறிவோம்
ஏழு கடலையும் குடித் தேப்பம் விடுவோம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மட்டுப்படா மணலையும் மதித்தறிவோம்
மகராசன் முன்புநின் ருடாய் பாம்பே

என்று அதற்கு வழிகாட்டியுள்ளார்.

○

இறுதியாக, இந்தப் பாரத தேசப்பாடலை, உபநிடத வழியி லான ஒரு முன்னுரை என்று கே ஆர். சீனிவாச அய்யங்கார் எழுதுவதுடன் பாரதியின் இந்தப் பாடற் பகுதியை அழகுற ஆங்கிலத்தில் அளித்துள்ளமை வாசித்து மகிழத் தக்கதாகும்.

Bharati is no more arm-chair idealist either. In **Bharat: A Vision of the Future** he presents us with a blueprint for action, an upanishadic preamble to our many Five-year plans and Points — Programmes.

We'll produce in mountain heaps
Cotton fabrics and silken garments
We'll sell them to the world's traders
Who bring to us abundant wealth.

○

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

6

எமக்கு இல்லை ஈடே!

○

உரிமை பெற்ற நாட்டில் தனி மனித அறம் யாது?

இன்னலுக்கு அஞ்சோம்
ஏழையராகவே துஞ்சோம்.

—இதுவே சுதந்திர நாட்டினர்க்குச் சுயதர்மம், சுயமரியாதை.

உரிமை பெற்ற நாட்டில் சமுதாய மனிதனின் அறம் யாது?

தன்னலம் பேணித் தாழ்ந்த காரியம் செய்ய மாட்டோம்.

தாய்த்திரு நாடு என்றால் சமயம் பார்த்துக் கையை விரிக்க மாட்டோம், காலை வாரிவிட மாட்டோம்.

உடல் பல, உயிர் ஒன்று என நிற்போம்.

—இதுவே சுதந்திர நாட்டின் தேசிய தர்மம்; ஒருமித்த பண்பு.

○

இந்தியருக்கு இந்த ஞானம் என்று வருமோ?

இந்த ஞான மல்லவா உண்மைத் தேசிய உணர்வின் அடிப்படை?

இந்த உணர்வு இல்லாத தேசியம் ஒரு தேசியமா?

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

6 எங்கள் நாடு

மன்னும் இமய மலையெங்கள் மலையே

கருத்துயர்வு

சிறப்பும் நிலை பேறும் உடைய இமயமலை எங்களது மலையாகும். இந்த விரிபேருலகில் இதற்கு ஈடாக வேறு எந்த மலை இருக்கிறது?

இனியதும் அரியதுமான நீர்ப்பெருக்கினையுடைய கங்கையாறு எங்களது ஆறு. இதனுடைய பெருமைக்கு நிகராக வேறு எது இவ்வுலகில் உள்ளது?

சொல்லுதற்கரிய மேன்மையுடைய உபநிடத நூல்கள் எங்களுடைய நூல்களேயாகும். உலகிலே இவற்றுக்கு ஒப்பாக நூல் வேறு எதுவும் உளதா?

பொன் ஒளிரும் பாரத நாடு எங்கள் நாடாகும். எமக்கு ஈடு இல்லை என்று பெருமிதத்தோடு இதனைப் போற்றுவோம்.

—ஒன்று

உயர்ந்த தேர்வீரர்கள் நிறைந்த நன்னாடு இது. உயரிய முனிவர்கள் பலர் வாழ்ந்திருந்த பொன்னாடு இது. இன்னிசை வல்லுநரான நாரதரின் இசைநலம் விளங்கிய நாடு இஃதே.

நல்லன யாவற்றையும் நாடி ஆய்கின்ற நாடு, முழுமையான மெய்யறிவினால் பொலிவு பெற்ற நாடு, புத்தர் பெருமானின் அருள் பொங்கி எங்கும் சிறப்புற்ற நாடு இஃது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பாரத நாடு பழைமையும் பெருமையும் பொருந்திய நாடு. இதனைப் பாடுவோம். எமக்கு ஈடு இல்லை என்று பெருமிதம் கொள்ளுவோம்.

—இரண்டு

இந்தியாவுக்கோ இந்தியருக்கோ இன்னல் வந்து எய்துமாகில் அதற்காகக் கவலை அச்சம் கொள்ளமாட்டோம்.

இந்த நல்லுலகில் ஏழையராகவே வாழ்ந்து மடிய மாட்டோம்.

தன்னலமே பெரிதெனக் கொண்டு தாழ்வான காரியங்களைச் செய்ய மாட்டோம், தாய்த்திரு நாடு அழைக்கிறது, தேவைப் படுகிறது என்று தெரிந்தால் எங்களால் இயலாது என்று எந்த நிலையிலும் கையை விரிக்க மாட்டோம், கலங்காது ஒன்று சேருவோம், தோளொடு தோள் பொருந்த நின்று கையை உயர்த்துவோம்.

கரும்பும் தேனும் பாலும் பழமும் வாழையும் செவ்விய நெல்லும் எந்தக் காலத்தும் மிகுத்துக் கொடுக்கும் உயரிய ஆரிய நாடு எங்கள் நாடு.

இதனைப் புகழ்ந்து ஓதுவோம். எமக்கு ஈடு இல்லை என்று பூரிப்புக் கொள்ளுவோம்.

—மூன்று

பாடலைப் பற்றி

○

தமிழகத்தில் சிறந்து நின்ற மிதவாதத் தலைவர் ஒருவரின் உளங்கவர்ந்து நூல் வடிவு பெற்று அன்பளிப்பாக வெளி வந்த, பாரதியாரின் முதல் கவிதைத் தொகுப்பில் அடங்கி யிருந்த மூன்று செய்யுட்களில் இதுவும் ஒன்று.

மற்றவை வந்தே மாதரம் என்போம், எந்தையும் தாயும் என்று தொடங்கப் பெறுவன. இந்தப் பாடலின் இராகம் பூபாளம் என்று குறிப்பிட்டுள்ளார் கவிஞர்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

○

ஊர்ப் பெருமை. குடிப் பெருமை, பிரதேசப் பெருமை என்பவற்றில், குறுகிய வளாகத்தில் தற்பெருமை கொள்ளும் இந்தியரை விரிந்த அளவில்—தேச அளவில்—பொதுப் பெருமை கொள்ளச் செய்கிறது இந்தப் பாட்டு.

தேசியம் என்பது பெரிய அளவிலான பெருமை யல்லவா? அஃது இந்தியருக்குப் புதியது. அதனைக் கவிவடிவில் இன்னிசை இழையப் புதிய மறுமலர்ச்சி வீணைக்கு இசைய ஊட்டுகிறார் கவிஞர்.

ஆனல் அஃது இந்தியருக்கு இன்றும், பழக்கமில்லாததாக, அன்னியமாகவே, இருக்கிறது. இந்தப் பாடலுக்கு இன்னமும் நிரம்ப வேலையிருக்கிறது. நீகிரோவின் முடிமயிர் சுருண்டு கொண்டு விடுவதைப் போன்று குறுகிய வட்டாரப் பெருமைகளைக் கிளறிவிட்டு அதனுள் அமைந்து தலைமை தாங்குவது என்பது இந்நாட்டில் சிறுதலைவர்களுக்கு மட்டுமல்லாது பெருந்தலைவர்களுக்கும் பொது இயல்பாக உள்ளது! என்ன செய்வது!

○

இந்தியாவின் வடவெல்லையாக உள்ளது இமயம். அளக்கலாகா அளவும் பொருளும் துளக்கலாகா நிலையும் தோற்றமும், வறப்பினும் வளந்தரும் வண்மையும் மலைக்குள்ள பெருமையாகத் தமிழ் நன்னூல் இயம்புகிறது.

இமயமோ அப் பெருமையிற் பெரிதாக, நிலையில் திரியாது அடங்கியான் தோற்றத்திற்கு ஒரு பெரிய எடுத்துக் காட்டாக, இந்திய யோக மாநெறிக்கு இருப்பிடமாக, நிலையில் திரியாது அடங்கியார் பலரைத் தன்பால் கொண்டதாக, உலகியற் சிறப்போடு தெய்விகச் சிறப்பும் கொண்டு ஓங்கி நிற்கிறது.

இமயமலை அல்லது தியானம் என்று தம் நூல் ஒன்றுக்கு முடி சூட்டினர் திரு.வி.க. உலகியலாம் ப்ருப்பொருண்மைக்கும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அருளியலாம் நுண்பொருண்மைக்கும் அஃது ஒப்பற்ற குறியீடாக விளங்கி நிற்கின்றது.

○

மலையில் தோன்றி மாக்கடலில் கலக்குமுன் சமவெளிப் பகுதியெல்லாம் எல்லையற்ற வளனுக்கு நிலைக் களனுக்கும் கங்கைப் பேரியாறு இந்தியக் கலாச்சாரத்தின் நீண்டநெடு ஒழுகலாற்றையும் வளப்பத்தையும் காட்டி நிற்கின்றது. வந்த பல ஆறுகளையும் தன்னுள் அடக்கிப் பரந்துசெறிந்த ஒரு பழம் பெரு நாகரிகத்தின் அழிவிலாத் தன்மையைப் புலப்படுத்தி நிற்கும் குறியீடாக அஃது இயங்கி வருகிறது.

○

உபநிடதங்கள் இந் நாட்டின் அறிவுச் சிறப்பினைப் பொதிந்து வைத்துள்ள நுண்ணிய களஞ்சியங்கள்.

அமெரிக்க எமர்சனும் ஐரிஷ் யேட்சும் ஜெர்மென் மாக்ஸ் மூலரும் பிரெஞ்சு ரோமெய்ன் ரோலானும் ஆங்கில எலியட்டும்...என்று எண்ணற்ற வெளிநாட்டு மெய்யன்பரும் கற்று மயங்கிக் கருத்து ஒட்பம் பெறக் காரணமாக இருந்த கைவிளக்குகள் அவை. கிழக்கிலும் மேற்கிலும் மெய்ப் பொருள்களை விழைவாரிடை ஞானச் சுடர்களை ஏற்றிவைக்கும் தெய்விக ஒளிப்பொறிகள் அவற்றில் அமைந்துள்ளன.

சான்றோர் பலர் அவற்றால் அதிமானுட ஆற்றல் எய்தினர். தம் வினைத் தொகைகளைக் களைந்து காலத்தை வென்று தம் பெயரெச்சத்தை இவ்வுலகில் நிலைபெறுத்தி வழிகாட்டற்கான அமுத சுரபிகள் அவை என மெய்ப்பித்தனர்.

இருண்ட குகைகளிலும் கரந்த சாதிப் பொந்துகளிலும் சுருட்டி முடக்கி வைக்கப்பட்டிருந்த அவை, வெளிநாட்டார் வருகையாலும் அச்சுயந்திர வாகனத்தாலும் விவேகானந்தரைப் போன்ற மனிதாபிமான மிக்க தேசபக்தச் சமதரும சன்னியாசிகளின் பொது நோக்காலும் பொதுவுடைமையாக்கப்பட்டன. மனித குலத்துக்கு உரியது, மனித குலத்தின்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

முன் வைக்கப்பட்டது. இவ்வாறு உபநிடதங்கள் இந்தியர் அனைவர்க்கும் பெருமையளிக்கும் பீடுடைய மெய்யறிவுச் சுவடிகளாக மிளிர்கின்றன.

○

தெய்விகம், பண்பாடு, யோகமாக் கலை என்பவற்றால் பெருமையுடைய நாடு என்று இந்தியாவுக்கு ஏற்றம் கற்பித்த கவிஞர் அடுத்த பகுதியில் தேர் மறவர், ஆன்ம வீரர், இசைத் திறவோர், ஆய்வாளர், வாலறிவர், புத்தர் ஆகியோரால் பெருமையுற்ற நாடு என்று எடுத்துக் காட்டுகிறார்.

இறை வழிபாட்டுக்கு இசை மிகவும் இனியது; ஏற்றது. எல்லாவற்றுக்கும் முந்தியது நாதம். தோற்றம் துடியதனில் என்றனர் ஆன்றோர். நாதத்திற்குப் பின்னரே தோற்றம் முதலியன தொடர்ந்தன. அதற்கு அடையாளமாக நாரதரின் இசையினை விதந்து ஓதுகிறார் கவிஞர்.

முனிவர்களுக்குள் நாரதர் [வேதத்தில் இசை மயமான சாம வேதம்] என்று எடுத்துரைக்கப்படும் பெருமை நாரதருக்கு உண்டு என அறிகிறோம்.

○

தேர் வீரர் எனப்படுவோர் போர் வீரர்கள். மாரத வீரர் மலிந்த நன்னாடு என்கிறார் கவி. தனிவீரர்களை யன்றிப் பெரும் படைத்திரளைக் குறிக்கிறது மாரதர் என்ற தொடர். ஒரு மாரதன் எனப்படுவோன் பதினோராயிரம் வில்லாளிகளை நடத்துவோன் என்று உரை வரைகிறார் சித்பவானந்தர். அத்தகைய மாரதர் மலிந்த நாடு, அதனால் நன்னாடு, என்னும் பொழுது மிக நிரம்பிய படைஞர் கூட்டத்தின் பெருமையைக் குறிக்கும் கவிஞர், படைவலிச் சிறப்பு நாட்டுக்கு மிகவும் வேண்டற் பாலது என்று வலியுறுத்துகிறார் என்பது தெளிவு.

படைப்பும் காப்பும் படைஞரின் தொழில்கள். அழித்தல் மட்டுமல்ல, ஆக்கலும் அவர்களின் தொழில்கள்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கண்ணனும் பார்த்தனும் மாரத வீரராகவும் இருந்தனர்; ஞானம் படைக்கும் தொழிலிலும் வல்லோரா யிருந்தனர்.

O

பூரண ஞானப் பொலிவு உடையது இந்தியா. அதன் நடை முறையில் இருந்த பிழைகளை, உயிர்க் கொலை, ஏற்றத் தாழ்வு, சுரண்டல் முதலியவற்றை, கொடுமைகளை, களைந் தெறிய வந்தவர் புத்தர்.

அவரால் இந்திய ஞானம் புடம் போட்ட பொன்னாயிற்று. அவரது அந்தண்மையொளி, அருள் பொலிவு, நாடு கடந்தும் பரவி இந்தியாவின் பெருமையை மறுபடியும் மலைவிளக்காக உயர்த்தின.

O

பாடலின் மூன்றாவது பகுதி இன்றைய இந்தியாவுக்கு — புதிய இந்தியாவுக்குத் தேவையான அறத்தை — மறத்தை— பூட்கையாம் இலட்சியத்தை — நவீன கீதையை அழகாகக் கூறுகிறது.

இன்னல்வந் துற்றிடும் போததற் கஞ்சோம்
ஏழைய ராகி இனிமண்ணில் துஞ்சோம்
தன்னலம் பேணி இழிதொழில் புரியோம்
தாய்த்திரு நாடென்னில் இனிக்கையை விரியோம்.

மிக எளிய சொற்களில் மிக வலிமையும் அழுத்தமும் உடையனவாக, நெஞ்சில் பொறித்து வைக்கவாகும் மணி மொழிகளாக, உலகநீதி போன்ற தேசிய நீதி உரைகளாக இவை மலர்ந்துள்ளன.

இந்தியா முழுதும் நாடொறும் முழங்கத் தக்க பூபாளமாக, விடியல் முரசமாக, சமவுரிமை மணியோசையாக, ஒலிக்கத் தக்கன இவ் வடிகள்.

நாட்டுக்கும் மக்களுக்கும் இன்னல் வருங்கால் முதலில்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வேண்டப் படுவது அஞ்சாமை. அச்சம் தவிர், ஆண்மை தவறேல் என்பதே பகவத் கீதையின் தொடக்கப் பாடம்.

வறுமையே அனைத்துத் துன்பங்களுக்கும் தாயகம். குடிப் பிறப்பழிக்கும் விழுப்பங்கொல்லும் என்று தொடங்கி அதனால் வரும் கேடுகளை அடுக்கினார், அந்தக் காலத்துச் சாத்தனார். அந்த நிலை, வறுமை நிலை, உருவு பல கொண்டு உலகரை வருத்தும் அரக்கனாக இன்று காறும் துயரக் கூத்து நடத்தி வருகிறது. அந்த அவல நிலை அடியோடு மாற முதலில் நிறுவப் பட வேண்டுவது சமத்துவ வல்லரசு.

சிறப்புடை மரபிற் பொருளும் இன்பமும் அறத்து வழிப் படூஉம் என்றனர் நம் முந்தையர், இன்று வேண்டிய அறம், சமுதாய அறம், உடைமைகள் யாவும் பொதுவாக்கப்பட்ட சமதருமம் ஆகும்.

அது நாட்டில் நாட்டப் படுமாயின் துன்பங்கள் யாவும் வேரும் வேரடி மண்ணுமிலாது மறைந்தொழியும், அதில் எள்ளளவும் ஐயமில்லை.

வளமிலா நாட்டையும் சமதருமப் பொருளியல் நெறி வளங் கொழிக்கச் செய்துவிடும் என்றால் இந்த நாடோ, கன்னலும் தேனும் கனியும் இன்பாலும் கதலியும் செந்நெலும் நல்கு மெக்காலும்!, அங்ஙனம் இருத்தலின் சமதரும நெறிமரபு சரிவர அமைக்கப் பெறின் வளங்களும் மேன்மேலும் அமையப் பெறும், கூடப் பெறும், அமர வாழ்வு தரும் இன்பங்கள் எல்லார்க்கும் இங்கு இனிது வந்து எய்தும் என்ற கவிக் கருத்து இப்பகுதியில் நன்கு புலனாகின்றது.

○

இமயத்தின் சிறப்பில் தொடங்கிப் பாடலை மிழற்றும் கவிஞர் இறுதியில் தமிழகத்தில் வேளாண் திருநாளுக்குரிய பொங்கல் படையலுக்கான சிறப்புப் பொருள்களோடு அழகுறச் சீர் தந்து நிறைவு செய்கிறார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கன்னல் தேன் கதலி செந்நெல் பால் பழம் என்பன உழைப்பைப் போற்றி ஆராதனை செய்த உழவர்களுக்குக் கிடைத்த வெற்றி விருதுகள் ஆகும். கவிதை இந்த விருதுப் பொருள்களோடு நிறைவுற்று வெற்றி பெறுகின்றது.

○

பாடலின் தொடக்கத்தில்

இமயமலை எங்கள் மலை என்று அவர், பாடுவது நாட்டுப் பாடலான குறத்தி பாடலில் வரும் 'எங்கள் மலையம்மே' என்பதன் எதிரொலி போல் எழுந்து ஒலிக்கிறது.

அவ்வாறே ஆரிய நாடெங்கள் நாடே என்று ஒரு விருத்தத்தில் வந்திருப்பது நமக்குத் திருக்குற்றாலக் குறவஞ்சியில் வரும் தென் ஆரிய நாடே என்ற அடியை நினைவு படுத்துகிறது.

○

தேசத்தின் சென்றநாட் சிறப்புகளையும் என்றுமுளவாகிய கீர்த்திகளையும் செப்பி இன்புறுத்தும் இப் பாடல் வேறு எந்த நாட்டையும் தாழ்த்திக் கூறவோ தம்மவரை மிகைப்படுத்தித் தற்பெருமை அடித்துக் கொள்ளவோ இல்லை.

அரைத்துக் கலக்கிய சந்தனக் கலவை போல நறுமணக் கூட்டாக மணக்கிறது இந்தக் கவிதை.

நாட்டுப்பற்று என்பது குறுகிய கொள்கை என்று கூறுவோர்— கூட இத்தகைய பாக்களில் ஆன்ம நேய ஒருமைக்கான பரிணமக் கூறு உள்நின்று ஒளிர்தலைக் கண்டு உள்ளங் குளிர்வர்.

○

மன்னும் இமயம் என்ற தொடக்கமே இமயமும் மன்னும், நாமும் எக்காலும் இவ்வையகத்து மன்னுவோம் என்று தொனிக்குமாறு தன்னம்பிக்கை இழையக் கம்பீரமாக அமைந்துள்ளது.

○

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

7

அன்னை வெற்றி கொள்க!

- எக் காலத்தும் அறம்!
- எப்பொழுதும் உண்மை உணர்வு!
- தாழ்விலும் நன்னூல்!
- கொள்ளை போன பிறகும் குறைவிலாச் செல்வம்!
- இன்று ஒரு புதிய ஆசை!

---

7 ஜய பாரத!

சிறந்து நின்ற சிந்தையோடு

ஒலிகள்

நம் நாடெனும் அன்னை, சிறந்து நிற்கும் சிந்தையுடையவள். அந்தச் சிந்தையோடு பல நாடுகளையும் வென்றனள். வென்ற பின் சினம் தணிந்தது. அவ்வந் நாட்டினர் வந்து பணிந்து வணங்கி நின்றனர். அது ஒரு காலம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மாண்பு நீங்கி ஏழ்மை வந்துற்றது. அந்த ஏழ்மை அறஞ் சாரா நல்குரவு அன்று. தீர மிக்க ஏழ்மை, தீரத்தால் வந்த ஏழ்மை. அது வந்து சேர்ந்தது. இது ஒரு காலம்.

அப்பொழுதும் சரி இப்பொழுதும் சரி அறத்தினின்றும் அவள் திறம்பியதில்லை. அத்தகைய அன்னை — அறந் தவிராத அன்னை — வெற்றி கொள்க!

ஒன்று

O

இந்த நாட்டில் முன்னை நாளில் இருந்த அறிவாளிகள் எவ்வளவு நூல்கள் செய்தார்கள்! கோடி—நூறு கோடி என்று இருக்கும் அவற்றின் எண்ணிக்கை ஏ, அப்பா!

அவற்றைக் கற்றறிய விரும்பிப் பிற நாட்டினின்றும் பலர் வந்தனர். நூறு தேயங்களிலிருந்தாவது அவர்கள் வந்திருப் பார்கள். உண்மையை அறியும் நாட்டத்துடன் இங்கு அவர்கள் வந்தார்கள். அது ஒரு காலம்.

அந்த நிலைமை மாறிவிட்டது. கல்விச் சிறப்பு தேய்பிறையா கியது. அறிவொளி இல்லாத போது மற்றவர்க்கு அறிவூட் டுவது எங்ஙனம்? தனக்கே கல்வியில்லாத போது வித்தியா தானத்துக்கு ஏது வழி? இது ஒரு காலம்.

இந்த இருவகை நிலையிலும், என்றும் எதிலும் இறுதியுண்மை யாகத் துலங்கும் பேருண்மையை—இறைமையை—உணர்ந்து இறைஞ்சி நிற்கும் இயல்பினள் எம் அன்னை. அவள் வாழ்க!

இரண்டு

O

வில்லேர் உழவரின் வாழ்வு குன்றிப் போய்விட்டது. வாள் வீரமும் மாய்ந்து விட்டது. பொய்யை—சாவை—வெல்லும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வாலறிவின் மிக்க மேலோர் செய்த நூல் வரிசை கூடச் 'சென்று தேய்ந்து இறுதலுக்கு' உள்ளாகி விட்டது.

இவ்வாறு வந்து சேர நேர்ந்தாலும், அவற்றை யெல்லாம் மறுபடியும் பெற்றுத் தரவல்ல — மீட்டும் ஆக்கவல்ல — புதிதாக வழங்க வல்ல ஒரு நூலை — அது கெட்டழிந்து விடாமல் காத்தனள் எம் அன்னை. அங்ஙனம் அதனைக் காத்து நிற்கும் அன்னை வாழ்க வாழ்கவே!

மூன்று

○

பாவமே உருவான நெஞ்சமுடையார், பொழுதெல்லாம் எங்கள் செல்வங்களைப் பறித்துச் செல்லுதலை மேற்கொண்டனர்.

இருந்த போதிலும், இன்னமும் எம்மிடம் தேவாமிருதம் வைக்கப் பெற்ற குடம் போலவும், நெடிய கடற்பரப்பிலுள்ள வெள்ள நீரைப் போலவும், சிறந்த செழிப்புள்ள செல்வமானது குறைவற்றிருக்கின்றது. அதற்குக் காரணமானவள் அன்னை — எம் அன்னை — அவள் வாழ்க!

நான்கு

○

இன்ப வாழ்வுக் குரிய கைத்தொழில்கள் பல செய்து பயன் மிகு பொருள்கள் பலவற்றை இந்தப் பாருலகிற்கு அவள் வாரி வழங்கினாள்.

மேன்மை அளிக்கும் பலவாகிய மதங்களை அவள் நிலைநாட்டியிருக்கிறாள்.

அவள், வகை தொகையாக வையகத்திலுள்ள நாட்டினர்க்கு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இன்று வேறு ஓர் உண்மையை உணர்த்த — சுதந்திரத்தின் சிறப்பை உணர்த்த — அதன் மேல் ஆசை கொண்டாள். அவள் சிறப்புற வாழ்க.

ஐந்து

பின் நினைவுகள்

○

வாழ்ந்த நிலை, தாழ்ந்த நிலை ஆகிய இரண்டும் நம்பிக்கைப் பின்புலத்தில் இந்தப் பாடலகத்து இயம்பப் பட்டுள்ளன.

இந்தியா விடுதலை பெறுதற்கு முன்பிருந்த மனநிலையில் எழுதப்பட்டது என்பதனால் அப்போதைய மன உணர்வு மீக் கூர்ந்து இருப்பதும் அதில் துயரத்தின் சதவிகிதம் அதிகம் இருப்பதும் எளிதில் அறியக் கிடக்கின்றன.

இன்றோ, விடுதலைப் பெருமையில் இருக்கிறது இந் நாடு. இனி அது தாழ்வை நினைக்க முடியாது. தாழ்வை நினைப்பதும் தகாது. நன்னம்பிக்கையின் வேகம் மிகுந்திருக்க வேண்டும். வாழ்வை நினைத்தபின் தாழ்வை நினைப்பது வாழ்வுக்கு நேரார்மோ என்று கவிஞரே பிறிதோர் இடத்தில் பிறிதோர், பொருளில் கூறியிருப்பது இங்கே இப்பொருளில் கொள்வது சாலப் பொருத்தமே யாகும்.

எனவே இந்தப் பாட்டு இன்றைய நம்பிக்கை முழக்கிற்கு எதிர் முழக்காக ஆகலின் 'அந்தக் காலத்துப் பாக்கள்' என்ற அடைவில் தான் இந்தப் பாடல் இடம் பெறும்.

○

சொல்லும்இவ் வனைத்தும் வேறு
　　சூழு நன்மை யும்தர
வல்ல நூல்கெ டாது காப்பள்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

என்பதில் சுட்டப் படுவது உபநிடதம் அல்லது கீதை என்று கூறுப.

'சாத்திரம் தான் ஒரு சாதியின் (தேசிய இனத்தின்) உயிர்த் தலம்' என்ற அவரது கருத்து இங்கும் இழைந்து இருப்பது அறிந்து இன்புறத் தக்கது.

○

பதந்தரற் குரிய வாய
பன்ம தங்கள் காட்டினள் நாட்டினள்

என்பது இந்தியத் தாயின் பெருமைகளுள் ஒன்றாகக் குறிப் பிடப்பட்டுளது.

அறுவகைச் சமயம்—சண்மதம்—அகப்புறச் சமயங்கள் என்று வேறு பட்டாற் போன்று இருப்பன வாகிய இந்தியச் சமயங் கள் உண்மையில் கிளையாறுகள் போல்வன; ஒன்றை யொன்று தழுவி இருப்பன என்பதை உணர்த்த இவ்வாறு தெரிவிக்கிறார்.

பல தொழில்கள், பலவாகிய சுக போக சாதனங்கள், பலப் பல இயற்கைக் காட்சிகள் என்று இதந்தருகின்றவை பன்மை யில் இருப்பது போல, இந்தியர் பல கடவுளர் பல சித்தாந்தங் கள் எனத் தொல்வரவாக வைத்திருக்கின்றனர்.

அவரவர் அனுபவத்திற்கு. அனுபூதிக்கு ஏற்பக் காட்சி வருணனைகள் வேறுபடுகின்றனவே யன்றி அவர்கள் உண்மையில் ஒரு கடவுளைத் தான் வணங்குகிறார்கள், ஓர் உண்மையைத் தான் நாடுகிறார்கள், ஒரு பேரின்பத்தில் தான் மகிழ்கிறார்கள்.

கடவுள் ஒருவரே; அவரைப் பல பெயரிட்டு அழைக்கிறார்கள்; அவ்வளவே. இனிப்புப் பொருள் ஒன்றே யெனினும் சுவை நலம் அவரவர்க்கு வேறுபடுகின்றது; பெயரும் வேறுபடுகின் றது.

○

எழுசீர்ச் சந்த விருத்தமாக இருக்கும் இப்பாடல் தாவடிப் பாடல் (வழி நடைப் பாடல்) போல் ஒலிக்கிறது.

○

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

8

எவர் கவிதை?

○

எல்லாப் பெருமையும் இந்தியத் தாய்க்கே!

இந்தியத் தனிமனிதரின் அருமை பெருமைகள் எல்லாம் இந்தியத் தாய்க்கே உரியன.

இந்தியத் தாயின் அருமை பெருமைகள் எல்லாம் இந்தியர் அனைவர்க்கும் வழிவழி உரிமை.

---

8 பாரத மாதா

முன்னை இலங்கை அரக்கர் அழிய

கருத்தோட்டம்

ஒன்று

மிக முற்காலத்தே இலங்கை அரக்கர்கள் அனைவரும் முடிவுறும் படியாகச் செய்த வில் யாருடைய வில்?

[இராமனும் மாவீரனைப் பெற்ற] எங்கள் அன்னை, பயங்கர

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மானவள், பாரத தேவியாகிய நல்ல ஆரிய ராணியின் வில்லே யாகும்.

இரண்டு

இராம காதையின் எதிர்நிலைக் குமரனாகிய இந்திர சித்தன் இரண்டு துண்டாகி அழியுமாறு கணையினை விடுத்தது எவருடைய வில்?

வில்லினும் வல்லமை பொருந்திய மந்திரம் வல்ல தெய்வ தமாம் பாரத தேவி என்னும் வயிரவியின் வில்லே அஃது.

மூன்று

'வணக்கத்திற்குரிய பரம்பொருள் ஒன்றே, நாம் அனைவரும் அதனுடைய மக்கள். இந்தப் பேருலகம் இன்பமயமான விளையாட்டரங்கம்' என்பது முதலாக நன்மை தரும் பேருண் மைகளைத் துலக்கித் தெளிவுற வரைந்த கை யாருடைய கை?

அஃது எங்கள் பாரத நாயகியின் திருக் கையே யாகும்.

நான்கு

காணப்படும் இவ்வுலகம் சித்த மயம், சித்தம் எப்படியோ உலகம் அப்படி. சிரித்தால் சிரிக்கும், அழுதால் அழும். காலம் இடம் என்னும் வண்ண விகாரங்களால் வகைவகையான வேறுபாடுகளை அது பிரபஞ்சமாம் திரையில் வரைந்து வரைந்து அழிக்கிறது. அந்தச் சித்தத்தை உறுதி என்ற தோட்டியால் ஒடுக்கி விட்டால் உலகத்துத் துன்பங்கள் எனப்படுவன யாவும் ஒரு கணத்துள் ஒடுங்கி விடும்.

இங்ஙனம் தெருட்டிய வேதாந்தக் கருத்து எவருடையது? அதனை விளக்கிய குரவரின் (சங்கரரின்) ஆய்வுரை எங்கிருந்து வந்தது?

அஃது ஆரிய ராணியாம் இந்தியத் தாயின் அந்தரங்க ஆன்ம

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஞானக் களஞ்சியத்திலிருந்து வந்த ஓர் வாய்மை உரையே யாகும்.

ஐந்து

சகுந்தலை பெற்ற பிள்ளை — தனது பாலப் பருவத்தில் சிங்கத்தைத் தட்டிக் கொடுத்து அதனோடு விளையாடிய பிள்ளை — தனது ஆட்சிக் காலத்தில் நல்லன பல செய்வதையே உகந்த பிள்ளை — பரதன் — அவன் உண்மையில் யாருடைய பிள்ளை என்று நினைக்கிறீர்கள்?

உண்மையில் அவன் பாரத ராணி ஒளியுறப் பெற்ற பிள்ளை அல்லனோ?

ஆறு

காண்டீபம் என்ற ஒப்பற்ற வில்லை ஏந்தி உலகினை வென்ற கல்லனைய தோள்கள் எவருடைய தோள்கள்?

[அருச்சுனனைப் பெற்றவள்] — எம்மை யெல்லாம் ஆண்டருள் செய்பவள் — ஏன், எங்களையும் பெற்று வளர்த்து அருள் செய்யும் தாய் அவளே தான். — ஆரிய ராணி எனப்படும் இந்தியத் தாயின் தோள்களே அவை.

ஏழு

சாகும் பொழுதும் தன்னுயிர் மேல் ஆசை கொள்ளாமல்— ஏனைய மாந்தர் போன்று தனிப் பற்று வைக்காமல், அது தானறப் பெற்றவனுகிக் கொடையே பெரிதெனக் கொடை மடம் கொண்டு, தன் உயிர்க்குக் காவலா யமைந்த கவச குண்டலங்களைத் தானம் செய்த கைகள் எவருடையவை?

[கொடைக்குக் கர்ணன் என்று] காலங் காலமாகப் புலவர்கள் பாகுபோன்ற சுவையுடைய தம் சொற்கோவையால் புகழ்ந்துரை செய்யக் காரணம் ஆகிய பாரத ராணியின் கைகள் தாம் அவை.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

எட்டு

மாபாரதப் போர் நிகழ்ந்த குருக்ஷேத்திரப் பறந்தலேயில் மிக மேலாம் மெய்யறிவுக் கீதையினைப் பொழிந்தது எவருடைய வாய்?

தன் பெயரைச் சொன்ன அளவிலே பகைவரை முடித்துக் கட்ட வல்ல திறத்தினைத் தன்னவர்க்குத் தருகின்ற பாரத தேவியின் மலரனைய வாயல்லவா அது?

ஒன்பது

தன் தந்தை தொடர்ந்து இன்ப வாழ்வு நடாத்துதற்குத் தான் இடையூருக இருக்க மாட்டேன் என்று, தனக்கு வரக் கூடிய ஆட்சியுரிமையையும், மங்கையர்மேல் கொள்ளும் காதலுற வினையும் அறவே கைவிடற்குச் சத்தியம் செய்த கொடுத்த (வீடுமனுக்கு) மனத்திட்பத்தை வழங்கியது எவரது பேராண்மை?

அஃது எங்கள் தாய் தந்த பேராண் மனத் திட்பமே யாகும்.

பத்து

அன்பே சிவம்; உலகத் துயர்கள் யாவும் அன்பினுல் தீர்ந்து போம்; அன்பே விடுதலே அளிப்பது என்று முன்பு சாற்றி அங்ஙனே அன்பினுல் உலகை ஆண்டார் புத்தர். அவரது மொழி யாருடைய மொழியோ?

அது தானும் எங்கள் அன்னையின் மொழியே யன்றி வேறென்ன?

பதினென்று

தனது ஆட்சிக்களமாகிய மிதிலாபுரி தீப்பற்றி எரிகின்ற போழ்தினிலும் மனத்தில் மருட்கை திரிபு எதுவுமின்றி உளமொன்றி யாக்ஞவல்கிய முனிவர்பால் வேத விழுப்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பொருளை உசாவி அறிந்து கொண்டிருந்த சனகராகிய அரசமுனிவரின் அறிவு எவருடையது?

தன்னுடைய அறிவிற்கொண்டதை நிலைபெற நிறுத்தி முடிக்க வல்லதாகிய அந்த மதி, நம் அன்னையின் மதியே யாகும்.

பன்னிரண்டு

தெய்விகச் சிறப்புகள் பொருந்திய சாகுந்தலம் என்னும் வியத்தகு நாடகத்தை ஆக்கியது எவருடைய கவி வல்லமை?

படைப்புக் கடவுளாகிய அயனின் செயல் நுட்பங்களை (காளிதாசனுக்கு) நன்கு உணர்த்தியதோடு அவன் கருத்தில் நின்று கதையை நடாத்திய பாரத தேவியின் அருட் கவி வல்லமையே அது என்பதில் என்ன ஐயம்?

பாடல் வழிச் சிந்தனைகள்

○

தான தனந்தன தான தனந்தன
தானனத் தானனே

என்ற சந்தக் குதிப்பில் இயங்கும் எடுப்பான இந்தப் பாடல், துயிலும் சிங்கத்தின் பிடரிமயிரைப் பிடித்து எழுப்பி, என்ன, இது எவருடையது, ஏனிந்த உறக்கம், அறிவாற்றல் மிக்கோய் ஆளவல்லாய் எழுக, என்று உசுப்பி விட்டுத் தன்னறிவு தன்வலிமை என்பவற்றை நினைவு படுத்தும் பாணியில் உள்ளது.

○

தொன்மைக் காலத்து வில்லாண்மை, வேத—ஞான—தத்துவ ஒளி, தோள்வலிமை, கொடை வளம், மனத் திட்பம், சத்திய வேட்கை, கருதியது முடிக்கும் கருத்து ஓர்மை, இலக்கிய ஏற்றம் என்பவற்றிற் சிறந்த இந்திய நாட்டைப் பளிச்சிடும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வண்ணக் கலவையால் தீட்டியுள்ள ஒரு பண்பாட்டுச் சித்திர கூடத்தைப், படைப்பாளிக்கே உரிய பெருமிதத் தோடு கவிஞர் நமக்குச் சுட்டிக் காட்டிக் களிகூர்கிறார்.

O

இராமாயண பாரத பாகவத சாகுந்தலத்துப் பழங்கதைக் கூறுகள், செய்திகள் இங்கு எடுத்துக்காட்டப் பட்டுள்ளன.

பழங்கதைகளுக்குப் புத்துயிர் கொடுப்பதன் வாயிலாக நாட்டுப்பற்றை மக்கள் நெஞ்சில் எழுப்பிவிடும் உபாயம் இங்குக் கையாளப்பட்டுள்ளது.

நாட்டின் ஏதோ ஒரு பாங்கர், எப்பொழுதோ ஒவ்வொரு காலை நடை பெற்ற பங்காளிச் சண்டை, பறி கொடுத்த விவகாரம், குடும்பத்தில் உள் முரண் என்பன போன்ற சிறிய நிகழ்ச்சிகள் காலப் போக்கில் பெரிய ஆருக விரிந்து தத்துவம் சோதிடம் அரசியல் உலகியல் பல்கலை முதலாய பொருள்களைச் சேர்த்துக் கொண்டு பெரிய உருவகங்களாக வளர்ந்து விடுகின்றன.

காப்பியங்கள் இவ்வாறுதான் பிறப்பெடுக்கின்றன, காப்பியங்களும் கருத்தோவியங்களும் உலகனைத்துக்கும் பொதுவாகி விடுதல் கண்கூடு. தொன் மூலக் கதைகள் மானிடம் அனைத்துக்கும் சொந்தமாக உள்ள அடிமனத்தின் ஆதி நாள் மலர்ச்சிக் கதைகள் என்பது உளநூல் கூறும் உண்மை ஆகும்.

O

இந்தியா, பல சிறு நாடுகளை—தனி நாடுகளை—பழைய காலத்தின் ஐம்பத்தாறு தேசங்களை உள்ளடக்கிய ஒரு துணைக் கண்டம். அஃது ஒரு தேசமாக மெல்ல மெல்ல மலர்ந்து மாலையாக இணைந்திருக்க முனையும் தருணத்தில் இந்தப் பாடல் மலர்ந்தது.

ஆயின், இதில் கூறப்பட்டுள்ள பெருமிதச் செய்திகள் யாவும் வடபுலத்தைச் சார்ந்தனவாக உள்ளன.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஆகவே இந்தப் பாடலானது வட இந்திய மொழிகளிற் பெயர்க்கப்பட்டு ஆங்காங்கே உலா வருமாயின் நிரம்ப வரவேற்பு அவ்வவ் விடங்களில் கிடைக்கும் என்று உறுதியாக நம்பலாம்.

தமிழில் பாடப் பெற்ற இதனுள் தமிழகத்தின்—தென்னகத் தின்—சிறப்புச் செய்திகளுள் ஒன்றேனும் இடம்பெருமல் போய் விட்டது.

தமிழகத்தில், அயலவர் அடுத்தடுத்து வந்த காலக் கூறுகளில் அவர்களை அதட்டிக் கேட்டவர்களும், தடுத்து நிறுத்தியவர் களும் விரட்டியடித்தவர்களும் வெஞ்சமரில் உயிர் நீத்துப் பெருமை சேர்த்தவர்களும் வாழையடி வாழையென உண்டு. நெற்கட்டுஞ் செவ்வல், பாஞ்சாலங்குறிச்சி, சிவகங்கை, வேலூர் என்று சிவந்த தலங்கள் பல உண்டு. அவ்வாறே அண்டைப் பிரதேசங்களிலும், ஏன் வட புலத்திலும் கூட கி.பி. ஆயிரம் முதலாக ஆயிரமாயிரம் பேர் உண்டு.

அவர்களைப் பற்றிச் சிறு குறிப்பேனும் இருந்திருப்பின் தேசப் பற்றெனும் பெரு நெருப்பு எல்லாப் பக்கத்தும் சமமாய்ப் பரவவும் நிலைபெறவும் அவ்வாறே அதனை ஏந்திய கவிதை ஏடுகளும் எப்பொழுதும் நிலை பெறவும் ஏது உண்டு.

சங்க கால முதலாக மூவேந்தர் பற்றிய விழுமிய செய்திகள், வீரர்களின் அருஞ் செயல்கள், சான்ருேரின் தொண்டு துறவு, இலக்கியப் பெருமிதம் என்பன பற்றிய பகுதிகள் நிரம்ப உண்டு. அவற்றை ஈண்டுப் பாரதியார் பாடவில்லையே என்று ஒரு கணம் எண்ணத் தோன்றும்.

தமிழ் என்ருலே முகஞ் சுளிப்பதும் தமிழ் வரலாறு என்ருலே நையாண்டி செய்வதும், தமிழ் இலக்கியம் என்ருலே அதை ஏனோதானோ என்று இகழ்வதும் முற்போக்கு—புதுமை—பரந்த மனப்பான்மை என்றென்று கருதும் தாழ்வு மனப் பான்மையானது எழுதப் படிக்கத் தெரிந்த தமிழர் சிலரிடம் உண்டு. பாரதியாரை—மறந்தும் அத்தகையார்க்குப் பலகாத தூரத்திலேனும் வைத்துப் பார்க்க நம் மனம் ஒருகாலும் ஒப்பாது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

உண்மை நிலை என்னவெனில், நூலாசிரியர் ஒருவர் சுட்டிக் காட்டியது போன்று, பாரதியார் காலத்தில் தான் சங்க இலக்கியங்கள் மறுபிறவி எடுத்து யாண்டும் பரவிக்கொண்டிருந்தன. பத்திரிகையாளராக அதிகம் கவனம் செலுத்தக் கடமைப் பட்டிருந்த கவிஞர்க்குச் சங்க கால இலக்கிய அறிமுகத்துக்கு நேரம் இருந்திராது.

அறிமுகம் கிடைத்த காலை அவர் அடைந்த ஆனந்தத்துக்கு எல்லையே இல்லை. அதற்குச் சான்றினை அவர், பழந்தமிழ்ப் பெண்டிரின் வீரத்தை எடுத்துக் கட்டுரை தொடுத்த திறவோர் மு. இராகவையங்காருக்கு விரைந்து தாமே பாராட்டி மடல் வரைந்தும் அந்தக் கட்டுரையைத் தம் இந்தியா இதழில் வெளியிட்டும் காட்டிய வியப்புவகையிலிருந்து தெரிந்து கொள்ள முடிகிறது.

○

ஆயினும் இந்தப் பாடற் செய்திகள் இன்றைக்கு யாரையோ பற்றி யாருக்கோ எழுதியன போன்று உள்ளன.

போதாக் குறைக்கு ஆரியராணி, ஆரியராணி, ஆரிய தேவி என்று கூறியிருப்பது—ஆரியம் என்பது மிக மேலான என்ற பொருளில்தான் ஆளப் பட்டிருக்கிறது என்று திரும்பத் திரும்ப நம் நெஞ்சொடு கிளந்தாலும் அது விலகிக் கொண்டு—காதிலே நாராசம் பாயப் பெற்றாற் போன்ற உணர்ச்சியையே தோற்றுகிறது.

என்ன செய்வது? சென்ற பல ஆண்டுகளாகத் தமிழகத்தில் அலை மோதிய ஆரிய எதிர்ப்புக் குரல் இன்னும் பலப்பல ஆண்டுகட்கு எதிரொலித்துக் கொண்டிருக்கும் போலிருக்கிறது.

பாரதியாரும் இந்தியா என்ற சொல்லை விடவும் கவிதையில், தொடக்க காலத்தில், ஆரியம் என்ற சொல்லுக்கு அதிக ஆசை கொண்டு வேறெவரும் உரைக்காத அளவுக்கு உரைத்து வந்தாரோ என்று ஐயுற வேண்டியிருக்கிறது.

இவ்விடத்து, ஆர். கே. கண்ணன் எழுதிய குறிப்பு ஒன்று

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நினைவுக்கு வருகிறது. அதில்...பாரதி இந்திய நாகரிகத்தை ஆரிய நாகரிகம் என்று ஒரேயடியாக வர்ணித்து, மக்களுக்குத் தொன்மை மிக்க சாதனைகளைக் கொண்டு உத்வேக மூட்டிய போதிலும், அது மறுபக்கத்தில் திராவிட எதிரொலியை அவர் காலத்திலேயே எழுப்பி விட்டது.....

என்று எடுத்துக் காட்டுவது கவனிக்கத் தக்கது.

O

ஆரியம் என்பதினும் பாரதம் என்ற பெயரைத் தான் இந் நாட்டின் பெயராகக் கவிஞர் கையாள்கிறார். அவர் சார்ந்திருந்த சிந்தனைக்கு ஒப்ப இந்திய அரசும் அப் பெயரையே நாட்டின் பெயராக வைத்துக்கொண்டு விட்டது.

சகுந்தலை பெற்றதோர் பிள்ளை...

என்ற பகுதியில் அந்தப் பெயர்க்கு உரிய நாயகனைப் பற்றிய குறிப்பு வருகிறது. அதில் அவனுடைய பெருஞ்செயல் எதுவும் வியந்து பாராட்டும் அளவுக்கு இயற்கையாக இல்லை. அந்தப் பரதனால் ஆளப் பெற்ற நிலம் பாரத நாடு என்கிறார்கள்.

அவன் காலத்தில் அவன் ஆண்ட சிறு நிலப் பரப்புக்கு அந்தப் பெயர் இருந்திருக்கலாம் ஆனால் புதிய இந்தியாவோ, நிலப் பரப்பில் கூட்டல் கழித்தல்களோடு, முன் எந்த ஒரு காலத்தும் இல்லாத ஒரு பெரும் பரப்பில் உருவாகி அமைவு பெற்றுள்ளது. அத்தகைய ஒரு பெருநாட்டுக்குத் தனியொருவனின் 'தத்திதாந்த நாமத்'தை வைத்துக் கொள்வது என்பதை நம்மால் சீரணம் செய்ய முடியவில்லை.

பரத முனிவர் என்பவரின் பெயரால் இந்தியா பாரதம் என்றழைக்கப் படுகிறது என்று வடஇந்திய அமைச்சர் ஒருவர் சென்னைக் கலைக் கூடம் ஒன்றில் அண்மையில் கூறினார்.

எப்படியிருப்பினும் தனிநபர்ப் போற்றல் என்பதும் தனிநபர் ஏற்றம் என்பதும் ஜனநாயக மரபுகளைச் சிதைக்கக் கூடியவை என்பதை அறியவேண்டும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

○

சாகும் பொழுது குண்டலம் தந்த பெருமை, மிதிலை எரியும் பொழுது வேதம் வினவிய சனகன் மதி என்பன

விடுதலைப் போராட்ட காலத்துக்கோ, எதிர்ப்புகளை அழித்துப் புதிய இந்தியாவை நிர்மாணிக்கக் கனன்றெழும் ஊக்கத் துக்கோ இசைவானவையாக இல்லை.

சுருதி மாறுபட்டனவாக, கால இடப் பொருத்தம் இல்லாதன வாக இருக்கின்றன.

அடிபட்டு வீழ்ந்து கிடக்கும் ஒருவன், தள்ளாடித் தள்ளாடி எழுந்து நின்று, தன்னை உரப் படுத்திக் கொண்டு தாளாண் மைக்கு ஆயத்தம் செய்து கொள்ளும் தருணத்தில் அவனிடம் கொடை—சால்பு—சமாதி நிலை—பேரின்பம் பற்றி அறிவுறுத் துவது பொருத்தமானது அன்று.

○

இந்தப் பாடலில் போர்க்களத்தே பரஞானமெய்க் கீதை புகன்றதைக் கூறத் தொடங்குகிறார்.

இது முதலாக, வாச மிகு துழாய்த் தாரான் கண்ணனடி மறவாத மனத்தான் ஆக மெல்ல மெல்ல மலரத் தொடங்கு கிறார் கவிஞர்.

தன்னையே கண்ணனின் குழலாக அவர் மாற்றிக் பாடி வருகிறார் என்பதும் கருதுதற் குரியது. பின்பு முப்பெரும் பாடல்களில் ஒரு பகுதி கண்ணன் பாட்டாகவே இருக்க, பாஞ்சாலி சபதத்தில் கண்ணன் வந்து தலைவியைக் காப்பாற்ற, மூன்றாவதாகிய குயிற் பாட்டின் குயிலோ, 'குழலே குழலே குழலே' என்று கண்ணனின் புல்லாங் குழலாகவே மாறிக் கொண்டு பாடுகிறது என்பதும் எண்ணு தற்குரியது.

○

இந்தப் பாடலில் வரும் எல்லாச் செய்திகளும் தமிழர்களை விட்டுத் தள்ளித்தள்ளி உள்ள போதிலும்,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஒன்று பரம்பொருள் நாமதன் மக்கள்
உலகின்பக் கேளி

எனவும்

சித்த மயமிவ் வுலகம் உறுதிநம்
சித்தத்தி லோங்கி விட்டால் துன்பம்
அத்தனையும் வெல்லலாம்

எனவும்

அன்புசிவம் உலகத்துயர் யாவையும்
அன்பினிற் போகும்

எனவும்

நமது நாட்டகத்து உருவாகிக் கொண்டலாகத் திரண்டு அவ்வப்பொழுது பொழிந்து மனிதப் பயிரை வளர்த்த தத்துவ அறிவின் தூறல்கள், இப் பாட்டகத்து வந்துள்ள கூறுகள், நமக்கு எப்பொழுதும் தெளிவும் திட்பமும் அமைதியும் தந்து கொண்டேயிருக்கும்.

O

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

9

இயல்பினளாம் தாய்

○

மருட்கை, பெருமிதம், சம நிலை ஆகிய சுவைகள் எவ்வளவு இனிமையாக இயைந்துள்ளன !

○

சொற்களுக்கு இவ்வளவு வேகமா?

○

தாம் நினைக்கும் செய்தியை, வாசிப்போர் கேட்போர் மனத் திரையில் அப்படியே ஓவியமாகப் பதிய வைத்தலில் கவிஞர்க்கு எவ்வளவு திறமை!

---

9. எங்கள் தாய்

தோன்று நிகழ்ந்தது அனைத்தும் உணர்ந்திடு

○

பெண்மை தாய்மை இறைமை என்றார் திரு. வி. க.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இந்தப் பாடலில் தாய் என்பது தேசம் தெய்வம் என்ற இரண்டுக்கும் குறியீடாக இருத்தலோடு, தாய்மொழி, பெண்மை என்பவற்றுக்கும் ஒரு சார் குறியீடாக வந்துள்ளது.

கருத்துக்களின் அணிவகுப்பு
தாயின் தொன்மை

தொன்மையின் தன்மையைத் தோண்டித் துருவி அகழ்ந்து ஆய்ந்து அலசிக் கூறவல்ல கலைநிபுணர்களும் இவள் என்று பிறந்தவள் என்று தெளிதற்கு இயலாத தொன்மைக் காலத்தவள் எங்கள் தாய்.

ஒன்று

இளமை; அழிவின்மை

பழமைக்குப் பழமையானவளாக, யாரும் கணித்துரைக்க இயலாத வயதுடையவள் ஆயினும், இந்தப் பாருலகத்தில். எந்த நாளும் ஓர் கன்னிகையாகத் திகழ்ந்து வருபவள் எங்கள் தாய்.

இரண்டு

சிந்தனை ஒன்று

அவளுக்கு முப்பதுகோடி முகம் உண்டு. ஆனால் உறுதி மிக்க உயிர் ஒன்றே தான். அவ்வாறே இவள் பேசும் மொழிகளோ பதினெட்டு. ஆனால் எண்ணம் மட்டும் ஒன்றே தான்.

மூன்று

வேதமும் வாளும்

இவளது நாவிலே வேதம் முழங்குகிறது. கையிலே நன்மை தரும் வாள் ஒளிர்கிறது. விரும்புவார்க்கு இன்னருள் செய்கிருள். தீயோர்க்கு அழிவைத் தரும் தோள் வலி கொண்டிருக்கிருள்.

நான்கு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஆட்சிக் கடமை

அவள் தான் பெற்றுள்ள அறுபதுகோடி அகன்ற கைகளாலும் அறங்களைச் செய்து வருவாள். தன்னொடு பொர நினைந்து வருவோரைத் தூளாக்கி வீழ்த்தி விடுவாள் தாய்.

ஐந்து

பொறை, புண்ணியம், ஆவேசம்.

நிலத்தினும் பொறுமை மிகுந்தவள்; நெஞ்சிற் புண்ணியம் நிறைந்தவள். இவ்வாறிருப்பினும் குற்றம் இழைப்பார் முன் நிற்கும் பொழுது இவள் கொற்றவையாக—கொடுந் துர்க்கை யாக இருப்பாள்.

ஆறு

விருப்பு வெறுப்பு அற்ற சமநிலை ஆட்சி

கற்றைச் சடை கலைமதி என்பன தாங்கித் தவஞ் செய்யும் மகாயோகியைக் கைகூப்பித் தொழுது நிற்பாள் எங்கள் தாய். கையில் ஒற்றை ஆணைச் சக்கரத்தை ஏந்தியவாறு உலகு ஏழினையும் ஆளும் ஒப்பற்றவனையும் தொழுவாள் அவள்.

ஏழு

யோகம், போகம்

இவள் தவயோகத்திற் தலைசிறந்தவள். ஒன்றே உண்மை, ஒன்றே பரம்பொருள்; அதுவும் தானும் ஒன்றே என்பது இவளுக்கு நன்ருகத் தெரியும். அவ்வாறே உயர்ந்த போகத் திலும் உளம் நிறைந்தவள். எண்ணிலாப் பொன் பொருட் குவியல்—சுக சாதனங்கள் உடையவள் இவள்.

எட்டு

ஆனந்தக் கூத்து

நல்ல அறத்தில் நாட்டங் கொண்டுள்ள மன்னவரை வாழ்த்தி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அவர்கட்குப் பரிவு நலம் காட்டுவாள் எங்கள் தாய். அவர்கள் செருக்கும் கிறுக்கும் கொண்டு சீரல்ல செய்வரேல் அப்படியே அவர்களைத் தூக்கி விழுங்கி ஏப்பமிட்டு ஆனந்தக் கூத்திடுவாள் அவள்.

ஒன்பது

திண்மை, சீர்மை

வெண்மை நிறம் கொழிக்கும் பனிமலையாம் பெருமகன் பெற்ற வெற்றித் திருமகள் எங்கள் தாய். அந்த இமயமால் மன்னன் தன் திண்மையில் ஒரு கால் மாறுபாடுற நேரினும் எங்கள் தாய் என்றென்றும் மாறுபடாள்; மறைவுருள். அவள் ஒவ்வொரு நாளும் சீரும் சிறப்பும் மேம்படுவாள்.

பத்து

பாடலைப் பற்றி

○

இந்தப் பாடலில் இந்திய தேசமும் இந்தியர் வணங்கும் இறைவி காளியின் பிணைப்பும் பிரிக்க முடியாதபடி இருக்கின்றன.

○

இந்தியக் கடவுளர்கள் ஆதி காலத்தில் அரக்கர் அவுணர் அசுரர் போன்றோரை அழிக்க ஆயுதம் தாங்கினார்கள். பின்னர் அவர்கள் ஆன்மிகக் குறியீடுகளாக அல்லது உருவகங்களாக உட்பொருள் கொண்டு உள்ளொளி தர முன் வந்தார்கள். இப்பொழுது அவர்கள் இந்திய தேசபக்தியில் இணைப்புற்று, அயலாதிக்கத்தையும் அக்கிரமத்தையும் எதிர்த்து அழிக்கும் கடமைக்கு அழைக்கப்படுகிறார்கள்.

இந்தியர் அனைவரும்—தேசபக்தி, தெய்வபக்தி உடையார் எல்லாரும்—நல்லதை ஆதரிக்கவும் தீமை நலியப் போர் புரியவும், தனித்தும் திரண்டும் எழ எப்பொழுதும் ஆயத்த

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மாக இருக்கவேண்டும் என்பதே இன்றையத் தேவை என்பதைப் பாடல் இலைமறைகாயாகக் காட்டுகிறது.

கையில் வாள், தீயரை வீட்டுதல். செறுவது நாடி வருபவரைத் துகள் கிடத்துதல், தோம் இழைப்பார் முன் கொடுமைக்காட்சி தருதல், அல்லவராயின் அவரை விழுங்கிப் பின் ஆனந்தக் கூத்திடுதல்—இவை தீமையை எதிர்த்தும் அயல் படையெடுப்பை எதிர்த்தும் வெல்லுமாறு குறிப்பா லுணர்த்துவன.

நாவினில் வேதம், அறங்கள் நடத்துதல், பூமியினும் பொறை. புண்ணிய நெஞ்சு, நல்லற நாடிய மன்னரை வாழ்த்துதல்—இவை நல்லன செய்தற் பொருட்டு அனைவர்க்கும் ஊக்கமும் விடாமுயற்சியும் பொறுமையும் புகட்டுவன.

ஆக, ஆக்கல் அழித்தல் காத்தல் ஆகிய முத்தொழிற்கும் நாட்டு மக்கள் தாமாகவே ஆயத்தமாக இருக்க வேண்டிய (அனிச்சைச்) செயலுக்கு உணர்ச்சி யழுத்தம் தருகிறது இந்தப் பாடல்.

○

முகம் முப்பதுகோடி, உயிர் ஒன்று; மொழி பதினெட்டு, எண்ணம் ஒன்று: பல்லுடலும் ஒருயிருமாக இந்தியர் இருக்க வேண்டுவதனை இதனினும் வேறு எவ்வாறு கற்பனை நயத்தோடு கூறமுடியும்!

அறுபது கோடி தடக்கைகளாலும்
அறங்கள் நடத்துவள் தாய்

—ஆகா, இதுவன்றே ''ஒத்துரிமை''?

ஆட்சி நடத்துவதில் அனைவர்க்கும் உளதாய பங்கு, சமமாய பங்கு எவ்வளவு தெளிவாகக் கூறப்பட்டுள்ளது! எல்லாரும் எல்லாப் பெருஞ்செல்வமும் எய்துதற்கு. எல்லாரும் எல்லாப் பொறுப்பையும் ஆளுக்கொரு கை கொடுத்துத் தாங்க வேண்டுவது இன்றியமையாப் பங்கு மட்டுமல்லாது, தேசியப் பாங்காகவும் இருக்க வேண்டு மல்லவா?

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

○

தொன்மை காண முடியாத் தன்மை, பழமையிலும் இளமைத் தளிர்ப்பு— இவை இரு பண்புகளும் ('ஒருமையும் யௌவனத் தன்மையும் பெற்று விளங்கும் பாரத தேவி' என்று எழுதுவர் பாரதியார், இப்பாடல் தொகுப்புக்கு முன்னுரையில்) தேசம் தெய்வம் ஆகியவற்ருேடு தாய் மொழிக்கு — நம் தமிழ் மொழிக்கு — உரைப்பதும் தவப் பொருத்தம் என்பதில் ஐயமுண்டா?

கன்னிமை என்பதனைச் சார்ந்து வருவது, சிந்தை கவரும் ஒரு காட்சி. அது கன்னிப் பெண்மை என்பதான படிமம். அஃது என்றென்றும் உளக் களிப்பும் ஊக்கமும் தரவல்லது. ஆகவே நாகரிகமான அதனை நாடு மொழி தெய்வம் ஆகியவற்றுக்குக் கூறி வருதல் மரபாக உளது. 'கன்னித் தமிழ்' என்று கூறினுல் ஏடாகூடமாகச் சிரித்துத் தம் அந்தரங்க வெறுப்பைத் திரித்துக் காட்டிக் கொள்பவர்களும், இறைமை, நாடு என்பவற்றை அச் சொல்லாற் சுட்டும் பொழுது ஏதும் கூற மாட்டார்கள்.

அத்துடன், கன்னி என்பதற்கு அழிவின்மை என்பதே முதற் பொருள் என்பதனை அவர்கள் அறிந்திருக்க வாய்ப்புக் கிடைத்திருப்பின் அங்ஙனம் நகுதல் செய்யார்; மாருக மிகுந்த மதிப்புக்கொடுப்பர்—தெரியாமை தானே தமிழுக்கு எதிராய தாழ்வுமனப் பான்மையைத் தோற்றி விடுகிறது? 'கன்னி ஞாயில்' என்று கூறும் வழக்கம் உளதல்லவா?

○

கற்றைச் சடைமதி வைத்த துறவியைக்
கைதொழு வாளெங்கள் தாய்

சாந்தம் பொங்கி வழியும் அந்தத் துறவியின் திருமுன் தொழுது நிற்கும் அந்தத் தாயின் முகத்தில் தான் எவ்வளவு சாந்தம் தவழ்கிறது! அது எவ்வளவு துலக்கமான படிமமாக அமைந்துள்ளது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பற்றற்ற பரமயோகியைத் தொழுபவள், பாரனைத்தையும் ஓராழி வைத்து ஆளும் ஒருவனையும் பின்பு தொழுகிருள்.

ஓரஞ்சாரா ஆட்சி, பற்றற்ற—ஆனுல் நம்பிக்கையுறுதி உடைய—ஆட்சிக்கு இந்தக் காட்சி உத்திரவாதமாக இருக்கிறது. அத்துடன் சைவ வைணவ, அவற்றுள்ளும் தென் கலை வடகலை என்ருங்குக் குண்டுச் சட்டிக்குள் நடக்கும் குட்டிக் கரணங்களைத் தடுத்து, சண்டைகளை நிறுத்தி, யாவும் கைகோத்துச் செல்லுதற்குச் சமர்த்தான பாலமும் இதில் அமைக்கப்பட்டுள்ளது.

கற்றைச் சடைமதி வைத்த துறவி பற்றிய நினைப்பு மிகப் பழங்காலந் தொட்டு இன்று வரை இருந்து வருகிறது என்று ச. இராதாகிருஷ்ணன் குறிப்பிடுவது இந்த இடத்தில் சிறிது கவனிக்கத் தக்கதாகும்:

Among the relics of the Indus civilisation are found figures which are prototype of SIVA, suggesting that he who explores his inward nature and integrates it is the ideal man. This image has haunted the spiritual landscape of this country from those early times till this day.

○

வேதமும் வாளும்

இவை ஞானக் கருவிகள்; புறவுலகிற்கும் வாழ்க்கைத் துணைகள். இந்த இணைப்பு பாரதியாரிடம் இறுதிவரை உரை பெறுகிறது. அவரது தேசிய சித்தாந்தத்தின் யாழ் நரம்பு இந்த இணைப்பு.

தேச ஆவேசம் அடங்கி விட்டதாகக் காணப்படும் அவரது குயில் பாட்டில், சேர இளவரசனுகிய கவிஞரின் கையில் வாள் இருக்கிறது. எதிர்பாராத விதமாக அவன் சாவுக்கு இரையாக நேர்ந்த தருணத்து மனம் தளராது 'சாவிலே

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

துன்பமில்லை இன்னும் பிறவியுண்டு, மாதரசே இன்பமுண்டு' என்று புன்னகை நிலவ உரைப்பது கீதாசாரமாக — வேதாந்த வாக்கின் எதிரொலியாக இருக்கிறது என்று எடுத்து விளக்கியுள்ளார் **சிம்பலிஸம்** என்ற (தமிழ்) நூலின் ஆசிரியர்.

'கண்ணன் பாட்'டின் தலைவனான கண்ண பெருமானே, யோகம் போகம் போர்க்கலை என்பவற்றில் வல்லாளனாகத் திகழ்ந்து வருகிறான்.

○

யோகம் போகம் இணைப்பு

யோகத்தை வற்புறுத்தின பௌத்த சமண நெறிகள்; போகத்தை வற்புறுத்தின அவற்றுக்கு முந்திய காலச் சனாதனச் சிந்தனைகள். அவற்றையெல்லாம் தன்னுள் இணைத்துக் கொண்ட இந்து தருமம் யோகம் போகம் ஆகிய இரண்டுக்கும் ஈருள் போன்ற — நுரைஈரல் போன்ற — இணைபிரியா இடத்தைக் கொடுக்கின்றது. அவை இரண்டும் மானிடத்தின் உயிர்வாழ்வுக்கு, உய்திக்கு, உயர்வுக்கு, இன்றியமையாதனவாகும்.

வறுமை கொடியது. இன்மையின் இன்னாதது இல்லை. அதனை ஒழிக்கப் பொற்குவை வேண்டும். எனவே எண்ணரும் பொற்குவை தானுடையாள் என்று வலியுறுத்தினார் கவிஞர்.

○

வேதம் வாள் என்பவற்றோடு பூமியினும் பொறை, புண்ணிய நெஞ்சு, தோமிழைப்பார் முன் துர்க்கையாதல்—இவை புதுமைப் பெண்ணுக்கும் வேண்டற்பால பண்புகள்.

இளமை, கல்வி, காரியத்திறம், அஞ்சாமை, பொறை, ஆற்றல், பொதுநலம் போற்றல் என்பன புதுமைப் பெண்ணிடம் இருக்க வேண்டிய சிறப்புப் பெற்றிகள் என்பதால் பாடலில் இவை குறித்த பகுதிகள் அவளுக்கும் பொருந்துவனவாகும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

○

நல்லற நாடிய மன்னரை வாழ்த்தி
நயம்புரி வாளெங்கள் தாய் அவர்
அல்லவ ராயின் அவரை விழுங்கிப்பின்
ஆனந்தக் கூதிடுவாள்

இது பாரதி வழி என்று காலஞ்சென்ற ப. ஜீவானந்தம் ஒரு முறை கம்பீரமாகப் பேசி மேற்கோளாகக் காட்டினர்.

கடவுளை நம்பாமை என்ற கொள்கையுடையாரும் பெருமிதமான இந்த உருவகத்தைக் கருத்துச் சிறப்பு மிக்கது என்று ஒப்புக்கொள்ளத் தயங்கார். இந்தக் கருத்து, தேசியத்துக்கு மட்டுமல்லாது, சர்வதேச மக்களியக்கங்களுக்கும் வழிகாட்டுவதாகும். பொதுமக்கள் ஒருங்கு எழுந்து வெற்றிகரமாகத் தலைநிமிர்ந்து வீரசகாப்தம் ஒன்றைத் தொடங்க முனைந்து நிற்பது போன்ற ஓர் வீறுகோள் அல்லவா இந்தப் பாடலில் அணிவகுத் திருக்கின்றது!

கண்ணகி சீதை முதலிய இலட்சியப் பெண்டிரும், உலக மனைத்திலும் விடுதலைக்கு உழைத்த ஒப்பற்ற பல மகளிரும் இந்தப் பாடலின் கண்கூடான சான்றுகளாக நம் நினைவுத் திரைகளில் காட்சி தரத் தவறமாட்டார்கள்.

○

கடைசியாக உள்ள கண்ணியில், இமயம் குலையினும் தான் குலையாத் திண்மையுடையாள் தாய் எனவும், நித்தமும் சீர் மிகுவாள் எனவும் காட்டியுள்ள காட்சி, வெண்மை சார்ந்து வரும் மறுவறு பின்புலத்தோடு இயைந்துள்ளது. அது நம் மனத்தகத்துத் தூய்மை திண்மை செவ்விய தன்மை என்ற பண்புகளை நிலைபெறச் செய்கிறது.

○

இந்தப் பாடலில், முரண்தொடை போல மாறுபட்டவற்றை ஒவ்வொரு கண்ணியிலும் பின்னி வைத்திருப்பது தனிச்சுவை தருகிறது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

○

இவ்வாருகத் தொன்று தொட்டு வரும் இறைமையைப் புதிதாக எழுந்து உருவாகும் தேசியத்தோடு இணைத்துச், சில பகுதிகள் புதிய பெண்மைக்கும் சில பகுதிகள் பொதுமக்கட்கும், சில மொழிக்கும் என்று பொருந்துமாறு பாடற்பகுதிகள் தொனிசெய்கின்றன. குறியீட்டுத் திறம் நன்கு அமைந்துள்ளது.

○

கருநாடக இசையை விடவும் நாட்டுப்புறத்து இசைக்கு உணர்ச்சி வேகம் அதிகமாக இருக்கும் போல் தெரிகிறது. காவடிச் சிந்தில் வருகிற ஆறுமுக வடிவேலவனே மெட்டு, இந்தப்போடு போடுகிறதே!

○

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

Forwarded free of cost and with the compliments of the Department of Education Government of India, New Delhi

10

பாடுவாள் குதிப்பாள்

அனுபூதிக் களிப்பில்
பேரின்பக் கூத்தாடும்
சக்தியின் செய்திகள் இரண்டொன்று
படமாக்கப் பட்டுள்ளன இந்தப் பாடலில்.

---

10 வெறி கொண்ட தாய்

பேயவள் காண் எங்கள் அன்னை

○

இதற்கு முன்பு உளதான **எங்கள் தாய்** என்ற பாடலில் சமயமும் சமுதாயமும், தேசமும் தெய்விகமும் பிணைந்து கிடக்கின்றன. இந்தப் பாடலில் சமுதாயத்தினும் சமயத்தின் சார்பே மேலோங்கி நிற்கிறது.

○

சமயம் என்பது அந்தரங்க அனுபவம்.

கோவில்கள் கொட்டுகள் கும்பங்கள் கூப்பாடுகள் விருந்து

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கள் வேடிக்கைகள் என்பவற்றுக்கு அப்பாற்பட்டு, தான் பெறும் ஆனந்தக் களிப்பைச் சார்ந்து தானாகி நிற்பதே அந்த அந்தரங்க அனுபவம். அஃது உண்மைச் சமயவாணர் எல்லார்க்கும் உரித்தானது.

O

உண்மையிலே, சமயம் என்பதே ஓர் அனுபவம், தரை மட்டத்துக்கு மேலே முடிந்த மட்டும் எழுகின்ற அனுபவம், ஆகும். மற்றவை எல்லாம் துணைக் கருவிகள். துணைக் கருவிகளே தடைக்கருவிகளாகவும் ஆதல் உண்டு.

Religion is fulfilment of man's life, an experience in which every aspect of his being is raised to its highest extent.

என்று நன்கு உரைத்தார் அறிஞர் ச. இராதாகிருஷ்ணன்.

இந்தப் பாடலிலுள்ள படங்கள் வருமாறு:

எங்கள் அன்னை ஆனந்த பரவசத்தில் இருக்கிறவள், தன்னை மறந்த நிலை. அந்த நிலையில் அவள், சுடு நெருப்பை ஏந்தியுள்ள பித்தனைக் காதலிக்கிறாள்.

அவனோ காமனை வென்றவன்! நெருப்பு மயமானவன். அதாவது அறிவுமயமானவன். நெருப்புக்குத் தந்தை அவன். நெருப்பை ஏந்தியவன். சுடலையில் ஆடுபவன்; அதாவது சாவை வென்றவன். நீறு தரித்தவன் அதாவது சக்தி எழுச்சி கொண்டு உச்ச நிலை அடையும் பொழுது அதனைச் சாம்பல் பூசித் தணிப்பவன்.

அவன் பேரறிவின் குறியீடு. எழுச்சி கொண்ட எங்கள் தாய்— அவள் பேராற்றலின் குறியீடு. பேராற்றல் பேரறிவைக் காதலிக்கிறது, கலக்கிறது. அதனாற் பிறக்கிறது பேரின்பம். ஆகவே அவள் ஒரு பேயானாள். அவன் பித்தானான். பேய் என்பது செத்தொழிந்து சுற்றித் திரியும் ஆவியோ, பித்தென் . . .

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பது உலகியற்கிறுக்கோ அன்று. இங்கு வருவது அதிமானுட நிலை.

ஒன்று

அவள் இசையில் மயங்குகிருள். இன்னிசை என்னும் இன்பக் கடலில் திரண்ட அலைவெள்ளம் எழுகிறது, மடிகிறது, சுழல்கிறது, ஏறுகிறது, இறங்குகிறது. அதில் அன்னை ஆடித் திளைக்கிருள். எழுந்து குதித்துத் தாவித் தாவி விளையாடுகிருள்.

பேரின்ப நிலைக்கு இசை ஒரு துணை; உறுதுணையும் ஆம். எழுந்து பொழியும் இசையும் ஒரு யோக சாதனம். நாதக் கனலில் பாவங்கள் உருகி ஒழிகின்றன.

காமனுக்கும் இசை ஒரு கருவி. யோகிக்கும் அஃது ஒரு கருவி. உள்ளம் உருக்கிக் கள்ளம் அழிக்கும் அதனைக் காம வேளின் ஆராதனைக்கும் பயன்படுத்தலாம்; தேவதேவனின் ஆராதனைக்கும் பயன்படுத்தலாம். இசையோகி யாழ்நரம்பின் வழி இறைக் கலப்பாம் சுகத்தை அடைகிருன்.

இரண்டு

இனிய சொற்களில் தழைந்த அழகிய கவிதைகள் நிரம்பிய சோலையில் அன்னை மெல்லடி வைத்துத் துள்ளி நடனமிடுகிருள். அந்தச் சோலையில் இருப்பவற்றுள் தெய்விகமாகிய தன்மணம் கமழும் மலர்கள் பல உண்டு. அவை தேன்மழை பொழிகின்றன. அவற்றைப் பறித்துச் சூடிக் கொண்டு ஆடுகிருள் அவள். அவளது ஆடல் மதுவின் தேக்கமாக உள்ளது. அந்தத் தேக்கம் நீக்கமிலா இன்பத்தை நீக்கமறக் கொடுக்கிறது.

கவிதை—தெய்விகக் கவிதை—அதுவும் பேரின்பம் அளிக்கும் சாதனமே. அருள்மயக்க நிலையிலே கவிதை கருக் கொள்கிறது. அது உயர் கவிதை. அந்த மயக்க நிலையில் தேக்கிய அனுபவம் கவிதை வடிகாலில் பெருகி வருகிறது. அந்தத் தேக்கம் அதனைக் கற்ருர்க்கும் கற்ருர்வாய்க் கேட்டார்க்கும் அதே அனுபவத்தைக் கொடுக்கிறது. உணர்ச்சி வாயில் உணர்வோர் வலித்து என்பது தொல்காப்பியர் அறிந்து சொன்ன அனுபவ உண்மை.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பாரதியார்க்கு விருப்பமான குறியீடுகளில் ஒன்று மது. அது பற்றி எழுதும் ஆரார் என்பவர் இந்தச் சரணத்தை எடுத்துக் காட்டி, ''உணர்ச்சியும் ஒளியும் ஆன்மிக தேக நலனும் தரும் அரிய பொருள்களின் கலவையே மது; அதன் தேக்கத்தைக் கவிதையில் ஆக்கும் செயல் நுட்பங்களில் ஒன்று குறியீடு' என்று முடித்துக் காட்டித் தனது சிம்பலிஸம் என்ற நூலை நிறைவு படுத்தியுள்ளார்.

மூன்று

அன்னை தன் பரவசத்தில் வேதங்கள் பாடுகிறாள். உண்மை என்னும் வேலைக் கையில் ஏந்தியவாறு குதிக்கிறாள். உணர் தற்கு அரியவும் உரியவுமான சாத்திரங்கள் பலவற்றை ஓர்ந்து உணர்ந்து வையக மெங்கும் விதைக்கிறாள்!

'உண்மையின் பேர் தெய்வம்', 'உண்மைகள் வேதங்கள்' என்று பாரதியார் 'உயிர் பெற்ற தமிழனுக்கு உரைப்பார். சாத்திரம் என்பதற்கு. ''மதியிலே தழுவிய கொள்கை கருத்து குளிர்ந்திடு நோக்கம்'' என்று அவரே தமிழச் சாதியில் வரைவிலக்கணம் தந்துள்ளமை அறியத்தக்கது.

நான்கு

பாரதப் போர் என்பது இலேசான தன்று. அது பெரிது; பெரிதினும் பெரிது. அதில் மானிடத்தின் உருவகமாக இருப் பவன் பார்த்தன். அவன் கையில் வேல் உளது. அதில் ஒளிர்கிறாள் எம் அன்னை. அப்புறம் வேறென்ன வேண்டும்? வெற்றி தவிர வேறென்ன வந்துறும்? மாரதர் கோடியாக வரினும் ஒரு கணத்தில் மாய்த்து அந்தக் குருதிப் பெருக்கில் மூழ்கித் திளைப்பாள் அவள்.

அவளது ஆனந்தக் கூத்து அங்கே அவ்வாறு நடக்கிறது.

ஐந்து

பாடலைப் பற்றி:

O

காதல் இசை நடனம் கவிதை வேதம் விஞ்ஞான சாத்திரம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

போர்க்கலை என்பவற்றின் வளர்ச்சிக்கும், சுயாதீனத்துக்கும், துடிக்கும் ஒரு தேசிய இந்தியாவைக் காண்பதோடு இந்தப் பாடலில் தெய்விகக் காதலில் அதன் நிறைவேற்றத்துக்கும், அதனதன் இயைபுக் கேற்ற நெறி கண்டு நாடும் சுயாதீனத் துக்கும், துடிக்கும் ஜீவன்களையும் காண்கிறோம்.

○

சுழன்று குதித்துத் தன்னிலை மறந்து பித்தனொடு ஆடும் கலைவீரப் பெண்மைப் படிமம் அதிமானுடத்துக்குரிய மெய்ப் பாட்டுடன் நன்கு உருவாக்கப்பட்டுள்ளது.

○

கருத்தாழத்தை மறைக்கும் சொல் எளிமை, நம்மை ஏமாற்றி, இதில் என்ன இருக்கிறது, இது என்ன பாட்டு என்னுமாறு மூடி மறைத்துப் புன்முறுவல் பூத்து ஆடுகிறது.

○

இந்தத் தொகுப்பில் உள்ள மிகச் சிறந்த பாட்டுக்களுள் ஒன்று இது. என்றும் எழுச்சியூட்டி நின்று நிலவும் நுண்மைப் பொருளும் பருமைக் காட்சியும் உடையது.

○

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

11

தாயே எழுந்தருள்!

○

'நல்லிசை' கருதிய மன்னனை நல்லிசை பாடித் துயில் எழுப்பியது தொல்காப்பியர் காலம்.

எல்லாம் வல்லனாகிய இறைவனைப் பள்ளியெழுமாறு வேண்டிப் பாடியது மாணிக்கவாசகர் தொண்டரடிப் பொடியாழ்வார் காலம்.

மக்களை எழுப்பக் கருதிப், பெற்ற தாயாக விளங்கும் பிறந்த பொன்னாட்டை விழித்தெழுமாறு பாடியது பாரதியார் காலம்.

○

புதியன புகுதலும் மரபுவழியே என்று முன்னோர் கருதியதைக் கடைப்பிடித்துக் காட்டிய பாரதியார், 'அவர்வழி வந்தோர் பூனைகள்' அல்லர், புலி நிகர் தமிழ் மாந்தர்' என்று பாரதிதாசன் பின்னை நாளில் உரைத்தாற் போன்று பரம்பரையான புலமைச் செம்மாப்புக்கு ஈடு கொடுத்துச் சிறந்து இலங்குகிறார் இந்தக் கவிதை எழுச்சியில்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

11 பாரத மாதா திருப்பள்ளியெழுச்சி

பொழுது புலர்ந்தது யாம்செய்த தவத்தால்

○

மாணிக்கவாசகர் திருப்பெருந்துறையில் அருளிய திருப்பள்ளி யெழுச்சி எண்சீர் விருத்தங்கள் பத்தில் திரோதான சுத்தி குறித்து இயம்புகிறது.

அது பற்றி எழுதும் சித்பவானந்த சுவாமிகள், 'இறைவனுடைய பஞ்ச கிருத்தியங்களுள் திரோதானம் என்பது ஒன்று. மறைத்தல் என அது பொருள்படுகிறது. சொருப ஞானத்தைத் தமோ குணம் மறைத்திருக்கிறது. அதிகாலையில் எழுந்து திருப்பள்ளியெழுச்சி வாயிலாக இறைவணக்கம் செய்து வருகிறவர்களுக்குத் தமோகுணம் தெளிவடைகிறது. அச் செயல் திரோதான சுத்தி என்னும் தலைப்பு பெறுகிறது; என்கிறார் தம் திருவாசக உரையில்.

○

பாரதியார் புதுவையில் இருந்து பாடிய பாரத மாதா திருப் பள்ளியெழுச்சி, எண்சீர் விருத்தங்கள் ஐந்தில் தேசிய விழிப்பு குறித்து இயம்புகிறது.

அது பற்றி எழுதும் தி. சா. ராஜு 'பாரத நாட்டைத் தாயாகப் பாவித்து அவளது அடிமை நிலையை உறக்கமாகக் கொண்டு அன்னை சுதந்திர விழிப்பைப் பெறும் பொருட்டு அவர் திருப்பள்ளி எழுச்சி பாடினார். உறங்கும் பாரதத்தாயைத் தனயர்கள் துயிலெழுப்புவது அதிசயற்புதமான கற்பனை' என்கிறார் 'பாரதி—ஒரு வாழ்நெறி' என்ற தனது நூலில்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பாரதியாரின் கருத்து இசைவு

பொழுது விடியத் தொடங்கி விட்டது. தாழ்ந்த இருளின் தொகுதியானது. அடியவர்களாகிய யாங்கள் செய்த தவத் தின் பயனுக அகன்ருெழிந்தது. பசும் பொன்னின் சுடர் எங்கும் எழுந்து பரவுகின்றது. எம் தாயே, உன்னைத் தொழுது வாழ்த்தி வணங்குதற்குத் தொண்டர்கள் பல்லாயிரக் கணக்கில் சூழ்ந்து நிற்கின்ருேம். இன்னமும் நீ துயில்புரிகின் ருய். இது வியப்பிற்குரியதாக உள்ளது. தாயே பள்ளியெழுந் தருள்வாயாக!

ஒன்று

பறவை இனங்கள் ஆரவாரம் செய்கின்றன. முரசுகள் பேரொலி எழுப்புகின்றன. சுதந்திர முழக்கம் எங்கும் பொங்குகிறது. வெண்ணிறச் சங்குகள் எழுந்து முழங்குகின் றன. மாதர்கள் தெருக்களில் போதருகின்றனர். தெளிந்த அந்தணர் வேதத்தோடு சீர்மிகும் நின்றன் திருப்பெயரையும் ஓதி நிற்கிருர்கள். கடைந்து அள்ளி யெடுத்த தெள்ளிய அமுதம் போன்ற எம் அன்னையே, ஆருயிரே பள்ளி எழுந்தருள் வாயாக!

இரண்டு

பரிதியின் பெருமை மிக்க ஒளியினை வானிடைக் காண்கிருேம். பூமியின் மீது நின்னுடைய பேரொளியைக் காண்பதற்கு ஏக்கறுகின்ருேம். நின் சிவந்த அடிகளில் சூட்டுவதற்கு என விழைந்து எங்களது கனிந்த நெஞ்சமாகிய மலரைக் கொண்டு வந்தோம். சுருதிகளைப் பெற்று உலகிற்கு உவந்தளித்தவளே! சொல்லுதற்கரிய மாண்பினை உடைய சாத்திரங்கள் மிகப் பலவற்றைச் செய்து கொடுத்தவளே! அன்னையே, அரக்கர்கள் நடுக்க முறும்படியாகக் கையிலே சூலத்தை ஏந்தியவளே, மாசற்றவளே, பள்ளி யெழுவாயாக!

மூன்று

உன்னுடைய அழகிய விழிகளின் அருள் நோக்கைப் பெற வேண்டு மென எங்கள் நெஞ்சகத்தில் இருக்கும் ஆவலை நீ அறியமாட்டாயோ? பொன் போன்றவளே, வெள்ளிப் பனி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

முடியையுடைய இமயமலையரசன் தவம் செய்து பெற்ற பெருந்தவமாகிய பொருளே, உனது அருளைப் பெறுதற்காக எளியேம் எத்துணைக் காலம் எத்தகு தவங்கள் எப்படி எப்படிச் செய்தோம்! எத்துணைக் காலம் ஏங்கிக் கிடக்கிறோம்! இன்னுயிர் போன்றவளே! இன்னும் நீ உறங்கிக் கொண்டிருப்பையாயின் அது நன்றாகுமோ? தாயே, பள்ளியெழுந்தருள்க!

நான்கு

அன்னையே, நீ பெற்ற குழந்தைகள் உன்னை எழுப்புகிறார்கள், தாயாகிய நீயோ துயில்கின்றனை! உலகினைப் பெற்றவளாகிய உனக்கு இஃது உணர முடியாததா? பிஞ்சு மொழியினரின் வேண்டுகோட்கு இரக்கம் கொள்ளாமல் ஒரு தாயும் இருப்பாளோ? கோமகளே, உயர்ந்த பாரத நாட்டவர்க்கு அரசியே, பதினெட்டு என வகைபெற்று நிற்கும் மொழிகள் அனைத்திலும் புகழ்ந்து நீ விழையுமாறு உன்னைப் பாடுவோம்; அதைக் காண்பாயாக! இனிய அமுதனையாய், வந்து எம்மை ஆண்டு அருள் செய்பவளே, எம்மைப் பெற்றவளே, பள்ளி எழுந்தருள்க!

ஐந்து

பாடலைப் பற்றி

O

''ஆ, காலை மந்த மாருதத்துடன் இந்த பூபாளமும் கலக்கும் பொழுது எவ்வளவு இன்பம் பயக்கிறது'' என்று வியந்து எழுதும் சுத்தானந்த பாரதியார்,

புள்ளினம் ஆர்த்தன, ஆர்த்தன முரசம், வெள்ளிய சங்கம் முழங்கின

என்பதற்குப், புள்ளினமான தேச பக்தர் ஆர்த்தனர், வந்தேமாதரம் எனும் வீரமுரசம் ஆர்த்தது, விடுதலை வெண் சங்கு முழங்கியது என்று உருவகப் பொருள் விரிவு தருவது பொருத்தமாக இருக்கிறது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

○

'புன்மை யிருட் கணம்' என்ற தொடரைப் பிறிதோரிடத்தும் ஆளுகிருர் பாரதியார். இவ்விடத்திலோ அதற்கேற்ப, 'எழுந்து விளங்கியது அறிவெனும் இரவி' என்று அழகான உருவகமும் இணைந்து வந்துள்ளது. புன்மையாகிய இருளைப் போக்கும் அறிவாகிய கதிரவன் என்று உருவகம் விரிகிறது.

○

பாரதியாரின், 'தெள்ளிய அந்தணர்' வேதமும் இந்தியத் தாயின் 'சீர்த்திரு நாமமும் ஓதி நிற்கின்ருர்'கள்.

இதில் ஒரு புதுமையான இணைப்பு இருக்கிறது. வேதம் ஓதுவோர் நாட்டைப் பற்றி அக்கறைப் படுதல் என்பது குறைவு. நாட்டைத் திருத்த விரும்புவார், வேதம் வேண்டும் என எண்ணுதல் அதனினும் குறைவு. இந்த இரண்டும் இயைபுற வேண்டும். விவேகானந்த 'விஜய'த்தின் தனிச் சிறப்பே அது தானே!

○

திரண்டிருக்கும் அடியவர்களின் குறிக்கோளை—தமது ஆருயிர்க் குறிக்கோளை—தேசபக்தர்களின் ஆன்ம வேட்கையைக் கவிஞர், பாடலின் மூன்ருவது விருத்தத்தில் கூறுகிருர். அதுவே இந்தப் பாடலின் மையக் கருத்தாக உள்ளது.

> பருதியின் பேரொளி வானிடைக் கண்டோம்
> பார்மிசை நின்னொளி காண்பதற் கலந்தோம்

அன்னை இந்தியாவின் புகழ், பரிதியின் ஒளிபோல் பாரகமெங்கும் திகழ வேண்டும் என்பதே முக்கிய நோக்கமாகும்.

○

அன்னையின் அறிவொளி, படைவலி ஆகிய இரண்டையும் இணைத்துப் பிற இடங்களிற் கூறுதல் போன்றே ஈண்டும் பாடுகின்ருர்:

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சுருதிகள் பயந்தனை சாத்திரம் கோடி
சொல்லரு மாண்பின ஈன்றனை அம்மே
நிருதர்கள் நடுக்குறச் சூல்கரத்து ஏற்ருய்
நிர்மலை யே பள்ளி எழிந்தரு ளாயே!

அறிவொளியோடு நாட்டுக்குப் படையொளியும் வேண்டும். பாரதியார் மீண்டும் மீண்டும் அதனைக் கூறி வருவது இந்திய மக்கள் அனைவர் நெஞ்சத்தும் இறுக இருத்திக் கோடற்கே யாகும். நிருதர்கள் என்பதும் சூலம் என்பதும் தேசிய, சமய, பொருட் சார்புகளை வெளிப்படையாகவும் குறிப்பாகவும் கொண்டிருக்கின்றன.

C

கருதிநின் சேவடி அணிவதற் கென்றே
கனிவுறு நெஞ்சக மலர்கொடு வந்தோம்

என்ற அடிகளைக் காணும் பொழுது விபுலானந்தரின்

வெள்ளைநிற மல்லிகையோ வேறெந்த மாமலரோ
வள்ளல் அடியிணைக்கு வாய்த்த மலரெதுவோ
வெள்ளைநிறப் பூவுமல்ல வேறெந்த மலருமல்ல
உள்ளக் கமலமடி உத்தமனர் வேண்டுவது

என்று அடுக்காக எழுதியுள்ள செய்யுள் வரிசை நம் நினைவுக்கு வரத் தவருது.

O

பனி முடிய இமயப்
பொருப்பினன் ஈந்த பெருந்தவப் பொருளே—

என்பது தவம் செய்த தவமாம் தையல் என்ற கம்ப சித்திரத்தை நினைவு படுத்துவதாக உள்ளது. இமயப் பொருப்பு என்பதே மௌனப் பெருந்தவத்தின் பேருருவம். அதன் மகள், தவம் பெற்ற தவமாகத் தானே இருக்க இயலும்?

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

○

அன்னிய தென்னமுது அன்னஎம் அன்னே,

ஆருயிரே, இன்னுயிரே—என்று இந்தியத் தாயினைப் போற்றுவது நெஞ்சை அள்ளுவதாக இருக்கிறது. தேசபக்தராகிய அடியாரின் துடிப்பு ஆர்வம் தவம் ஏக்கம் என்பன ஆருகப் பெருகி,

மதலையர் எழுப்பவும் தாய்துயில் வாயோ
மாநிலம் பெற்றவள் இஃதுண ராயோ
குதலை மொழிக்கிரங் காதொரு தாயோ?

என்று கூறும் தொடர்களில் சுழியாகச் சுழித்து நம் நெஞ்சில் வந்து பாய்ந்து உட்புகுந்து விடுகின்றன!

○

அடியவர்கள் இறைவனை ஏத்துவது அனைத்து ஆன்மாக்களின் நன்மைக்காக; அவ்வாறே தேசபக்தர்கள் இந்தியத் தாயினைத் துதிப்பது இந்திய மக்களின் நன்மைக்காக அன்றி வேறு எதற்காக? பாரத மாதாவின் கண் விழிப்பு என்பது இந்திய மக்களின் கண்விழிப்பே யன்றோ?

○

விதமுறு நின்மொழி பதினெட்டுங் கூறி
வேண்டிய வாறுனைப் பாடுதுங் காணுய்

என்று பரவுகின்ற கவிஞர், பதினெட்டாகிய இந்திய மொழிகளின் ஒருநிகர் உரிமையை நிலைநாட்டுகிருர். எந்த ஒரு மொழியும் ஏதோ ஒரு காரணங் கூறி மற்றவற்றின் மேலேறி நின்று அழிச்சாட்டியம் செய்யவோ, அழிவுக் கூத்து நடத்தவோ இடங்கொடுக்கக் கூடாது என்பதே. இவன் வழிப் பெறக் கூடிய உறுதிப் பாடாக உள்ளது. அங்ஙனம் இடம் கொடுத்தால் தேசிய ஒற்றுமைக் கயிறு புரி அவிழ்ந்து போக இடங் கொடுத்ததாகும் என்று அறிதல் வேண்டும்.

தொடக்க நாளில் பாரதியாரே, ஒரு சூழ்நிலையில் இந்தி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வகுப்பு நடைபெறுவதாகிய தேசபக்தி பற்றித் திலகருக்குக் கடிதம் எழுதியிருக்கிறார். இந்தியா இதழில் இந்தி படிப்பது பற்றி வரைந்திருக்கிறார். வடமொழி, இந்த நாட்டின் பொது மொழியாக இருத்தற்குரியது என்று தமக்குத் தெரிந்த (ஆனால் நடைமுறைக்குப் பொருந்தாத) காரணங்களைக் காட்டி எழுதியிருக்கிறார்.

ஆயினும் அவையெல்லாம் சந்தர்ப்ப வசத்தால் எழுதப் பட்டவை என்று மதிப்பதே நியாயமானது. 'பதினெட்டுங் கூறி' என்ற பக்குவமான கருத்தே, தேசத் தாயின் திருமுன், கவிதைக் கனலிடை நின்று கனிவுறக் கருதிப் பாடியது; அகத்தின் ஆழத்திலிருந்து வந்தது என்று அதனை ஏற்றுக் கொள்வதே தக்கது.

○

இனி, திருப்பள்ளி யெழுச்சி பாடியுள்ள தொண்டரடிப் பொடி யாழ்வார், மாணிக்கவாசகர் இராமலிங்கர் ஆகியோருடைய பாக்களொடு பாரதியாரின் திருப்பள்ளி யெழுச்சியை ஒப்பிட்டு எழுதியுள்ள கா. மீனாட்சிசுந்தரம் தரும் கருத்துக்கள் அறிந்து இன்புறத் தக்கனவாகும். அவை வருமாறு:

Thondar Adi Podi Alwar in his matin songs describes only the charming sights and sounds of nature at dawn. Manicka Vachakar sings of the ecstasy of the devotees who have gathered at the temple in the grey of the morning. Ramalinga Swamigal draws our attention to the awakening of the mind from the enveloping gloom of ignorance.

Bharati who is steeped in all these writers sings of the national awakening of the land. He has a strong historic sense and he is fully aware of the fact that it is the lack of union amongst us that has been mainly responsible for our utter undoing...

We are having different languages; but they must all proclaim one message of unity...

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

○

இலக்கிய மரபு என்ற தம் நூலில் மு. வ. மூவர் பாக்களைக் காட்டிப் பாரதியாரின் திறம் பற்றி எழுதியுள்ளமை மிகவும் பொருத்தமான ஒன்றாகும். அது,

போற்றிஎன் வாழ்முதல் ஆகிய பொருளே
புலர்ந்தது பூங்கழற்கு இணைதுணை மலர்கொண்டு
ஏற்றிநின் திருமுகத்து எமக்கருள் மலரும்
எழில்நகை கொண்டுநின் திருவடி தொழுகோம்
சேற்றிதழ்க் கமலங்கள் மலருந்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
ஏற்றுயர் கொடியுடை யாயெனை உடையாய்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே!

□

கதிரவன் குணதிசைச் சிகரம்வந் தணைந்தான்
கனவிருள் அகன்றது காலையம் பொழுதாய்
மதுவிரிந் தொழுகின மாமலர் எல்லாம்
வானவர் அரசர்கள் வந்துவந்து ஈண்டி
எதிர்திசை நிறைந்தனர் இவரொடும் புகுந்த
இருங்களிற்று ஈட்டமும் பிடியொடு முரசம்
அதிர்தலில் அலைகடல் போன்றுள தெங்கும்
அரங்கத்தம் மாபள்ளி எழுந்தரு ளாயே.

□

பொழுது புலர்ந்தது யாம்செய்த தவத்தால்
புன்மை இருட்கணம் போயின யாவும்
எழுபசும் பொற்சுடர் எங்கணும் பரவி
எழுந்து விளங்கியது அறிவெனும் இரவி
தொழுதுனை வாழ்த்தி வணங்குதற் கிங்குன்
தொண்டர்பல் ஆயிரர் சூழ்ந்துநிற் கின்றோம்
விழிதுயில் கின்றனை இன்னும்எம் தாயே
வியப்பிது காண்பள்ளி எழுந்தரு ளாயே!

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இவை மூன்றும் முறையே மாணிக்கவாசகர், தொண்டரடிப் பொடியாழ்வாரும் பாரதியாரும் பாடிய திருப்பள்ளியெழுச்சிப் பாட்டுக்கள் முதலிலே தோன்றி யமைந்த மரபை அவ்வாறே பல நூற்றுண்டுகள் வரையில் போற்றி வரும் பெற்றியை இவற்றில் காணலாம். பதினொன்று அல்லது பன்னிரண்டு நூற்றுண்டுகள் கழித்துத் தோன்றிய பாரதியாரும் திருப்பள்ளி யெழுச்சி பாடும்பொழுது, அந்த மரபை விடாமல் போற்றி யுள்ளமை, யாப்பும் ஒலியும் பொருளமைப்பும் ஒரே தன்மை யாக அமைந்துள்ளமை காணலாம்.''

O

பாரதியார் புதுவையில் இருந்த காலை, ஊருக்கு மேற்கே இரண்டு கல் தொலைவிலுள்ள ஒரு மடுவில் குளிக்கப் போக லாம் என்று குவளைக் கண்ணன் அவரிடம் கூறி இரண்டு நாள் வந்து அதிகாலை நான்கு மணிக்கே எழுப்பி அழைத்துச் சென்றுர். மூன்றும் நாள் பாரதியாரே குவளையின் வீட்டுக்கு வந்து கதவைத் தட்டினுர். அவரைக் குவளை, தம் தாயிடம் அறிமுகம் செய்து வைத்தார். அந்த அம்மாள் அப்பொழுது; 'அவர் நன்றுகப் பாடுவார் என்கிருயே, சுப்பிர பாதம் பாடச் சொல்லு' என்று சொன்னுர்.

அதற்குப் பாரதியார், சுப்பிரபாதம் என்றுல் என்ன என்று கேட்டார். சுப்பிரபாதம் என்றுல் என்ன என்று கேட்கிருரே இவ்வளவு தானு உன் பாரதி என்று கூறி அந்த அம்மை நகைத்தாராம்.

நீராட மடுவுக்குப் போகும் வழியில் குவளையிடம் சுப்பிரபாதம் என்றுல் திருப்பள்ளி யெழுச்சி என்று கேட்டுத் தெரிந்து கொண்ட பாரதியார் இவ்வளவுதானு என்று சொல்லிச் சில தினங்களில், பாரத மாதா திருப்பள்ளி எழுச்சியைப் புனைந்து வந்து குவளையின் தாயிடம் பாடிக்காட்டினுராம்.

இந்தப் பாடல் பிறந்த வரலாறு—'சித்திர பாரதி' தரும் இந்தக் குறிப்பு—கவிஞரின் கவிதை உள்ளத்தையும் அதன் மறுபுறத்தில் இருந்த குழந்தை உள்ளத்தையும் தெரிவிக் கிறது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

○

இந்தியப் பெருநாட்டைத் துயிலெழுப்பிப் பாடும் இந்தச் செந்தமிழ்ப்பாட்டு, இந்த நாடெங்கும் எல்லா நாட் காலையும் பாடத்தகுந்த சிறப்புடையது. வடமொழிச் சுப்பிரபாதம் வானொலியில் விடியல் நேரத்தில் ஒலிக்கப் படுவதுண் டல்லவா, அங்ஙனே இது இந்திய வானொலி நிலையங்கள் யாவினும் வைகறையில் ஒலிக்கத் தகுந்த உயர்வும் ஒற்றுமை யுணர்வும் பெற்றுள்ளது.

தமிழகத்தில் முன்பு, விடுதலை வீரர்கள் தேசபக்தர்கள் என்று முன்னின்ற சாரார் இதனைக் கசிந்து கனிந்து பாடிவந்தனர். இப்பொழுது அத்தகையராக எவருமில்லாத காரணத்தாலோ தேச விழிப்பு அதிகம் பெருகிவிட்டது, இனிப் போதும் என்று கருதப்படுகிற காரணத்தாலோ தேசிய வட்டாரத்தில் இந்தப் பாடல் பாடப்படுவது நின்றுவிட்டது.

பொதுவாக, நாட்டில் தேசிய, அரசியல் வட்டாரங்களுக்கும் இலக்கிய ரசனைக்கும் உள்ள இடைவெளி, இமயத்தின் அடிக்கும் முடிக்கும் உள்ள தூரமாகிவிட்டது.

○

இந்தியாவின் பிற புலங்கள் எத்தகைய மதிப்பு கொடுத்தாலும் மதிப்பே கொடா விட்டாலும், தேசிய, அரசியல் வட்டாரத் தார் பாடல்—கவிதை—இலக்கியம் என்ற துறையையே புறக்கணித்து விட்டாலும், இலக்கிய வழிமரபில் பழகுநலம் கொழிக்கும் இந்த வைகறைப் பாட்டு தமிழ் கூறு நல்லுலகத் தில் கவிதையை விரும்பும் சுவைஞர்க்கு, ஆய்வாளருக்கு, பண்பறிந்த பாடகர்க்கு, ஆரா இன்பம் அளிக்கத் தவறுது என்பதில் ஐயமில்லை.

○

கடைசியாக இதில் உள்ள சுருதி என்ற சொல்லைப் பற்றிய ஒரு குறிப்பை நாம் தெரிந்து கொள்ளவேண்டும்.

பாரதியார் பொதுவாக, மக்கள் வழக்கிலுள்ள சொற்களைத் தான் கையாளுவார். இருப்பினும் நூல்—வழக்கிலுள்ள

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சொற்களும் அவர் பாக்களில் ஆங்காங்கு அருகி வரத்தான் செய்கின்றன. அங்ஙனம் வராது ஒதுக்கி வைத்தல் இயலாது; ஒதுக்கி வைத்தல் ஆக்கமும் அன்று.

நிருதர் நிர்மலே என்பன போன்ற வடசொற்கள் இப்பாடலில் வந்துள்ளன. பயந்தனே, பொருப்பினன் போன்ற தமிழ்ச் சொற்கள் உள்ளன. இவை உலக வழக்குச் சொற்கள் அல்ல. 'போச்சே' என்பதற்குப் பதில் போயின என்ற சொல் வந்துள்ளது.

படியாதார் நூற்றுக்குத் தொண்ணூறு பேராக இருந்த நாட்டில்—இருக்கும் நாட்டில் வழக்குச்சொல், படிப்புச் சொல் என்று பிரித்துப் பார்த்தல் சற்றும் பொருந்தாத ஒன்றாகும். நூல் வழக்குச் சொற்களை ஆளுதல் என்பது பருந்து வானில் வட்டமிட்டுப் பறத்தலை ஒக்கும். வாயில் வந்ததை வைத்து எழுதுதல் என்பது ஊர்க்குருவி பறப்பதைப் போன்றதாகும். ஊர்க்குருவியின் பறப்பில் அழகிருக்கிறது; மறுக்க முடியாது. ஆயினும் ஊர்க்குருவி பருந்தாக முடியாது அல்லவா?

பாடலில் வந்துள்ள சுருதி என்பது ஒரு வடமொழிக் கலைச்சொல்; சமயநூல் வகை பற்றிய ஒரு கலைச்சொல்லும் ஆகும். அவ்வாறே 'ஸ்மிருதி' என்ற ஒன்றும் உண்டு. இவை யிரண்டும் பாரதியார் பாடல்களில் ஆங்காங்கு வரற்பாலன. அவை யாவை. என்ன வேறுபாடு உடையவை என்பது பற்றித் தம் கீதை விளக்க முன்னுரையில் சித்பவானந்த அடிகள் வரைந்துள்ளார். அவை இரண்டும் 'அகராதி'ச் சொற்கள். அடிகள் அவை பற்றித் தெளிவு படுத்தியுள்ளமையை இங்கு அப்படியே காண்போம்:

''பகவத் கீதைக்கு அமைந்துள்ள தனிச் சிறப்புக்கு முக்கியமான காரணம் ஒன்று உண்டு. அது ஏக காலத்தில் சுருதியாகவும் ஸ்மிருதியாகவும் வழங்குகிறது.

சுருதி எது ஸ்மிருதி எது என்று முதலில் ஆராய்வோம். உபநிஷதங்களுக்குச் சுருதி என்று பெயர். கர்ணபரம்பரையாகக் காதால் கேட்டுக் காப்பாற்றி வைக்கப்பட்டது எதுவோ அதுவே சுருதி. நெடுங்காலமாக ஒருவர் பின் ஒருவராகக் கேட்டு வந்தது எனினும் அதன் சொல் அமைப்பை மாற்றி விடவில்லை...கணிதத்தில் எண் சுவடியையும் வாய்பாட்டையும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

எப்படி யாரும் மாற்ற முடியாதோ அப்படி, சுருதிப் பொருளை மாற்ற முடியாது. மெய்ப் பொருளை விளக்குகிற சுருதி மொழியும் என்றும் மாருதிருக்கிறது. ஆக சுருதி, யாண்டும் சாசுவதமானது.

ஸ்மிருதி என்பது ஞாபகத்தில் வைத்துக் கொண்டுள்ளது என்று பொருள் படுகிறது. சமூக வாழ்க்கை சம்பந்தமான கட்டுப்பாடுகளும் சட்டதிட்டங்களும் சேர்ந்து ஸ்மிருதி என்னும் பெயர்பெறுகின்றன. நன்கு அமைக்கப் பெற்ற ஸ்மிருதிகள் எப்பொழுதும் பரதத்துவங்களை அடிப்படையாகக் கொண்டவை. பராசர ஸ்மிருதி, மனுஸ்மிருதி முதலியவை பிரசித்தி பெற்றவை.

ஸ்மிருதிகள் சாசுவதமானவை யல்ல. காலத்துக்கும் இடத்துக்கும் சந்தர்ப்பத்துக்கும் ஏற்ப அவை மாறியமையும். சமூக நடைமுறைகளை நன்கு அறிந்துள்ள மேலோன் ஒருவன் அல்லது மேலோர் கூட்டம் ஒன்று ஸ்மிருதிகளைக் காலத்திற்கு ஏற்றவாறு திருத்தியமைத்துக் கொள்வதுண்டு.

சுதந்திர இந்தியாவுக்கு இப்பொழுது இந்திய அரசாங்கம் அமைத்துள்ள சட்டதிட்டங்களையும் ஸ்மிருதி யெனலாம். ஆக, ஸ்மிருதி என்பது அப்போதைக் கப்போது மாறியமையும் தன்மையுள்ள சமூகக் கோட்பாடுகளே யாகும்.

''பகவத் கீதையானது ஏக காலத்தில் சுருதியாகவும் ஸ்மிருதியாகவும் அமைந்துள்ளது. பரதத்துவத்தை அது நன்கு விளக்குவதால் அது சுருதியாகிறது. பரதத்துவத்துக்கு ஏற்ற வாழ்க்கை வாழ்வது சநாதன தர்மம். இந்நூலினின்று சநாதன தர்மத்தை உள்ளபடி கற்றுக்கொள்ளலாம். சமுதாய அமைப்பு எத்தகையது என்பதையும் அது எங்ஙனம் நடை பெற வேண்டும் என்பதையும் அறிந்து கொள்ளலாம்...''

○

ஸ்மிருதிகள், புராணங்கள் என்பன பற்றி 'உயிர் பெற்ற தமிழர் பாட்டு' என்பதில் பாரதியாரும் இவ்வாறே விளக்கம் தந்துள்ளார் என்பது கவனிக்கத்தக்கது.

○

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

12

வீரர் முப்பத்திரண்டு கோடி

○

இது வரலாறு தழுவிய ஒரு பாடல்.

○

காந்தியடிகள் இந்திய அரசியலிற் புகுந்து, புதியதான அறப்போர் வழியை அறிமுகம் செய்கிறார் தாய்த்திரு நாட்டின் கிளர்ச்சியை வளர்ச்சி செய்கிறார். அதற்கு வெற்றி உறுதி; விடுதலை திண்ணம் என்று முழங்குகிறது இந்தப் பாடல்.

○

அறுபது ஆண்டுகட்கு முந்தியதான கருத்து உடையது. ஆயினும் பாரதியாரின் முத்திரைகள் அறியத் தக்கன இருக்கின்றன.

காப்புச் செய்யுள் தவிர ஒன்பது செய்யுட்கள் அவற்றுள் மணிகள் ஒன்பதும் இயல்பாகவோ இரட்டுற மொழிதலாகவோ பதிவு பெற்றுள்ளன. பளபளக்கும் நவரத்தினங்களைச் சிலர் பார்த்திருப்பார்கள், மிகச் சிலர் வைத்திருப்பார்கள். ஆனால் பாடலில் உள்ள நவமணிகளோ வாசிப்பார் யாவர்க்கும் உரிமையாகி விடுகின்றன.

○

அந்தாதி யமைப்பு; மரபு வழி யாப்பில் புதிய செய்திகள்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

12 பாரத மாதா நவரத்தின மாலை

பாரத மாதாவின் பதமலர்க்கே நவரத்ன மாலை

கருத்து மாலை

காப்பு, மைந்தன் திறம் உதவும்

முப்பத்திரண்டு கோடி வீரர்களைப் பெற்றுள்ள பாரதத் தாயின் திருவடி மலருக்குச்; சீர் பொருந்திய நவரத்தின மாலையினை நான் அணிவித்தற்குச் சிவரத்தின மைந்தனாகிய பிள்ளையாரின் திறம் எனக்குக் காப்பாக உதவுமாக!

1. வயிரம்: இந்தியா—நலங்கள் பல

'இந்தியா' என்ற உன்னுடைய பெயரை—எமக்குக் கண் போன்ற பெயரைக் கூறிய அளவிலே, திறமிக்க நல்ல வயிரம் பாய்ந்த சீர் திகழும் மேனி கிடைக்கும். அறம் மிக்க சிந்தை, அறிவு, பிற நலங்கள் என்பவெல்லாம் எண்ணற்றனவாகக் கிடைக்கப் பெறுவார்கள்.

2. நீலம்: காலனை வெல்லும் வலிமை

நீலக் கடல் போன்ற நிறத்தை உடையவள், மூன்று கண்களை உடையவள், காலம் என்னும் கடலுக்குப் பாலம் இட்டவள் ஆகிய சிறப்புடைய நம் அன்னையின் காலில் விழுந்து வணங்கினால்,

காலன் எதிர்வந்தாலும் அவன் நடுங்கி, எதுவும் செய்யாது கும்பிட்டு ஓலமிட்டு ஒழிவான். அதனால் பகை என்று ஒன்று இருக்கவும் முடியுமோ?

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

3. முத்து: நூற்பெருமை

அன்னையே, அந்த நாளிலே உலகுக் கெல்லாம் ஆணிமுத்துப் போன்ற மணிமொழிகளாலே வேதங்கள், உபநிடதங்கள், புகழ் மிக்க புராணங்கள், இதிகாசங்கள் இன்னும் பல நூல்களை உரைத்து அருள் புரிந்தாய். அவற்றிலுள்ள ஞானத்தை இந்த நாளில் என்னென்று சொல்லிப் புகழ்ந்து உரைப்போம்?

அவை மின்னுகின்ற பேரொளி, காலத்தை வென்ற புத்தமுது; கடவுள் தன்மைக்கு அழியாத ஒரு வெற்றி.

4. பவளம்: காந்தியடிகள் கண்ட வழி; இரவீந்திர நாதர் கருத்து

வெற்றி கூறுங்கள், வெண் சங்கு முழங்குங்கள். கற்றவர்க ளாலே இந்த உலகம் காப்பாற்றப்பட்டது. புதிய வழி ஒன்று இந்நாள் ஏற்பட்டிருக்கிறது.

இன்று காறும், அறமில்லாத கொடியவர்கள் குற்றமே தமது மணிமுடியாகக் கொண்டவர்கள் மற்றைய மனிதரை அடிமைப் படுத்துதல் தான் உலகினுக் கெல்லாம் முற்றிய அறிவின் முறைமை என்று கருதி யிருந்தார்கள். முள் தூறு போன்ற அரசர்கள் பழியுடன் கூடிய படைகளை வைத்துக் கொண்டு சொத்தையான நீதிகளைத் தொகுத்து வைத்திருந் தார்கள்.

ஆனல் இன்று, பாரிலுள்ள பலநாட்டு மக்களுக்கும் இந்தியா புதுவழி காட்டி அதில் பயிற்சியளிக்கிறது. அஃது என்ன புதுவழி? அதற்குத் தலைமையான வழிகாட்டி யாவர்?

அதுபற்றிக் கவிஞர் கோமானுகிய இரவீந்திர நாதர் சொன்ன தைக் கூறுகிறேன். "அறமே வடிவெடுத்து வந்தாற்போல் வந்திருக்கின்ற மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி இன்று உலகில் மனிதர்களுக்குள் தலைமையான மனிதராக, மகாத்மாவாக, வந்திருக்கிருர்."

அத்தகைய காந்தியை அரசியல் வழியில் தலைவனுகக்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கொண்டு அரசியலிலும் சரி, பிற இயல்களிலும் சரி, உலகத்தில் அறமே வெற்றி அளிக்கும் என்று வேதம் உரைத்ததை முற்றுமாகப் போற்றிச் செயற்பட முற்பட்டிருக் கின்றனர் இந்திய மக்கள்.

ஆகவே படைஞருடைய—இராணுவ ஆதிக்கத்தாருடைய— செருக்கு ஒழியும். உலகில் அறம் பிறழாத கற்ருேர் எல்லாவற் றிலும் தலைப்பட்டு நலம் விளைத்தலை விரைவில் காண்போம்.

எனவே வெற்றி கூறுங்கள்; வெண் சங்கு ஊதுங்கள்.

5. செம்மணி: விடுதலை திண்ணம்

வெற்றி முழக்குங்கள். வாழ்த்தொலி எழுப்புங்கள். வேதங்களை ஓதுங்கள், அதனுல் உயர்வு அடைவீர்கள், உயர்வு அடைவீர்கள்! சிறிதளவும் தீமை கலவாத, செம்மணி போன்ற சிறந்த நெறியினை, காந்தி காட்டும் வழியைக் கண்டு கொண்டோம். ஆகவே இனி, வேதனைகள் படவேண்டுவ தில்லை. விடுதலை பெறுதல் என்பது உறுதியாகிவிட்டது.

6. பச்சை: ஐயம் வேண்டா

திண்ணமாக எண்ணுங்கள். பச்சை வண்ணனுகிய திருமாலின் திருவடிமேல் ஆணையிட்டுச் சொல்கிறேன். ஐயம் வேண்டா. எண்ணத்தில் தளர்ச்சி வேண்டா. விடுதலை பெறுவது திண்ணம் திண்ணம்.

7. கோமேதகம்: காந்தியக் கிளர்ச்சி

எங்கள் கோமான், மேதக்க உளமுடைய காந்தியானவர், ''அறப்போருக்கு எழுங்கள் சுடுதலும் குளிரும் ஆன்மாவுக்கு இல்லை. சோர்வும் வீழ்ச்சியும் தொண்டருக்கு இல்லை. நீங்கள் விரைவாக விடுதலை பெறுவீர்கள். வெற்றியடை வீர்கள்'' என்று கூறி நாடெங்கும் கேடு இல்லாக் கிளர்ச்சியை வளர்ச்சி செய்கின்ருர்.

அறிவீராக!

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

8. பதுமராகம் (கெம்பு): கணப் பொழுதில் விடுதலை

ஒளிமிக்க செந்தாமரையின் மணம் பொருந்திய மலரில் வாழ்கின்றவள் திருமகள். இன்று அங்கிருந்து போந்து பாரதமாகிய பொன்னுடு எங்கணும் அருள் கூட்டி நிற்கின்ருள். இப்பொழுது மாந்தரெல்லாம் சோர்வையும் அச்சத்தையும் துறந்துவிட்டனர், மறந்துவிட்டனர். காந்தியின் சொல்லைக் கேட்டனர். அவ்வளவில் வேகமும் ஆண்மையும் பெற்றிருக்கின்றனர். ஆகவே கணப்பொழுதிலே விடுதலை கண்டுவிடுவர். இஃது உறுதியே!

9. வாலவாயம் (வைடூரியம்): வையத் தலைமை இந்தியாவுக்கே அஃது உறுதி

பாரத தேவியே, உனது துணையை விரும்பும் எல்லா நாட்டவர்க்கும் துயர்கெடவும் விடுதலை கூடவும் அருளுகிற அழகிய புன்னகை புரிந்தவாறு நீ திகழ்வதாகிய கோலத்தை நான் கண்டு மகிழ வேண்டும். அதற்கு, நெருப்பைக் கக்கும் விழிகளும், வாலாகிய உறுப்பும் உடைய சிங்கத்தின் மேலேறி வீற்றிருந்து என் கண்களின் முன்னே ஒரு கணப்பொழுதாவது காட்சிதர வருவாயாக! அருள் புரிவாயாக!

பாடலைப் பற்றி:

பாடற் கருத்தோடு முறையே நவமணிகளும் வெண்பா, கட்டளைக் கலித்துறை, எண்சீர் விருத்தம், ஆசிரியம், தரவு கொச்சகக் கவி, வஞ்சி விருத்தம், கலி, ஆறுசீர் விருத்தம், எழுசீர் விருத்தம், என்பவற்றில் இனிது இழைக்கப் பட்டுள்ளன.

கருத்து வளர்ச்சி வருமாறு:

1. இந்தியாவின் பெயர் சொன்னல் — இறை அருள் வாய்த்தால் நலங்கள் கிடைத்தல் போன்று — கிடைக்கலாகும் நலங்கள்.
2. அன்னையைப் பணிந்தால் யமபயம் இல்லை — சாவு கிடையாது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

3. அன்னையின் அருட் கொடை—அழியா ஒளி நூல்கள்.

4. அறவடிவான காந்தி, அரசியலில் புகுந்திருக்கிறார்.

5. காந்தி வழி, அது விடுதலைக்கு உத்தரவாதம்!

6. உள்ளத் தளர்ச்சி வேண்டா, விடுதலை ஒருதலை.

7. கிளர்ச்சியை வளர்க்கிறார் காந்தி.

8. காந்தி சொற் கேட்டனர் நாட்டு மக்கள். வேகமும் வீறும் வந்துவிட்டன.

9. உலக நாடுகளின் விடுதலைக்கு இந்தியா உதவிகள் செய்து களிப்புற்றிருக்கும் காட்சியைக் காண விரும்புதல்.

— இங்ஙனம் பாக்கள் ஒன்பதிலும், படிப்படியாகக் கருத்து வளர்ச்சி அடைந்து, இந்திய அரசியலில் காந்தியடிகளின் 'பிரவேசத்'துக்கு நல்வரவு கூறி நாட்டார்க்கு அதன் வழி நம்பிக்கை யூட்டிக் கிளர்ச்சிக்கு ஆதரவு தந்து அக மகிழ்ந்து, அதற்கு மேலும், உலகின் தார்மீகத் தலைமை இந்தியாவுக்கு வாய்த்து விளங்குதல் கண்டு மகிழும் வேட்கையாம் சிகரத்தை அடைகிறது.

○

காந்தியைப் பலரறிய, பாரறிய 'மகாத்மா' என்று சிறப்பாக அழைத்த பெருமை கவி இரவீந்திரருக்கு உரியது. அவரைக் 'குருதேவ்' என்று பாரறியச் சிறப்பித்த பெருமை காந்தியடிகளுக்கு உரியது.

அவர்கள் இருவரும் பெருமைப் படிகளில் ஏறிக் கொண்டிருந்த காலப் பிரிவில் எழுந்தது இந்தப் பாடல்.

○

காந்தியடிகளின் கொள்கையைப் புரிந்து தெளிவாகக் கூறிய திறம் பாரதியாரின் மனப் பக்குவத்தைப் புலப்படுத்துகிறது. அடிகளைப் போலவே கவிஞரும் வேதம் விழைபவர்; கீதை ஓதுபவர் ஆகவே இருவர்க்கும் இசைவு எளிதாகி விட்டது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'சுடுதலும் குளிரும் உயிர்க்கில்லை ... ...' என்று காந்தி சொன்ன வாக்கைக் கவிஞர் எடுத்துக் காட்டுகிருர்.

'ஆயுதங்கள் ஆத்மாவை வெட்டமாட்டா. தீ அதை எரிக்காது, நீர் நனைக்காது. காற்றும் அதை உலர்த்தாது. இவ் ஆத்மா வெட்டுண்ணுன்; நனையான், உலரான் ... ...' என்ற கீதையின் வாக்கே காந்தியின் வாக்கு என்பதனை எளிதாக அறிந்துகொள்ளலாம்.

கவிஞர் ஆவேசமாகவும் ஆத்திரமாகவும் பாக்களை யாத்திருந் தாலும் இயல்பில் அவர் இரக்கச்சித்தம் உள்ளவர்; பிற உயிர்க்கு மறந்தும் தீங்கு கருதமாட்டார். இன்ஞ செய்யாமை என்ற பண்பின் இருப்பிடம் அவர். ஆகவே அவர் காந்தியடி களின் தலைமையை விரைந்து போற்றிக் கொண்டதில் வியப்பு ஒன்றும் இல்லை.

இரவீந்திரநாதரை மனமாரப் புகழ்கிருர் பாரதியார். வாய்ப்பு வசதிகள் மிக்கிருந்தமை, வடபுலத்திலே பிறந்திருந்தமை, எஸ்ர பவுண்ட், யேட்ஸ் முதலியோரால் உலக அரங்கில் அறிமுகம் செய்யப் பெற்று நோபெல் பரிசு பெற்றமை முதலியன தாகுருக்குத் தனிப் பெருஞ் சிறப்பை அடைவித்தன. அதிர்ஷ்டசாலியான அவரை, பிறந்தநாள் முதல் வறுமையிலே உழன்று, அவரை விடவும் தேசாவேசம் கொண்டு எழுதி எழுதித் துன்பத்திற்கு இலக்காகி, ஆதரித்து அறிமுகம் செய்யப் பெருந்தன்மையில்லாத மக்கள் மிகுந்த தென்புலத் திலே பிறந்த பாரதியார், புகழ்ந்திருப்பது தமிழனுக்கே உரிய பணிவுமனப்பான்மையையும் பரந்தமனப்பான்மையை யும் காட்டுகிறது. பாரதியாரையோ பிற இலக்கியத் துறைத் தமிழக வல்லுநரையோ, வடபக்கத்திலிருந்து புகழ்வது, மனமார மதிப்பது என்பது பெரும்பாலும் அக்காலம் கேட்ப தரிது; இக்காலத்தும் அஃது மிகக் குறைவேயாகும். முறையான ஒப்பீட்டு இலக்கிய நெறி தழைந்திருக்குமாஞல் தமிழின் சாதாரண இலக்கியம் கூட மிக உயர்ந்த இலக்கிய மதிப்பைப் பெற்றிருக்கும்.

ஆஞல் தமிழகத்தின் தொடர்ந்து வரும் தீயூழ், அந்தக் காலத்தில் தமிழ்ப் புலவர்கள் ஏதோ அந்தாதியையும் கலம்பகத்தையும் படித்துப் பாடியாவது தமிழ் காத்து வந்தார்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கள்; ஆங்கிலங் கற்றோர் ஒரு சிலர் தமிழ் நூற் சிறப்புகளைச் சிறிது எடுத்துரைத்து வந்தார்கள்; இன்றோ அதுவும் போயிற்று இதுவும் போயிற்று. நுனிப் புல் மேய்வது ஆராய்ச்சி யாகிவிட்டது; நரிவாலை விட்டுக் கடலாழம் பார்ப்பது பட்டிமண்டப—வழக்காடு மன்ற—மேடைப் பொழிவாகி விட்டது. ஆங்கிலத்தையும் பேச்சுத் தமிழையும் அவியல் செய்து தருவது பத்திரிகை மொழியாகி விட்டது! அசீரணத்தில் வாந்தியெடுப்பது புதுக் கவிதையாகி விட்டது!

○

இனி, இந்த மாலையின் காப்புச் செய்யுளில், முப்பத்திரண்டு கோடி என்று இந்திய மக்கள் தொகையைக் (முன்பெல்லாம் முப்பது கோடி என்றோர்) கூறுகிறோர் கவிஞர்; காந்தி சகாப்தத்தை வரவேற்று விளம்புகிறோர்; காலனைப் பற்றிய குறிப்பும் இதில் வருகிறது; மேலும் 'ஆரியம்' என்பதிலிருந்து விடுபட்டு (ஆரிய தேசமடி பாப்பா என்பதனை அவரே ஆன்றோர்கள் தேசமடி பாப்பா என்று பாப்பா பாட்டில் திருத்திக் கொண்டது கவனிக்கத் தக்கது) 'இந்தியா' என்ற சொல்லைப் பாரதம் என்பதனோடு கூறுவதனாலும் இப் பாடல் பாரதி பாடல்களுள் பிற்காலப் பகுதியைச் சார்ந்தது என்று தெரிய முடிகிறது.

○

'முப்பத்திரண்டு கோடி வீரர்' என்று, நாட்டிலுள்ள அவ்வளவு பேரையும், ஆடவர் பெண்டிர், அனைத்து இனத்தவரையும் வீரர் என்று கூறியிருப்பது சரியான மதிப்புரை யாகும்.

வீரமுள்ள இனம், வீரமில்லாத இனம் என்ற பாகுபாடுகள் போலியானவை.

இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் ஒருவரும் சிறிது காலத்துக்கு முன், பிரதேசவாரி—சாதிவாரி—ப்டைப் பிரிவுகள் இந்திய ராணுவத்தில் இருப்பது பிழை என்று கூறுங்கால், மேற்கூறிய கருத்தை ஏற்றுக் கொண்டு பேசினர். தமிழ் நாட்டைப் பொறுத்தவரை, முற்பட்ட—பிற்பட்ட—அட்டவணைப்பட்ட

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

என்ற எல்லாப் பகுதியுமே போர்த் தொழில், படைவீரம் செயலாண்மை என்பவற்ருேடு தொடர்புடையனவே. அவ்வவ் இனத்தின் தனித்தனிப் பட்டங்களாக, குடும்பப் பட்டயங்க ளாக, பெயர்களாக இருக்கும் மிச்ச மிகுதிகளெல்லாம் அதனை உண்மையெனத் தெரிவித்து நிற்கின்றன என்று ஆய்வாளர் கள் தெரிவிக்கிருர்கள்.

காடுகளில் வேலை செய்து கொண்டிருந்தார்கள், திடீர் என அப்பொழுது போர்ப்பறை முழக்கம் கேட்டது, அவ்வளவில் போர்க் கருவிகளைத் தூக்கிக் கொண்டு விரைந்து போருக்கு எழுந்தார்கள் அவர்கள் என்று பழந் தமிழ்ப் பாடல் ஒன்று தெரிவிக்கின்றது. அது தரும் கருத்துஉணர்வு யாது?

வேளாண்மையும் அதன் சார்புத் தொழில்களும் உடைய மக்கள் தாமே இங்குள அனைவரும்? ஆக, அந்தப் பாட்டு தெரிவிக்கின்ற குறிப்பு எல்லாரும் உழவுச் சார்பினோர், எல்லாரும் வீரர் என்பது தானே?

அவ்வாறே, மூதின் முல்லை என்ற துறைக்கு விளக்கம் தருமிடத்து, ஆடவரே அன்றிப் பெண்பாலாரும் வீரமிக்கு இருந்தனர் என்றுதானே தெரிவிக்கின்றது?

—ஆக, பாரதியாரின் 'வீரர் முப்பத்திரண்டு கோடி விளைவித்த பாரதமாதா' என்ற தொடரும், கருத்தும், களிப்புடன் வரவேற்கத் தக்கனவாக உள்ளன.

வருங்காலத்தில் ஆடவர் மகளிர் ஆகிய இருபாலாரும் — அனைத்து இந்திய இனத்தவரும், அரச வீறும் அந்தண் ஒளியும் பெற்றுத் திகழ வேண்டும்; அந்த இருமையின் ஒருமிப்பே, இந்திய தேசியப் பண்பாக இலங்க வேண்டும் என்று விவேகானந்தர் கருதினர். அந்தச் சிந்தனையின் எதிரொலியே 'வீரர் முப்பத்திரண்டு கோடி' என்பதனை அறிதற்கு அதிக நேரம் பிடிக்காது.

O

'நீலக் கடல் ஒத்த கோலத்தினுள்' என்ற தொடர்— இந்தியத் தாய்—மலைமகள்—அவளுடைய உடன் பிறப்பெனப்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

படும் கண்ணபெருமான்—ஆகியோரது மேனி நிறத்துக்குக் காரணம் ஒன்றைச் சிந்திக்கத் தந்துள்ளது.

○

பாரதியார் நன்னம்பிக்கைவாணர். நம்பிக்கையே காமதேனு, நம்பினர் கெடுவதில்லை என்றெல்லாம் எழுதுகின்ற அவர் தம் பாக்கள் அனைத்திலுமே நம்பிக்கை ஊட்டுவதனையே தொழிலாகக் கொண்டிருக்கிறர். அது அவரது வாழ்க்கையின் பணி (மிஷன்) ஆகக் கருதியிருந்தார் போல் தோன்றுகிறது. அதற்கு ஒரு சான்ருக இந்தப் பாடலும் திண்மை, உறுதி, வெற்றி என்ற சொற்களை முழக்கம் செய்து நம்பிக்கையை ஏற்றி வரும் வாகனமாக அமைந்திருக்கிறது.

○

இறுதியாக, சிங்கத்தின் முதுகில் அமர்ந்தவளாம் அன்னையின் காட்சியைக் காண அவாவுகின்ற கவிஞர், அவளது (இந்தியாவின்) துணையை நாடுவோர் அனைவருடைய துயரமும் விலகிச் செல்லுமாறு விடுதலையை அருளிச் செய்து,

> மணிநகை புரிந்து திகழ்திருக் கோலம்
> கண்டுநான் மகிழ்ந்திடு மாறே

என்று அவாவுறுவது நம்மை மெய்சிலிர்க்க வைக்கிறது. அவரது உறைத்த தேசபக்திக்குச் சான்ருக உள்ள இந்த வேணவா, இந்தியர் அனைவரும் ஆர்வ நெஞ்சமும் வீரத் தகைமையும் பெற்றிருந்தா லன்றி இயலாது என்பதனை மறைமுகமாக நினைவூட்டி நிற்கிறது.

நம் பக்கல் அறம் இருந்தாலும், வீழ்ந்து விட இடமுண்டு என்பதனையும், விடுதலைக்குப் பிறகு அண்டையிலிருக்கும் நாடுகள் நம் மீது முறையிலாத் தாக்குதல்கள் தொடுத்த போது வல்லரசுகள் உதவிக்கு வந்ததாலே தலைதப்பினேம் என்பதனையும் நாம் அனைவரும் அறிவோம். அந்த நிலைமை ஏற்பட்டது எதனல் என்று யோசிக்கும் வேளையில், இந்தியா

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நமது தாயகம் என்பதனையும், நாம் அனைவருமே வீரர்கள் என்பதனையும் இந்தியா வையத்தின் தலைமை பூணுதற்கு எதையும் செய்குவோம் என்பதனையும்—இந்தப் பாடலில் வருவனவாகிய இத்தகைய சிந்தனை யொழுங்கை இன்றைய நாளில் ஆர்வத்தோடு போற்றுமையினாலே என்பது வெள்ளிடைமலையாகத் தென்படுகின்றது.

போதாக் குறைக்கு, சாமர்த்திய சாலிகளான பலர்க்கு இந்தியா என்பது (நம் ஆருயிர்த் தாயகம் என்பதின்றி) தங்கள் சுக போக மேட்டிமைக்கு அடகு வைக்கும் பொருளாக வும், வேட்டைக்கான காட்டுப் பிரதேசமாகவும், ஏமாற்று வித்தைகட்கான கண்காட்சிக் கூடமாகவும் இருந்து வருகிறது, என்ன செய்வது!

○

இந்தியா என்ற பெயர் கூறின், கிடைக்கலாகும் நலங்கள், இந்தியாவானது வையத் தலைமை பூண்டு சிறக்க வேண்டும் என்ற வேட்கை—

இவை, நிகழ்காலத்தைத் தாண்டி எதிர்காலத்தும், ஏன், என்றென்றைக்குமே நிலவத் தக்க நிவப்புடைய சிந்தனை களாகும்.

○

தார்மிகத் தலைமைக்கும் படைவலி வேண்டும். மக்கட் படைக ளின் வலிமையே, இராணுவ சர்வாதிகாரங்களின் செருக்கை அழிக்கும், உலக சமாதானத்தை நிலை நாட்டும் என்பது காலம் கற்பித்துவரும் பாடம் ஆகும்.

'பெரிய படைகளின் பக்கமே கடவுள் இருக்கிறார்' என்ற வால்டேரின் வாக்கு—பெர்னாட் ஷாவும் அதனை மேற்கோள் காட்டுகிறார்—அது, ஆங்கிலத்தில் ஒரு பழமொழியாகவே புழக்கத்தில் இருக்கிறது.

அதில் நியாயம் இருக்கிறது என்பதை மறுக்க முடியாது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கடவுட் கொள்கையைக் காக்கவும், மதங்களைப் பரப்பவுமே படைவலி பெரியதொரு சாதனமாக இருக்கக் கூடிய இந்த வன்பே ருலகில், தேசம்—தருமம்—மக்கள் என்பவற்றைக் காத்து உயர்வடையச் செய்யப் படைவலிமை பெரிதும் தேவை என்பது சொல்லாமலே விளங்கும்.

அரசுக்குரிய ஆறு அங்கத்தில் முதல் அங்கமாகப் படையினை வைத்த திருவள்ளுவர் தெரியாமலா அதற்கு முதல் இடம் கொடுத்தார்?

O

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

13

சீரும் சிறப்பும் செல்வமும்

அதனை அடிக்கடி புதுப்பித்துக் கொண்டிருந்தால்,
அந்த வடிவத்திலே சக்தி நீடித்து நிற்கும்.
வடிவத்தைக் காத்தால் சக்தியைக் காக்கலாம்
அதாவது சக்தியை, அவ் வடிவத்திலே காக்கலாம்
ஆனால் வடிவத்தை மாத்திரம் போற்றுவோர் சக்தியை
இழந்து விடுவர்

—இவ்வாறு சொன்னார் பாரதியார். சொல்லியதைச் செயலில் காட்டியதற்கு இந்தப் பாடலும் ஓர் அடையாளம்,

○

தசாங்கம் அரசற்கு உரியது. அதன் வடிவத்தில் சக்தியைப் புகுத்தித் தில்லையிலே இறைவனுக்குத் தசாங்கம் பாடினார் மாணிக்க வாசகர். அதைத் தேசத்திற்குக் கொண்டு வந்து, வடிவத்தில் சக்தியைப் புதுப்பிக்கிறார் பாரதியார். அதற்குப் பிறகு காந்தியடிகளுக்குத் தசாங்கம் பாடினார் வாழையடி வாழையெனக் காரைக்குடியிலே ஒருவர்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

13 பாரத தேவியின் திருத்தசாங்கம் (1909)

பச்சை மணிக் கிளியே பாவி எனக்கே யோக

○

மலை ஆறு நாடு ஊர் முரசு குதிரை யானை மலை பெயர் என்னும் பத்தினையும் பாடுவது (தச அங்கம்) தசாங்கம்.

மலையே யாறே நாடே ஊரே
பறையே பரியே களிறே தாரே
பெயரே கொடியே என்றிவை தசாங்கம்

என்பது பன்னிரு பாட்டியலின் பட்டியல்

○

மணிவாசகர் தந்துள்ள தசாங்கப் பா வரிசையில் நாடு நகரம் ஆறு மலை ஊர்தி படை முரசு மாலை கொடி என்று வருகின்றன, பாரதியாரும் அப்படியே பின்பற்றுகிருர்.

○

கேள்வி பதில் போல வருகின்றன கருத்துக்கள், வெண்பா யாப்பு.

○

பாரதியார் பத்து வெண்பாவுக்கும் வெவ்வேறு இராகம் கொடுத்துப் பத்து இராகம் காட்டியுள்ளார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இயற்றமிழையும் இசைத் தமிழையும் இணைக்கும் பாரதியின் முயற்சியில் அவருக்கு வழிகாட்டியவர்களுள் ஒருவர் மாணிக்கவாசகர். பாரதியாரின் முயற்சியானது தொடக்க முதலே அவருக்கு வெற்றி தரத்தொடங்கியது என்பதற்கு இந்தத் தசாங்கமும் ஒரு சான்று.

அந்த வகையிலும் பாரதியார் தம் பின்னோர்க்கு வழிகாட்டி நிற்கிறார். ஆனால் இக் காலக் கவிஞரோ இயற்றமிழ்ப் பாவகைகளை விளங்கும் திறனும் இன்றி இசைத் தமிழைப் போற்றும் உரனும் இன்றிப் புதுமை புதுமை என்று இரவல் சரக்கை வாங்கி வைத்துக் கொண்டு குட்டிக் கரணம் இடுகிறார்கள். இருந்தமிழை யழிப்பதும் இந்திய ஞானத்தைப் பழிப்பதுமே புதுமையாகக் கருதப் படுவதனால் அவர்களது 'வியாபாரம்' நன்கு நடைபெறுகிறது!

அவற்றை நோக்கும் பொழுது, சிறப்புடையது என்று சொல்ல முடியாத இந்தத் தசாங்கப் பாடலும் நமக்குக் 'கற்பூர தீப'மாக விளங்குகிறது.

பாடலின் பொருண்மாலை வருமாறு

1. பெயர்: பாரதத் தாய்

கிளியே, பாவியேனாகிய எனக்கு யோகப் பிச்சை அருளிய தாயின் பெயரை உரைப்பாயாக.

விடை: இந்த உலகத்தில் பூரணமா ஞானம் ஆகிய புகழ் விளக்கை நாட்டுவித்த பாரதமா தேவி — அதாவது முழுமையான பேரறிவினால் வரும் புகழாகிய சுடரொளியை ஏற்றி வைத்த இந்தியாவே தாயாகும்.

2. நாடு: ஆரிய நாடு

கிளியே, ஆனந்தமான தேவியின் பொன்னாடு எது என்று எனக்கு அறிவிப்பாயாக.

விடை: வானை நாடும் பெரிய இமய மலை முதல் தெற்கி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

லுள்ள பெண்குமரி முடிய இருக்கும் ஆரிய நாடு என்று அறிக.

3. நகரம்: காசி

கிளியே, எங்கள் உயிர் போன்றவளாகிய தாய், நலமுற வாழும் கோநகரம் எது?

விடை : சின் மயமே நான் —அதாவது சுத்த அறிவே சிவம், ஆன்மா என்று அறிந்த, மிக உயர்ந்த பெரியோர்க்கு இனிய அமுதம் போன்ற காசித் தலம் ஆகும்.

4. ஆறு: கங்கை

கிளியே, வந்தே மாதரம் என்று ஓதுபவர்களின் இன்னலை எல்லாம் போக்கிக் காப்பாற்றும் தாயின் ஆறு எதுவோ?

விடை : வானிலிருந்து போந்ததும், நலம் புரிவதே கொள்கையாகக் கொண்டு தான் செல்லும் வழியெல்லாம் தன்மமொடு பொன்விளைக்கும்—அறனும் பொருளும் பெருக்கும் இயல்புடையதும் ஆகிய கங்கையாகும்.

5. மலை: வெள்ளி மலை

கிளியே, தொன்மையான மறைகள் நான்கும் உடையவளான இளைய தாய் வளர்கின்ற மலை எது?

விடை: உலகில் தனக்கு ஈடு இல்லாததும் தனது நீள்முடி விண்ணில் தாக்குமாறு உயர்ந்திருப்பதும் ஆகிய பொற்பு மிக்க வெள்ளைப் பொருப்பே—பனிமால் இமயப் பொருப் பகமே—ஆகும்.

6. ஊர்தி: சிங்கம்

கிளியே, சீர் சிறப்பு உயர்செல்வம் ஆகியவற்றில் அளவற்றுத் திகழ்தரும் தாயின் ஊர்தி—பரி—எதுவென்று கூறுவாயாக.

விடை: ஆய்ந்து பார்க்கும் பொழுது, அவள் பரி (குதிரை) மேல் ஏறி வருபவள் அல்லள் என்பது தெரிய வரும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பாரனைத்தும் அஞ்சும் சிங்கமே அவள் ஏறி வருகின்ற ஊர்தியாகும்.

7. படை: வச்சிரம்

கிளியே, கருணையே உருவானவள், சினந்து எழுவாளானல் அவள் செருநர்மேற் செலுத்தும் படை எது?

விடை: தண்ணளி காரணமாகப், பொருநர் மீது அவள் படை செலுத்துவதில்லை. அங்ஙனம் செலுத்தப்பட்டால் தடுக்க முடியாத திண்மை உடையதான உயர்ந்த வச்சிரமே அவளது படையாகும்.

8. முரசு: வேத முரசு

கிளியே, அன்னையின் மாளிகை முன்பு இருந்து கொட்டப் படும் முரசம் எதுவெனக் கூறுவாயாக.

விடை: உண்மையே பேசுக, அறமே செய்க என்று முழங்கு வதும், முத்தி தருவதும் ஆகிய வேதமே அன்னையின் முரசு ஆகும்.

9. மாலை: பொற்றாமரைமாலை

கிளியே, தன்னை வணங்குவார்க்கு எப்பொழுதும் இடர்தராத அன்னை புனையும் அழகிய மாலை எது?

விடை: தனது இளம் புன்னகையால் (முற்றாத புன்னகை யால்) பகைவரை முற்றுவித்து ஒளிர்பவளாகிய அன்னை அணிந்திருப்பது அழகிய தாமரை மாலையாகும்.

10. கொடி: வயிரக்கொடி

கிளியே, வஞ்சகத்தையும் தீங்கையும் அழிப்பவளாகிய அன்னையின் வெற்றி பொருந்திய கொடி எதுவோ!

விடை: தனது திருவடியைப் பணிந்தவர்க்கு நன்மை பெருக

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வும், தீயோர் நலிவு எய்தவும் ஒளிர்தரும் கொடி வயிரக் கொடியாகும்.

— அதாவது, வயிரக் காலிலே வீசி ஒளிரும் துஷ்ட நிக்ரக சிஷ்ட பரிபாலனக் கொடி என்கிறார் சுத்தானந்தபாரதியார்.

அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு என்ற வள்ளுவத் திற்குப் பரிமேலழகர் காட்டும் சான்றான, ததீசி முனிவர் தந்த முதுகெலும்பே, அரக்கரை அழிக்க இந்திரனால் வச்சிரப் படையாகத் தாங்கப் பட்டது. தியாகமும் அன்பும் வீரமும் தாங்கும் கருவியாக இருப்பது அந்த இருதலை வேல்.

குறிப்புகள்:

○

இமயம் முதல் குமரி வரையுள்ள நிலப்பரப்பில் காசி கங்கை இமயம் என்ற இயற்கைப் பெயர்கள் தவிரப் புவியியல் கூறு கள் எவையும் கூறப்பெறாமல் நாடு நகரம் ஆறுமலை என்பன குறிக்கப்பட்டுள்ளன. அவையும் வழக்கம் போல் தத்துவக் குறியீடுகளாகவே உள்ளன. ஞானம், தருமம், யோகம் என்பவற்றையே அவை தெரிவித்து நிற்கின்றன.

ஆகவே பாரதம் — ஆரியநாடு — இந்தியா எனும் இது வெறும் காடு மலை நில நீர்ப் பரப்பு என்ற அளவில் மட்டும் இல்லை; மறை அறம் மெய்யறிவு என்பவற்றின் புகழ் — ஒலி — பரப்பு என்றே ஏற்றம் பெற்றுள்ளமை நவிலப்படு கிறது.

○

பாரதம் பற்றிக் கவிஞர் இதில் கூறிய கருத்துக்களைத் தொகுத் துக் காணுமிடத்து,

அடியார்க்கு யோகப் பிச்சை அருள்பவள்,
பூரணமா ஞானப் புகழ் விளக்கை நாட்டுவிப்பவள்
ஆனந்தமானவள்
உயிரானவள்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வந்தே மாதரம் என்று ஓதுபவரை இன்னலறக் காப்பவள்
தொன்மறைகள் நான்கும் உடையாள்
வாலை (குமரி, சக்தி,)
சீரும் சிறப்பும் உயர்செல்வமும் ஓர் எண்ணற்றருள் கருணையுருவானுள், காய்ந்தெழுங்காற் செருநரை வீழ்த்துவாள்
வந்திப்பார்க்கு என்றும் இடர் தாராள்
சேராரை (பகைவரை) முற்றுக் குறுநகையால் முற்றுவிப்பாள்.
குத்திரமும் (வஞ்சகமும்) தீங்கும் மடிப்பவள்.

—இவ் இயல்புகள் இந்தியத் தாயின் இயல்புகளாக இயம்பப் பட்டுள்ளன. அவை இறைவியின் இயல்புகளாகப் பெரியோர் களால் இயம்பப் படுவனவாகும்.

சிங்கத்தின் மேலே ஏறி வருபவள் காளி. காளியும் தாய்த் திரு நாடாம் சக்தியும் ஒன்றே என்பது பாரதி காலத்திற் பரப்பப் பட்ட கருத்தாகும். தொன்மையான அந்தக் கருத்து அவரது காலத்தில் இடப் பரப்பிலே விசாலம் அடைந்து புதுக்கப் பெற்ற ஒன்று. அவர் அதனைச் சிக்கெனப் பிடித்துக் கொண்டார். பிற்றை நாளில் அவர் தேசிய கீதங்களினின்றும் நகர்ந்து சென்று, காளி கீதங்களிலும் கடவுட் கீதங்களிலும் நிரந்தரமாகக் குடிபுகுந்த காலையும் இந்த அடிப்படைக் கருத்தை விட்டு விலகவில்லை; வளர்ச்சியும் அதில் முதிர்ச்சியும் அடைந்து பின்பு சக்தி—காளி—என்ற சிந்தனைகளிலே நிலைத்து விட்டார் என்பது அனைவரும் அறிந்த ஒன்றேயாகும்.

○

சின்மயமே நான் என்ற நனி பெரியோர்க்கு இன்னமுது (காசித் தலம்)
தான்போம் வழியெல்லாம் தன்மமொடு
பொன் விளைக்கும் வான் போந்த கங்கை
பொருபவர் மேல் தண்ணளியால் வீழாது

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வீழின் தகைப் பரிதாம் திண்ணமுறும் வான்
குலிசம்
பேசுகவோ சத்தியமே செய்க தருமமே என்று
ஒலி செய் முத்தி தரும் வேத முரசு
சேராரை
முற்றுக் குறுநகையால் முற்றுவித்துத் தான்
ஒளிர்வான்

—இவை இப் பாடற்கண் வந்துள்ள கருத்தினிக்கும் தொடர்கள்.

○

கிளியை முன்னிலைப் படுத்தி வரும் தொடர்கள்.

பச்சை மணிக் கிளியே, தேனூர் மொழிக்கிள்ளாய், இன் மழலைப் பைங்கிளியே, வண்ணக்கிளி, சோலைப் பசுங்கிளியே, தத்தாய், கிள்ளாய், ஆசை மரகதமே, இளஞ்சுகமே, கொடிப்பவள வாய்க் கிள்ளாய் என்பனவாகும்.

○

தமிழ் நாட்டில் இருந்துகொண்டு, இந்தியாவை நினைப்பவர், பாடுபவர், உழைப்பவர் ஆகியோரது நெஞ்சம் தமிழகத்திலிருந்து தான் தொடங்கவேண்டும். அதுதான் முறையானது, இயல்பானது, வளர்ச்சி தருவது, கடைசிவரை செலாவணியாகக் கூடியது.

இளங்கோவடிகள், தமிழகம் முதலாக வையகமும் வானகமும் என்று, எல்லையொன்றில்லாச் சிந்தனைப் பரப்பில் கவிதைச் சிந்தை செலுத்தியவர். அவ்வாறிருப்பினும், தமிழ் மண்ணில் அவர் பிறப்பெடுத்தவராகையால் பொதியிலாயினும் இமயமாயினும் எனவும் 'குமரியொடு வடவிமயத்து எனவும் இருந்த இடத்தைத் துலங்க வைத்துத் தொடங்குவதை மரபாகக் கொண்டிருந்தார் என்று அறிகிறோம். அது நமக்குக் காலங்காலமாகப் பெருமையும் நம்பிக்கையும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வளர்த்து மேனேக்கும் பார்வையையும் வளர்த்து அளித்தது.

கம்பரும் வடஇந்தியக் காப்பியத்தைத் தமிழ் மண்ணில் பயிரிட்ட பொழுது,

காவிரி நாடென்ன கழனிநாடு ஓர் இ என்று,

கங்கையிற் புனிதமாய காவிரி எனப்பாடிய கவிஞானி களின் வழியில் வேளாண்மை செய்தார்.

பின்னுல் வந்தவர்களோ, இமசேது பரியந்தம் எதிரிலாக் கவி வீர ராகவன் என்ருங்குத் தமிழகத்தைப் பின்னுக்குத் தள்ளினர். அன்று, தமிழகம் என்று ஒன்று இருந்ததா என்பதே கேள்விக்குரியதாக இருந்தது. ஆகவே அவ்வாறு பின்னுக்குத் தள்ளினர். பாரதியாரோ 'பேரிமய வெற்பு முதல் பெண் குமரி ஈருகும்' என்று பிற்காலத்துப் பாணியிலே பாடியிருக்கிருர். காலத்தின் கோலம் என்று சொல்வதா? அன்றி அவர் இன்னமும் தமிழுணர்வுக்கு வரவில்லை என்று கருதுவதா என்ற கேள்வி எழுந்து நிற்கிறது!

தேசியம் என்பது ஒரு கூட்டுணர்வு. அதில் தம்மைத் தாமே மதியாதவரை, மற்றவர்கள் மதிப்புக் கொடுத்துத் தலைமைப் பீடத்தில் அமர்த்தி வைப்பார்கள் என்று எதிர்பார்க்க முடியுமா?

தமிழர்க்குத் தாழ்வு மனப்பான்மை என்பது குருதியோட்டத் தில் கலந்துவிட்டது. இற்றை நாள் தமிழ்க் கவிஞர்—நூலோர்—மேல்மட்டத்தில் இருப்போர் ஆகியோர்க்கோ எனில் தமிழுணர்வு என்பதே மறந்துபோய் விட்டது, மரத்துப் போய் விட்டது. தமிழ்—கன்னியா குமரி—வேங்கடம் என்றெல்லாம் கூறவே தயக்கம் ஏற்படும் போலிருக்கிறது.

இத்தகைய தயக்கம் முன்னை நாள் தேசிய சபையாரிடம் இருந்ததாலே திருப்பதி சித்தூர் முதலிய தமிழ்ப் பகுதிகள் ஆந்திராவுக்குத் தானம் செய்யப்பட்டன. அது பற்றி ம. பொ. சி. எழுதும் பொழுது, "தலைவர் சத்திய மூர்த்தி திருத்தணி, திருப்பதி, சித்தூர் ஆகிய மூன்று தாலுக்காக் களையும் தமிழ்நாடு காங்கிரசின் நிர்வாகத்தில் வைக்க வேண்டுமென்று கோரினர். ஆனல் ஆந்திர காங்கிரஸ்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தலைவர்களோடு கருத்துப்போர் ஏற்படும் என்ற அச்சத்தால் மற்ற காங்கிரஸ் பிரமுகர்கள் திரு சத்திய மூர்த்தியின் கோரிக்கைக்கு ஆதரவு காட்டவில்லை. மாவட்ட அடிப்படையில் காங்கிரஸ் மாநிலங்களின் எல்லையை அமைத்துக் கொள்ளலாமென்றும், பிற்காலத்தில் ராஜ்யங்கள் மொழி வாரி திருத்தி அமைக்கப்படும் போது தாலுக்கா ரீதியில் எல்லைகளை மாற்றி அமைக்கலாமென்றும் கூறி, தணிகை—திருப்பதி—சித்தூர் தாலுக்காக்களை ஆந்திர காங்கிரசிலே இணைத்து விடுவதற்கு ஆதரவளித்தனர். இதனால், தமிழ் வளர்க்கப்பாடுபட்ட விடுதலைப் பாசறை வீரர்களே, தமிழக வடவெல்லைப் பகுதி மக்களை, தங்கள் தாய் மொழிக்குப் புறம்பானவர்களாக்கி, தெலுங்கு மொழியின் ஆதிக்கத்திலே விட்டுவிட்டனர்''

என்று குறிப்பிடுகின்றார்.

அத்தகைய பக்கவாதம் இந்த நாளில் அதிகரித்து வருவது போல் தெரிகிறது. இந்த நாட் சூழ்நிலையில் வைத்துப் பார்க்கும் பொழுது பாரதியாரின் தமிழ் உணர்வு எத்துணையோ மடங்கு தேவலை என்று பெருமை கொள்ளத் தோன்றுகிறது

○

இந்தப் பாடலைப் பற்றி வரைந்துள்ள தமது உரைத் தொடக்கத்தில் சுத்தானந்த பாரதியார், 'இது மணிவாசகப் பெருமான் தில்லையில் அருளிய திருத் தசாங்கத்தை யொட்டிப் பாடப் பெற்றது. இதில் பாரதி வாக்கும் மணிவாக்காகவே விளங்குகிறது' என்று குறிப்பிடுகின்றார்.

நாடுநகரம் முதலிய எல்லைகளைக் கடந்த ஆன்ம நேயத் தவச் சுடரான மாணிக்கவாசகர் தில்லையில் இருந்து தேவதேவனைப் பாடும்போது, தென்பாண்டி நாட்டையும் உத்தரகோச மங்கை ஊரையும் தெய்விகச் சார்புடையனவாகப் பெருமைப் படுத்துகிறார். எல்லா உயிரும் இறைவனின் அருட் கூறே; எல்லா இடமும் இறையின் உறைவிடமே; இருப்பினும் மாணிக்கவாசகர் தம் பாண்டிநாட்டையும், பாண்டி நாட்டுத் தலமான உத்தரகோச மங்கையையும் உலகச் சார்பில் ஆன்ம நினைப்பொடு பாடுகிறார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பாரதியாரோ தேசிய நினைப்பில் சென்னையில் இருந்து வட புலத்துக் காசிமா நகரின் சீர்தூற்றுகிறார். ஒருகால், அவர் கலந்துவிட்டு வந்த காசி காங்கிரசின் நினைவோட்டத்தில் மறைமுகமாக அதனைக் குறிப்பிடுகிறாரோ என்று பார்த்தால் அப்படியும் தெரியவில்லை. சின்மயமே நான் என்று அறிந்த பெரியோர்களின் காசித்தலமாக அது காட்சி தருகின்றதே யன்றி, தேசிய எழுச்சி மிகும் தலமாகக் காட்சி தரவில்லை.

○

இனி, ஆரியன் கண்டாய், தமிழன் கண்டாய் என்று சைவ சமயப் பெரியோர் சமஇடம் கொடுத்துப் பாடி வைத்திருக்க, நம் கவிஞரோ ஆரிய நா டென்றே அறி என்று ஓங்கி ஒரு போடு போடுகிறார் இந்தப் பாடலில்.

ஆரியம் போல் உலகவழக் கழிந்து ஒழிந்து என்பது முதலாக, ஆரிய ஆதிக்க எதிர்ப்பு முழக்கம் செய்த தமிழகத்துப் பெரியோர்களுக்கு எதிராக ஆரிய இன ஆதிக்கத்தின் தலைமையைத் தம்மையும் அறியாமல் உளம் வேட்டு இங்ஙனம் இவர் எழுதினரா என்று ஒரு கணம் நமக்குத் திகைப்பு உண்டாகிறது.

○

1909 ஆம் ஆண்டில் வெளியிடப் பட்ட 'ஜன்மபூமி' ப் பாடல்களில் இந்தத் தசாங்கமும் ஒன்றாக இடம் கொண்டுள்ளது. பாரதியாரின் கவிதைவாழ்வின் முற்காலப் பகுதியில் வெளிவந்த பாடல்களில் இதுவும் ஒன்று. அந்தக் காலப் பகுதியில் அவரது பாக்களில் பொதுவாக வரக் கூடிய செய்திகளே இதிலும் இன்பநடம் புரிகின்றன.

பாக்கள் இனியன. ஆனால் கருத்துக்கள்?

வச்சிரமும் காசியும் சிங்கமும் கங்கையும் இமயமும் பொற்றாமரையும்—இன்றைக்கு—ஈர்ப்பாற்றல் குறைந்து காணப் படுகின்றன. சில சமயம் சலிப்பும் உண்டாக்குகின்றன.

ஆயினும் பரலிநெல்லையப்பரும், செல்லம்மா பாரதியும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

எழுதிய உரைகளை வாசிக்கும் பொழுது, மரியாதை மதிப்பே மீக் கூர்கிறது.

நெல்லையப்பர், தான் வெளியிட்ட பாரதியாரின் நாட்டுப் பாட்டுக்கு (பாரதி காலத்திலேயே—1919இல்) வரைந்த முகவுரையில் ஒரு பகுதி வருமாறு:

''அண்ட சராசரங்கள் அனைத்தையும், ஆக்கியும் காத்தும் மாய்த்தும் வரும் பரம்பொருளின் பெரும் புகழை ஒருவன் எவ்வளவு காலம் தான் புகழ்ந்து போற்றினலும், ஆவல் தீருமா? அதுபோல, இந்தத் தெய்விகத் திருநாட்டின் பெருமைகளை ஒருவன் எவ்வளவு காலம் தான் புகழ்ந்து பாடினும் ஆவல் தீராது. எந்தாய் வாழ்க, வந்தே மாதரம்.''

பாரதியார் மறைந்தபின் அடுத்த ஆண்டில் தாம் வெளியிட்ட சுதேச கீதங்களுக்குச் செல்லம்மா பாரதி வரைந்த முன்னுரையில் ஒரு பகுதி வருமாறு:

''நமது நாடு இன்னது, நமது ஜனங்கள் யாவர்; நமது பூர்வோத்திரம் எத்தகையது; இன்று நமது நிலையென்ன; நமது சக்தி எம் மட்டு; நமது உணர்ச்சி எத்தன்மையது?''

இவைகளைப் பற்றிய விவகாரங்களும் சண்டைகளும் தீர்மானங்களும் அவருடைய ஜீவனுக்கு ஆதாரமாக இருந்தன. திடீர் திடீர் என்று எண்ணங்கள், புதிய புதிய கொள்கைகள், புதிய புதிய பாட்டுக்கள், அப்பாட்டுக்களுக்கும் புதிய புதிய மெட்டுகள்—என்று எனது இரு காதுகளும் மனமும் இருதயமும் நிரம்பித் ததும்பும் இந்த ஒரு பாக்கியம் பெற்றேன்......

அவரது தேகத்தின் ஜீவன் போய் விட்டது. அவரது ஜீவனுக் காதாரமாக இருந்த பாரத மாதாவின் ஜீவசக்தி என்றென்றும் அழியாதது. தமிழ்நாடு உள்ளளவும் தமிழ்நாட்டில் ஒரு மனிதனே அல்லது ஒரு சிறு குழந்தையோ தமிழ் பேசிக் கொண்டிக்கும் அளவும் பாரதியின் மூலமாக நமக்குக் கிடைத்த ஜீவசக்தி நிலைத்திருக்குமென்று என் இருதயம் சொல்லுகிறது...

இக் காரணம் பற்றித்தான்,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'இதுபோழ்து பாரதியாரின் பாடல்களை நால்வரின் பாடல் களைப் போல் நாட்டின் ஒவ்வொரு மூலையிலும் பாடும்படி செய்வித்தல், எப்போதும் நல்ல பாடல்களைப் போற்றுவதான தமிழ்நாட்டின் கடமையாகும்'

என்று சக்கரைச் செட்டியார் அந்தச் சமயம் (1922இல்) எழுதியிருப்பாரோ,'

○

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

14

சிறப்புற வாழ்க!

○

ஐயனாகிய இராமனை ஒல்லை வா என்று மதிலில் இருந்து செழுமணிக் கொடிகள் என்னும் கைகளை நீட்டி அழைத்தது மிதிலாபுரி.

—இது கம்பரது தற்குறிப்பு.

இந்திய மக்கள் அனைவரையும் இது தாயின் மணிக் கொடி, தாழ்ந்து பணிந்திட வாரீர் என்று அழைக்கின்றனர் இந்திய தேச பக்தர்.

—இது பாரதியாரது ஆனந்தக் கவிக் காட்சி.

---

14 மாதாவின் துவஜம்

தாயின் மணிக்கொடி பாரீர்

மணிக்கொடி—துவஜம்

○

பாரத நாட்டுக் கொடியினைப் புகழ்தல்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

என்று கவிஞரே இதற்குத் துணைத் தலைப்பு தந்துள்ளார். அது பாடலின் மையக் கருத்தை துலாம்பரமாகக் கூறிவிடுகிறது.

ஆக, இது கொடி வணக்கப் பாட்டு அன்று. கொடிப் புகழ்ச்சிப் பாட்டு. கொடியினைப் புகழ்ந்து பணிய எல்லாரையும் அழைக்கின்ற பாட்டு.

அவ்வா றிருப்பினும் தேசியக் கொடியை ஏற்றி வைத்துத் தமிழகத்தில் பாடும் பாட்டாக, கொடி ஏற்றி வணக்கம் செலுத்தும் பாட்டாகப் பதவி வகித்து வந்தது.

கொடியில் இருந்த வச்சிரம் பிறை என்பன அகற்றப்பட்டுச் சிவப்பு நிறப் பட்டுத் துணிக்குப் பதில் மூவர்ணக் கதர்த் துணி இராட்டைச் சின்னத்தோடு பறக்கத் தொடங்கியது. அப்பொழுது கொடியேற்ற காலங்களில்

ஓங்கி வளர்ந்ததோர் கம்பம் எனவும்

இந்திரன் வச்சிரம் ஓர்பால் எனவும் தொடங்கும் சரணங்கள் இரண்டும் விடப் பட்டன. சில சமயம் ஓங்கி வளர்ந்த தோர் கம்பம் என்று தொடங்கும் சரணத்தில் வந்தே மாதரம் என்பதற்குப் பதில் இராட்டினம் என்ற சொல்லைப் பெய்து கொண்டு பாடப்பட்டது.

○

தேசம் விடுதலை பெற்ற பிறகு அசோகச் சக்கரம் பொறிக்கப் பெற்ற தேசிய மூவர்ணக் கொடி—அரசாங்கக் கொடி—ஆட்சிக்கு வந்ததும், இந்தத் தாயின் மணிக் கொடிப் பாட்டு பதவி நீக்கம் பெற்றது. ஜனகணமன—சர்வாதிகாரியாக வந்தது.

'அணியணியாக நிற்கும்' வீரர்கள் அந்தந்த மொழிகளில் அன்பூறப் பாடிய ஆவேசப் பாடல்கள் கட்டாய ஓய்வு பெற்றன. பாரதியின் தாயின் மணிக் கொடியும் மேடையினின்றும் கீழே இறங்கி, பிறகு அங்கிருந்து நகர்ந்து நகர்ந்து தன் மூலத்தானமான கவிதைத் தொகுப்பில் இருப்பிடம் கொண்டது.

○

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பாடலின் தலைப்பு மாதாவின் துவஜம் என்று இருக்கிறது. பாடலின் இறுதியடியில் தேவி துவஜம் என்று வந்திருக்கிறது.

அவ்வாறிருப்பினும் தாயின் மணிக் கொடி என்ற அழகான தமிழ்த் தொடரில் தான் கம்பரின் வாசகமான மணிக் கொடி என்பதனை நம் கவிஞர் தனக்குரியதாக ஆக்கிக் கொண்டு கொடிப் பாடலைக் கனிரென்று ஒலிக்குமாறு தொடங்கிருர்.

பால காண்டத்தின் முதற்படலமாக உள்ள ஆற்றுப் படலத்திலேயே கம்பர் பதினேராவதாக இருக்கும் பாடலில் மணியுடைக் கொடி முந்துற வந்து ஊன்றலால் என்று வெள்ளப் பெருக்கைப் போருக்குச் செல்லும் வீரர்க்கு உவமித்துக் கூறுமிடத்துப் பாடுகிருர்.

பத்தாம் படலம் ஆகிய மிதிலைக் காட்சிப் படலத்தின் முதற் பாடலில் ஐயனை வா வென்று செழுமணிக் கொடிகளென்னும் கைகளை நீட்டிக் கடிநகர் அழைப்பதாகத் தற்குறிப்பு ஏற்றி வரைகின்ருர்.

அதற்கு அடுத்த பாடலில் நிரம்பிய மாடத் தும்பர் நிரை மணிக் கொடிகளெல்லாம், சீதையை மணம் புரிவான் இராமன் வருகின்ருன் என்று தேவ மகளிர் ஆனந்தமாக ஆகாயத்தில் ஆடுகின்ற காட்சி போன்று ஆடக் கண்டனர் அம் மூவரும் என்கிருர் அவர்.

இந்தப் படலக் காட்சிகள் பாரதியார்க்கு மணிக் கொடியை மட்டுமல்லாது மாணிக்கப் படலத்தையும் தந்திருக்கின்றன.

○

மணி அணி பொன் தேன் என்பன கம்பருக்கு மிகமிகப் பிடிக்கும் என்று அவரது காப்பியத்தால் அறிகிருேம். அவை பாரதியாருக்கும் அவ்வாறே மிகவும் பிடித்தமாக உள்ளன.

செல்வம் — போகம் — ஐம்புல இன்பம் ஆகியவற்றின்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அடையாளங்கள், குறிப்புக்கள் அவை. பாரதியாரிடத்து அவை பாடல்களில் நிரம்ப வருகின்றன.

மணியை எடுத்துக் கொள்ளுங்கள். செந்தமிழ் மணி நாட்டிடை யுள்ளீர், பாரத மணித் திரு நாடு, தெய்வ மணிக் கை, மணிப் பெருந்தெப்பம், மணிச் சிறு மீன், துங்க மணி மின்—என்று இவ்வாறு நிறைய மணிகளைத் (மணி என்பதற்கு அழகு என்பது முதன்மையான பொருள்; நவமணிகள் என்பது அடுத்து வரும் பொருள்) தொடுத்து விட்டிருக்கிறார் பாரதியார்.

○

நம் கவிஞரது காலத்தில் முக்கியமாக ஆலயங்களில் துவஜா ரோகணம் விமரிசையாக இருந்திருக்கும். எனவே இந்தப் பாடலில் துவஜம் வந்துள்ளது. தலைப்பும் மாதாவின் துவஜம் என்ற சுத்தமான வடமொழித் தொடராக உள்ளது.

அவர் வாழ்ந்த காலத்தில் தமிழ் உரைநடையிலும் செய்யுளி லும் வடசொல் ஆதிக்கம் அதிகமாக இருந்தது. தமிழ் கற்றார்க்கும் (தமிழ் என்பதே 'சமப்பிரதானமாக'—வடமொழி பாதி தமிழ் பாதி என்பதாக—இருந்தது) அவை அகராதி யின்றி விளங்க மாட்டா. கல்லாதவர்க்கோ அவை என்னவோ ஏதோ என்று மருட்சியளிக்கும் தன்மையில் இருக்கும்.

அவாங்க் மன கோசரமாகிய ஸௌந்தர்யத்தை என்று பாரதியாரே எழுதி நம்மை அகராதி தேடும் வேலைக்கு அனுப்பி வைக்கிறார்! ஆயினும் அக்காலத்தில் எழுதிய பலரது உரைநடையினும் அவரது உரைநடையில் வடசொல் ஆதிக்கம் குறைவு என்றுதான் கூறவேண்டும்.

கவிதையைப் பொறுத்த மட்டில் வடசொல் வழக்கு அவரிடம் அவ்வளவாக இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். வடமொழி வழக்கினை ஆள வேண்டி நேரின் அவ்வவற்றுக்குத் தக்க தமிழ்ச் சொல்லையும் அக்கம் பக்கமாகக் கொடுத்து விடுவது அவருக்கு வழக்கம்.

வேதம் புகன்றிடும்; நான்மறை கூறிடும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஸூரிய தரிசனம்; ஞாயிறு வணக்கம்
சித்த சாகரம்; உள்ளமெனுங் கடல்

அவர் அங்ஙனம் கொடுப்பது நல்ல தமிழ்ச் சொல்லாக்க மாகவே இருக்கும் என்பதை இவற்ருல் அறியலாகும்.

பாரதியார் காலத்தில் ஆங்கிலம் கலவாது எழுதுதலே தனித் தமிழ் என்று பொதுவாகக் கருதப்பட்டது. அந்தக் காலத்துச் 'சுதேச மித்திரனி'ன் தமிழ் நடையில் நூற்றுக்கு ஒன்றிரண்டு தான் தமிழ்ச் சொல் காணப்படும். இந்தப் பின்புலத்தில் வைத்து நம் தென்றமிழ் நாடு தந்த கவிஞர் பாரதியின் தமிழைப் பார்க்கும் பொழுது அது மிக நல்ல தமிழ் என்று ஆணித்தரமாகக் கூறத் தோன்றும்.

○

பழங் காலத்தில் முடிமன்னர், குறுநில மன்னர்களின் அரண்கள் மனேகள் ஆகியவற்றிலும் வாணிப நிறுவனங்கள், கோயில்கள் முதலியவற்றிலும் கொடிகள் அசைந்தாடிக் கொண்டிருந்தன.

இந்தியா முழுமைக்குமாக, ஒரு தேசியக் கொடி தேவை என்ற சிந்தை பாரதியாரின் காலத்தில் உருவாகி வந்து அதற்கான முயற்சிகள் அவ்வப் பொழுது அரும்பிப் பலரது ஒப்புதலுக்குக் காத்திருந்திருக்கின்றன.

சிவப்புப் பட்டுத் துணியில் வச்சிர அடையாளத்தைத் தேர்ந்து பொருத்தி வைத்துத் தேசக் கொடியை உருவாக்கியவர் ஐர்லந்து பெற்ற மாதரசியும், பாரதியாரின் குருமணியும்' இந்திய மெய்ஞ்ஞான தேச பக்தையும் ஆன நிவேதிதா தேவி என்று ராஜம் கிருஷ்ணன் எழுதிய பதாகை என்ற (ஜனசக்தி பாரதி நூற்ருண்டு நிறைவு மலர் 1982) கட்டுரை விவரமாகத் தெரிவிக்கிறது.

வந்தே மாதரம் என்ற திருவாசகத்தை வங்க மொழி எழுத்துக் களில் அதில் வரைவித்தவரும் அந்தச் சகோதரியாரே என்று அந்தக் கட்டுரையால் அறியலாகும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மேலும் அந்தக் கட்டுரை வச்சிரத்தின் சிறப்பினைத் தெரிவிக்கிறது. அந்த அடிப்படையில் கொடிப் பாட்டின் முதற் சரணமான

ஓங்கி வளர்ந்ததோர் கம்பம் — அதன்
உச்சியின் மேல்வந்தே மாதரம் என்றே
பாங்கின் எழுதித் திகழும் — செய்ய
பட்டொளி வீசிப் பறந்தது பாரீர்

என்பது அமைந்திருக்கிறது என்று அறிய முடிகிறது.

பாடற் கருத்தமைதி

முதற் சரணத்தில் வரும் ஓங்கி என்ற தொடக்கமே எடுப்பாக இருக்கிறது.

உயரமான கம்பம் என்ற உண்மையை வளர்ந்ததோர் கம்பம் என்று கூறிய நயம் இனிமை தருகிறது.

வந்தே மாதரம் என்ற எழுத்துக்களுடன் சிவப்புப் பட்டுத் துணியில் உருவாக்கப்பட்டு ஒளிவீசிப் பறந்துகொண்டிருந்தது அந்தக் கொடி. அதனைப் பாரீர் என்று — பாரோரை — இந்தியரை — இந்த நாட்டு வீரரை அழைக்கிறது முதற் சரணம்.

சரணம் இரண்டு

அதனை வெறும் பட்டுத் துணி என்ரு சொல்வது?

காற்று—புயற் காற்று—இல்லை, பெரும் புயற் காற்று, அதில் பாய்ந்து சுழற்றுகிறது. மட்டுக்கு மீறி அடிக்கிறது.

அந்தப் பெரும் புயலை ஒரு பொருட்டாக மதிக்காத உறுதி கொண்டு இருக்கிறது மணிக் கொடி. ஆகவே அதனை மாணிக்கப் படலம் என்று கூறுவது தான் பொருந்துவதாகும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

படலம் என்ற சொல்லுக்குரிய பொருள்களில் இங்குப் பொருந்துவன அடுக்கு, அதிகரிப்பு, கூட்டம், பரிவாரம், படல் என்பனவாம்.

இவண், பெரும்புயற் காற்று, மட்டுமிகுந்தடித்தல், மதியாத உறுதிகொள் மாணிக்கப் படலம் என்பன அந்தக் கொடிக்கு அருகில் இருக்கும் வீரர் கூட்டத்தின் பலத்தை, கருத்துப் பலத்தைத் தாம் ஏற்றுத் தெரிவிக்கும் பொருட் செறிவுடைய னவாக இருக்கின்றன என்பதாம்.

இந்த இடத்தில்

கொடி என்றால் என்ன என்பதற்கு, ராஜம் கிருஷ்ணன் தந்துள்ள உணர்ச்சி மிக்க வரைவுரையை இளைஞர்கள் அறிந்துகொள்ளல் இன்றியமையாத தாகும். அப்பொழுது தான் இந்தச் சரணத்தைப் பூரணமாகப் புரிந்து கொள்ளல் இயலும்.

சற்று நீண்ட மேற்கோளாக இருப்பினும் அதனை அப்படியே இங்குக் காண்போம்:

இந்த நிலையில் தான் (1905இல்) நிவேதிதா அம்மை இந்திய மக்களின் விரிந்த, சிதறிக் கிடக்கும் சக்தியை ஒருமுக மாக்க வும், புதியதான தேசிய ஒற்றுமையைத் தோற்றுவிக்கவும் ஒரு பதாகை அவசியம் என்று உணர்ந்தார்.

பதாகை எனப்படுவது யாது?

அது ஒரே சமயத்தில் மங்களம் பொருந்தியதும் அச்சுறுத் தலுக் குரியதும் ஆகும். அது சமர்ப்பணத்துக் குரியது; அணிமுழக்கத்துக்குரிய புனிதச் சின்னம். அது பலிபீடம் போன்றது. தற்காப்பானாலும், எழுச்சித் தாக்குதல் ஆனாலும் அதனடியில் மனித வாழ்வுகள் மனமுவந்து மலர்க் காணிக்கைகளாக வந்து நிறையும்.

தலைமுறைகள் தோன்றி மறையலாம். புதிய புதிய இணைப்புக்கள் உருவாகி மாறலாம். ஆனால் அவற்றின்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஒருங்கிணைந்த முழுமைக்காக அமையப் பெறும் தேசியச் சின்னம் பதாகை: கொடி.

வேறுபடுத்த இயலாத ஜன—தேச—தர்ம என்ற ஒருமைப் பாட்டுக்காக அச் சின்னம் என்றென்றும் ஆயிரம் பதினு யிரம் நலிந்த உள்ளங்களுக்கும் வீரியமூட்டி ஒவ் வொருவரையும் போராட்டத்துக்கு உரியவர் ஆக்குவ தாக எளிமையையும் அசைக்க இயலாத உறுதியையும் யுகம் யுகமாக விளக்கிக் கொண்டு திகழும் வந்தனைக் குரியதாகத் திகழும்.

இவ்வாறு தொகுத்துத் துலக்கியுள்ளார் ராஜம் கிருஷ்ணன்.

சரணம் மூன்று

இந்தப் பகுதியில் கொடியில் இருந்த முன்னை நாள் இலாஞ்சனைகள் வருகின்றன.

இந்திரனின் வச்சிரம் (இருதலை வேல்) ஒரு பால், எங்கள் துருக்கரது இளம்பிறை இன்னொரு பால். நடுவில் வந்தே மாதர மந்திரம்.

இந்தக் கொடி மாண்பு மிக்கது. 'அதன் மாண்பினை அளந்து வகுத்துரைக்க யான் அவ்வளவு வல்லவனு என்ன?' என்று கவிஞர் பணிந்து வியந்துநிற்கும் அளவுக்கு மாண்பு மிக்கது அது.

சரணம் நான்கு

வேறெங்கும் காண்பதற்கு இயலாத வீரர்களின் பெரிய மேதகு கூட்டம் இதோ கம்பத்தின் கீழ் நிற்கிறது. அந்த வீரர்கள் நம்பற்குரியவர்கள். தங்களது நல்ல உயிரைக் கொடுத்தேனும் கொடியினைக் காப்பாற்றுவார்கள்.

சரணம் ஐந்து

அணி அணியாக அவர்கள் நிற்கிருர்கள். அந்த மேலான காட்சி, காண்பதற்குப் பரமானந்தமாக இருக்கிறது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஆபரணுதிகள் அணிந்த மார்பும் வெற்றித் திரு விளங்கும் வடிவமும் உடையவர்களாக அவர்கள் இருத்தலைக் காண்பீர்களாக!

சரணங்கள் ஆறு ஏழு எட்டு ஒன்பது

அவர்களெல்லாம் யாவர்?

கவிஞர் வரிசையாக அறிமுகம் செய்கிருர். தமிழ் நாட்டுப் போர்வீரரொடு தொடங்குகிறது பட்டியல்.

சேர நாட்டு வீரர், தெலுங்க நாட்டார், கன்னடர், ஒட்டியர், மராத்தி நாட்டவர், இந்துஸ்தானத்தார், இராஜபுத்திரர், பஞ்சாப் தேசத்தார் வங்க நாட்டவர்......

சரணம் பத்து

இவர்கள் எல்லாரும் சேர்ந்து கொடிக் காப்பு செய்வது காணுங்கள். அவர்களது சிந்தையில் உள்ள வீரம் எஞ்ஞான்றும் குன்ருது இருப்பதாக!

பலவகையிலும் தேர்ச்சி பெற்ற பெருமக்கள் பலராலும் பாராட்டப் படுவது பாரத நிலம். அதன் கொடியானது சிறப்பு மிக வாழ்க!

தாயின் மணிக் கொடி பாருங்கள். அதனைத் தாழ்ந்து பணிந்து கும்பிட வாருங்கள்.

—இவ்வாறு அன்புடன் அழைப்பு விடுக்கிறது இந்தப் புதிய கொடிப் பாட்டு.

சில எதிரொலிகள்:

○

பாரத மாதா துவஜம் என்ற பதாகைப் பாடல் பரவசங் கொண்ட உள்ளத்தினின்று பிறக்கிறது என்று குறிப்பிடும் ராஜம் கிருஷ்ணனின் (முற்குறித்த) பதாகைக் கட்டுரை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இந்தப் பாடல் தோன்றிய சூழ்நிலையைக் கூறும் பொழுது,

'விபின் சந்திர பாலர் சென்னை வந்தபோது அந்த ஊர்வலம் சென்னை நகரின் வரலாற்றிலேயே முக்கியத்துவம் வாய்ந்த தாக ஒரு சுதந்திர நிகழ்ச்சியாக அமைந்து விடுகிறது. சுமார் ஒன்றரை மைல் தொலைவு நீளமாக அந்த ஊர்வலம் இளைஞரின் தேசாவேச எழுச்சியை எடுத்துக் காட்டுகிறது. பாரத மாதாவின் கொடியேந்திய வீரர் முன்னே செல்ல அணியணியாக இளைஞர் தொடர, பாரதியை இக் காட்சி பரவசம் கொள்ளச் செய்தது' என்று தெரிவிக்கிறது.'

○

ஊர்வலம் செல்லும் காட்சி அல்லது அணியணியாக நிற்கும் காட்சி, பாடலில் வரிசை பெற்றுள்ளது.

கவிஞர் அதைக் காட்டிக் காட்டித் தாமும் களிப்புற்று நம்மையும் காணுமாறு சொல்லி வாழ்த்துகிருர்.

சேர்ந்ததைக் காப்பது காணீர் அவர்
சிந்தையின் வீரம் நிரந்தரம் வாழ்க!

என்று அழகாக வாழ்த்துகிருர்.

ஆனல், எல்லாரும் சேர்ந்து காப்போம், எல்லார் நெஞ்சிலும் வீரம் வாழ்க! என்று அழைப்பு இருக்குமாஞல் — சூளுரை இருக்குமாஞல் காப்பாகிய அரிய கடமையில் என்றென்றும் கற்போர் கேட்போர் யாவராயினும் அதிற் பங்கு கொண்டு தலை தூக்கி அண்ணாந்து நிற்பர்.

ஆனல் இங்கு அந்தக் காப்புக் கடமை சிலருக்கென்று ஒதுக்கப் பட்டது போல் இருக்கிறது.

கவிஞரும் ஆரியக் காட்சியில் ஆனந்தம் அடைகிருரே யன்றித் தாமும் அதனுட் கலந்து தம்முயிர் ஈந்து கொடியினைக் காக்கும் அணியில் இடம் பெற நினைந்ததாக இந்தப் பாடலுட் காணப்படவில்லை.

அவர் கவிஞர் எனவே அவரது உள்ளம் அதனேடு இணைந்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

திருந்தும் அவர் தனித்திருந்து அந்தக் காட்சி விழுப்பத்தில் பங்கு பெறுகிருர். அவ்வளவு தான்.

அவர் கவிஞர். அவ்வாறு தான் இருப்பார் என்று ஒரு சமயம் ராஜாஜி கூறியது இங்கு நினைவு கூரத் தக்கதாகும்.

சூரத் காங்கிரசுக்குப் பாரதியாரோடு உடன் சென்றிருந்தவர்களில் ஒருவர் ராஜாஜி. அங்கே நடந்த ஒரு நிகழ்ச்சி பற்றி அவர் பிற்றை நாளில் கூறும் பொழுது, அந்தக் காங்கிரசில் செருப்புகளும் நாற்காலிகளும் பறந்துகொண்டிருந்த நேரத்தில் பாரதியார் அவற்றிற் கலந்துகொள்ளாமல் சற்றுத் தொலேவில் அமர்ந்து சென்னை நூற்பதிப்பாளர் ஒருவரொடு பேசிக் கொண்டிருந்தார், நிகழ்ச்சிகளேப் பார்த்தவாறு பேசிக் கொண்டிருந்தார் என்று கூறிவிட்டு,

'அவர் கவிஞர்,கவிஞர் எல்லாரையும் போல் நடக்கவியலாது, எல்லாரையும் போல் நடந்து கொண்டால் அவர் கவிஞராக இருக்க முடியுமா?' என்று வினவுகிருர் ராஜாஜி.

சிம்பலிசம் என்ற தமிழ் நூலின் ஆசிரியர் இவ்வாறே, இதனை மேற்கோள் காட்டி, முடிவுரையாகப்

பாரதியார் தேசிய வாணர், சர்வதேசிய வாணர், பகுத்தறிவாளர், புரட்சியாளர், பத்திரிகையாளர், புதுமைச் சிந்தனை மிக்கவர், கவிஞர், கற்பனை மிக்கவர். இலட்சிய நோக்கினர் —என்று பலதுறை ஆற்றல் அவருக்கு இருந்தாலும் அந்த ஆற்றல்கள், செயல்கள் சிந்தனைகள் எல்லாவற்றையும் உள்ளடக்கிய ஒரு கவிஞர் என்பதே அவரைப் பற்றிய உரிய மதிப்பீடு என்று எழுதியிருப்பது மிகவும் பொருத்தமானது, ஈண்டைக்குக் காட்டத்தக்கது, சிந்திக்கத் தக்கது ஆகும்.

○

கம்பத்தின் கீழ் நிற்பவர்களின்

பணிகள் பொருந்திய மார்பும்
பைந்திரு வோங்கும் விடிவமும் காணீர்

என்று வியந்து பாடுகிருர் கவிஞர்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இந்தக் காட்சி அன்றைய காட்சியா அல்லது கவிஞர்தம் அகக் காட்சியா என்று ஐயுற வேண்டியுள்ளது.

அன்றைய காட்சி என்பதனைக் காட்டிலும் போர்க்களங்கள் பலவற்றில் வெற்றி பெற்று வீர விருதுகள் எய்தி அவற்றுக்கான சின்னங்களை மார்பிலே தரித்திருக்கும் வீரர் கூட்டத்தை மனத்திலே கண்டு பாடலில் தீட்டியிருக்கலாம் என்றே எண்ணத் தோன்றுகின்றது.

காரணம், தடியடி பட்டும் சிறைப்பட்டும் சீர்குலைந்தும் துன்புற்ற தொண்டரும் சரி, உயிர்கொடுத்த இளைஞரும் வீரரும் சரி, பாடிய கவிஞரும் சரி பணிகள் பொருந்திய மார்பினராக இருந்தார் என்று கூற முடியாது. அங்ஙனமே பைந்திரு ஓங்கும் வடிவமும் கொண்டிருந்தனர் என்பதும் முழு உண்மையாகக் கொள்ள வியலாது.

கொடி காத்த குமரனை அன்று தொண்டர் படையில் சேர்க்கவே மறுத்தார்களாம். அவரது தோள்வலி அப்படிக் காட்சி தந்தது. ஆனால் சிந்தையின் வீரமோ— அது — நிரந்தரம் இருந்தது; மிகுந்து இருந்தது, ஏனையோர் செய்யாததைச் செய்யத் துணிவு தந்தது.

ஆகக், கொடியினை ஏந்திக் காத்தவர்கள் நெஞ்சினுள்ளே வீரத் திரு ஓங்கி இருந்தவர்களே அன்றி, ஆளுமைப் பொலிவும்—தோற்ற மிடுக்கும்—ஆபரணதிகளும் கொண்டவரல்லர். உயிர் கொடுத்தோரிற் பலர் ஏழை எளியவர்கள், உழைப்பாளிகள், தில்லையாடி வள்ளியம்மை போன்றவர்கள்.

எனவே,

பணிகள் பொருந்திய மார்பும் பைந்திரு வோங்கும் வடிவமும் என்ற வருணனை, கவிஞரின் விழுமிய கற்பனையினின்று உதயமானது என்று அறிந்து கொள்வதில் கடினம் எதுவும் இல்லை.

O

இந்தியாவின் பலவகைக் கூட்டத்தார்க்கும் கவிஞர் தந்துள்ள

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அடைமொழிகள் கருத்து மிக்கவை; கவிதைச் சுவை மிக்கவை.

இன்றைக்கு அவை அவர்கட்கு மட்டும் தாம் என்பதின்றி இந்தியர் எல்லாரிடத்தும் பொதுவாக எதிர்பார்க்கத் தக்க வையே.

○

பாரதியாரின் ஆசை ஆவேசம் கற்பனை காம்பீரியம் என்பன இந்தப் பாடலில் குறைவின்றி இருக்கின்றன.

அவர்தம் காலத்தில் இருந்த தேசியப் போக்கு—கருத்துக்களை ஒட்டிய கொடியமைப்பு—பாடலில் அப்படியே படமாகி யுள்ளது.

ஆயினும், இந்திரன் வச்சிரம், எங்கள் துருக்கர் இனம் பிறை

என்பவற்றைப் பார்க்கும் பொழுது, கவிஞரின் காலத்திலேயே இருதேசக் கொள்கைக்கான — மத அடிப்படைப் பிரிவினைக் கான—வித்துக்கள் வீழத் தொடங்கி விட்டனவோ என்று நினைக்கும் பொழுது நெஞ்சிலே முள் குத்துவது போன்று நோவு உண்டாகிறது. பிறகு அந்தக் கொள்கையே 'விஷ விருட்ச' மாகி இந்தியப் பெருமாளிகையை இரண்டு மூன்றாகப் பிளக்க நேர்ந்ததை எண்ணும் பொழுது—அத்தோடு நில்லாமல் அதே பிளப்பு வேலை மேலும் தொடருமோ என்று கருதும் பொழுது நெஞ்சினைத் துயரம் ஆக்கிரமித்துக் கொள் கிறது.

ஏதோ ஒரே நிறம், பூவோ புலியோ சிங்கமோ கரடியோ அரிவாளோ மண்வெட்டியோ ஏதேனும் ஒன்று—ஒரே அடை யாளமாக இருந்து ஒரு தேச அடிப்படைக்கு இசைவாக, வேற்றுமை களைந்து, ஒன்று சேர்ந்திருக்கும் உறுதிப்பாட்டுக்கு அன்றே வகை அமையாது போயிற்றே என இரங்கி ஏங்கு கின்றது நம் எளிய நெஞ்சம்!

கவிஞர் என்ன செய்வார், பாவம், இருப்பதை அப்படியே ஏற்றுக் கொண்டு நல்லதை எதிர் நோக்கிப் பாடுகிறார். அது காலத்தின் முரண்குறிப்பாகப் போய்விட்டது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

○

போதாக் குறைக்கு — மத வாதக் கூறுகளோடு — தமிழர் தெலுங்கர் மராட்டர் என்பன போன்ற இன்னொருவகைப் பிரிவினைக் கோடுகள் வேறு பாடலில் குறுக்கும் மறுக்குமாகக் காணக் கிடக்கின்றன.

கொடியின் முன்னிலையில் எந்த விதமான வேறுபாட்டுணர்வுக்கும் இடம் கொடுக்கக் கூடாது.

கடவுளின் திருமுன்பு இவர் வங்காளி இவர் மராத்தி நாட்டவர், இவர் பஞ்சாபி இவர் காஷ்மீரி என்று சொல்லி இடந்தந்து வழிபாடு செய்ய வகை செய்வது எவ்வளவு வேடிக்கையானதோ அவ்வளவு வேடிக்கையானது கொடி முன்பு வேறுபடுத்தி நிறுத்துவது—பார்ப்பது.

அங்ஙனம் பார்ப்பது,

முப்பது கோடியும் வாழ்வோம் என்ற ஒருமை யுணர்வுக்கு மாறுபட்டது; கவிஞரே பின்னாளில் முப்பத்திரண்டு கோடி வீரரை விளைவித்த பாரத மாதா என்று பாடிய ஒன்று பட்ட பொது வீரப் பண்புக்கும் மாறு பட்டதே யாகும்.

○

அமெரிக்காவின் தனித்தனி மாநிலங்களைக் குறிப்பிட்டோ, இனங்களைக் குறிப்பிட்டோ கவிஞர் விட்மன் பாடியிருக்கலாம்.

அமெரிக்க மண்ணில் குடியேறிய ஐரோப்பிய இனத்தவர்கள் நூற்றாண்டுகளாக — ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகச் சுதந்திரத்தை அனுபவித்துப் பழகியவர்கள்; அதனால் பொறுப்பு உணர்வு மிக்கவர்கள்.

இந்தியப் பிரதேசங்களோ யுகம் யுகமாக வகைவகையான நுகத்தடியில் சிக்கிக் கிடந்தவை; அடிமைச் சேற்றில் வேற்றுமை நாற்றத்தில் வீடுகட்டி வாழ்ந்தவை; குறுக்கு வழியில்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பெருக்கம் அடையப் பார்ப்பவை. — எனவே அமெரிக்க உதாரணம் இவ்விடத்து ஒத்து வராது.

○

இந்தப் பாடல் மொழிவழி மாநில அமைப்புக்கு ஆதரவு தருகிறது என்றும், சமய தேசிய இன வேற்றுமையுள் ஒற்றுமைக்கு வழி வகுக்கிறது எனவும் தமிழகத்தின் அறிவாளர்களும் தலைவர்களும் எழுதுவதும் பேசுவதும் அனைவரும் அறிந்தனவே.

ஆனால் நாட்டு நடப்பில் மொழி சமயம் இனம் என்பன தேசத்தின் ஒற்றுமையைக் குதறிச் சிதறச் செய்யும் இயற் கூறுகளாகவே இருந்து வந்தன; இன்னமும் அதே பணியைச் செய்து வருகின்றன என்பதனைக் கண்டுபிடிக்க அதிக நேரம் ஆகாது.

○

மொழி வழி மாநிலம் என்பது நமது நாட்டில் பதவி அரிப்பும் தசைத் தடிப்பும் பொருள் வாய்ப்பும் உடையவர்களுக்குச் சொரிந்து கொடுக்கும் சுக சாதனமாக உள்ளது.

மதவழி ஆட்சி நடத்தும் நாடுகளின் கதையும் அதுதான் என்று கூறத் தேவையில்லை. அது உலகறிந்த இரகசியம்.

மதவாதிகள் கடவுளின் பெயரால், மதத்தின் பெயரால் ஆட்சியை ஏற்படுத்துகிறோம் என்று அடுத்தவரை அழிப்பார்கள். ஏற்படுத்தியவுடன் பிறகு தங்களுக்குள்ளே கடவுள் பெயரைச் சொல்லி மதத்தின் பெயரைச் சொல்லி அழிவு வேலையை நடத்துவார்கள்.

மொழி மதம் என்பன போன்ற இனிப்புக் காட்டி எழுந்து கசப்பு காட்டும் பிரிவினையின் ஆதிக்கப் பற்களை இரக்கமின்றிப் பிடுங்கி, அதே சமயம் தொழிற் பெருக்கமும் பொருளாதார சமத்துவமும் ஏற்படுத்தும் இறுக்கமான கட்டமைப்பை நிலை நாட்டாமல் இந்த நாட்டில் எந்தக் காலமும் நன்மையை எதிர்பார்க்க முடியாது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நெருப்பாற்றிலே நீந்தி வந்து எதிர்ப்புகளைச் சுட்டறுத்து உலகத்துக்கொரு புதுமையான பொதுவுடைமையை ஏற்படுத்திய சோவியத் நாடு மலைபோல் நிலை நாட்டிக் காட்டிய அடிப்படை உண்மை இது தான்.

அந்த வலிமை பொருந்திய வல்லரசிலே கூட, 'கிழவன் எப்பொழுது சாவான் கட்டில் எப்பொழுது கைவசமாகும்' என்று எதிர்பார்த்திருக்கும் மதஅடிப்படை வாதிகள் ஏக்கப் பெருமூச்சு விட்டவாறு இருப்பதாகச் செய்திகள் ஒரோவழி வருகின்றன. அங்கேயே அவர்கள் திமிங்கிலத்தை விழுங்க நேரம் பார்த்துக் கொண்டிருக்கும் பொழுது இங்கே இருக்கும் இளைத்த மீன்களை விழுங்கி ஏப்பமிட அவர்களுக்கு எவ்வளவு நேரமாகி விடும்?

அதனைப் பாரதியார் பின்னர் உணர்ந்து கொண்டார் என்பதனை அவரது கவிதை வாழ்விற் பிற்கூறுப் படைப்பான பாரத சமுதாயம் (1918) என்ற பாடல் தெள்ளத் தெளிவாகக் காட்டுகிறது.

இவ்வாருக, யோசிக்கும் வேளையிலே, மாதாவின் துவஜம் என்ற கொடிப்பாட்டு — பாரதியாரின் முற்கூறுக் கவிதை (1908)— இன்று சில அடிகளால் மட்டுமே சிறப்புடையதாக இருக்கிறது என்று கருத நேர்கிறது.

○

இந்த தேசியக் கொடிப் பாட்டு, அமெரிக்க நாட்டுப் புதுக் கவிஞரான வால்ட் விட்மனுக்குக் கடன்பட்டிருக்கிறது என்று ஆய்வாளர்கள் எடுத்துக் காட்டியுள்ளார்கள்.

○

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

15

நாடொறும் உயர்க!

○

"நம்முடைய தேசத்தவர்கள் ஒவ்வொரு நாளும் உயர் வடைக!" என்று வாழ்த்தும் இந்தத் தேசிய கீதம் 1909 ஆம் ஆண்டு, தமிழ்ப் புத்தாண்டு வாழ்த்தாகக் கவிஞரால் 'இந்தியா' இதழில் வெளிவரப் பெற்றது.

○

"'தேசாபிமானம்' என்று வாயால் பேசிக் கொண்டிருந்த நாட்கள் போய் நஷ்டத்தைப் பாராமல் தேசத்திற்கு உழைக்கும் நாட்கள் வந்து விட்டன" என அக மகிழ்ந்து இதற்குக் குறிப்பும் வரைந்துள்ளார் அவர்.

உண்மை தான். பாரதியாரைப் பற்றி எழுதிய வ. ரா. தம் நூலில் "லாப நஷ்டக் கணக்குப் பார்க்கும் காரியத் திட்டத் தால், சுதந்திரமும் சரித்திரமும் பிறப்பதில்லை. ஆழத்திலிருக் கிற பொருளை எடுக்க வேண்டுமானால் தண்ணீரில் தலை கீழாய்ப் பாய வேண்டும். பெரிய காரியங்களைச் செய்வதற் குத் தலைகீழாய்ப் பாயத் தூண்டும் தன்னம்பிக்கை தான் தேவை" என்று எழுதினார்.

இலாப நஷ்டக் கணக்குப் பாராத பாரதியாருக்கு இந்தத் தன்னம்பிக்கை இயல்பாக இருந்தது. அவர் தமிழுலகிற்குத் தந்த பெரிய செல்வம் அந்தத் தன்னம்பிக்கை தான். "புது வருஷம் நமக்குச் சர்வ மங்களமாகவே பிறந்திருக்கிறது" என்று நம்பிக்கை வழங்கி வாழ்த்துகிறார் அவர்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

○

பலரும் அறிந்துள்ள அழகிய சிறிய இவ் ஆசிரியப்பா 'தமிழ்' என்ற பகுதியில் இடம் பெற்றிருப்பது; வந்தே மாதரம் வந்தே மாதரம் என்று வணங்கி, நாட்டவர் செய்யும் சீரிய முயற்சிகள் சிறந்துமிக் கோங்குக!' என்று முரசு கொட்டும் இந்தப் பாட்டு காலத்தாலும் கருத்தாலும் ''தேசிய கீத''ப் பகுதியில் இருத்தற்குரியது.

---

15 புது வருஷம் (1909)

வாழிய செந்தமிழ்

○

'வாழிய செந்தமிழ் வாழ்கநற் றமிழர்' என்று தொடங்குவதால் இது தமிழ் பற்றிய பாடற் பகுதியில் இருக்க வேண்டும் என அடைவு படுத்தியுள்ளார்கள்.

பாரதி காலத்து வெளிவந்த பதிப்புகளிலும் அதற்குப் பின்னர் வந்த சில பதிப்புகளிலும் 'புது வருஷம்' என்ற அதன் முதல் மகுடத்துடனே வெளிவந்தது அந்தத் தலைப்புத் தான் அதற்குப் பொருத்தமானது. பின்னர் வாழிய செந்தமிழ் என்பதே தலைப்பாக வெளிவந்து கொண்டிருக்கிறது.

○

இந்தப் பாடலிற் கவிஞர், பாடிய வாய் அமுதூற 'வாழிய செந்தமிழ் வாழ்கநற் றமிழர்' என்று அழகாகப் பாடி அதற்கு அடுத்த அடியில் 'வாழிய பாரத மணித்திரு நாடு' என்று அமைத்துள்ளார். செந்தமிழ், நற்றமிழர், பாரத மணித்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

திருநாடு என்ற சொற்றொடர்கள் இனிமையாக உள்ளன; இதயங் குளிர்விக்கின்றன. அவற்றை வைத்துள்ள நிரல் முறை நயமாகவும் நியாயமாகவும் இருக்கின்றது.

பாடற் கருத்தைப் பார்ப்போம்: வாழ்த்து மயம்! செந் தமிழ் வாழ்க! நல்ல தமிழ் மக்கள் வாழ்க! அழகிய பாரதத் திருநாடு வாழ்வதாக! இன்று — இக் காலம் எம்மை வருத் திக் கொண்டிருக்கும் இன்னல்கள் எல்லாம் மாய்ந்தொழிக. நன்மை வந்து மேவுக. தீமைகள் யாவும் நலிவுற்று நீங்குக. அறம் வளர்க. மறம் (பழிபாவம்) மடிந்தொழிக. இந்திய நாட்டு மக்கள் ஆண்மையோடு செய்யும் சீர் பொருந்திய முயற்சிகள் சிறப்பின் மிக்குச் செழித்து ஓங்குக! நம் தேசத் தவர் ஒவ்வொரு நாளும் உயர்வடைக. வணக்கம் தாயே, வணக்கம் தாயே!

பாடலைப் பற்றி

○

இன்றெமை வருத்தும் இன்னல்கள் மாய்க என்ற வேண்டு தலில் உள்ள இன்று என்ற நிகழ்காலக் குறிப்பு, என்றைக் கும் பொதுவாக வரக்கூடிய ஒன்று. வாசிப்போர் என்று வாசித்தாலும் அவர்க்கு அஃது 'இன்று' தானே! சொல்லு வர் நிகழுங் காலத்தானே! என்று எக் காலத்துக்கும் ஒத்தியல் பொருளைக் கூறுவது மரபு. எனவே, 'இன்று' என்று தொடங்கும் வாழ்த்தியல் செய்திகள் என்றைக்கும் பொருந்துவனவாகும். அவ்வாறே வருத்தும் இன்னல்கள் — ஏதாவது ஒன்றிரண்டு, மனிதனிடம் வந்து கொண்டே தான் இருக்கும். இல்லையா?

○

அடுத்துத் தொடர்ந்து வரும் வாழ்த்துச் செய்திகள் யாவும் மேன்மையானவை.

இன்றெமை வருத்தும் இன்னல்கள் மாய்க
நன்மைவந் தெய்துக தீதெலாம் நலிக.

இவை தனியார்க்கும், குடும்பத்தார்க்கும், தேசத்தார்க்கும் உலகத்தார்க்கும், ஆக, எல்லார்க்கும் உரியவை.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

O

ஆரிய நாட்டினர் ஆண்மையோ டியற்றும் — என்பதில் ஆரிய என்பது நாம் முன்னரே கூறியவாறு, கவிஞரது கவிதை வாழ்வின் முற்காலப் பிரிவில் வரக் கூடிய சொற்பிர யோகம். அதை அவர் பின்னுளில் விட்டுவிட்டார் என்பதை யும் முன்னர்க் கண்டோம்.

ஆரிய நாட்டினர் ஆண்மையோடு — என்பது அச்சமுற் றிருப்போன் ஆரிய னல்லன் என்று சிவாஜியின் உரையி லும் வரக் கூடியது. ''அஞ்சாதே, பேடியின் இயல்பை அடையாதே. அஃது ஆரியனுக்கு (சிறந்தோனுக்கு) அழகு அன்று'' என்று கண்ணன் பார்த்தனை நோக்கிக் கூறுவதன் எதிரொலியே என்பது அறியத் தக்கது.

O

சீரிய முயற்சிகள் சிறந்துமிக் கோங்குக! — என்ற எளிமை யான சொற்கள் எவ்வளவு பொருட் பொதிவைக் கொண் டிருக்கின்றன! சொல்லிச் சொல்லிப் பார்க்கக் கருத்தின் நயமானது தேன் நிரம்பிச் சொட்டுவது போற் போந்து சுவை யும் சுகமும் அளித்தலை ஒவ்வொருவரும் அனுபவிக்கலாம்!

O

நந் தேயத்தினர் நாடொறும் உயர்க — 'நாளொரு மேனி யும் பொழுதொரு வண்ணமு'மாகத் தம் மக்கள் உடலும் உள்ளமும் வாழ்வும் பெற வேண்டும் என்று விழையும் தாயின் ஆசைபோல் இந்தத் தொடர் விளைந்து வந்துள்ளது.

அதற்கு முயற்சி வேண்டும் என்பது சீரிய முயற்சி என்பத ஞல் குறிக்கப்பட்டது. அறம், அடிப்படையாக இல்லாவிட் டால் அனைத்து முயற்சிகளும் பசுமட்கலத்துள் நீர்பெய் திரீஇ யற்று என்றுற்போல முதலுக்கு மோசத்தைக் கொண்டு வந்துவிடும். ஆக அறம் வளர்ந்திடுக என்று முதலில் சொல்லிக் கொண்டார்.

நாடொறும் நாடி முறை செய்தல் என்ற நல்வழியை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வள்ளுவர் காண்பித்தார். இல்லாவிட்டால் நாடொறும் நாடு கெடும் என்று எச்சரித்தார் அவர்.

நந்தேயத்தினர் நாடொறும் உயர்க என்பதில் வள்ளுவரின் அறவழியும் எச்சரிக்கையும் இருப்பது போன்ற ஓர் உணர்வு உண்டாகிறது.

வள்ளுவர் அரசனுக்கு அதனைக் கற்பித்தார். எல்லார்க்கும் ஒத்துரிமை உள்ள நாட்டில் எல்லார்க்குமான பொது அறம் ஆகி விட்டது அஃது. ஆகையால் ''நந்தே யத்தினர் நாடொறும் உயர்தற்கு'' இடையரு முயற்சி கொள்ள வேண்டும்.

இவ்வாறு இந்தப் பாடல் சிந்தனைச் செறிவும், அடிகளுக்குள் உள்தொடர்பும், மொத்தத்தில் வள்ளுவர், கண்ணன் முதலிய மேலோரின் உரைத் தொடர்பும் உள்ளடக்கிச் சுவைக்கச் சுவைக்கத் தீம்பாகாக இனிக்கிறது.

○

ஒரு காலத்தில் பள்ளிக்கூடத்தில் வழக்கமாகப் பாடிவரும் 'வாழ்க ஜார்ஜ் மன்னர் வாழ்க வாழ்கவே' என்று தொடங்கும் பாடலைப் பாடிக்கொண்டிருக்க—ஒரு நாள் ஆசிரியர்கள் நாட்டுப் பற்று மீக்கூரத் தாமாக முன்வந்து இனிமேல் இந்தப் பாடலைப் பாடுங்கள் என்று, தடையிருந்த அந்தக் காலத்தில் துணிவாக, 'வாழிய செந்தமிழ் வாழ்க நற்றமிழர்' ...என்று கற்பித்தார்கள். மாணுக்கரோ உற்சாகத்துடன் உரக்கச் சொல்லி மனப்பாடம் ஆக்கிக்கொண்டார்கள். 'ஜார்ஜ் மன்னர், மேரி ராணி' பாட்டு வெளியேற்றப்பட்டது. 'வாழிய செந்தமிழ்' கொலு ஏறியது.

○

தேச பக்தி வேகத்தில் இந்தப் பாட்டு தமிழகத்தில் எங்கனும், எல்லாப் பொதுக்கூட்டங்கள்—கல்விக் கூடங்கள் யாவற்றிலும் தேசிய கீதமாக இசைக்கப்பட்டது. எவருடைய உத்தரவுமின்றி, இணையற்ற நாட்டுப் பண்ணுகத் தானே முன்வந்து, முப்பது ஆண்டுகட்குக் குறைவில்லாமல், தமிழை, தமிழரை, இந்தியாவை, உலகரை வாழ்த்தி உயர்த்தி வந்தது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நாடு விடுதலை பெற்றதும், தமிழகத்தில், புகழ்பெற்ற இசை வாணி ஒருவரால் இசை ஒழுங்கு படுத்தப்பட்டு,

வாழிய செந்தமிழ் வாழ்கநற் றமிழர்
வாழிய பாரத மணித்திரு நாடு
வந்தே மாதரம் வந்தே மாதரம்

என்ற அடிகள் மட்டும் முழங்கப் பெற்றன.

ஆந்திரம் முதலிய பகுதிகள் பிரிந்து போன பிற்பாடு இருந்த சென்னை இராச்சியத்தில் 1962ஐ அடுத்த வருடங்களில் 'ஜனகண'தான் பள்ளிகளில் பாடப் பெற வேண்டும் என்று அன்றிருந்த சென்னை அரசு ஆணை பிறப்பித்து, 'வாழிய செந்தமிழ்' தேசிய கீதம் அன்று என்பதாக மறைமுக விளக்கம் தரப்பெற்று, அன்போடு வழியனுப்பி வைத்தது.

'வாழிய செந்தமிழ்'ப் பாடல் தரும் பெருமித உணர்ச்சியின் வளர்ச்சியையும் வரலாற்று விழுப்பத்தையும் வேறு எந்தப் பாடலும் கொடுக்க முடியுமா?

ஆவேசமிக்க இளங் கவிஞன் ஒருவன் தேசபக்தி என்ற அமிருதத்தைப் பருகிக் களித்து, இனிய தமிழில் இவ் வையகத்தை நோக்கி வாழ்த்திய வாழ்த்தல்லவா? அதற்கு ஈடாக வேறு எந்த வாழ்த்தும் இதயத்தைக் கிளுகிளுக்க—கிளர்ச்சி கொழிக்கச்—செய்து விடுமா?

வாழிய செந்தமிழ்! வாழிய செந்தமிழ்!

○

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

16

புண்ணிய நாட்டினிலே!

○

எளிய சொற்கள் கருத்து வலிமை பெற்று மனத்தை விட்டு நீங்காச் சித்திரங்களாக உருப் பெறுகின்றன.

○

பரிவு கலந்த அங்கதம், நெஞ்சை நெகிழ வைக்குமாறு சந்தத்தைச் சுழன்று வர வைக்கும்.

நொண்டிச் சிந்தில் நாப்பழக்கம்—இவை இப்பாடலின் தனிச் சிறப்பு.

○

உள்ளே இருப்பது, சீத்தலைச் சாத்தனுர் ஊரார் பிழைக்குத் தம் தலையைக் குத்திக்கொண்டது போன்ற நிலையோ? இதுவோ ரியலிசம்?

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

16 பாரத ஜனங்களின் தற்கால நிலைமை

நெஞ்சு பொறுக்குதில்லையே!

○

நாட்டு நிலையை, மக்கள் நடக்கையை அப்படியே காட்டுகிறார் கவிஞர். ஆக்கத்திலே தொழில் ஊக்கத்திலே...ஞானத்திலே பர மோனத்திலே... என்றெல்லாம் வரும் அடுக்கடுக்கான பெருமைகட்கு எதிராய இருண்ட பகுதிகள் சிலவற்றை இதில் காட்டுகிறார்.

○

எதற்காக இந்தச் சித்திரங்கள்? எதற்காக நடப்பியல் காட்டப்படுகிறது? ரியலிசத்தின் நோக்கம் என்ன?

'தீதும் நன்றும் பிறர்தர வாரா என்று பாடினாரே பழந்தமிழ்ப் புலவர், அந்த அடி உங்கள் நினைவுக்கு வருகிறதா? ஒரு வேளை அது நினைவுக்கு வராவிடினும் அதன் முதல் அடியான யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற அடியை நீங்கள் நிச்சயம் நினைவில் வைத்திருப்பீர்கள்.

''தீதும் நன்றும் பிறர்தர வாரா'' என்று பூங்குன்றனார் சொன்னது, 'நீர் வழிப் படூஉம் புணைபோல் ஆருயிர் முறை வழிப் படூஉம்' என்று உணர்ந்தோர்க்கு—கருமத் தத்துவத்தைக் கருதுவோர்க்கு—ஆன்ம விடுதலையாகிய முத்தி நெறி அறிவார்க்கு—அனுபூதி விழையும் மகான்களுக்கு—தனி மனித விதிக்குப்—பொருந்துவதாகும். அவ்வாறே யாதும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஊரே யாவரும் கேளிர் என்பதும் அவர்களுக்காகச் சொல்லப் பட்டதே யாகும். அது தனி மனிதனுக்கு, உணர்ச்சி யளவில் ஒப்புக் கொள்ளத் தக்கதே யன்றிச் சட்ட பூர்வமாக—உலகியல் பூர்வமாக—ஒப்புக் கொள்ளத் தக்கது அன்று.

அவ்வாறே, சமுதாய விதிப்படி—தீதும் நன்றும் பிறர்தர வாரா என்பதும் பொருந்தாது ஒன்று.

நம்முடைய கஷ்டங்களுக்குச் சமூகமே காரணம். தீதும் நன்றும் பிறர்தரவே வருகின்றன. கூட்டமாக—பெரிய சமுதாயமாக—தேசமாக வாழ்கின்ற நிலையில், பல தேச உறவுகள் சாதக பாதகங்களைச் செய்கின்ற இக்கால நிலையில், இதுவே முழு உண்மை,

'யாதும் ஊரே யாவரும் கேளிர் என்பது மறுக்கமுடியாத ஒன்றுதான். ஆனால் குடியுரிமை இல்லாத நாட்டில் நாம் சென்று குடியேற முடியுமா? கடல் கடந்து எங்கு வேண்டு மானாலும் போக முடியுமா? கருத்து வேறுபாடுகளைப் பொறுத்துக் கொள்ளமுடியாத கொள்கையுடையாரொடு, தம்மைத்தவிர மற்றவர்கள் இந்த வுலகில் இருக்கக் கூடாது என்று கத்திபிடிப்பாரோடு உறவு பூண்டு கேளிர் என்று வாழ்வு நடத்த முடியுமா?

ஆகவே யாதும் ஊரே யாவரும் கேளிர் என்பது ஓர் ஆசை, ஓர் இலட்சியம் அவ்வளவுதான்!

அவ்வாறே நம்முடைய இன்பதுன்பங்கள் பிறரால் வருவதில்லை என்பதும் ஓர் அரிய தத்துவம் அவ்வளவுதான். வறுமை, மடமை, அறியாமை, பஞ்சம் பட்டினி நோய் கொடுமை துயரம் என்ற எல்லாப் பொல்லாங்குகளுக்கும் செல்வம் கலை அமைதி இன்பம் என்று வரக்கூடிய எல்லா நல்லவற்றுக்கும் சமுதாயமே காரணம். இதுதான் கண்கண்ட உண்மை; கருதப்படவேண்டிய யதார்த்த நிலை.

எனவேதான், தனிமனிதக் கடைப்பிடிகளை வலியுறுத்திய புத்தரும் சமுதாய சீர்திருத்த வாதியாக எழ நேர்ந்தது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'சங்கம் சரணம்' என்ருெரு சரணத்தையும் வற்புறுத்த வேண்டியிருந்தது.

அதனுல் தான், புதிய யுகதருமத்தை—சமுதாய வாழ்நெறியைக் கண்கூடாக வையகத்தில் நிலைநாட்டிய லெனின், உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உளவாய பகைகளை எதிர்த்துப் போராடுங்கள்—அழித்தொழியுங்கள் என்று ஆலோசனை கூறினுர்.

களைகாண்டோறும் அழிப்போரே அறஞ்செய்வார் என்று பாரதிதாசன் மொழியியக்கத்துக்குச் சொன்ன கருத்து எல்லா இயக்கங்களுக்கும் உரிய பொன்மொழியே யாகும்.

சிலர் வாழப் பலர் பலியாவது பொல்லாதது. ஆனுல் பலர் வாழ மிகச் சிலர் அழிவது தவிர்க்க முடியாதது. சுரண்டும் சக்திகளுக்கு — உறிஞ்சும் சக்திகளுக்கு — அழிக்க வரும் சக்திகளுக்கு—மரண அடி கொடுத்துக் கொண்டே இருக்க வேண்டும்.

இராவணனை அழிக்கப் பிறந்தார், அறம் வளர்த்த நம்பியானுர் இராமபிரான். அங்ஙனம் இராவணனை—அவனுடைய கூட்டத்தாரை—அழிக்குமுன் வாலியை அழித்தாலன்றித் தன் நோக்கம் நிறைவேரு தென்று கருதி அதனை முதலிற் செய்தார் அவர். உட்புக முடியா முள்ளுக்காட்டை எரிக்கும் பொழுது உள்ளே உள்ள சந்தன மரமும் எரிபடத்தானே செய்யும்? அறத்தின் வேலி என்று தன்னைக் கருதிக்கொண்ட வாலியின் கதை அது தானே? சிறியன சிந்தியாதான் செப்பும் நியாயம் அதுதானே?

இல்லா விட்டால் மெய்ப் பொருள் நாயனுர் அடிபட்டுக் குத்துப் பட்டுச் செத்த கதைதான் தொடர்ந்து நடந்து கொண்டே இருக்கும்? நாயனுருக்குச் சிவலோக பதவி கிடைத்திருக்கலாம். அதற்குரிய தகுதி அவருக்கிருந்தது. ஆனுல் அவர் அரசர்க்குரிய கடமைகளைச் செய்யாத குற்றம் உடையவராகிருர். அந்தக் குற்றம் மற்றவர்களைக் கடுமையாகப் பாதிக்கத்தானே செய்யும்?

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பொதுமக்களின் பலவீனங்களைப் பயன்படுத்திக் கொண்டு குற்றவாளிகள் பெருகும் பொழுது, குற்றவாளிகளை இரக்கமின்றிக் களைவதாய சமூக நீதிதானே இந்த நாட்டின் கடவுளர் செய்து வந்ததாகக் கூறப்படும் 'துஷ்ட நிக்ரக சிஷ்ட பரிபாலனம்' என்பது?

○

இதற்காகவே 'ரியலிசம்'—யதார்த்த வாதம், நடப்பியல், இருப்பியல், பட்டாங்கு எனப்படும் கலைக்கோட்பாடு பயன் படுகிறது; பயன்பட வேண்டும்.

அதற்காக அன்றிப், பிச்சைக்காரன் தன் வயிற்றிலடித்து வயிற்றிலடித்து அதையே பிழைக்கும் தொழிலாகக் கொள் வது போலவும், ஏமாந்து விட்ட பேதைப் பெண்ணை வைத்து விடுதி வியாபாரம் செய்யும் காரியவாதியைப் போலவும், 'ரியலிசப்' படைப்பாளிகள் தங்கள் சுயகாரிய நோக்கிற் காகச் செய்வார்களானல் அது அருவருப்பானது; வெறுக்கத் தக்கது.

இந்தத் தெளிவோடு பாரத தேசத்து ஜனங்களின் தற்கால நிலைமையைப் பாரதி வழியில் பார்ப்போம்.

ஒன்று

பாரத நாட்டு மக்கள் நிலை கெட்டு விட்டார்கள். அதை நினைந்தால் நெஞ்சு பொறுக்கமாட்டேன் என்கிறதே!

இவர்கள் பயந்து பயந்து சாகிருர்கள். இவர்கள் பார்த்துப் பயப்படாத பொருள் எதுவுமே இல்லை. அங்ஙனம் அஞ்சும் பொருள்கள் ஒரு சில வருமாறு:

பேய்கள். அவை வஞ்சனை செய்யும் என்கிருர்கள். இந்த மரத்தில் இருக்கின்றன. அந்தக் குளத்தில் இருக்கின்றன என்று சொல்வார்கள். முகட்டிலே தொங்குகிறது என்பார்கள். ஆனல் இவர்கள் எவ்வளவு துயர்ப்படுவார்கள்! நினைத்து நினைத்துப் பயப்படுகிருர்களே!

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இரண்டு

மந்திர வாதி என்ற ஒரு வார்த்தையைச் சொல்லி விட்டால் போதும் இவர்களுக்கு மனக்கிலி வந்து பிடித்துக்கொள்ளும். இயந்திரம் வைத்தல், சூனியம்—ஏவல் செய்தல்...ஏ அப்பா? இவர்கள் துயர்களுக்குக் காரணங்கள் எத்தனை ஆயிரம் இருக்கின்றன!

—மூன்றுவதாக—இவர்கள் அரசியலைக் கண்டு பயப்படுவார்கள். மக்கள் வரிப்பணம் கொடுக்கிறார்கள்; அவர்கள் தந்ததை வாங்கி அதை வைத்து அரசியல் நடத்துகிறார்கள், உலகத்தில் இராஜாக்களும், இராஜாதி ராஜாக்களும்! அந்த அரசியலை இந்த மக்கள் அஞ்சுதரு பேய் என்று நினைத்து நெஞ்சம் அயர்ந்து போவார்கள்.

மூன்று

அடுத்து, சிப்பாய் எனப் படுபவன், இவர்களுக்கு அஞ்சத் தகும் பொருள் ஆவான். சிப்பாயைக் கண்டால் பயம். ஊர்ச் சேவகன் வருதலைக் கண்டாலே என்னவோ எதுவோ என்று அவர்களுக்கு மனம் திக்குத் திக்கென்று அடித்துக் கொள்ளும். வேறு எவனோ ஒருவன் துப்பாக்கி ஒன்றைத் தூக்கிக் கொண்டு வெகு தூரத்தில் வந்துகொண்டிருப்பான். அதனைக் கண்டவுடன் வீட்டுக்குள் புகுந்து ஒளிந்து கொள்வார்கள். அந்தப் பக்கம் எவனோ ஒருவன் செல்கிறான். அவனுடைய உடுப்பு ஒருவகைச் சீருடை போல் தோன்றுகிறது, அவ்வளவு தான், இவர்கள் திகிலோடு எழுந்து நிற்கிறார்கள்.

நான்கு

நெஞ்சு பொறுக்க மாட்டேன் என்கிறதே! உயர்ந்த நிலையிலிருந்து சீர்குலைந்து இப்படி ஆகிவிட்ட மனிதர்களை நினைந்து விட்டால் நெஞ்சம் வருந்துகிறதே!

இவர்களுக்குள் எத்துணைப் பிரிவுகள்? கொஞ்சமா அவை? ஒரு கோடி இருக்கும் என்று சொல்லலாம் போல் இருக்கிறதே. அப்படிச் சொன்னாலும் அதிகம் என்று கூறுவதற் கில்லை.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பிரிவினைகள் எப்படித் தோன்றும் என்பதற்கு ஓர் உதாரணம், கேளுங்கள்:

ஐந்துதலைப் பாம்பு இருக்கிறது என்று அப்பன் சொன்னான். அதைக் கேட்ட மகன் அதற்கு மேலும் ஒரு தலை அதற்கு இருக்கிறது, ஆறுதலை மொத்தம், அதுதான் உண்மை என்று சொன்னான். வேண்டும் என்றோ வேறு எவ்வாறோ அங்ஙனம் சொல்லிவிட்டான். அவ்வளவு தான். அப்பனுக்கும் மகனுக்கும் கருத்து வேற்றுமை ஏற்பட்டது. பிரிவு. நெஞ்சிற் புகை; நெடுநாட் பகை என்று முடிந்தது அது!

ஐந்து

உண்மைச் சாத்திரங்களைப் பற்றிய அறிவு இவர்களுக்கு அறிமுகம் ஆக வில்லை. சாத்திரம் என்ற பெயரால் பொய் மூட்டையை வைத்துப் பிழைக்கும் பேய்கள் சிலர் சொல்வதை இவர்கள் எளிதில் நம்பிக்கொள்கிறார்கள்.

அப்படி நம்புவதனால் என்ன நடக்கிறது தெரியுமா? ஒருவர் ஒரே குழாத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும், ஒரு கொள்கையில் மாறுபட்டவர் என்பதற்காக மற்றவர்கள் அவரைக் குலைத்து இகழ்வார்கள். சாத்திர அறிவு இருந்தால் அப்படிச் செய்ய மாட்டார்கள்.

முகத் துதி செய்து 'காக்கை' பிடித்துச், 'சமயமுள படிக் கெல்லாம் பொய் கூறிச்' சூது செய்கின்றவர்களை—நீசர்களை—இந்த அப்பாவி மக்கள், உண்மையை உணராமல், 'ஆகா! இவர்களல்லவா உத்தமர்கள், இவர்களல்லவா நமக்கு நல்லது சொல்கிறார்கள்' என்று ஏமாளித் தனமாக நம்பி அவர்கள் சொல்வதற்குப் பணிந்து நடப்பார்கள். உட்பொருளை ஓராமல், புறத் தோற்றம்—போலிச் சடங்குகள் என்பவற்றின் எல்லைக்கே சென்றவர்களாக—சிவன் பெரியவரா திருமால் பெரியவரா என்று ஆத்திரம் பற்றிக் கொண்டு எரியுமாறு கடுஞ்சண்டை பிடிப்பார்கள்!

ஆறு

நினைத்தாலே நெஞ்சு வருந்துகிறது. நினைக்கிறோம்—மறுபடி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நினைக்கிறோம்—அதனால் வெறுப்பு ஏற்படுகிறதா என்றால் அதுதான் இல்லை. நினைக்க நினைக்க வெறுப்பு உண்டாவதே யில்லை. அவ்வளவு அப்பாவிச் சனங்கள்! உண்மையில் நல்லவர்கள், நம்மவர்கள், உண்மையானவர்கள்.

கஞ்சி குடிப்பதற்கு இவர்களுக்கு வசதியில்லை. அந்த நிலைக்கு ஏன் வந்தோம், இதற்கெல்லாம் காரணம் யாது? என்பதும் அவர்களுக்குத் தெரியாது. அதெல்லாம் தெரிய முடியாதபடி எதுவோ பனிப்படலம் மேலே மூடியிருக்கிறது. பஞ்சம் பஞ்சம் என்று பரிதவிக்கிறார்கள், அலைமோதுகிறார்கள். அந்தப் பரிதாபத்தில், பஞ்சத்தில் துடிதுடிக்கிறார்கள்; துஞ்சி மடிகிறார் கள். அந்தோ அந்தோ! இவர்களது துயர்களைத் தீர்க்க ஒரு வழியும் இல்லையே!

ஏழு

இவர்களிடம் வந்து விளையாடும் நோய்கள் எத்தனை! எத்தனை! எழுந்திருக்கவும், எழுந்தால் நடக்கவும் இவர்களுக்கு வலிமையில்லையே! குழந்தைகள் போல இருக்கிறார்களே! அதுவும், பார்வை சரியாகத் தெரியாத குழந்தைகள் போல ஆகி விட்டார்களே!

இனித்த பேச்சு, இனிப்பான நடிப்பு, கையில் இனிப்புள்ள சிறுபண்டம் இவற்றோடு எவராவது இவர்களிடம் வந்தால் அவர்களை அப்படியே நம்பி அவர்களுக்குப் பின்னாலேயே போய்விடுவார்கள் போலிருக்கிறதே! அந்தோ இவர்களை அவர்கள் அடகு வைத்து விடுவார்கள் அல்லது விற்று ஆதாயம் பார்த்து விடுவார்கள்போ லிருக்கிறதே!

இந்த நாடென்ன வெறும் பாலைவனமா? அன்றி வரட்சியுள்ள நிலப் பரப்பா, உவர்க் கடலா? இல்லை—இல்லை. இல்லவே இல்லை. சிந்துவெளி நாகரிகம் சிறந்து நின்ற காலத்திலேயே கப்பலும் துறைமுகமும் அவர்களுக்குக் கடற்பகுதியில் இருந் தனவாம்! சோழப் பெருமன்னர்கள் நாவாய்களால் கடல்கள் கலங்குமாறு செய்யவில்லையா? கட்டடம் காவியம் வேளாண்மை ஆடை அணி மணி, மருத்துவம் போர்க்கலை வாணிபம் வானநூல், தத்துவம் என்று எவ்வளவு கலைப்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பெருக்கம்! சாலி என்ற நெல் அப் பெயருடைய ஓர் ஊரில் — கீழை நாட்டிலிருந்து கொணரப்பட்டுச் சாலி என்றுலே நெல் என்று பொருளாமாறு தமிழகத்தில் பயிர்த் தொழிலாற் பெயர் பெற்றதே!

இங்குக் கிளைவிட்டு வளர்ந்த கலைகள் — கோடி — ஆயிரம் கோடி — பத்து நாலாயிரங் கோடி — மக்கள் நயந்து நின்றவை இன்னும் எத்தனை எத்தனையோ!

இத்தகைய பாரத நாட்டு மக்கள் — இன்று பொறிபுலன்கள் அற்ற விலங்குகள் போல் அல்லவா வாழ்கிறுர்கள்?

சில சிந்தனைகள்:

○

இந்திய நாட்டவரிடை நிலவிய— இன்னும் ஆங்காங்கு விடை பெற மறுக்கின்ற — அச்சம், தாழ்வுமனம், பிரிவினைச் சிந்தனை, ஏமாளித்தனம், அற்ப விவகாரத்திற்கு ஆராயாத பெரும் போர்க் கோலம், வறுமை, அறியாமை, நோய், கலை வரட்சி, மெய்யுணர்வின்மை என்பவற்றை அப்படியே பட்டாங்கு, கவிச்சுவையோடு காட்டுகிறது இந்தப் பாட்டு.

புறச் சூழ்நிலைகள் சில மாறிவிட்டிருப்பினும், சில வகைச் செய்ம் முறைகள் மாறிவிட்டாற் போலத் தோன்றினும் உண்மையில் மேற்குறித்த மறுதலை இயல்புகள் இன்றும் மாறினவாகத் தெரியவில்லை.

அடி மனத்திலே போருக்கம், அஞ்சாமை, உழைப்பார்வம், கலையுணர்வு, பரந்த உளப்பாங்கு, மெய்ப்பொருள் வேட்கை என்பன மேவினுலன்றிச் சமுதாய மாற்றத்தின் முழுமலர்ச்சி யைக் கருதிப் பார்க்கவும் இயலாது.

○

இவர் துயர்களைத் தீர்க்கவோர் வழியிலையே! என்று கவிஞர் கூறுகிருர். அங்ஙனம் கூறும் பொழுது ஏதோ

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பொறுப்பைத் தட்டிக் கழித்து விட்டதாகவோ, தீர்வு எதுவும் கண்டுபிடிக்க இயலாத அளவு, பொறி புலன் கலங்கிவிட்டதா கவோ தெரிகிறது.

அரைகுறைப் புலவர்கள் அந்தக் காலத்தில் செய்த பிழைகட்குச் சீத்தலைச் சாத்தனர் தம் தலையைக் குத்திக் கொண்டு வேதனைப் பட்டதுபோல் தெரிகிறது.

உண்மையில், கவலையின் கடைக்கோடிக்குச் சென்று, நம்மை யும் அழைத்து நின்று பாடுவதனுல் அவ்வாறு கூறுகிருர் கவிஞர்.

○

காரண காரியத்தை, இருப்பியலுக்கு அப்பால் சென்று, சீர்மை பெறுவதற்குரிய சிந்தனையை, செயலாண்மையைக் குறிப்பாகவோ, வெளிப்படையாகவோ உணர்த்தாத ரியலிசம் — அது கசட்டு ரியலிசம் — என்று சற்று முன்பு கண்டோம்.

இன்று, ரியலிசம் என்றதும் கொலை கொள்ளை கற்பழிப்பு ஆதிய வன்முறைச் செய்கைகள் அப்படியே காட்டப்படுதல் கண்முன் வருகின்றது. பேதைப் பெண்ணை ஏமாற்றி விடுதியில் சேர்த்துக் கொள்பவன் பணம் சம்பாதிக்கிருன். அதைக் கதையாக—கவிதையாக உணர்ச்சி கொப்புளிக்க எழுதுபவன், மேடையேறி விளாசுகிறவன் காசு பார்க்கிருன்; அதை அச்சிட்டு முன்பக்கமும் பின்பக்கமும் திறவையாகப் போட்டுப் பத்திரிகை நடத்துகிறவன் பணம் சேர்க்கிருன். அதனைத் திரைப்படமாக எடுத்து, மறைக்க வேண்டியதைக் காட்டி, காட்ட வேண்டியதை மறைத்து வெளியிடுபவன் கொழுகொழுவென்று கொழுக்கிருன். அந்தப் பேதைப் பெண்ணே அப்படியே இருட்டறையில் இருக்கிருள். திக்கற்ற வளுக்குத் தெய்வம் துணையாக வந்தால் தான் உண்டு.

ரியலிசமாம் ரியலிசம்! இவ்வாறு போதைப் பொருளாக இருக்கும் ரியலிசத்தினும், கற்பனுவாதத்தின் தீங்கு குறை வாக இருக்கும் போலிருக்கிறது. கற்பனுவாதத்தின் அடிப் படையில் உருவாகும் படைப்பில் எப்படியும் குற்றம் வெளிப்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பட்டு விடும். குற்றம் தண்டனை பெற்று விடும். நியாயம் கிடைத்து விடும். கடவுள் கைகொடுத்து விடுவார்!

இங்கே — இன்றைய ரியலிசத்தில்— ஒரு பரிகாரமும் இல்லை, வீறு இல்லை, போருணர்வு இல்லை. பரிகாரம் இருந்தால் அவர்களுக்குப் பரிகாரம் — வருமானம் — இல்லாது போய் விடுமே!

இவ்விடத்தில், நச்சு வளையம் என்ற புதினத்தில் தமிழண்ணல் எழுதியுள்ளது நினைவுக்கு வருகிறது.

ஒரு திரைப்படக் கதை:

ஒருவன் தான் வேலை பார்க்கும் அலுவலகத்தில் பணத்தைக் கையாடி விடுகிறான். அவனுக்கு நேரே மேலாகவுள்ள அதிகாரி அவனைக் கையும் களவுமாகப் பிடித்து விடுகிறார். அவனுக்கு வேலையும் போய், தண்டனையும் உறுதி என்று ஆகிவிட்டது.

அன்று மாலை, அவனைக் காப்பாற்றுவதற்காக அவன் மனைவி, அம் மேலதிகாரியைத் தனியே சந்தித்துக் கெஞ்சுகிறாள். நான் அதற்குப் பதிலாக இந்த இரவை உங்களோடு கழித்து விடுகிறேன் என்று கூறி அவ்வதிகாரியை அவள் மயக்கப் பார்க்கிறாள். அவரோ மிகவும் கண்டிப்பான பேர்வழி. எனவே அவளை நன்கு திட்டி அனுப்பி விடுகிறார்.

மறுநாள் அவர் அலுவலகம் செல்கிறார். அவனைப் பற்றிய குற்றத்தைத் தெளிவாகக் குறிப்பெழுதி மேலதிகாரிக்கு அனுப்புகிறார். நிருவாக மேலாளர் உடனே அவனைக் கூப்பிட்டுத் தண்டிப்பார் என்று எதிர்பார்த்த வண்ணம் அவர் இருக்கிறார்.

நிருவாக மேலாளர் அவரையும் அழைக்கிறார், அவனையும் அழைக்கிறார். அவனைக் குற்றம் சாட்டச் சரியான காரணமில்லை யென்றும், இப்படிப் பொய்க் குறிப்பு எழுதியதற்காக அவரை வேலையிலிருந்து 'இடைக்கால நீக்கம்' செய்திருப்பதாகவும் அறிவித்து இருவரையும் போகச் சொல்கிறார்!

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அதிகாரி, நிருவாக மேலாளரின் அறையை விட்டு வெளியேறும் போது, கைப் பையைச் சுழற்றியபடி அப் பெண் மேலாளரின் அறைக்குள் நுழைகிருள். இதைக் கவனித்த அதிகாரிக்கு நேற்று அவள், 'இந்த இரவை உங்களோடு கழித்து விடுகிறேன்' என்று கூறியது நினைவுக்கு வருகிறது. ஒரு முறை திரும்பிப் பார்த்து, அங்கே மேலாளரும் அவளும் கொஞ்சிப் பேசிக் கொண்டிருப்பதைக் கவனித்த வராய் அவர் தலை குனிந்தபடியே நடக்கிருர்.

... இந்தக் கதையைப் பெரிதாகக் காட்டிய் ஒரு திரைப் படத்தைப் பார்த்து விட்டு வெளிவரும் கணவன் மனைவி இணை ஒன்றின் உரையாடலை வரைகிருர் அந்த நூலாசிரியர்.

படம் முடிந்து வெளியில் வந்த போது பொற்கொடி சரவணன் இருவர் முகமுமே வாடிப்போயிருந்தது. (ஏனென்ருல் இந்தக் கணவன் — மனைவியரின் கதை தான் படமாக்கப் பட்டதோ என்றிருந்தது திரைக் காட்சி)

''அவள் செய்தது சரிதான். தன் கணவனுக்காக ஒரு மனைவி என்னென்னவோ தியாகம் செய்யும் போது, இதை மட்டும் செய்யக் கூடாதா?' —சரவணன் மன நிலை இது.

''நல்லா இருக்கே. குற்றம் செய்தவனைத் தண்டிக்காமே விட்டது ஒரு குற்றம். அதுக்காக அவள் தானும் களங்கப் பட்டது அதை விடக் குற்றம்'' இவ்வாறு பொற்கொடி வாதாடினுள்

''படத்திலே காதற் காட்சிகள் ரொம்ப அழகாக எடுத்திருக் காங்க. ஒளிப் படக்காரர் கலைத் திறன் முதல் தரம். என் னென்ன கோணத்திலே எவ்வளவு அழகாக எடுத்திருக் காங்க...!

''சேச்சே ... அதுக்காக இப்படியா பச்சையாக எடுப்பாங்க! அந்தக் காலத்திலே இதையெல்லாம் தனிமை மறைவு ஒதுங்கி நடப்பது என அறிமுகம் படுத்துவதாக, சிலையிலே இது போலப் பாலுணர்வு ஊட்டுபவை உண்டு. ஆனல் அவை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

யெல்லாம் மறைவான இடத்திலே எங்கேயாவது இருக்கும். இப்போ, பதினுயிரம் பேரை உட்கார வைச்சுக் கிட்டு கண் காட்சியாவுல காட்டுருக?''

''என்ன பொற்கொடி, நம்ம கிட்ட இல்லாததையா காட்டு ருங்க? நம்மிடம் இருக்கிறதை அப்படியே நடப்பியலாக் காட்டினு கோபப்படலாமா?''

''பொருளாதார வேறுபாட்டை, சுரண்டலை அப்படியே காட்டுகிற நடப்பியலை விட்டுட்டு, காமத்தைக் காட்டு கிற நடப்பியலுக்கு நாம தாவி விட்டோம். அதனுலே குப்பையிலே கிடந்து புரள்கிருேம்'.

''குப்பை இருக்குங்கிறதை ஒத்துக்கிறியா, இல்லையா? அப்படி இருக்கிறதை இருக்கிறதாக் காட்டுறதிலே என்ன தப்பு?''

''வீட்டிலே குப்பை இருக்கிறது உண்மை. அதைக் கூட்டி வெளியே எறியணும். உடம்பிலே அழுக்குச் சேர்வது இயற்கை. நாள் தோறும் குளித்து அதைப் போக்கணும். குப்பை இயல்புன்னு சொல்லிட்டு நாமே குப்பையைக் கொண்டுவந்து வீட்டிலே கொட்டிக்கிருேம். உடம்பிலே அழுக்குச் சேர்வது இயற்கைன்னு சொல்லிட்டுச் சேத்தை அள்ளி உடம்பிலே பூசிக்கிருேம். எல்லாம், தானே விளைய வல்லன. செம்பிற் களிம்பு, தானே ஏறும். நீக்கத்தான் வழி தேட வேண்டுமே தவிர அதனை மிகுவிக்கக் கலைகள் பயன்பட வேண்டியதில்லை ...''

உரையாடல் முடிவுறும் பகுதியில் நூலாசிரியர், கதைத் தலைவியின் வாயிலாக ஆவேசம் கொண்டு உரைப்பது இங்கே கூர்ந்து நோக்கற்குரியது. அது வருமாறு:

''இதைக் கேட்டுச் சரவணன் பலமாகச் சிரித்தான். 'ஏது, நீ பெரிய தத்துவ வாதி ஆகி விடுவாய் போலிருக்கிறதே!' என்ருன் அவன். அவள் அதை மௌனமாக அங்கீகரித்தாள். ''எனக்கு வந்த இழிவு இந்த நாட்டிற் பிறந்த பிறிதொரு பெண்ணுக்கு ஏற்படுவதையும் நான் விரும்ப மாட்டேன். படத்தில் வந்தவளுக்குக் கூட. இவ்வாறு சோதனை ஏற்பட்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

டதை நான் ஒப்ப மாட்டேன். அந்தத் தடியனைத் தான் தண்டித் திருக்க வேண்டும். இந்தத் தீமைகளுக்கெல்லாம் காரணமான நச்சுக் கிருமிகளை அடியோடு ஒழிப்பேன். அவை இதழ்களாக இருந்தால் என்ன? திரைப்படங் களாக இருந்தாலென்ன? அவற்றை எதிர்த்துப் போராட்டமே துவங்குவேன்!' என அப் பேதை நெஞ்சம் பிதற்றியது.

— இவ்வாறு எழுதுகிருர் தமிழண்ணல்.

○

இவ்வாருக, இன்றைய ரியலிசமோ, திரைப்பட — பத்திரிகை — ரியலிசங்களோ நாற்றத்தைத் தூற்றி விடுகின்றன; நச்சைப் பரப்புகின்றன.

பாரதியாரின் ரியலிசமோ, மெழுகுவர்த்தி போல் உருக்கி உருக்கி உண்மை ஒளியைத் துலக்கப் பயன்படுகிறது; மாசு மறுவற்ற தமிழர்கள் — இந்துக்கள் — இந்தியர்கள் மூட நம்பிக்கை வறுமை முதலியவற்றில் மாட்டிக் கொண்டு விழிப் பதை ஒளிக் குவியம் செய்து காட்டுகிறது. மனத்தில் இரக் கத்தை எழுப்புகிறது; வழி தேடி வீறு கொளச் செய்கிறது.

○

நாட்டு மக்களின் நலிவுக்குக் காரணமாக இரண்டு சக்தி களைக் குறிப்பிடுகிருர் கவிஞர். அவற்றுள் முதலாவது அரசி யல்; இன்னென்று மெய்க் கல்வி இல்லாமை.

மக்கள் தருகின்ற வரிப்பணத்தை வைத்துக் கொண்டு தான் அரசாட்சி என்பது அடி முதல் முடி வரை அணி தேர்ப் புரவி ஆட்பெரும் படையொடு நடக்கிறது. அரசியல், மக்களின் கைப் பொருளால் வந்தது. மக்கள் தங்கள் தொண்டுக்காக— துணைக்காக — நலனுக்காகத் தந்தது. பஸ்மாசுரன் சிவன் தலையில் கைவைக்க வந்ததும் சிவனுக்குத் திகில் ஏற்பட்டது போல், அரசியலின் ஆதார நாயகர்களாகிய மக்கள் திகில் கொள்ளுகிருர்கள். அஞ்சுதருபேய் என்று அதனைக் கண்டு அஞ்சி நெஞ்சம் அயர்கிருர்கள்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

''கொடூரமான சமுதாயமானது, அவர்கள் மீது சொரிந்து கொண்டே இருக்கும் அடிகளை அவர்கள் உணர்கிறார்கள். ஆனால் அந்த அடிகள் எங்கிருந்து வருவன என்று அவர்களுக்குத் தெரியவில்லை'' என்ற விவேகானந்தரின் கூற்று இங்கே கவனித்தற்குரியது.

'அறிவில்லாதவர்களுக்கு இன்பமில்லை என்பது ஈசனுடைய விதி' என்று எழுதுகின்ற கவிஞர்,

'சாத்திரப் பேய்கள் சொலும் வார்த்தை நம்பி' என்று பழிக்கப்படற்குரிய — பேய்கள் எனப்படும் ஒரு சாராரைச் சுட்டிக் காட்டுகிறார் உரைச் செய்யுள் ஒன்றில்.

'சாஸ்திர மில்லாத தேசத்தில் நோய்கள் விளைவது விதி. தமிழ் நாட்டிலே சாஸ்திரங்களில்லை. உண்மையான சாஸ்திரங்களை வளர்க்காமல் இருப்பவற்றையும் மறந்து விட்டுத் தமிழ் நாட்டுப் பார்ப்பார், பொய்க் கதைகளை மூடரிங் காட்டி வயிறு பிழைத்து வருகிறார்கள்,'' என்பது கவிஞரது கண்டுபிடிப்பு.

இந்து மதத்திலிருக்கும் வஞ்சகப் போலிகள்தாம் நமது இந்த இழிநிலைக்குக் காரணம்; அவர்கள் மதத்தின் உட்கருத்தைப் பாராமல் வெளி ஆசாரங்களைப் பெரிது படுத்திக் கொண்டிருந்தார்கள் என்றும், நமது சமுதாயம் இப்போதிருக்கும் தாழ்ந்த நிலைக்குக் காரணம் மதமன்று, மதத்தை முறையாகப் பின்பற்றுமற் போனது தான் எனவும், இந்து மதத்தைப் போல் மனித குலத்தின் மேன்மையை உயர்வுபடுத்திக் கூறும் மதம் இந்தப் பூவுலகில் பிறிதொன்றும் இல்லை, அவ்வாறே நடைமுறையில் ஏழை எளியவர்களை மிதித்து நசுக்கும் மதம் வேறொன்று இல்லை எனவும் பேசும் விவேகானந்தரின் எதிரொலியாக இவ்வாறே பலரிடத்தும் கூறியுள்ளார் பாரதியார்.

O

இவ்வாறாக, இந்தப் பாடலில், மக்களின் துன்ப துயரங்களுக் கெல்லாம், சுரண்டுகின்ற அயலவரின் அரசாட்சி, சூது செய்யும் பொய்ச் சாத்திரங்கள் என்பவற்றைக் காரணமாகக் காட்டுகிறார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

விடுதலே, தேச விடுதலே, பொருளாதார விடுதலே, அறியாமை யினின்றும் விடுதலே ஆகியவை தாம் தற்கால நிலேயி னின்று மக்களுக்கு விமோசனம் அளிக்கும் என்று அவர் கருதியது முற்ற முழுக்க நியாயமானதே ஆகும்.

அதற்கு என்ன செய்ய வேண்டும் என்பது குறிப்பால் உணருமாறு பாடல் காட்டுகிறது.

அயலரசு; பொய்ச் சாத்திரங்கள் என்பவற்றை எதிர்த்து மக்கள் எழல் வேண்டும் என்பது ஒன்று. தங்களேத் தாங்களே நற்கலேகளில் அறிமுகம் உள்ளவராக ஆயத்தப்படுத்திக் கொள்ள வேண்டும் என்பது மற்ருென்று.

இருக்கும் இடத்திலிருந்தே வலிமை பெற்று, தம்மிட மிருந்து தாமே வலிமை பெற்றுப் போராட வேண்டும்; அந்தப் போராட்டம் எல்லார்க்கும் நன்மைதரும் நோக் குடன் இருக்க வேண்டும் என்பதே அதன் ஐந்தொகை யாக அமைய வேண்டும்.

○

இது தான் பாடலின் உட்கிடை. ஆயினும் அயலரசை எதிர்ப்பது சாத்திரப் பேய்களே எதிர்ப்பது, மனித விலங்குகளே எதிர்ப்பது என்பதற்கான உறைப்பு, அழுத்தம், வேகம் என்பன பாடலில் அதிகம் கொடுக்கப்பட வில்லே என்றே தோன்று கிறது.

ஆயின், மனிதர் உணவை மனிதர் பறிக்கும் வழக்கம், மனிதர் நோக மனிதர் பார்க்கும் வாழ்க்கை என்பவற்றைக் கடிந்து மாற்றுதற்குரிய வழியைப் பின்னுளில் கவிஞர் பரிணும வளர்ச்சியுற்றவராய்ப் பாரத சமுதாயம் வாழ்க என்ற பாட லில் அடித்துப் பேசுகிருர் என்பதை நாம் அறிந்து ஆறுதல் அடைகிருேம்; கருத்துப் புரட்சி கண்டு களிப்புறுகின்ருேம். இங்கே இலேமறை பிஞ்சாக இருப்பதை உணர்கிருேம்.

○

முடிவாக, இந்தப் பாடல், தம்மைத் தாமே இழிவு படுத்திச்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சிரிக்க வைக்கும் இரக்கமிலா நகைச் சுவையும், தாம் தம்மைப் பீழிக்கும் பீழை (வருத்திக் கொள்ளும் வருத்தம்) என்று தலையைப் பிய்த்துக் கொண்டு நோகச் செய்யும் விமரிசனமும் ஆக இல்லாமல்,

எல்லாரது இதயத்தையும் தொட்டுக் கண்ணீர் துளிக்கச் செய்து, அதே சமயம் இதயம் வெடித்து விடாமல், மெல்லிய அங்கதத்தை இழைய விட்டுக் கவிஞர் காட்டியுள்ள நடப்பியல் ஓவியம், அவரது மனிதாபிமானம் கலந்த கவித்திறனுக்கு அரியதொரு சான்ருக உள்ளது என்பதை நாம் அறிந்து மகிழ்கிருேம்.

○

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

17

வீர மறவர் நாம்

○

பாரத நாட்டு மக்களின் 'தற்கால' நிலைமையைத் தெரிவிக்கிறது. நெஞ்சு பொறுக்குதிலையே என்று தொடங்கும் பாடல்.

அவ்வாறே நாட்டு மக்களின் — தமிழக மக்களின் 'தற்கால' நிலைமையைத் தெரிவிப்பது மண்வெட்டிக் கூலி தின்ன லாச்சே என்று தொடங்கும் மறவன் பாட்டு.

இந்தப் பாட்டு, பாரதி கவித் தொகுப்புகளில் சமூகம் அல்லது பல வகைப் பாடல்கள் என்ற பகுதிகளில் அடைவு செய்யப் பட்டிருப்பினும் கருத்தமைதி, கருத்துத் தொடர்ச்சி காரணமாக இங்கு வைத்துக் காண்பதே பொருத்தமாக உள்ளது.

---

17 மறவன் பாட்டு

மண் வெட்டிக் கூலி தின்ன லாச்சே!

○

வ. ரா. வின் அரிய அனுபவம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பாரதியாரை முதன் முதலில் வ ரா. சந்திக்க வந்த பொழுது, பாரதியார், யார் என்று தெரிந்து கொள்ள அங்கிருந்த ஒருவரிடம் ஆங்கிலத்திலே வினவினாராம்.

பிறகு தான் வந்த சங்கதியை மெல்ல மெல்லச் சொன்னாராம்.

அதற்குப் பாரதியார் அரவிந்த பாபு இங்கே இருக்கிறார் என்று உமக்கு எப்படித் தெரியும்? அது எனக்கே தெரியாதே. அதிருக்கட்டும். தமிழ்ப் பாட்டிலே உமக்கு அபிமானம் உண்டா என்றாராம். அதற்கு வ.ரா. சிரித்தாராம்.

'சிரித்ததற்கு அபராதமாக ஒரு பாட்டு கேளும்' என்றார் பாரதியார்.

''அப்பொழுது அவர் பாடிய பாட்டு, மறவன் பாட்டு என்று பாடியிருக்கிறாரே, அதுதான்...

என்று தொடங்கி விரிவாகக் கூறும் வ.ரா வின் சுவையான வாசகத்தைக் காண்போம்.

''ஒரு தமிழன் மற்றொரு தமிழனொடு இன்னும் எவ்வளவு காலம் ஆங்கிலத்திலேயே பேச வேண்டும் என்று வருத்தக் குரலுடன் என்னைக் கேட்டார் (பாரதியார்). எனக்கு அழுகை வந்துவிட்டது. நேரே பதில் சொல்ல நா எழவில்லை.

அப்பொழுது அவர் பாடிய பாட்டு மறவன் பாட்டு என்று பாடியிருக்கிறாரே, அதுதான். அவர் பாட்டும் குரலும் என் உள்ளத்தைக் கவர்ந்தன. என் நினைப்பு என்னிடம் இல்லை. என் மனம் என்னை விட்டு அகன்றே போயிற்று எனலாம். அன்றைக்குத் தான் யோகம் என்பது இன்னதென்று கண்டேன். என்னுடைய மயக்கம் ஒருவாறு தெளிந்தது. எனது உள்ளப் பூரிப்பைப் பாரதியார் கண்டு கொண்டார்.

நாட்டின் விடுதலைக்கு முன் நரம்பின் விடுதலை வேண்டும். நாவுக்கு விடுதலை வேண்டும். பாவுக்கு விடுதலை வேண்டும். பாறைக்கு விடுதலை வேண்டும். ......இவ்வாறு அடுக்கிக் கொண்டே போனார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

விடுதலை என்ற சொல்லை நாட்டிற்கு உபயோகப் படுத்தி நான் முதலிற் கேட்டது பாரதியாரிடம் தான்.

தமிழுக்கும் உயர்வு உண்டு, தமிழனுக்கும் பெருமையுண்டு என்பதே பாரதியாரைப் பார்த்த பின்னர் தான் என் மனத்தில் அழுத்தமாகப் பதிந்தது. வெறும் வந்தே மாதரக் கூச்சலிட்டு வந்த சிறு பிள்ளையான எனக்கு, பாரதியாரைக் கண்ட பின்னர் அபரிமிதமான உற்சாகம் வந்தது என்றால் அது கற்பனையே அல்ல.

தே மதுரத் தமிழ் ஓசையை அன்று நான் நேரே கண்டு அனுபவித்தேன். நான் எந்த உலகத்தில் இருந்தேன் என்பதை என்னால் அறியக்கூட வில்லை. தமிழுக்கு உயிரும் உருவமும் வலிமையும் பொலிவும் சுவையும் மேன்மையும் உண்டென்று அன்று தான் கண்டேன்.

பாட்டு எப்படி இருக்கிறது என்று, சாதாரண மனிதன் கேட்பது போல் பாரதியாரும் கேட்பாரோ என்று எண்ணினேன். பாட்டு நன்றா யிருக்கிறது என்று சொல்லவும் பயந்தேன். நான் இருந்த நிலைமையைப் பாரதியார் நன்றாக உணர்ந்து கொண்டார். இன்னும் சில பாட்டுக்கள் பாடினார். என் பாக்கியத்தை அளவிட்டுச் சொல்ல முடியாது.''

— இவ்வாறு களி துளும்ப எழுதுகிறார் வ. ரா.

○

தமிழுக்கு உயிரும் உருவமும் வலிமையும் பொலிவும் சுவையும் மேன்மையும் உண்டென்று வல்லார் வ. ரா. கண்ணாரக் கண்டு காதாரக் கேட்டு முடிவுக்கு வரத் துணையாக இருந்தது பாரதியார் அன்று பாடி மகிழ்வைப் பகிர்ந்தளித்த மறவன் பாட்டு என்றால், நமக்கும் அந்தப் பாட்டு அவை யாவற்றையும் அளிக்கத் தவறாது அல்லவா?

பாடப் பாட, வாசிக்க வாசிக்க, கேட்கக் கேட்க உணர்ச்சியும் மனவெழுச்சியும் பொங்கி வரச் செய்யும் பாட்டு அது என்று சொல்லவும் வேண்டுவதில்லை.

எல்லாவற்றுக்கும் மேலாக, இந்தப் பாடலுக்குத் தமிழகத்தின்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வீர வரலாற்றில் ஓர் இடம் உண்டு. அஃது என்ன என்பதனைப் பின்னர்க் காண்போம்.

O

பாடலின் கருத்து பற்றி வ. ரா. நேரிடையாகக் கருத்து எதுவும் குறிப்பிடவில்லை. நாம் கருத்தை முதலிற் காண்போம். பாடற் பகுதிகளில் தரப்பட்டுள்ள உள் தலைப்புகள் (தற்கால ஜீவனம், அதிலுள்ள கஷ்டங்கள் என்பன) பாடலின் மூலத்திலேயே (அச்சில்) இருந்தனவாகும்.

O

கருத்து முரசு

O

மறவன் ஒருவன், சென்ற காலத்துச் சீர்த்தியெல்லாம் போய் விடவே இன்று தாழ்ந்த நிலை ஏற்பட்டு விட்டதே என்று ஏங்குவதாக உள்ளது பாட்டு.

முதல் ஒலி

நாங்கள் மண்வெட்டிக் கூலி தின்னும் நிலை இப்பொழுது எங்களுக்கு வந்து சேர்ந்துவிட்டது. எங்கள் சிறப்புக்குக் காரணமான வாளின் வலியும் வில்லின் வலியும் எங்களை விட்டுப் போய் விட்டன.

விண்ணை முட்டி அதற்கு அப்பாலும் பரந்து சென்ற புகழ் போய் விட்டது. இந்த வுலகில் எங்களுக்குக் கெட்ட பெயர் வந்து சேர லாயிற்று.

இரண்டாவது ஒலி

நாண் நன்கு அமையப் பெற்ற வில்லையும் அம்பருத் தூணியையும் நல்ல அருமையான சங்கின் ஒலியையும் விரும்பி நாங்கள் பூண் பொலிந்த வலிய கதாயுதத்தையும் தூக்கிக் கொண்டு போர் புரிந்த காலமெல்லாம் ஆ! அந்தக் காலமாக—பழங்காலமாகப் போய் விட்டதே!

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மூன்று நான்கு ஐந்து : தற்கால ஜீவனம்

கும் மிருட்டு கன்னங் கரேல் என்றிருக்கிறது. அந்த நேரத்தில் காற்றடிக்கிறது. போதாக் குறைக்குப் பெரிய மழையும் சேர்ந்து கொட்டுகிறது. அந்தச் சமயம் நாங்கள் சின்னஞ் சிறிய துணியைக் கொண்டு எங்கள் தேகத்தை இழுத்துப் பிடித்துப் பொத்திக் கொண்டு,

பயந்து பயந்து மெல்ல நரி போலப் பதுங்கி நடந்து வருகையில் எதிரே ஏதோ ஒரு வேற்றுருவம் வருவது தெரிந்ததும் ஓரமாக மறைவில் ஒதுங்கி......சை! என்னடா வாழ்க்கை இது! சொல்லக் கொதிக்குது நெஞ்சம்! வெறும் சோற்றுப் பருக்கைக்கா இந்தப் பஞ்சம் வந்தது!

நாங்கள் ஏழைகள், எளியவர்கள். எங்கள் வீடுகளில் இந்த வயிறு—ஈன வயிறு—பொல்லாத வயிறு என்ன பாடு படுத்துகிறது! என்ன பாடு படுகிறது! இதனைத் தணிக்க ஓடி ஓடி எலிகளைப் போல ஒளிந்து ஒளிந்து பொருள் தேடி வீடு திரும்புகிறோம். இழிவையும் கூடச் சேர்த்துக் கொண்டு வருகிறோம் இன்று எங்கள் பிழைப்பு இப்படி இருக்கிறது!

ஆறு ஏழு எட்டு ஒன்பது பத்து: அதில் கஷ்டங்கள்

நாங்கள் நடத்தும் தரித்திரம் பிடித்த வாழ்விலும் தகாத சங்கடங்கள் வந்து சேருகின்றன.

நாய் கூட இந்தப் பிழைப்பு பிழைக்கும். ஐயோ ஐயோ இதற்கு நாள் முழுதும் உழைப்பு வேண்டிக் கிடக்கிறது! இந்தப் பிழைப்புக்கு, எங்கள் உழைப்பில் என்னவோ எதுவோ கிடைக்கிறது! அதில் ஒரு பங்கைப் பறித்துக் கொள்ளுகிறான், பாய்ந்து கடிக்கும் நாய் போன்ற, போலீசுக்காரப் பார்ப்பான்!

அவனுக்குப் பிழைப்பு அதை வைத்து நடக்கிறது!

இந்தப் பார்ப்பான் இருக்கிறானே, பார்ப்பான்—அவன்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பேராசைக்காரன், பொல்லாதவன். ஆனால் பெரிய துரையிடம் சொல்லிக் கொடுத்து விடுவேன், அதோ அவர் வருகிறார் என்று சொல்லி விட்டாலோ அவனுக்கு உடம்பெல்லாம் வேர்த்துக் கொட்டும், அவ்வளவு குலை நடுக்கம்!

கொடுமை செய்யக் கூச மாட்டான். யார் எப்படிப் பட்டவராக இருந்தாலும் அவர்களுக்கு எப்படியும் கொடுமை இழைத்து விடுவான். துரை, பெரிய துரை இம் என்று செருமினால் உறுமினால் போதும் இவன் வாலை ஆட்டும் நாயாக ஓடி ஓடி உழைப்பான்.

முற்காலத்தி லெல்லாம் ஐயர் எனப்படுவோர் வேதம் ஓதுவார். அதனால் மாதம் மும்மாரி பொழியும். அது அந்தக் காலம். இந்தக் காலத்தில் இருக்கின்றவர்கள் பொய்மைப் பார்ப்பார்கள். அவர்களுக்குக் காசு தான் குறி. என்ன செய்தாவது காசு பெறவே ஆசைப்பட்டுப் பார்ப்பார்கள்!

பிள்ளைக்குப் ''பூணல்'' கல்யாணம் என்று சொல்வான். எதற்குப் .பூணூல்? நம்மைப் பிய்த்துப் பிடுங்கத்தான்! வேறெதற்கு? பிய்த்துப் பிடுங்கித் தின்று விடுவான்! கொள்ளையடிக்கப் போகுமிடத்தும் அங்கே அவன் ஒரு பொய்யைக் கிளப்பி விட்டு நம்மைக் கொண்டு போய் மாட்டி விடுவான். அவனால் ஓயாத தொல்லை தான்!

போனதெல்லாம் போனது, ஆனதெல்லாம் ஆனது. இன்னமும் நாம் சோரத்தை — திருட்டுத் தனத்தைத் தொழிலாகக் கொண்டிருப்பதா? விண்ணையும் முட்டி அதற்கு அப்பாலும் பரவிய நமது புகழ்—நம் முன்னோராற் கிடைத்த புகழ், பரம்பரைச் சூராதி சூரர்களின் புகழ் மிக்க பெயர்கள் —அவற்றை நாம் அழிப்பதா? என்ன இருந்தாலும் நாம் மறவர்கள் அல்லவா? வீரமே உருவான அடலேறுகள் இல்லையா? இப்படியான வீண் வாழ்க்கையை இப்பொழுது வாழ்ந்து கொண்டிருப்பதா? அது நல்லதா?

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

O

கேள்விக்குப் பதில்

இவ்வாறு வினுக்குறியோடு பாடல் முடிவடைகிறது. பாடுகின்ற மறவனின் வினு விண் முட்டித் திரும்புவது போல் தெரிகிறது.

சோரம் தொழிலாக் கொள்வமோ—முந்தைச்
சூரர் பெயரை யழிப் போமோ?
வீர மறவர்நாம் அன்ருே—இந்த
வீண் வாழ்க்கை வாழ்வதினி நன்ருே?

இது கேள்வி. இந்தக் கேள்வி ஒரு மறவனுடைய கேள்வி மட்டுமன்று.

இந்த நாட்டு மக்கள் அனைவருக்கு முன்னுலும் நின்றதான கேள்வி, நிற்கின்ற கேள்வி.

அதற்கு என்ன பதில்?

அது வேருெரு பாடலில் வந்துள்ளது.

சோர வாழ்க்கையை, துயர் மிடி முதலிய காரிருளை அழிக்க வல்ல சக்தி ஒன்று உண்டு; சோதி ஒன்று உண்டு; அது வீரருக்கு—மறவருக்கு—அமுது. அதனை அனைவரும் வேண்டுதல் வேண்டும்.

அது என்ன சக்தி? அது என்ன சோதி?

அது சுதந்திரமாம் சோதி—அதனைச் சுதந்திர தேவி என்ற பாடலில் அழகுறக் கூறுகிருர் கவி.

பேர றத்தினைப் பேணுநல் வேலியே
சோர வாழ்க்கை துயர்மிடி ஆதிய
கார ருக்கக் கதித்திடு சோதியே
வீர ருக்கமு தேநினை வேண்டுவனே!

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

○

மறவன் பாட்டு என்ன சொல்கிறது?

சுதந்திர சோதியின் ஒளி நாட்டை விட்டு நீங்கியதால் பேரறத்தினைப் பேணும் கடப் பாட்டில் திகழ்ந்தவர்களாகிய பிராமணர்கள் நிலை குலைந்தார்கள்.

'பார்ப்பனக் குலம் கெட்டழிந்து போவதற்குக் காரணமான கலியுகம் இது. **வேர்க்க வேர்க்கப் பணம் செய்வதொன்றையே மேன்மை கொண்ட தொழிலெனக் கொண்ட, பாழடைந்த** கலியுகம் ஆதலால் அவர்கள்' (பார்ப்பனர்கள்) அவ்வாறு ஆனார்கள். அவ்வாறே வீர வாழ்க்கை நடத்தியவர்கள் துயர் மிடி ஆதி யானவற்றுள் உழந்து நொந்தார்கள். எல்லாருமே சோர வாழ்க்கைப் பட வேண்டியதாயிற்று. மண் வெட்டிக் கூலி தின்னவும் பயந்து பதுங்கி வாழவும் நேர்ந்து விட்டது.

இந்த நிலைமை மாறவேண்டுமாயின் முதலில் இங்கு வேண்டற் பாலது சுதந்திரம். அது ஒன்றே இருபக்கத்திலும் வந்த நோய்மை நிலைமையையும் மாற்றும். ஆகவே வேண்டுவது சுதந்திரம்.

சுதந்திரப் போராட்டத்தில் முனையவும், சுதந்திர தேசத்தை உருவாக்கவும் வேண்டும் என்பது குறிப்பெச்சம்.

இதுவே இந்தப் பாடல் கூறுமல் கூறுகின்ற குறிக்கோள்.

○

கடுமையான தாக்குதல்

இவர் ஏது செய்தும் காசு பெறப் பார்ப்பார் என்பது முதலாகப் பிராமணர்களைக் கடுமையாக இந்தப் பாடலில் குறை கூறுகிறார் கவிஞர். இவ்வாறே வேறு சில இடங்களிலும் தாக்குகிறார் அவர். கபில ரகவல் போன்று ஒரு தனிச் சுவடியும் அவர் எழுதியிருக்கிறார். அதிலும் அவ்வாறே குறைப்பட்டு உரைக்கிறார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அந்தத் தனிச் சுவடியை வைத்திருந்த பெரியவரிடம் இதை வெளியிட்டிருக்கலாமே என்று ஒரு சமயம் வினவியதற்கு அவர், ஒரு சமூகத்தாரின் மனத்தை ஏன் புண்படுத்த வேண்டும் என்று வெளியிடவில்லை என்று கூறினார்.

அவர் சொன்னது சரி. மிகவும் வருந்தும் அளவுக்கு, பொதுவாக, பிராமணர்களைத் தாக்குகிறார் பாரதியார். தாம் பிறந்த குலம் என்பதனால் சற்று அதிக உரிமை கொண்டு பேசுகிறாரோ என்று நினைக்கிறோம்.

பாரதியார் அங்ஙனம் பாடியது சமூகவியல் சிந்தனையில் நின்று என்பது தெளிவு. அவருடைய சீடராகிய பாரதிதாசன், பிராமணர்கள் தமிழ்ப் பகைவர்கள் என்ற கோணத்தில் நின்று, தமிழியக்கத்தில் கடுமையாக வரைந்தார். பாரதியாரின் சமூகவியல் நோக்கு தெளிவானது. தீர்க்கமானது. தைரியமான விமரிசனப் பாங்கு உடையது,

பாரதிதாசன் சார்ந்திருந்த சுயமரியாதை திராவிட இயக்கங்கள் தனிப்பட்ட அதிர்ச்சிகளில் தோன்றிப் பின்பு புரோகித பிராமண எதிர்ப்பாக ஊன்றி 'உருவம் இல்லாத கடவுளைத் தரகன் இல்லாது கும்பிடுவது' என்று கொள்கை முழக்கமிட்டு அதன் வாயிலாகப் பிராமண எதிர்ப்பில் நின்றன. அந்த அளவில் பிராமணர்களை ஒழிக்க முடியாது என்று கண்டு, கடைசியில் பல்லியை விரட்ட முடியாமல் குடிசையையே கொளுத்த முயலுதல் போல் கடவுள் இல்லை இல்லவே இல்லை. நம்புபவன் கற்பித்தவன் காட்டுமிராண்டி மட்டி மடையன் என்று வாரி வழங்கி இந்து சமயம் என்ற இந்தியத் தத்துவ ஞானக் கூட்டுத் தொகுதியை அழிக்க முன்வந்தன.

மொத்தத்தில் அவற்றின் செயல்கள் இந்திய சமுதாயத்திற்கு அதிர்ச்சி வைத்தியம் செய்தது போல் ஆயின.

○

உண்மையில் இந்தப் பாடலின் கருத்து என்ன?

பாரதியாரின் நினைப்பு தீர்க்கமானது. சமூகவியல் நோக்கு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தெளிவானது. விமரிசனம் தைரியமானது; அனைவர்க்கும் நலம் கருதியது.

பாரதியாரின் நினைப்பு என்ன, நோக்கு என்ன என்று சற்று நோக்குவோம்.

பெருமிதம் இளிவரல் அவலம் என்ற சுவைகளைப் பெருகத் தேக்கெறியும் இந்த மறவன் பாட்டு வெறும் தாக்கற் பாட்டு அன்று. ஆழ்ந்த சமுதாய நோக்கை—வெறும் நோக்கு மட்டு மன்றிப் பரிகாரத்தையும் சேர்த்து வழங்கும் வேகமான மருந்தாக இலங்குகிறது.

இருபெரும் அமைப்புகள் நிலைகுலைந்து நொறுங்குவது இப் பாடலில் இயம்பப்படுகிறது. அங்ஙனம் நொறுங்குவது தவிர்க்க வொண்ணாதது. நொறுங்கிய பிறகு ஒரு புது அமைப்பு—சக்தி பிறப்பது—அதுவும் தவிர்க்க வொண்ணாதது என்பதை அறிய வேண்டும்.

இங்கே பாடுபவன்—உடலுழைப்பாளி, உழவன், மறவன், படைஞன், கரத்தால் பாடுபடுவன், சுய சிரம ஜீவி.

பாடலிற் குறிப்பிடப்படும் இன்னொரு வகையினன்—அறிவுழைப்பாளி, பார்ப்பான், ஞானி, (Seer) கருத்தால் பாடுபடுபவன், புத்தி ஜீவி.

இந்த இருவகை அமைப்பும் சமுதாயத்தின் இன்றியமையா இரட்டை உறுப்புகள். இவை தவிர மற்றவை எல்லாம் சார்பு நிலையின; இவற்றின் நிழலில் வாழ்வன அல்லது ஒட்டுண்ணிகள்.

இவை யிரண்டும் ஒன்றோடொன்று ஒட்டுறவு கொண்டவை. ஒன்றிலிருந்து ஒன்று வருபவை. அங்கிருந்து ஒன்று இங்கே வரலாம், இங்கிருந்து ஒன்று அங்கே செல்லலாம். அவை இரண்டுக்குமிடையே இரும்புத் திரையோ கோட்டைப் பெருஞ்சுவரோ இருத்தல் கூடாது. இருந்தால் வீழ்ச்சியும் நலிவும் அவ்வவற்றுக்கும் வரும். அங்ஙனம் அந்தப் பகுதிகளுக்குள் தேய்வும் அழிவும் வருதலோடு இவ்விரு பகுதியினரும் ஒருவர்க் கொருவர் பகைகொள்ளவும் பழிவாங்க வும் எதிர்த்து நின்று போராடவும் நேரும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஊர் இரண்டு பட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம் என்ருற் போல ஒரு சமுதாயத்தில் உள்ள இவ்விரு பகுதிகளுக்குள் மோதல் என்ருல் அடுத்த நாட்டார்க்கு — வெளியிலிருந்து உள்ளே புகுந்து ஆதிக்கம் தேட நினைக்கும் கொள்கை வேறு உடையார்க்கு—ஆக்கம் தரும் சூழ்நிலை நிச்சயம் உண்டாகி விடும்.

பல நூறு ஆண்டுகட்கு முன் வெளிநாட்டார் படையெடுத்து வந்த ஒரு சந்தர்ப்பத்தில், இந்த நாட்டில் உழைப்பாளி மக்களில் ஒடுக்கப்பட்டிருந்த ஒரு சாரார் இங்கிருப்போர் செய்யும் சமுதாய ஏற்றத் தாழ்வுக் கொடுமை பொறுக்க மாட்டாமல், மேளதாள மாலை மரியாதைகளோடு முன்போந்து படையெடுத்து வந்தவர்க்கு வரவேற்பு கொடுத்த வரலாற்றைப் பாரதியாரே ஓரிடத்தில் குறிப்பிட்டிருக்கிருர்.

இவ்வாருக உடலுழைப்பும் அறிவுழைப்பும் ஒன்றை ஒன்று தழீஇச் செல்லாமல் சுரண்டவும் தாக்கவுமான நிலை வந்துற்றதற்கு இரங்கிப் புலம்புகிறது இந்தப் பாட்டு.

○

உடலுழைப்பாளரைக் காட்டிலும் அறிவுழைப்பாளருக்குப் பொறுப்பு அதிகம். ஆகவே தான் ஒரு சமயம் நம் கவிஞர், 'கற்றவராலே உலகு காப்புற்றது என்று ஆனந்தமாகவும், பிறகொரு சமயம் படிச்சவன் சூதும் வாதும் பண்ணிஞல் போவான் போவான் ஐயோ என்று போவான் என்று ஆங்காரமாகவும் பாடுகிருர்.

'ஒரு தேசத்திற்கு ஏற்படும் உயர்வு தாழ்வுகளுக்கு அத் தேசத்திலுள்ள பிராமணர்களே பொறுப்பாளிகள்' எனக் கருதி எழுதுகிருர் அவர்.

இன்னெரு சாராரை ஏமாற்ருமல் அணைத்து இணைத்துக் கொண்டு செல்ல வேண்டிய கடமை அறிவுழைப்பாளிக்குக் கொஞ்சம் கூடுதலாகவே உண்டு. அந்தக் கடமையை அறிவுழைப்பாளிகள் செய்யாத காரணத்தால், சுயநலம் பெரிதெனப் பிறரிட மிருந்து மெய்யறிவை கறைத்து அவர்களைச்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சுரண்டற்குரிய தளமாக மட்டும் பயன்படுத்தி வந்த காரணத்தால் இந்த நாடு மிக மேலான செல்வங்களைக் கையில் வைத்திருந்தும் மிக மிகத் தாழ்வான நிலைமைக்கு உள்ளாகியது என்று விவேகானந்தர் வரைகிறார். அறிவுழைப்பாளிகளும், முன்னை அந்தணர், முனிவர், ஞானியரின் பரம்பரையில் வந்தோரான பிராமணர்களும் மற்றவர்களும் சமுதாயப் பொறுப்பிலிருந்து தங்களை ஒதுக்கிக்கொண்டு விட்டதனைக் கடுமையாக விமரிசனம் செய்கிறார் அந்தப் பெருமகன். ஏழை எளியோர் படுந்துயர்களுக்கும், அறியாமை மூட நம்பிக்கை சமுதாயக் கொடுமை ஆகியவற்றுக்கும் மத மாற்றங்களுக்கும் அவர்களே பொறுப்பாளிகள் என்று கடிந்துரைக்கிறார் அந்தத் துறவி.

அவ்வாறே கருதுகிறார் நம் கவிஞர். அவரது சமுதாய விழிப்பு உணர்வு; அதனை (விவேகானந்தரது கருத்துக்களை) அப்படியே ஒப்புக்கொண்டு ஆவேசமான சொற்களில் கனலை அள்ளி வீசுகிறது.

அதற்கு இன்று நாம் என்ன செய்ய வேண்டும்? நடப்பியல் என்ற பெயரால், இருக்கிற கேடுகளைப் பெரிதாக எடுத்துக் காட்டிவிட்டு அவற்றுக்கான பரிகாரங்களைக் கூறுமல் விடுவது வெறும் கோழைத்தனம் ஆகும்; தன்னையே—தம்மையே—தம்மவரையே குறை கூறி மேலும் தாழ்வுபடுத்திக் கொள்ளுவதாகும்; தற்செறுதல் அல்லது தற்கொலைச் செயல் ஆகும்.

பாரதியாரும் சரி விவேகானந்தரும் சரி தன்னம்பிக்கை மிக்கவர்கள்; நம்பிக்கைவாதிகள். நல்வழி காட்டாமல் அவர்கள் ஒதுங்குவது கிடையாது. கறிக்கு உதவாத ஏட்டுச் சுரக்காயைக் காட்டுவது கிடையாது அங்ஙனம் வழிகாட்டுங்கால் தங்களை அவதார புருஷர்களாகவும் கேட்போரை அஞ்ஞானிகள் பாவிகள் ஆகவும் கருதி அருள்வாக்குகள் என்ற முகமூடி உரைகளை அவிழ்த்து விடுதலும் கிடையாது.

○

சரி அங்ஙனமாயின் இங்குக் கூறுப்படும் நல்வழி யாது? பாரதியார் உணர்த்தும் பரிகாரம் யாது?

அறிவுழைப்பாளிகளும் சரி உடலுழைப் பாளிகளும் சரி,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சுரண்டும் பிழைப்பு—அஞ்சும் பிழைப்பு ஆகிய நாயும் பிழைக்கு மிந்தப் பிழைப்பு—பாயுங் கடிநாய்ப் பிழைப்பு என்று பாடலில் வரும் (இருவகை நாய்ப்) பிழைப்பைக் கடிந்து விடல் வேண்டும். இருவரும் சோரம் தொழிலாக் கொள்ளல் ஆகாது; முந்தைச் சூரர் பெயரை அழித்தல் கூடாது.

விவேகானந்தர் கூற்றில் சொன்னல் அரச வீறும் அந்தண் ஒளியும் உடைய ஒரு புதிய சமுதாயம் இந்த நாட்டில் உருவாக வேண்டும். பாரதி வாக்கில் உரைத்தால் எல்லாரும் இந் நாட்டு மன்னராக வேண்டும்.

ஆகவே கவிஞர் சொன்ன சூளுரை—அறிவுழைப்பாளிகள், உடலுழைப்பாளிகள் ஆகிய இரு சாரார்க்கும்—ஏன், எல்லார்க்குமே உரியதாகும்.

நாம் அனைவரும் வீரர்கள், முந்தைத் தொல்காப்பியர் நுவலும் கருத்தும் அதுதானே? கல்வி தறுகண் இசைமை கொடை எனச் சொல்லப் பட்ட நான்கிலும் அவரவர் இயல்புக்கும் இயல்பூக்கத்திற்கும் ஏற்ப வீரராக—அறிஞராக (ஆண்மை உருக்கொண்ட அந்தணன் என்று நாமக்கல் கவிஞர் கூறிய விரை விலக்கணம் போல) விளங்கலாம், அல்லவா?

வீண் வாழ்க்கை வாழ்வதினி நன்றோ? என்று ஓங்கி ஒரு போடு போட்டான் வீர மறவன்.

பயனிலா வாழ்க்கை — வீண் வாழ்க்கை வாழக் கூடாது. வாழ்க்கையைப் போர்க்கள விளையாட்டாகக் கருதி, வீரராக, வாழவேண்டும். நன்மையையும் நியாயத்தையும் விழையும் பயனுடைய வாழ்வு — அது பாராட்டுக்குரியது என்று திருவள்ளுவர் பரிந்துரைத்ததும், மனிதன் பயனின்றி அழியக் கூடாது என்று மாக்சிம் கார்க்கி அழுத்தமாக எழுதியதும் இங்கே கருதத்தகுவன.

அவ்வாறே தேசிய—பொது நல—மன்பதை—மாண்புக்கான பெரிய காரியங்களைச் செய்யத் தியாக உணர்வோடு செம்மாந்து வரவேண்டும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அங்ஙனம் வருதற்குத் தடையாக இருப்பது அறிவுழைப்புக்கும் உடலுழைப்புக்கும் இடையே இருப்பதாகிய பெரும் பிளவு. அதனுல் வரும் பொருமல், பூசல், போராட்டம்...

அவற்றை அகற்ற வேண்டும், இரண்டையும் இசைவு படுத்த வேண்டும்.

அதற்கு முதலில் வேண்டப் படுவது விடுதலே, தேசிய விடுதலே, பொருளாதார விடுதலே சமுதாய விடுதலே.

அதுவே பேரறத்தினைப் பேணும் வேலி. இருளை நீக்கி ஒளியைத் தருவது; இறப்பை நீக்கி அமரத்துவம் அளிப்பது. அதுவே வீரருக்கு அமுது.

பேர றத்தினைப் பேணுநல் வேலியே
சோர வாழ்க்கை துயர்மிடி ஆதிய
கார றுக்கக் கதித்திடு சோதியே
வீர ருக்கமு தேநினை வேண்டுவனே!

எனவே

சுதந்திரப் போரில் முனைந்து நின்று தீமைகள் நீங்கப் போராடுவோம். அதனுல் பழம் பெருமைகள் புதுமைப் பொலிவும் வலுவும் பெற்று எல்லார்க்கும் உரிமையாகும்.

இதுவே இந்த மறவன் பாட்டின் புதை பொருளாக உள்ள கருத்து.

O

பாடலின் முழு வடிவம்

பாரதியாரது கவிதை அடங்கலில் ஒன்ருக முன்பிருந்தே வெளியாகியுள்ள இந்தப் பாடலில் சொற்களும் அடிகளும் விடுபட்ட நிலையில் புள்ளிகளோடு அச்சிடப்பட்டு இருந்தன. பாடற் பகுதிகளும் வரிசை மாறி உள்தலைப்பு இன்றி இருந்தன.

காலஞ்சென்ற ப. ஜீவானந்தம் சில நிரப்புதல் களைச்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

செய்து வைத்திருந்தார். அவை பாடலின் கருத்தை ஒட்டி அமைந்திருந்தன. கேட்போர்க்கு ஆவேசம் உண்டாகுமாறு தமக்கே உரிய ஆவேசத்துடன் இந்தப் பாடலை மேற்கோள் காட்டிப் பேசுவார் அவர்.

பாரதி இலக்கியத் தொண்டர் ரா. அ. பத்மநாபன் இந்தப் பாடலை முழு உருவத்தோடு பாரதி புதையல் மூன்றும் பகுதியில் வெளியிட்டுள்ளார்.

''சென்னை ரிகார்டு ஆபீஸ் என்ற ஆவணக் களரி 1911 ஆம் வருஷம் நடந்த ஆஷ்துரை கொலை வழக்கு தஸ்தாவேஜு களில் இந்தப் பாடலின் முழு உருவம் கிடைத்துளது''

என்று அதில் குறிப்பிட்டுள்ளார் அவர். இவ்வாறு முழு உருவத்தோடு வரலாற்றுச் சிறப்புடைய இந்தப் பாடல் கிடைக்கப் பெற்றமை நமக்கு மகிழ்ச்சி தருகிறது.

O

வரலாற்றுச் சிறப்பு

ஆஷ்துரை கொலை வழக்கு இந்திய வரலாற்றுச் சிறப் புடையது. அடிக்கு அடி கொடுத்த அஞ்சாநெஞ்சனின் தமிழ்ச் செயல் காரணமாக எழுந்தது அந்த வழக்கு. அதில் இந்தப் பாட்டும் பங்கு பெற்றது என்பதை அறியும் பொழுது மிகுந்த வியப்பு உண்டாகிறது. ரா. அ. பத்மநாபன் மேற் சொன்ன நூற்குறிப்பில் மேலும் இவ்வாறு எழுதுகிறார்.

''ஆஷ் துரையைச் சுட்டுக்கொன்ற பின் தன்னையே மாய்த்துக் கொண்ட வாஞ்சி அய்யரது சொக்காய்ப் பையில் இருந்த காகிதங்களில் இந்தப் பாடலின் அச்சுப் பிரதி ஒன்றும் இருந்தது''.

இதுவே வியப்பு அளிக்கும் அந்தச் செய்தி.

இங்ஙனம் பாரதியாரின் கருத்துச் செறிவு மிக்க புரட்சிகரமான பாட்டு முழுமையாகக் கிடைத்தது உவப்பு தரும் நற்பேறே யாகும். அத்துடன் அது புரட்சி வீரர் வாஞ்சிநாதரின் சட்டைப்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பையில் இருந்து கிடைத்தது என்பது உவப்பொடு வியப்பும் தருவதாகும்.

வாஞ்சிநாதருக்குத் துப்பாக்கிப் பயிற்சிஅளித்தவர் புதுவையில் அந்நாளில் இருந்த வவேசு அய்யர். அந்தப் பயிற்சி நடப்பது பாரதியார்க்குத் தெரியவேண்டாம் என்றே மறைத்து வைத்திருந்தார்களாம்.

இனி, பாடலுக்கு வருவோம்.

ஆங்கிலேயருக்கும் பிரெஞ்சுக்காரருக்கும் நடந்த ஆதிக்கப் போட்டிப் போர்க்களம் ஒன்றில் ஆங்கில வீரர்கள் தங்கள் தேசத்தின் மானத்தை—பெருமையை—நிலைநாட்ட வேண்டிய ஒரு தருணம் வந்தது. தாங்கள் மடிந்தால்தான் வெற்றி கிடைக்கும், காலையில் மடிந்தால் மாலையில் இங்கிலந்து வீர முரசு கொட்டும் என்று முடிவு செய்து கொண்டார்கள்.

இன்னும் ஒரு நாள் வாழ்வுதான் வையகத்தில் தங்களுக்கு உளது என்று தெளிவு பெற்றார்கள். இரவெல்லாம் நன்றாகக் குடித்தார்கள், ஆடினார்கள், பாடினார்கள். 'குடி, ஆடு, பாடு இருக்கும் வரை உல்லாசமாக இரு' என்று உரைக்கும் உமர்கய்யாமின் பாடல்களை விடிய விடியப் பாடினார்கள்.

பொழுது விடிந்தது. இருள் தொலைந்தது! அளவு கடந்த உற்சாகத்தோடும் ஊக்கத்தோடும் போர்க்களத்தில் புகுந்தார்கள்.

போர் கடுமையாக நடந்தது. வெற்றி எந்தப் பக்கம் என்று கூறமுடியாதபடி அது இங்கும் அங்குமாக உருண்டோடிச் சென்று வந்துகொண்டிருந்தது.

இங்கிலந்து வீரர்கள் சாகசம் புரியத் துணிந்தார்கள், ஏறத் தாழ அவர்கள் எல்லாருமே போரிடைப் பலியானார்கள்.

அந்தப் போர்க் களத்தின் நடுவே. வீரர்களின் பொன்னுடல் களாகிய பலிமேடையின் மேலே யூனியன் ஜாக் பட்டுப் பட்டெனக் காற்றில் படபடத்தது. இங்கிலந்து மாபெரும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வெற்றி பெற்றது. ஒரு பெரிய விதியைத் தீர்மானித்தது அது.

அந்த வெற்றியை அங்ஙனம் பெற்றுத் தர உதவிய கூறுகளில் ஒன்று உமர்கய்யாமின் பாடல்கள்.

அவ்வாறே வாஞ்சிநாதர், தமிழர்களின் மானத்தை, இந்தியாவின் மரியாதையைக், காக்க வேண்டும் என்று கருதிய தேசபக்தி ஆர்வத்திற்கு விசிறியாக உதவிய, இதயத்திலிருந்த கனலைப் பெரு நெருப்பாகக் கிளற உதவிய, கூறுகளில் ஒன்று இந்த மறவன் பாட்டு என்று நாம் உறுதியாகக் கூறலாம்.

வீர மறவர் நாம் அன்றோ—இந்த
வீண் வாழ்க்கை வாழ்வதினி நன்றோ

என்ற அடிகளைத் திரும்பத் திரும்பச் சொன்னால் நாடி நரம்பெல்லாம் முறுக்கேறுகிறது; நெஞ்சில் ஆவேசமானது தீப் பற்றினாற் போலப் பாய்ந்து பெருகுகிறது; கைகளும் கால்களும் துணிவுள்ள செயல் செயல் என்று துடிதுடிக்கின்றன.

நாம் முன்னர் எழுதியது போல, சோரம் விடுத்துச் சுதந்திரத்திற்குப் போராடும் வீர வாழ்க்கையை அறிவுழைப்பாளிகள் உடலுழைப்பாளிகள் ஆகிய இருவகையாரும் மேற்கொள்ள வேண்டும் என்று ஒலிக்கும் இந்தப் பாடலின் உள்ளார்ந்த நோக்கு அந்த இளைய வீரரை ஆட்கொண்டிருக்கும்; கருத்தொளியானது மின்னற்கீற்றாகப் புலப்பட்டிருக்கும்; பாடலின் சொற்கள் அவரது இதய வீணையின் நரம்புகளை அசைத்திசைத்து ஆவேச மூட்டியிருக்கும். பிறப்பால் பிராமணரான அவர் அந்நிலையில் வீர மறவராக மாறுகிறார். செயற்கருஞ் செயலைச் செய்து விண்முட்டிச் சென்ற தேசப் புகழை—தமிழப் புகழை மீண்டும் நிலைநாட்ட முன்வருகிறார்; அழகிய இளம் மனைவி, காதல் வாழ்வு, வனத்துறைப் பணி, வாழ்தற்கிருக்கும் இனிய வருங்காலம் என்பன அவரது சிந்தையை விட்டு அகன்றன. விடுதலைப் போராட்டமே அவரது உடல் பொருள் ஆவியைக் கவர்ந்தது...

விடுதலைப் போர்க்களத்தில் பலியாக வீழ்கிறார் வாஞ்சிநாதர்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அது நம் நெஞ்சை விம்மிதம் கொள்ளச் செய்கிறது.

அந்தக் கொலை வழக்கில் குற்றஞ் சாட்டப் பட்டவர்களுள் நீலகண்ட பிரம்மச்சாரி என்ற—அட்டைக் கரி போன்றவர் என்று வ. ரா. வினல் குறிப்பிடப்படுகின்ற—பின்னுளில் ஓம்கார் சுவாமி என்று மலர்ச்சி பெற்ற பார்ப்பன மறவரும் ஒருவர் என்பது நினைவு கூரத் தக்கது. வாஞ்சிநாதரின் மைத்துனரும் அதில் ஒருவர். இன்னும் சிலரும் உண்டு.

வாஞ்சிநாதரின் சட்டைப் பையில் இருந்ததான மறவன் பாட்டின் ஆதார நாயகர் பாரதியார் என்று தெரிந்ததும் புதுவையில் இருந்த பாரதியார் முதலிய தேசபக்தர்கள் யாவரும் ஆஷ் கொலை வேலையில் பங்கு கொண்டிருந்தனர் எனவும் புதுவையிலிருந்தே அதுபோன்ற திட்டங்கள் உருவாகி ஆங்கில இந்தியாவில் செயல்படுகின்றன, இன்னமும் செயல் பட இருக்கின்றன எனவும் மாடசாமி முதலியவர்களை அங்கே புதுவையில் மறைத்து வைத்திருக்கிருர்கள் எனவும் ஐயுற்று உளவாளிகள் தேசபக்தர்களுக்கு பல வகையான நெருக்குகளைக் கொடுக்கத் தொடங்கினுர்கள் என்று அறிகிருேம்.

□

உளவாளி ஒருவன், ஒரு சமயம் பாரதியாரிடம் வந்து செய்திகளை வருவிக்க முயன்று பாசாங்கு செய்த போது,

நாயும் பிழைக்கு மிந்தப் பிழைப்பு
நாளெல்லாம் மற்றதிலே உழைப்பு

○

வீர மறவர் நாம் அன்ருே—இந்த
வீண் வாழ்க்கை வாழ்வதினி நன்ருே

எனவரும் மறவன் பாட்டின் அடிகளை வீறு கொண்டு கவிஞர் பாடவே, படம் எடுத்து ஆடிய பாம்பு படத்தைப் 'பொத்' தென்று கீழே போட்டது போல உளவாளி மனம் மாறி, உள்ளதை ஒப்புக்கொண்டு அவ்விடத்தினின்றும் சென்ருன் என்பதையும் அறிகிருேம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பாடலைப் பாடியவருக்கும், கேட்டவர்களுக்கும் இதை விட வேறென்ன வெற்றிச் சான்று வேண்டும் ?

O

இன்னொன்று

இங்கே கவனிக்க வேண்டுவது இன்னொன்றும் தோன்றுகிறது.

வேறு எவரும் அற்றை நாளில் தாக்காத அளவுக்குப் பிராமணர்களைத் தாக்கி இந்தப் பாடலில் வரைந்துள்ளாரே பாரதி என்று வாஞ்சிநாதருக்கு வருத்தம் வந்திருக்காதா என்று எண்ணத் தோன்றுகிறது நமக்கு.

அங்ஙனம் ஏற்பட்டிராது என்றே விடைதருகிறது வியப்பில் ஆழ்ந்துள்ள நமது நெஞ்சம்.

வேளாண் மறவன்—நூலோனும் மேலோனும் ஆன வ. உ.சி. யைத் தண்டித்தவனைத் தண்டிக்க வேண்டும்; **அறிவுடன் ஆண்மையைக் கூவி அழைப்பீர்கள்** என்ற நிலைமையை நிகழ்த்த வேண்டும் எனத் துணிந்திருப்பார்; பழியனைத்தையும் தன் தலையில் போட்டுக்கொண்டு ஒரு குலத்துக் கொரு மைந்தன் என்ருங்கு எல்லாவற்றையும் தூக்கியெறிய-துடைத் தெறியத் தியாகப் பெருஞ்செயலை ஏற்றிருப்பார் என்றே எண்ணத் தோன்றுகிறது. வாழ்க வாஞ்சி மறவர்!

அங்ஙனமே இன்னோர் எண்ணமும் எழுகிறது.

பாரதியாரின் தாக்குதலுக்கு இலக்கான பிராமணர்களின் வழிமரபில் வந்தவர்கள் அவரது கூற்றுகளுக்காக வருத்தம் கூற மாட்டார்களா என்று கேள்வி எழுகிறது.

பாரதி மகாகவி இல்லை என்று தமிழகத்தின் அறிவாளிகள், எழுத்தாளிகள் சிலர் (தமிழ்ப் புலவர்கள் அல்லர்) வரைந்தனர். அங்ஙனம் அவர்கள் கணித்தற்கான மனநிலையை இந்தப் பிராமணத் தாக்குப் பகுதிகளும் சேர்ந்து உருவாக்கினவோ என்று நாம் ஐயம் கொள்ள இடமிருக்கிறது. ஏனென்ருல் அங்ஙனம் வரைந்தவர்கள், பிராமண குலத்தவர்களே.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஆனால் அதற்கு எதிர்ப் பக்கம் நின்று பாரதியார் மகாகவி என்று முழக்கமிட்டதோடு வலுவாகப் பிடித்து நூல்கள் எழுதினார்கள். சிலர் அவர்களிற் பலரும் பிராமணர்களே.

இவை எல்லாம் போன தலைமுறையில் நடந்த கதை.

அவையெல்லாம் அப்படியிருப்பினும் கடந்த பல ஆண்டுகளாகப் பாரதியாரின் பெருமையை — பாக்களை — எழுத்துக்களை — கருத்துக்களை இந்தியாவின் பல மாநிலங்களிலும் கடல் கடந்த நாடுகளிலும் இடைவிடாது. பொறுமையாக, ஆரவாரமின்றி, உருப்படியாகப் பரப்பி நிலைபெறச் செய்தலாகிய சாதனையைச் செய்தவர்கள் அந்த வழிமரபினரே என்று நினைக்கும் பொழுது நமக்கு ஒரு புத்துணர்ச்சி உண்டாகிறது.

பாரதியை உலகின் பல பாகங்களில் பெருமைப் படுத்தும் பொழுது, பாரதியை நினைத்துப் பூரிக்கும் பொழுது தமிழின் வளமும் பெருமையும் அல்லவா பலவிடத்தும் உடன் செல்லுகின்றன!

ஆகவே எந்தத் தமிழனுடைய இதயம் தான் இதனால் விம்மிதம் எய்தாமல் இருக்க முடியும்?

○

கடைசியாக ஒரு மேற்கோள்

பிராமணராகப் பிறந்து மறவராக நின்று பாடிய பாரதியாரின் மறவன் பாட்டினைப் பார்த்தோம். அவருடைய குருவின் (நிவேதிதை) குருவாகிய விவேகானந்தர் மறவராகப் பிறந்து அந்தணராக—துறவோராக—மாறியவர்.

அவரது விடுதலைக் கீதம் ஒன்றை இங்குப் பார்ப்போம்.

விலங்கிலே பொன்விலங்கு என்ன, இரும்பு விலங்கு என்ன என்று வினவுகிறார் அவர்.

அதனை மிடுக்கான தமிழில் அழகாக மொழி பெயர்த்தவர்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பாரதியாரின் அந்நாளைய மதுரை நண்பரான பண்டிட் ம. கோபாலகிருஷ்ணய்யர். பாரதிக்குச் சுதேசமித்திரனில் வேலை கிடைக்கப் பரிந்துரை செய்தவர். விவேக பாநு துணையாசிரியர்; விவேகோதயம் இதழ் ஆசிரியர்.

1915 இல் வெளியான அவரது நூலிலிருந்து அவரது மொழிபெயர்ப்பையும் அதற்கு மூலமான துறவர் பாட்டுச் (சன்னியாசி கீதம்) செய்யுளையும் பார்ப்போம்:

Strike off thy fetters!
Bonds that bind thee down
Of shining gold,
Or darker, baser ore;
Love, hate-good, bad—
And all the dual throng
Know slave is slave,
Caressed or whipped, not-free
For fetters though of gold
Are not less strong to bind
Then, off with them
Sanyasin bold, say 'Om tat sat Om!'

□

திடன்உறு நெஞ்சத் தடல்மிகு துறவி
இறுக்கிடு தளைகளை நொறுக்குதி; அவைதாம்
ஒள்ளிய அரும்பொற் றளையா யினும்சரி,
எள்ளிய கரும்பொற் றளையா யினும்சரி,
சுகமுறு விருப்பும் அகம்வெறு வெறுப்பும்
நன்மையும் நன்மை இன்மையு மாகித்
தொந்தம் தாம்இப் பந்தத் தொகுதி.
பசையொடு தழீயினும் கசையடி தரினும்
அடிமை அடிமை ஆகுவ னேஅலால்,
பொற்றளை ஆயினும் பற்றிப் பிணிப்புழிக்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

குன்று வலிஉடைத் தன்றே! ஆதலின்
ஆங்கவை களைந்து நீங்குதல் நெறியே
ஓதுக நீஓம் தத்ஸத் ஓம்என!

O

வீரிய காயத்திரி

ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக இந்திய வேதியர்களால் காயத்திரி மந்திரம் ஓதப்பட்டு வருகிறது.

செங்கதிர்த் தேவனைத் தேர்கின்றேம் அவன்
எங்கள் அறிவினைத் தூண்டி நடத்துக!

என்பதுவே அதன் பொருள். பாரதியார் இவ்வாறு பாஞ்சாலி சபதத்தில் தமிழாக்கம் தந்துள்ளார். அறியாமை யினின்று நீங்கி அறிவுடைமை அடைதற்காகப் பரிதியை நோக்கி ஓதப்படுகிறது அது. அதனைச் சூரிய காயத்திரி என்று சொல்லுவார்கள்.

பாரதியாரின் மறவன் பாட்டிலுள்ள இறுதி இரண்டடி களாகிய

வீர மறவர் நாம் அன்றே—இந்த
வீண் வாழ்க்கை வாழ்வதினி நன்றே

என்பது மனிதனுள்ளிருக்கும் மகாசக்தியை எழுப்பும் ஆற்றலுள்ளதாக, வீரிய காயத்திரியாக இருக்கின்றது.

சூரிய காயத்திரியோடு தமிழ் தெரிந்த எல்லாரும் பாரதி யாரின் வீரிய காயத்திரியையும் ஓதுவார்களாக. இந்த இரு மந்திரங்களையும் இருபோதும் ஓதுவார்களாக.

அங்ஙனம் ஓதுவது அறிவொடு ஆண்மையைக் கூவி அழைப்பதாக அமையும். அறிவுழைப்பையும் உடலுழைப் பையும் இணைக்கின்ற விந்தையை நடாத்தும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இந்த இரண்டின் இணைப்பால் புதிய தமிழ்ச் சமுதாயம் உருவாகும். சூரிய காயத்திரி வீரிய காயத்திரி என்ற இரண்டையும் ஓதி வரும் உரத்தால் புதிய இந்தியா உருவாகும். எவரும் தடுத்து நிறுத்திவிட முடியாப் பெருமிதமாக—அது 'உலகத்துக் கொரு புதுமை'யாகத்—தலைமை தாங்கும்.

○

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

18

பெண்கள் அழுத சொல்

○

கரும்பை விரும்பாதார் உண்டா? அது மன்மதனுர் கை யேந்தும் வில் அல்லவா? அதன் சாறு எவ்வளவு சுவை யானது.

இங்கே கரும்பு, கசப்பான உண்மை கொண்டது. கசக்கிப் பிழியும் முதலாளித்துவத்தின் இரக்கமிலா இயல்பு கொண்டது. ஏமாற்றும் இடைத் தரகனின் நயவஞ்சகம் கொண்டது. சீரழிக்கப்படும் பெண்மையின் கண்ணீர் பெருகி வருவது.

○

பகலிலே கரும்புத் தோட்டத்தில் மாடாக, மாட்டுக்குப் பதிலாக வேலே செய்ய; இரவிலே தோட்டக்காரருக்கு, வேலேக்காரருக்குக் குடும்ப சுகம் தர; கண்காணு இடத்திற்குக் கடத்திச் செல்லப்பட்ட மெல்லியலாரின் ஆற்ருெணுக் கண்ணீ ரால் எழுதப் பட்டிருக்கிறது இந்தப் பாடல்.

○

மூன்று தலேமுறைகள் ஆகி விட்டன. என்ருே எங்கோ கண்ணீர் விட்ட மாதராரின் கம்பலே ஓசை — விம்மி விம்மி விம்மி யழுங் குரல்—இன்றும் இங்கே கேட்கிறது. கண்ணற்ற தீவில் அவர்கள் விட்ட கண்ணீர், கடலலேகளில் வந்து இங்கே மோதுகிறது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

○

ஏழைகள் அழுததால் அதற்கு அவ்வளவு வலிமை வந்ததா? மற்றவர் துயரைத் தன் துயரர்கக் கருதும் மானிடக் கவிஞன் தன் ஆழ்மனத் துயரோடு கலந்து அலங்கார மின்றி உள்ள படியாக, எளிய தமிழில் அலையலையாக அடித்து வரும் அடுக்கு மொழியில் எழுதியதால் இந்த வலிமை வந்ததா?

○

இந்தப் பாடல் முழுவதும் கண்ணீர் — கண்ணீர் — கண்ணீர் மயமாக உள்ளது. அந்த அபலைப் பெண்டிர் உகுத்த அனுதர வான கண்ணீர் — அதை நேரிற் கண்ட, ஏழை பங்காளர் அண்ட்ரூஸ் வடித்த கண்ணீர் — அதைத் தமிழில் எழுதிய பாரதி வடித்த கண்ணீர்—இந்தப் பாடலைக் குழந்தை உள்ளத் தோடு முதலில் கேட்ட (குழந்தை) யதுகிரி சிந்திய கண்ணீர் —வாசிக்கின்ற ஒவ்வொருவரும் நினைக்க நினைக்க நெஞ்சி லிருந்து பீறிட்டு வரும் கண்ணீர்—என்று கண்ணீரால் இந்தப் பாடல் அழியா ஓவியமாக அமரநிலை பெற்று விட்டது.

○

சோகமான நினைவுகளைத் தாங்கிய பாடலே சுவை மலிந்த பாடல் என்று ஷெல்லி சொல்லியது மிகச்சரியாக இருக்கிறது!

18 கரும்புத் தோட்டத்திலே !

பிஜித் தீவிலே ஹிந்து ஸ்திரீகள்

பாடல் ஓவியம் வருமாறு:

கரும்புத் தோட்டத்திலே—ஆ!

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கரும்புத் தோட்டத்திலே!

என்ற பல்லவியோடு தொடங்குகிறது பாடல். தொடக்கத்தி லேயே படிமப் பின்னணி பூரணத்துவம் பெற்றது போல் காட்சி அளிக்கிறது. அதிலிருந்து படிமக் காட்சிகள் ஒவ்வொன்ருக, மிகத் துலக்கமாகப் போதருகின்றன. 'ஆ!' என்னும் பொழுது அங்குள்ள சொல்லொணுக் கொடுமை, வேதனை கப்பிய சோக இருள் ஆகியவற்றை, அங்காந்த வாய் மூடாதபடி கூர்ந்து பார்க்க வைக்கிறது.

ஒன்று

கரும்புத் தோட்டத்திலே, அவர்கள்—இந்தச் சுட்டு, உருக் காட்சியை நமக்கு நெருக்கத்தில் கொண்டு வந்து விடுகிறது.

காட்சியைப் பார்ப்போம்.

அவர்கள், கால்களும் கைகளும் சோர்ந்து விழும்படி வருந்து கிருர்கள். இந்து மாதர்கள் அவர்கள்; இந்திய மாதர்கள் அவர்கள். நெஞ்சு ஊதுலையாகக் கொதிக்கிறது. கொதித்துக் கொதித்து உலர்கிறது. மேனி ஒடுங்குகிறது. அவர்களுக்கு எவ்வளவு துயர்! இங்ஙனம் படும் துன்பத்திற்கு ஓர் முடிவே இல்லையா? ஒரு விமோசனமே இல்லையே? அதனை நீக்குதற்கு ஒரு வழியில்லையா? மருந்துமாயம் எதுவும் கிடையாதா?

செக்கு மாடுகள் போல் நாளெல்லாம் உழைக்கிருர்கள். சுற்றிச் சுற்றி வருகிருர்கள். கரும்பு பிழிதற்குப் பார மிக்க பலகையை, நுகத்தடியைத் தாங்கி இடுப்பொடியச் சுற்றிச் சுற்றி வருகிருர்களே! ஏங்குகிருர்களே,

அந்தக் கரும்புத் தோட்டத்திலே!

இரண்டு

அவர்கள் பேதைப் பெண்கள். கொடியோ கொம்போ என்னத் தக்கவர்கள். பெண்டு என்ருல் பேயும் இரக்கம் கொள்ளும் என்பார்களே! இந்த ஆலைத் தடிகளை இழுக்கப் பேயும் பின்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வாங்குமே! கண்டால் பேய்களும் கண்ணீர் வடிக்குமே! ஆனல் இங்குள்ள மனிதர்களோ, முதலாளிகளோ இரங்க மாட்டேம் என்கிருர்களே! தெய்வமே நீ தான் துணை. திக்கற்றவர்க்கு நீ தானே துணை? உன் மனமாவது சற்று இரங்கலாகாதா?

அந்த அனுதைகளான பெண்கள் சொரிகின்ற கண்ணீர்ப் பெருக்கு, வரண்ட மணலிற் பாய்ந்து சுவறிப் போகுமோ?

தெற்கே மாக்கடலின் நடுவில் இருக்கும் அந்தக் கண்ணற்ற தீவு—இடம் தெரியாத் தீவு—இனம் தெரியாத் தீவு—இரக்கமற்ற தீவு—அதிலே திக்குத் தெரியாக் காட்டில் பெண்பாலார் நெஞ்சம் புழுங்கிப் புகைந்து கருகுகிருர்களே!

அந்தக் கரும்புத் தோட்டத்திலே!

மூன்று

அவர்களது நெஞ்சின் அலைகள்தாம் எத்தகையவோ? அவர்கள் தாம் பிறந்த நாட்டை நினைக்கிருர்கள்; நினைக்காமல் இருக்க முடியுமா?—அதே நினைவாகவே இருக்கிருர்கள். அதனை என்றினிக் காண்போம் என ஏங்குகிருர்கள், என்ருவது காண்போமா என்று கையறுவார்கள்.

தங்களைப் பெற்ற தாய்மாரின் வீட்டை நினைக்கிருர்கள். அவர்கள் இவர்களைச் சீராட்டிப் பாராட்டி, தலைவாரிப் பூச்சூட்டி ஆசையோடு கண்ணின் மணியாய் வளர்த்தார்களே! அந்தக் காட்சிகள்—எண்ணங்கள் ஒவ்வொன்ருக நினைவுத் திரையில் வர வர அவர்கள் தம்மையும் அறியாமல் மாழ்கிக் கலங்கி, விம்மி விம்பி அழுகிருர்கள். மேலும் அழுகிருர்கள், விம்மி விம்மி விம்மி விம்மி!

அந்தக் குரல் காற்றிலே கலந்து வருகிறது. அதனுல்தான் இந்தக் காற்றும் இப்பொழுது அழுகிறதோ!

ஏ, காற்றே! எங்கள் நாட்டுப் பெண்கள்—எங்களின் உடன் பிறப்புகள்—அவர்கள் துன்பம் என்ற ஆழமான கேணியிற் கிடந்து அழுது புலம்பிய சொற்களை நீ கேட்டிருப்பாய். அதை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

எங்களுக்குச் சொல்லு; எங்கள் நாட்டவரிடம் வந்து சொல்லு. அந்தப் பெண்கள் அழுதழுது, இப்பொழுது அழவும் கூடச் சக்தி குன்றிப் போய்விட்டார்களே! ஆ!

அந்தக் கரும்புத் தோட்டத்திலே!

நான்கு

அவர்களது நெஞ்சமெலாம், நெஞ்சின் மூலை முடுக்கெலாம், ஆழ அகலமெல்லாம் குமுறுகின்றது. அவர்களது அந்த விலை மதிக்க முடியாத பொக்கிஷம்—சூறையாடப்படுகிறது. அது கொடுமையிலும் கொடுமையன்றோ? அந்தப் பஞ்சை மகளிர்—அந்தக் கொடும் பாதகத்துக்கு உள்ளான பூங்கொடிகள், துன்புற்றுப் புழுவாய்த் துடித்து மடிகிறார்கள். ஒரு தஞ்சமும் கிடைக்கப் பெறாமல் சாகிறார்கள். இந்த வழக்கத்தை—கொடுமையான வழக்கத்தை இன்னமும் நீடிக்க விடலாமா? இந்தக் கணத்திலே நிறுத்திவிட வேண்டாவா? ஏ! வீர கராளி, போர்த் தேவியே, காடமர் செல்வி, காளி சாமுண்டீ!

அந்தக் கரும்புத் தோட்டத்திலே!

பாடலைப் பற்றி

○

கரும்புத் தோட்டத்துக் கண்ணீரில் எழுந்த கோலம்—மௌன நெடுங் காவியத்தின் ஒரு பகுதி—இவ்வாறு காட்டப் பட்டுள்ளது.

○

புதுவையில் இருந்த காலை, ஒரு நாள், பாரதியாரைக் காண வ. வே. சு. அய்யர், ஸ்ரீ-ஸ்ரீ. ஆசார்யர்—அவர் மகள் செல்வி யதுகிரி ஆகிய மூவரும் அவருடைய வீட்டுக்குச் செல்கிறார்கள். அவர்களைக் கண்ட பாரதியார், 'வாருங்கள், ஏது திரிமூர்த்தி தரிசனம்!' என்கிறார். அதற்கு அய்யர், 'ஏன் இரண்டு நாளாகக் காணவே இல்லை' என்று விசாரிக்கிறார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பாரதியார், தனக்கு ஜலதோஷம் என்பதையும் அது ஏற்பட்ட சூழலையும், வேலைக்காரி வராத நிலையில் செல்லம்மாவுக்கு உடம்பு சுகமில்லை என்பதையும் கூறி, 'பேப்பர்க்காரன் இம்சை வேறு' என்கிறார்.

அதற்கு, தடுமன் பிடிக்காமலிருக்க உபாயம் சொல்லிவிட்டு அய்யர்,...உம்...பேப்பர் விஷயம் என்ன? என்று வினவுகிறார். அதற்குப் பாரதியார், 'நம் இந்து அடிமைகள் பிஜித் தீவில் படும் கஷ்டத்தைப் பற்றி யாரோ பிரசங்கம் செய்திருக்கிறார் களாம். அந்த அடிமைகளின் நிலையை விளக்கிக் கவிதை செய்து அனுப்பும்படி கேட்டிருக்கிறார்கள்' என்கிறார். அதற்கு

அய்யர் : பாட்டுக்கு என்ன பெயர் வைத்தீர். பிஜித் தீவு உங்கள் பாட்டால் பிரசித்தியாகி விடும்.

பாரதி : அதை நினைத்தே 'கரும்புத் தோட்டத்திலே' என்று பெயரிட்டிருக்கிறேன், அந்தக் கவிதைக்கு என்று கூறி அதன் பிறகு 'பாட்டைக் கேளுங்கள்' என்று 'கரும்புத் தோட்டத்திலே' என்ற பாடலைப் பாடினார் பாரதியார். அது பற்றி யதுகிரி அம்மாள் எழுதுவதைக் கேளுங்கள்:

''அந்தப் பாட்டைக் கேட்டதும் ஏற்பட்ட துக்கத்திற்கு அளவேயில்லை. பாரதியார் என்னைப் பார்த்து 'ஐயோ, பைத்தியம். ஆயிரம் மைல்களுக்கு அப்பால் இருப்பவர்களுக்கு நீ ஏன் அழுதாய்?''' என்றார்.

அய்யர் : எங்கள் கண்களிலேயே நீர் பெருகும் போது பெண் குழந்தை அவள் என்ன செய்வாள்? அவள் அழு வதில் அதிசயம் இல்லை... அரசாங்கத்தார் மீட்க முடியாது என்று சொல்லிவிட்டார்களா?

ஸ்ரீ. ஸ்ரீ : அதற்கே பாரதி தெய்வங்களிடம் முறையிட் டிருக்கிறார்.

இவ்வாறு 'பாரதி நினைவுக'ளை அப்படியே வரைந்துள்ள யதுகிரி அம்மாள் அதற்கு அப்புறம், பெண்களை எப்படிக் கடத்திச் சென்றார்கள் என்ற சோகக் குறிப்புகளைப் பாரதி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சொன்னதும், அதை ஒட்டி நடந்த அவர்களது உரையாட்டும், இடையில் யதுகிரி, 'எல்லாரும் (கப்பலில் இட்டுச் செல்லப்பட்ட பெண்கள்) சமுத்திரத்தில் குதித்து விட்டால் என்ன?' என்று கவலையாகக் குழந்தை உளத்தோடு கேட்டதுமான செய்திகளை, வாசிப்போர் உள்ளம் நெகிழுமாறு 'வீட்டுத் தமிழில்' அப்படியே வரைந்துள்ளார்.

திண்ணிய நெஞ்சமும் உறுதி கொண்ட தோள்களும் உடைய வவேசு அய்யரும் ஸ்ரீஸ்ரீ ஆகிய இருவரும் கண்ணீர் உகுத்தார்கள் என்றால் இந்தப் பாடலின் உயிரோட்டத்திற்கும் அவலச்சுவைக்கும் கவிஞரின் திறமைக்கும் தமிழின் வல்லவத்திற்கும் வேறு சான்று வேண்டுவதில்லை.

○

அந்தப் பெண்களுக்காக சி. எப். ஆண்ட்ரூஸ் எழுதிய கண்ணீர்க் கவிதையையும், வரலாற்றையும் பெ. சு. மணி என்பார் தன் பாரதியாரும் சமூக சீர்திருத்தமும் என்ற நூலில் தந்துள்ளார். அதனை இங்குப் பார்ப்பது இன்றியமையாதது.

''யாரோ ஒருவர் எனக் குறிப்பிடப் பட்டுள்ளது, தீன பந்து சி. எப். ஆண்ட்ரூஸாகத்தான் இருக்க முடியும்.

பிஜித் தீவில் பெண் தொழிலாளர்கள் படும்பாட்டைச் சென்று விசாரித்து அறிந்து பேசியும் எழுதியும் வந்தவர் சி. எப். ஆண்ட்ரூஸ். இந்திய தேசிய இயக்கத்திற்கு அருந்தொண்டாற்றிய ஆங்கிலேயர்களுள் ஒருவர்...

''பிஜீத் தீவில் இந்தியப் பெண்களின் கொடுந்துயரங்களைப் பற்றித் தீனபந்து ஆண்ட்ரூஸ் உணர்ச்சித் துடிப்புடன் ஒரு கவிதை யாத்துள்ளார். கவிதையின் தலைப்பு 'Indian women in Fiji' என்பதாம்.

''பாரதியின் கவிதையும் ஆண்ட்ரூஸின் கவிதையும் அமைப்பிலும் பொருளிலும் உணர்ச்சி நிலையிலும் பெருமளவு ஒத்துள்ளது. இக் கவிதை முதலில் கல்கத்தா 'மாடர்ன் ரெவ்யூ' எனும் ஆங்கிலப் பத்திரிகையில் வெளிவந்தது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பாரதியார் மாடர்ன் ரெவ்யூவின் அபிமான வாசகர். ஆண்ட்-ரூஸின் கவிதையைப் படித்துப் பெற்ற எழுச்சியாலும் பாரதியார் தமது கவிதையைப் பாடியிருக்கக் கூடும். இரு கவிதைகளையும் ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது, இந்த உண்மை தெரியும்''.

என்று, பின், 'ஒப்பாய்விற்காக' இருவரது பாக்களையும் தந்துள்ளார், அதில் அவர் காட்டியுள்ள ஆண்ட்ரூஸின் பாடல் வருமாறு :

INDIAN WOMEN IN FIJI

They are toiling, toiling, toiling
In the dense rank sugar cane,
And their hearts are burning burning,
With a dull and smouldering pain.

They are weeping weeping, weeping,
For the homes left far behind,
And their cry comes fainter, fainter,
On the distant South sea wind.

They are mute with sullen silence,
Over wrongs too dark to tell
And the memory haunts and lingers,
Of an evil Black as hell.

They are dying, dying, dying,
Humblest, unloved, unknown,
Ah, God in heaven, heaven,
Make their dumb cry thine, own.

மிக மெலிதான, ஆனால் முறுக்கேற்றப்பட்ட நரம்பினின்று எழும் பண்போல அமைந்துள்ள ஆண்ட்ரூஸின் பாடலில் வரும் தொடர்காலச் சொற்கள் toiling, toiling, toiling... burning burning burning, weeping weeping, weeping...

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

என்று வருவன, சிறப்புடைய ஒருவர் இயற்கை யெய்திய காலை அடிக்கும் இறுதிமணியோசை போல் தொடர்ந்து ஒலிக்கின்றன.

உணர்ச்சி, எடுத்த எடுப்பிலேயே ஊற்றெடுத்து சுழித்துச் சுழித்துச் சிற்ருேடையின் சலசலப்போடு ஓடுகிறது. அப்படியே சுற்றிச் சுற்றிச் செவியெல்லாம் நிரப்பிக் கறங்க வைக்கிறது. கடைசியாக நம்மையும் அவர்களுக்காகக் கதற வைக்கிறது. நேரிற் சென்று கண்டவர் நெகிழ்ந்து உருகிப் பாடிய பாடல் இவ்வாறு இயங்குகிறது.

நம் கவிஞர் அங்குச் செல்லாமலே, அவதிகளையெல்லாம் அறிந்து உணர்ந்து தம் நரம்புத் தொகுதியெல்லாம் நெகிழ நினைந்து பாடியுள்ளார்.

அடுக்குச் சொற்களை ஆளுதல் என்பது சுவை மிகுத்தற்கு ஓர் உபாயம். அவ்வாறு செய்வது பாரதியாருக்கு ஓர் இனிய வழக்கம். அஃது இங்கே சுழன்று சுழன்று கூடுதலாகும் அவலச் சுவைப் பெருக்கிற்குப் பயன்படுகிறது.

ஆகக், கண்ணீர் கண்ணீர் கண்ணீர் என்று ஆகிறது பாட்டு தரும் பலன்.

○

அன்றும் இன்றும்

அந்தக் காலத்தில் பிஜியில் மட்டுமின்றி, கரும்புத் தோட்டத்தில் மட்டுமின்றி, வேறு பல அயல் நாடுகளிலும், தேயிலை ரப்பர் முதலிய தோட்டங்களிலும் தங்கள் கண்ணீரொடு செந்நீரும் சிந்தியவர்களின் கதையும் இதுதான். தமிழ்ச் சாதியில் பல நாடுகட்குச் சென்று அடியுதைபடும் தமிழினத்தின் இளிவரல் நிலையைப் பாரதியாரும் சிறுகூறு காட்டியுள்ளார். அவர்கள் அனைவரும் சிந்திய கண்ணீர் இந்தப் பாடலில் உறைந்து நிற்கிறது.

○

அன்ருெரு நாள், இபின் பட்டுடா என்பவன் பல நாடுகட்கும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பயணப் பட்டவன், இந்தியாவைச் சுற்றிப் பார்த்துவிட்டுக் கிடைத்தவற்ருேடு கப்பலேறுகிருன், இந்தியப் பெண்டிருள் அழகி இலக்குமியும் அவனுல் கொண்டு செல்லப்படுகிருள். அவளுடைய கணவன் மாலையில் வீடு திரும்பியவன் மனைவியைக் காணுமல் தேடுகிருன். செய்தி தெரிந்து கப்பல் துறைக்கு ஓடுகிருன். கப்பல் புறப்பட்டு விட்டது. கதறுகிருன் கூக்குரலிடுகிருன் அலறுகிருன் அலமருகிருன். அங்கே அவள் கப்பலில் கடலில் கண்ணீர் மழை பொழிகிருள். லக்ஷ்மி! லக்ஷ்மி!...கடலலை அந்த இதயத் துடிப்பொலியைத் தன் ஆரவாரத்தில் அடக்கிக் கொள்கிறது; அவள் பொழிந்த கண்ணீர் வெள்ளத்தைத் தன்னுள் சுருட்டிக் கொள்கிறது.

○

இன்றைக்கு மத்தியப் பிரதேசத்தில், இன்னும் பல தொலைப் பிரதேசத்தில் தமிழகத்துப் பட்டினிப் படைகள் குடும்பத்தோடு வயிறு பிழைக்கச் சென்று, கொத்தடிமைகள் ஆகி, வருந்தும் துயரில் விடுகின்ற பெருமூச்சு நாட்டின் வெப்பக் காற்றை மேலும் வெப்பமாக்கி விடுகிறது.

பகலில் கல்லுடைக்கும் வேலை. இரவில் தங்கியிருக்கக் குகை. இரவில் அடுத்துள்ள குகையிலிருந்து ஒருத்தி இட்டுச் செல்லப் படுகிருள். சற்றுத் தொலைவிலிருந்து முனகல்—விம்மல்—கேட்கிறது. கேட்பவர்களால் தடுத்து நிறுத்தும் உதவி எதற்கும் செல்ல முடியாது. ஒவ்வொரு குகைக்கு முன்னும் முண்டர்கள் காவல் இருப்பார்கள். இரவிலே குகையைவிட்டு ஓடிவிடாமல்,பகலில் கல் 'குவாரி'யை விட்டுத் தப்பி விடாமல் காவல். அதற்குக் 'காவல் துறை'யும் துணை. காசு உடையவர்க்குத் தானே எல்லாம் துணை?

கனக விசயரது தலையில் கல்லேற்றிய பரம்பரை—கோப்பெருந்தேவி,வேண்மாள்,கண்ணகி,சீதாபிராட்டியின் அடிச்சுவட்டை ஆருயிராகப் போற்றும் பரம்பரை—அது பெருக்கிய கண்ணீர் தீர்த்தம்...அங்கு மட்டுமன்று,

அருகிலுள்ள ஆந்திராவிலும் உண்டு. அருமைத் தமிழகத்தும் உண்டு கொலோ? அறியோம்...

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

எல்லாக் கண்ணீருக்கும் இந்தப் பாட்டு ஒரு பொய்கையாகி விட்டது; அடையாளமாகி—அதற்கு அழிவிலாச் சின்னமாகி விட்டது.

○

இந்துப் பெண்கள்—தமிழ்ப் பெண்டிர்—தொன்று தொட்டு வரும் அச்சம் மடம் நாணம் நம்பிக்கைகளில் குழம்பிக் கல்லையும் புல்லையும் கட்டியழுது காலமுணராது விதியை நொந்து வேதனைக் கடலில் தத்தளிப்பார்கள்.

அவர்களை ஏமாற்றுவது எளிது. ஏமாந்த பிறகும் புதிய கல்லையோ புல்லையோ கட்டியழத் தயங்க மாட்டார்கள். ஆகவே பிஜி முதலிய இடங்களுக்கு இந்துப் பெண்கள் ஏமாற்றிக் கடத்தப் பட்டார்கள்.

○

இந்தியப் பெண்கள்—இந்துக்களல்லாத பிற பெண்டிர்—அவர்களும் வேறு வேறு விதமாக ஏமாற்றப்படும் செய்திகள் இதழ்களில் வருவதுண்டு.

சேர நன்னாட்டு இளம் பெண்கள் சமயப் பணிக்கென்ற தலைக்கீட்டில் மேலை நாடுகளுக்கு அனுப்பப் பட்டதாகவும் உண்மையில் அவர்கள் வேறு வேறு இடங்களுக்கு வேறு நோக்கிற்கு விடுக்கப்பட்டதாகவும் கேரள நீதி மன்றங்களில் ஒரு சமயம் வழக்கு நடைபெற்றது நாடறிந்த உண்மையாகும்.

ஆந்திரப் பகுதியில் வேறொரு வகையான செய்கை பற்றிய செய்திக் குறிப்புகள் அவ்வப்பொழுது வருவதுண்டு, வெளிநாட்டவர் வருவதும் மிக இளமையான பெண்களைத் தரகர்களின் உதவியால் மணம் முடிப்பதும் பிறகு சில நாட்களில் விட்டுவிட்டுப் போய்விடுவதும்...... வந்தவர்கள் பேதைப் பெண்களுக்குக் கொடுத்த பரிசப் பணத்திலும் தரகர்கள் பெரும் பகுதியைப் பறித்துக் கொள்வதும்...

சில சமயம் அந்த வயதான செல்வ 'மணமகன்', 'மணமகளை' அழைத்துக் கொண்டு போய்த் தனது நாட்டில் தன் அடிமை மந்தையில் சேர்த்துக் கொள்வதும்...

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

எல்லாக் கண்ணீரும் 'கரும்புத் தோட்டம்' என்ற குறி யீட்டுள் பாய்ந்து உறைந்து நிற்கிறது.

○

இவற்றுக் கெல்லாம் ஒரு முடிவே வராதா? இப்படி ஒரு கேள்வி வந்து கொண்டே இருக்கிறது.

காளியை அழைக்கிருர் நம் கவிஞர். காளி தான் யுகப் புரட்சியை ஆதரிப்பவள். மாகாளி பராசக்தி கடைக் கண் வைத்ததாலே ரஷியாவில் ஆகா என்று யுகப் புரட்சி எழுந்தது.

அதனுல் தான் காளியை அழைக்கிருர் போல் இருக்கிறது.

கராளி என்ருல் தீக்குணம் என்று பொருள் 'துர்த் தேவதை' என்பார்களே அத்தகைய பொருட்சார்புடன் வீர கராளி என்று கவிஞர் அழைக்கிருர்போ லிருக்கிறது.

கடுமையாக இருக்கும் தேவதை காளி. அவளே இனிமை யாகக் காட்சி தரும் கோலங்களும் உண்டு. இனிமையான தேவதமே கடுமையாகவும் கோலங் கொள்ளும்.

எங்கள் தாய்

நல்லற தாடிய மன்னரை வாழ்த்தி
நயம்புரி வானெங்கள் தாய்—அவர்
அல்லவ ராயின் அவரை விழுங்கிப் பின்
ஆனந்தக் கூத்திடுவாள்,

என்று கவிஞர் தீட்டிய காட்சிகள் நம் நினைவில் இருக் கின்றன.

இந்தியப் பெண்பாலார் எல்லார்க்கும் இஃது மனத்தில் நிலை பெறுதலோடு செயலுக்கும் உகப்பாக இருக்க வேண்டும். புதுமை மகளிர் ஏற்றுப் போற்றக்கூடிய தாய் வழிபாடாக— தேசிய வழிபாடாக இஃதிருக்க வேண்டும். அங்ஙனம் தாயை வழிபடுவதோடு அந்த நெறி நிற்பதிலும் அவர்கள் வெற்றி பெற வேண்டும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இது தானே பாரதி உரைக்கக் கூடிய உபாயமாக, கவலைப் பெருங் கடலைக் கடிகை யொன்றில் கடக்கும் புணையாக, இருக்க முடியும்?

O

மகளிர் முன்னேற்றத்திற்கு நாங்கள் என்ன செய்யலாம் என்று விவேகானந்தரிடம் சிலர் வினவிய பொழுது நீங்கள் எல்லாம் மகளிரா என்று வினவினுர் அவர். இல்லை என்று விடை வந்தது. அதற்கு அவர் 'மகளிர் முன்னேற்றத்தை மகளிரே பார்த்துக் கொள்வார்கள். நீங்கள் அவர்களது முன்னேற்றத்திற்குத் தடை செய்யாமல் — குறுக்கிடாமல்— தீங்கிழைக்காமல் சும்மா இருந்தால் போதும், அவர்கள் விரைவில் தாமாகவே முன்னேறி விடுவார்கள்' என்று அடித்துரைத்தது இவ் விடத்து நீள நினைந்து பார்த்தற் குரியது.

> Along with other things, our
> women should acquire the spirit of
> valour and heroism. In the
> present day it has become necessary
> for them also to learn self-defence.
> See, how grand was the Queen of Jhansi!
>
> —Swami Vivekananda.

இவ்வாறே பாரதியாரும் 'ஆண் மக்களின் உதவியை அதிகம் நாடாமல்' மேலை நாட்டுப் பெண்கள் போலத் தங்கள் மேம்பாட்டுக்குரிய வேலைகளைத் தாங்களே செய்து வரவேண்டும் என்று அறிவுறுத்துகிருர்.

மகளிர் மேம்பட அதுவே வழி; அஃது ஒன்றே வழி.

நல்லற நாடிய மன்னரை வாழ்த்தி
    நயம்புரி வாளெங்கள் தாய்—அவர்
அல்லவ ராயின் அவரை விழுங்கிப் பின்
    ஆனந்தக் கூத்திடுவாள்!

O

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

19

ஒளி படைத்த கண்ணினாய்

○

இந்த நாட்டில் பிறக்கும் ஒவ்வொரு குழந்தையும் ஒளி படைத்த கண்களோடு பிறக்கிறது. உறுதி கொண்ட நெஞ்சோடு இளமைப் பருவத்தில் அடியெடுத்து வைக்கிறது.

படிப்பு என்ற பலிபீடத்தில் கண்கள் ஒளியை இழக்கின்றன. உத்தியோகம் என்ற பலிபீடத்தில் நெஞ்சம் உறுதியை இழக்கிறது. திருமணம் என்ற பலிபீடத்தில் சராசரி இந்தியன் எல்லாவற்றையும் இழந்து விடுகிறான்.

அதற்கு மேலும் தப்பிப் பிழைத்தால் அடுத்தடுத்து வரும் அமுக்குப் பேய்கள் தாம் எத்தனை! எத்தனை!

அந்தக் காலத்திய சம்பிரதாயப் பேய், சாத்திரப் பேய், மதப் பேய்...அவற்றோடு இந்தக் காலத்திய சமூகப் பேய், கட்சிப் பேய், அதிகாரப் பேய், யாசகப் பேய், பத்திரிகைப் பேய், சினிமாப் பேய்...குருதியை உறிஞ்சி எலும்பைத் துளைக்கும்—உயிரை வதைக்கும்—இனிமையான பேய்கள்...

○

அனுதாபத்திற் குரிய நொய்ந்து போன இந்தியாவை விடை கொடுத்து அனுப்பி விட்டு, ஆசைக் குரிய ஆளுமை மிக்க புதிய இந்தியாவை, இந்தப் பாடலில் வரவேற்றுப் பாடுகிறார் நம் கவிஞர்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

19 நிகழ்கின்ற ஹிந்துஸ்தானமும் வருகின்ற ஹிந்துஸ்தானமும்

போகின்ற பாரதமும் வருகின்ற பாரதமும்

○

போக, போக, போக எனவும் வருக வருக வருக எனவும் உரைக்கும் இந்தப் பாடல் தனிப்பட்டவரைப் பார்த்துச் சொல்லப்பட்ட தில்லே. போகின்ற பாரதத்தைச் சபித்தல்... வருகின்ற பாரதத்தை வாழ்த்தல் என்று கவிஞர் தந்த உள் தலைப்புகளே அதனை உணர்த்துகின்றன.

○

பண நாயகத்தில் இருக்கும் மக்கள், போகின்ற பாரதத்தில் கூறப்பட்ட வருணனைக் கேற்பத்தான் இருப்பார்கள். அரசியல் விடுதலை கிடைத்தும் இங்கு அதே நிலை நீடித்து வருவதே இந்தக் கருத்தினை உறுதிப் படுத்துவதாக உள்ளது.

சமுதாயம் முழுவதும் மாறின லொழிய, சமுதாயத்திலுள்ள மேடுபள்ளம், கொடிய இருள், இரக்க மற்ற போக்கு, வெறிக் குணம், பேயாட்டங்கள் என்பன ஒழிந்தா லன்றி, வருகின்ற பாரதம் என்பது வராது.

ஆகவே, வானுறு மதியை அடைந்ததுன் வதனம்... கானுறு புலியை அடைந்ததுன் வீரம் ... என்றெல்லாம் நந்திவர்மற்கு இரங்கிப் பாடியது போல, வருகின்ற பாரதத் திற்கு உரைக்கப்பட்ட பண்புகள் சோவியத் நாட்டை அடைந் தன; கிழக்கு ஐரோப்பிய நாடுகளை அடைந்தன, அமெரிக் காவை அடைந்தன, ஜெர்மெனியை அடைந்தன, அண்மை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

யில் கருக்கொண்டு 'பார்பதம் அண்டம் அனைத்துமாய் முளைத்துப் படரும்' இசரேலே அடைந்தன என்று சொல்லுமாப்போல் இருக்கிறது.

அல்லது எவரோ தேவதூதர்களைப் பார்த்து—கனவுலக மாந்தரை நினைத்து வருணிப்பது போல் தோன்றுகிறது.

○

ஆகவே நம் கவிஞர் எதிர்பார்ப்பது மாபெரும் சமுதாய மாற்றம்; இந்தியாவில் ஒரு யுகப்புரட்சி என்று காணுகிறோம்.

பாடலின் கருத்து வலிமை

போகின்ற பாரதத்தைச் சபித்தல்

ஒன்று

வலிமையற்ற தோள், மார்பிலே ஒடுங்கல், பொலிவிலா முகம், பொறியிழந்த விழி, ஒலி யிழந்த குரல், ஒளி யிழந்த மேனி, கிலி பிடித்த நெஞ்சம், கீழ்மையினை என்றும் விரும்புதல்—ஆகிய இயல்புகளை உடையீரே செல்க செல்க செல்க.

இரண்டு

இன்று இந்தியாவிலே ஏற்றமின்றி நாய்போல வாழுவாய், நல்லதைச் சொன்னால் பயப்படுவாய், வெட்கமில்லாது கெஞ்சுவாய், அழிந்தொழிந்த பொய்களை — பழங்காலத்துப் பொய்க் கதைகளை — நம்பிக்கைகளை — அவை உண்மையானவை என்று நினைந்து போற்றுபவனே, இன்று அவற்றை வென்று விளங்கும் அறிவு பூர்வமான மெய்களை உணராமல் பொய் என்று கண்கலங்க நோக்கும் திரிபு உடையவனே போ போ போ.

மூன்று

உலகிலுள்ள வெவ்வேறு மொழிகளைக் கற்கிறாய், வீட்டு வார்த்தையை — தாய் மொழியினைக் — கல்லா தொழிகிறாய் போ.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஏராளமான நூல்களைப் புரட்டுவாய், படித்து உருட்டுவாய். ஆனால் மெய் கூறும் ஒரு நூலையாவது கடைப் பிடித்து ஒழுக மாட்டாய். எதற் கெடுத்தாலும் விதண்டாவிவாதம் செய்கு வாய் போ போ. சேறும் நாற்றமும் முள்ளும் முடலும் சூழ்ந்த சிறிய வீடு கட்டுவாய் போ போ போ.

நான்கு

ஜாதிகளை நூற்றுக் கணக்கில் பகுத்துப் பகுத்துப் பேசுவாய், ஒதுக்குவாய், ஒதுங்குவாய். ஆனால் தருமம் ஒன்றையாவது கடைப்பிடித் தோம்ப நினைக்க மாட்டாய், நியாயங்கள் நீள நீளப் பேசுவாய். ஓசைப் படாமல் ஒரு காசை உன்முன் நீட்டி விட்டால் 'படக்' கென்று நெடுஞ்சாண் கிடையாக விழுந்து விடுவாய், நியாய மெல்லாம் ஓசைப் படாமல் ஒளிந்து சுருண்டுகொண்டு விடும். தீமை செய்வதற்குப் பின்வாங்க மாட்டாய். மனச் சான்று என்ற ஒன்று உன்னிடம் வேலை செய்யாது. அதே சமயம் தீமை உன்முன் வந்து நிற்குமானால் அச்சத்தால் தொடை நடுங்கி அடித்துப் புரண்டு ஓடிப் போவாய்.

இவ்வாருகச் சுடரொளி மிக்க மாணிக்கத்தினைச் சூழ்ந்து மேவிய மாசு போன்றவனே போ போ போ.

இது பற்றி

கவியும் கருத்தும் என்ற கட்டுரையில் தமக்கே உரிய இரசிப்புச் சுவை ததும்ப 'பாவ' விமரிசனம் செய்யும் டி. கே. சி.யின் சொற்படங்கள் இங்கே அறிந்து மகிழ்தற் குரியன:

மக்கள் கோழைகளாய் இருக்கிருர்கள் என்பதும், உடல் உணர்வு எல்லாம் சோர்ந்து போயிருக்கிறது என்பதும் சாதாரண உணர்ச்சி தான். டெனிஸனுக்குப் புலப்பட்டது நமக்கும் புலப்பட்டது தான். ஆனால் அது, தனியான பாவத் தொடு பாரதியாரின் மனக்கண் முன் நிற்கிறது. நாட்டின் கீழான தன்மை எல்லாம் ஒழிய வேண்டும் என்கிருர் பாரதி.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வலிமையற்ற...பொறியிழந்த விழியினய்
போ போ போ

வேண்டாதவ னெருவன், வீட்டுக்குள் எப்படியோ வந்து உட்கார்ந்திருக்கப் பார்த்து, 'வெளியே போய் விடு போய் விடு' என்று அவன் பிடரியைப் பிடித்துத் தள்ளித் தெருவுக்கே துரத்தின மாதிரி இருக்கிறது. போபோபோ என்று தாளத்தில் வார்த்தையை வைத்தவுடன் துரத்தும் காட்சி நம் கண்ணுக் கெதிரே வந்து விடுகிறது.

ஒலியிழந்த...கீழ்மை...போ போ போ

'அடிமைப் பதவி வேண்டுமென்றே சதா பாவலா போட்டுக் கொண்டிருக்கும் ஜன்மமே! கண்முன் நில்லாதே, போய்த் தொலே!' என்று கோப பாவம் பொங்குகிறது.

'சரியான அடிமையடா நீ. உன் தாய் பாஷை உனக்கு ஆகவா செய்யும்? மாட்டாது. வேருெரு பாஷைக்குமே நீ அடிமை என்பது தெரிய வேண்டாமா என்று கதறுகிருர் கவி.

வேறு வேறு... இயல்கிலாய் போ போ போ

'நீ படிக்கிற புஸ்தகம் எல்லாம் பொய் மயம். அவைகளுக்கு வழிபாடெல்லாம் செய்வாய். உண்மையைச் சொல்லும் நூல் களேயோ புறக்கணிப்பாய். ஏதோ வாசிக்க நேர்ந்து விட்டால், 'அதெல்லாம் அனுஷ்டானத்துக்கு அல்ல ஸார்!' என்று நழுவப் பார்ப்பாய். வேண்டாத வியாக்கியானம் செய்து உண்மையைப் பொய்யென்று சாதிக்கப் பார்ப்பாய். இப்படியெல்லாம் பேசி உயர்ந்த கலேகளேயும் வாழ்க்கையையும் குட்டிச் சுவராக்கி விட்டாய். பிறர் இகழ்ச்சிக்குத்தானே உன் வாழ்க்கை லக்ஷியமாய்ப் போய் விட்டது' என்று தலேயில் அடித்துக் கொள்ளுகிற பாவம்!

O

இவ்வாறு எழுதும், பாரதியாரின் சமகாலத்துக் கல்வியறி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வாளருள் ஒருவராகிய டி. கே. சி, பாரதியாரின் இந்தப் பாடலுக்கு உந்து கொடுத்தது டெனிசனின் In memorium என்ற பாடல் என்று தெரிவித்து டெனிசனின் பாக்களி லிருந்து நான்கு ஐந்தைத் தமிழாக்கி அந்தக் கட்டுரையில் தந்துள்ளார். அவற்றுள் இரண்டு வருமாறு:

(ஆலயத்தில் உள்ள கண்டாமணிகளைப் பார்த்துக் கூறுவன வாக)

பழையன கழிய முழங்குங்கள்
புதியன புகவும் முழங்குங்கள்
இதயத்தை உறையச் செய்யும்
உறைபனி ஒழிய வேண்டும்
பொய் போகவும்
பொய்யல்லாத மெய் வரவும்
முழங்குங்கள்.
வறுமையும் துயரமும் பாவமும் ஒழிக
அன்பின்மையும் இரக்கமின்மையும் ஒழிக
துயர்கொண்ட என் புன்கவி ஒழிக
இன்ப மயமான உயர்கவி வருக
முழங்குங்கள் கண்டாமணிகளே.

வருகின்ற பாரதத்தை வாழ்த்தல்

○

போகின்ற பாரதத்தைச்சபித்தல் என்பதைப் பற்றி—'ஆங்கார தேவதையின் தாண்டவத்தைப் பார்த்தோம்' என்று கூறும் டிகேசி, அடுத்து வருவதைப் பற்றி 'இனி அன்பும் அருமை யும் சேர்ந்து ஆடும் தாண்டவம்' என்று இனிமையாகச் சுட்டுகிருர்.

பாடற் கருத்து

ஒன்று

ஒளி படைத்த கண், உறுதி கொண்ட நெஞ்சம்
களி படைத்த மொழி, கடுமையான தோள்கள்,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தெளிவுள்ள அறிவு, சிறுமை கண்டு அனுதாபப்
படுதல், ஏறு போல் நடை
—இவற்றை உடையாய் வா வா வா

இரண்டு

மெய்ம்மை கொண்ட நூலேயே வேதம் என்று அன்போடு போற்றுதல், பொய் கூற அஞ்சுதல், பொய்யான நூல்களை எற்றித் தள்ளுதல், நொய்ம்மையில்லாத மனம், நோயற்ற வுடல் ஆகியன உடையானே!

நம் சிறப்பு மிக்க நாட்டில் சீரெல்லாம் குன்றுமாறு இதுவரை இருந்துவந்த சாபம் நீங்குமாறு—தெய்வசாபம்—கண்ணுக்குப் புலப்படாக் காரணம்—நீங்குமாறு தோன்றுபவனே வாவாவா.

மூன்று

இளைய பாரதத்தின் பிரதிநிதியே! எதிரெவரும் நிற்க வொண்ணு வலிமையும் வெற்றியும் உடையவனே! ஒளியிழந்த நாட்டிலே, தோன்றிப் பின் நின்று ஏறும் உதய ஞாயிறு போல ஒளி தர வந்தவனே வாவாவா.

களையிழந்த நாட்டில் முன்போல அந்தக் களை—பொலிவு
—சிறக்க வந்தவனே!

ஏற்பட வேண்டிய மாண்புகள் எல்லாவற்றையும் பார்த்த பார்வையில், பாரதத்துப் பார்த்தன்—அர்ச்சுனன் — போல விளக்கித் துலக்க வல்லவனே! வாவாவா.

நான்கு

வெற்றிகொண்ட கை, பணிவு நிலைபெற்ற நாவு, சாமுத்திரிகா லட்சணம் பொருந்திய தோற்றம், முழுமையான எழில் பொலியும் முகம், கற்றது பொய்க்காமல் நடக்கும் மெய்ம்மை. நினைத்ததை முடிக்கும் ஆற்றல் அகியவை உள்ளவனுக,

இந்நாடு ஒற்றுமைப் படவும், அந்த ஒற்றுமையினுல் உய்ந்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

திடலும் ஆகிய விந்தையை நிகழ்த்த வல்லவனே! அந்த ஒரு பெருஞ்செயல் செய்யப் பிறந்தவனே வாவாவா.

பாடலைப் பற்றி

○

இப் பகுதியின் தொடக்கம் பற்றி எழுதுகின்ற தி.சா. ராஜு மிகவும் மகிழ்வுற்றவராக, "பாரத நாடு ஒரு சிறு குழந்தை உருவில் கவிஞரின் முன்னால் தளர் நடையிட்டு வருகிறது. அதைக் கண்ட களிப்பில், அவர், விடுதலை பெற்ற பாரதக் குழவியை எதிர்கொண்டழைத்து மகிழ்கிறார்.

ஒளிபடைத்த ... தேசமீது தோன்றுவாய் வாவாவா

இந்த வரிகளிலே அழகுத் தத்துவமே நடந்து நம் கண்முன் வருகிறது. ஆனந்த உணர்ச்சி செவியை நிரப்பிக் கண்ணீர்த் துளி வர உள்ளுருக்குகிறது. அத்தகைய உன்னதமான காட்சியை மகாகவி கண்டுவிட்டார் என்று எண்ணி வியப்புறுகிறோம்" என்று குறிப்பிடுகின்றார்.

○

முன்னர் நாம் கண்ட கவியும் கருத்தும் என்ற கட்டுரையின் முடிவில் டி.கே.சி. தருகின்ற தீர்ப்பு—பாரதி கவிதை பற்றிய மதிப்பீடு—மறுக்க முடியாதவாறு அமைந்துள்ளது. அது,

'ஒரே விஷயத்தைத் தான் டெனிஸனும் சொன்னார். பாரதியாரும் சொன்னார். சோகந்தான் பாவம், டெனிஸனிடம். நம்பிக்கை பாவமும் கொஞ்சம் இருக்கிறது. ஆனால் பாரதியார் பாவம் முற்றிலும் வேறு; உருவம் துள்ளல் தாளம் எல்லாம் வேறு. மூலத்துக்கும் பாரதியார் பாடலுக்கும் சம்பந்தமே இல்லை என்று சொல்லும்படி அவ்வளவு வேறுபட்டது. ஏதோ டெனிஸன் எழுதிய ஆங்கிலக் கவி பாரதியாரை அந்த விஷயங்கள் சம்பந்தமாகச் சிந்திக்கச் செய்தது. அவ்வளவுதான். உணர்ச்சி எழுந்ததும் அதற்குத் தக்கபடி தமிழ்ச் செய்யுள் வந்து உதவியதும், பாவங்களின் புதுமையும் வேகமும் எல்லாம் தனி, போகின்ற பாரதம், வருகின்ற

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பாரதம் என்ற இந்த இரண்டு கவிகளும் பாரதியின் சிறந்த பாடல்களைச் சேர்ந்தவை. உண்மையான சிருஷ்டிகளே. தமிழ் மகளின் தனியான நடனங்கள் தான்'',

○

இந்தப் பாடலில் வரும் ஒவ்வோர் அடியும் ஒரு குணச்சித்திர ரேகையாக இருக்கிறது. ஒவ்வொன்றையும் வாசிக்க வாசிக்க, நினைக்க நினைக்க அவை நமக்குத் தெரிந்த யாரோ ஒருவரை-இன்னொருவரைச்—சுட்டிக் காட்டுவன போல் இருக்கின்றன. பாடலின் நவிற்சி ஆற்றல் அவ்வாறு உரத்து நிற்கிறது.

போகின்ற பாரதத்தில் வருகின்ற அடிகள் அடிக்கின்ற அடிக்கு இந்த நாட்டிலுள்ள எவருமே தப்ப முடியாது. எல்லாரும் ஏதாவது ஒரு வகையில் அங்கே அகப்பட்டுக் கொண்டு விடுவார்கள். யோசிக்கும் வேளையிலே நாமும் மாட்டிக் கொண்டுதான் விழிப்போம்!

என்ன செய்வது? சமுதாய நிலை அப்படி இருக்கிறது.

'காசொன்று நீட்டினுல் வணங்குவாய்' என்ற அடி பல கோடிப் பேரை வளைத்து விடும். பொருளாதார நெருக்கடி அப்படி.

○

அயல் மொழி படித்தால் அண்ட சராசரம் எங்கும் போகலாம், வேலை கிடைக்கும், என்றுல் அதை மக்கள் நம்புகிறுர்கள். நம்பாமல் என்ன செய்வது? பஞ்சாபி படித்தால் பஞ்சாபுக்குப் போகலாம், பவனி வரலாம் பணங்காசு குவிக்கலாம் என்கிறுர்கள். இங்கே இருக்கும் வறுமை—வேலையின்மை—அதை நம்ப வைக்கின்றன. அங்கே போனுல் தான் அங்கிருப்பவர்கள் வாயில் விரலை வைத்துக்கொண்டிருக்கவில்லை, ''இங்கே இருப்போர்க்கே வேலை இல்லை, நீங்கள் ஏன் வந்தீர்கள், உங்கள் மொழி என்ன, இனம் என்ன, பிரதேசம் என்ன?'' என்று விரட்டியடிக்கிறுர்கள் என்பது தெரியவரும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தமிழகத்தைச் சேர்ந்த, இளம் பொறியாளர்க்குரிய படிப்புப் பட்டம் பெற்ற இளைஞர் பலர் ஒரிசாவுக்கு நேர்முகத் தேர்வுக்குச் சென்று அவண் பலரும் வெற்றி பெற்றுக் கையிலே வேலைக் கான உத்தரவும் பெற்றுக்கொண்டு, செயலகத்திலிருந்து வெளியே வந்ததும், பல பேர்கள்—அந்த இராச்சியத்தைச் சேர்ந்தவர்கள், மோட்டார் சைக்கிள் முதலிய வாகனங்களில் திமு திமு வென்று வந்து இறங்கி, இங்கிருந்து சென்று வேலை உத்தரவு பெற்றவர்களையும் பெருதவர்களையும் அவர்களுக்கு உதவியாக வந்த பெற்றோர்களையும் விரட்டி விரட்டி 'இங்கே ஏன் வந்தீர்கள், போங்கள் உங்கள் நாட்டுக்கு' என்று பிடர் பிடித்துத் தள்ளினார்கள். இங்கிருந்து சென்றோர் சிலர் தங்கள் நிலையை அழகிய ஆங்கிலத்தில் சொல்லத் தொடங்கவும் அவர்களுக்குக் கூடுதலான அடிகள் விழுந்தன வாம்!—இவை இங்குள்ள சிலருக்குக் கிடைத்த கடுமையான அனுபவம் ஆகும்.

இருந்தாலும் ஆங்கிலம் படித்தால் அங்கே போகலாம், இந்தி பயின்றால் இங்கே போகலாம் என்றெல்லாம் சொல்வதை நம்பாமல் இருக்க முடியவில்லை. வயிற்றை நிரப்ப எங்காவது போக வேண்டுமே! திரைப்பட நடிகையின் பிள்ளைகள் அமெரிக்காவுக்குப் போகிறார்கள், முற்போக்குத் தொழிற்சங்கத் தலைவர்களின் பிள்ளைகள் 'பிற்போக்கு' அமெரிக்காவுக்குச் சென்று படிக்கிறார்கள், வேலை பார்க்கிறார்கள், ஏராளமாகப் பணம் அனுப்புகிறார்கள். இவற்றையெல்லாம் பார்க்கும் பொழுது 'வீட்டு வார்த்தை' கற்க முடியாமல் தானே போகும்?

அவற்றை யெல்லாம் கவனிக்கும் ஏழைத் தமிழன் அந்த ரங்கம் என்ன நடக்கிறது என்று தெரிய முடியாமல், அந்த மொழி இந்த மொழி என்று உயிரை விட்டுப் படிக்கிறான்; மனப்பால் குடித்ததுதான் மிச்சமாகிறது, என்ன செய்வது!

O

சோவியத் நாட்டுக் கலாச்சாரத் தூதுக்குழு ஒன்று சென்னைக்கு முன்னொரு முறை வந்திருந்த போது அதன் தலைவர் 'இந்த நாட்டுக் குழந்தைகளின் கண்கள் இவ்வளவு அழகாக இருக்கின்றனவே!' என்று வியந்து பாராட்டினார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'கண்கள் சிவந்து பெரியவாய்' என்ற நம்மாழ்வார் வாக்கைப் பாரதியார் மேற்கோள் காட்டுவது கண்ணனுக்கு மட்டுமல்லாது எல்லாக் குழந்தைகட்கும் ஏற்கும்.

காலப் போக்கில்—எதிர் காலத்தை எதிர்பார்த்து—படிப்பு, தேர்வு என்ற பலிபீடத்தில் இளமையைப் பலிகொடுக்க வேண்டியுள்ளது. பிறகு வறுமை, அதிகார ஆணவங்களொடு போராடிப் போராடி மார்பு ஒடுங்கிக் கண்கள் குழிந்து, வருங்காலம் பற்றிய பொறுப்பு, திகில், அவநம்பிக்கை என்பவற்றிடைத் திண்டாடித் திக்குமுக்காடி வீழ்கிறுன் இந்திய இளைஞன்.

இந்நிலையில் ஒளிபடைத்த கண்ணினுய் உறுதி கொண்ட நெஞ்சினுய்—என்ற தொடர்களைப் பார்க்கும் பொழுது இறுதி வரை ஒளி காலும் கண்களோடு இருந்தார் எவரும் உண்டா என்று தேடும் பொழுது ஒரு காந்தியடிகள் ஒரு இரமண முனிவர் என்று மிக மிகச் சிலரைத் தான் பலகோடிப் பேருள் பார்க்க முடிகிறது.

காந்தியடிகளும் இரமண முனிவரும் மக்களோடு மக்களாக எளியராக வாழ்ந்த போதிலும் அவர்கள் உள்ளொளி வாய்க்கப் பெற்றவர்கள் ஆகையால் கண்களில் ஒளி மிளிர்ந்து கொண்டிருந்தது. அவர்களின் பக்கத்தில் நஞ்சான குண்டு வெடித்தாலும் மெலிந்துளது போன்ற யாக்கையில் கத்தியை வைத்து அறுத்தாலும் கலக்கமோ மயக்கமோ இன்றி இயல்பான புன்னகையோடு இருக்க முடிந்தது.

அந்த அதிமானுடர்களைத் தவிர, நம் நாட்டில் அறிவாற்றல் மிக்க கவிஞர், அறிஞர், படைஞர், செல்வர், உடல்வலி மிக்கார் என்ற ஏனையர் எல்லாருமே பெரும்புயல் அடிக்கும் பொழுது துரும்பாகவே சுழன்றனர், சுழல்கின்றனர்.

ஆகவே இங்கே பாடப்பட்ட வழியனுப்பு, வரவேற்பு பற்றிய பெற்றிகள் எல்லாம் தனிப்பட்டவர்களைப் பற்றியன அல்ல என்பது தெளிவு. தனிப்பட்டவர்களுக்கும் அவை பொருந்த இருந்து அவர்கள் திருந்தி உயர்ந்து வர முடியுமானுல் நல்லதே. ஆனுல் அஃது நடைபெறுவது அரிது. நடைபெறினும் கடைசிவரை செல்லுபடியாவது மிக மிக அரிது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

○

நாமிருக்கும் நாட்டில், இருப்போர் அனைவர்க்கும் உதவுபடியாகக் கூடிய சீரான திட்டங்கள் வகுத்து, அவற்றைச் சீரான செய்கையிற் கொணர்ந்து, அதற்கெல்லாம் ஒழுங்கான அரசியந்திரம் உறுதியுடனும் மனிதாபிமானத்தோடும் செயல்படுமானால் இங்கு வாழ்க்கையானது வெறுமையாகவோ வறுமையாகவோ தற்கொலைவேட்கை அவ்வப்பொழுது தலைதூக்க இடந்தருவதாகவோ இராது.

○

டெனிசன் பாடிய கையறுநிலைக் கவிகளால் பாரதிக்கு இதனைப்பாடத் தூண்டல் கிடைத்ததா என்று முடிவு செய்வதை ஆய்வாளர்களிடம் ஒப்படைத்து விட்டு, நம் கவிஞரது சமுதாய நோக்கு நம் அனைவர்க்கும் ஏற்பானது—அந்த நோக்கும் மானிட நேயமும் காலமறிதலும் வீச்சும் வெளிச்சமும் டெனிசனிடம் இல்லை, பாரதியிடம் சிறப்பாக இருந்தன என்று மட்டும் ஈண்டு உறுதியாகக் கூறிக் கொள்வோம்.

○

இந்தப் பாடற்கண் பாயும் சூடும் சொல்லொளியும் மின்னலனைய விரைவும் போ போ போ வா வா வா என்ற ஏவல் அடுக்குகளும் கவிஞரின் வசனகவி வாக்கு ஒன்றை நம் நினைவிற்குக் கொணர்கின்றன.

> நமது விழிகளிலே மின்னல் பிறந்திடுக.
> நமது நெஞ்சிலே மின்னல் விசிறிப் பாய்க.
> நமது வலக் கையிலே மின்னல் தோன்றுக.
> நமது பாட்டு மின்னலுடைத் தாகுக.
> நமது வாக்கு மின்போல அடித்திடுக.

இந்தப் பாடலில்—கவிஞரின் வாக்கில்—மின்னல் அதிகம் அடிக்கிறது, விசிறிப் பாய்கிறது.

○

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

20

ஓர் நிறை ஓர் விலை

○

பாரதியாரின் தேசிய கீதங்களுக்குள் தலைசிறந்தது; இறுதியானது. அவரது கருத்துக்கள் அத்தனையையும் நுணுக உட்பொதிந்து, ஆன்ற ஆலமரத்தினை உள்ளடக்கிய வித்துக்கள் பொதிந்த செங்கனிபோல் சிறந்துளது இது. அவர் எழுதிய யாவற்றையும் முன்னும் பின்னும் பார்த்து நிற்கும் அரிமாபோல் அமைந்துள்ளது இந்தப் பாட்டு.

○

இதில் இந்தியாவை ஒரே சமுதாயமாகப் பார்க்கிறார் கவிஞர். மராட்டர், பஞ்சநதத்துப் பிறந்தோர் என்றெல்லாம் பிரித்துப் பார்க்கவில்லை.

இந்தியா, இந்தியா என்று நாட்டின் பெயர் நான்கு முறை வந்திருக்கிறது.

○

எல்லா மக்களுக்கும் உரிய பொதுவுடைமையைக் கற்பிக்கிறார் அவர். அந்தப் பொதுவுடைமை, உலகத்துக்கு ஒரு புதுமை.

அங்கிருந்து மனிதர் மனிதர் என்று மனித குலத்தை நோக்கிச் செல்கிறார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

○

உலகினை அழிப்போம் என்று புரட்சி வெடி வெடிக்கிறது.

யுகம் யுகமாக வரும் இந்தியத் தத்துவ ஞான அமுது அனைவருக்கும் வழங்கப் படுகிறது.

நால்வகை வருணம் என்பது நாசமாக்கப்படுகிறது.

ஒரே இனம் அறிமுகமாகிறது.

○

ஆகவே இந்தப் பாட்டு, தேசிய, சமய, தத்துவ, கொள்கைப் பிரகடனமாகும். உலகப் பொதுமையை நோக்கிய உயரிய பொதுவுடைமைச் சாசனமும் ஆகும். எல்லாரையும் மன்னராக்கும் நவீன கீதையும் ஆகும்.

---

20 பாரத சமுதாயம்

பாரத சமுதாயம் வாழ்கவே! வாழ்க வாழ்க!

கருத்து மேம்பாடு

பாரத மாகிய ஒரு மித்த கூட்டமைப்பு, சமுதாயம், வாழ்க வாழ்க! வெற்றி பெறுக, வெற்றி பெறுக!

முப்பது கோடியாம் இந்திய மக்கள் கூட்டம் முழுமைக்கும் இந்த நாடு பொதுவான உடைமை. இஃது ஒப்பில்லாத சமுதாயமாகும். உலகத்துக்கே ஒரு புதுமையாக விளங்கும்.

மனிதர் உணவை மனிதர் பறிக்கும் வழக்கம் இனியுண்டோ? இல்லை. மனிதர் நோக மனிதர் பார்க்கும் வாழ்க்கை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இனிமேல் இருக்குமா? இந்த உலகில் இருக்குமா? இரக்க மற்ற அந்த வாழ்வு நம்மில் இதுவரை இருந்தது. இனி இருக்குமோ? இராது இராது இரவே இராது.

இந்த நாடு எத்தகையது? ஆகா! இனிமையான பொழில்கள், நெடுந்தொலே விரிந்து கிடக்கும் வயல்கள்—இவை எண்ணுக் கடங்காமல் ஏராளமாகப் பரந்து கிடக்கும் நாடு இந்த நாடு. கனிவகைக ளென்ன, கிழங்கு வகைகள் என்ன, தானியக் குவியல்கள் என்னென்ன—அவை யாவற்றையும் கணக்கில் லாமல் தந்து கொழிக்கும் நாடு, இது, என்றென்றும் தந்து சிறக்கும் நாடு. இது வாழ்க வாழ்க வெல்க வெல்க!

இப்பொழுது இருக்கும் துயர்மிடி தீரவும் இனியும் அவை எந் நாளும் வாராது ஒழியவும், இனியதொரு ஒப்பிலாத சமுதாயம், புதுமையான ஒரு பொதுவுடைமை ஏற்படவும், நாம் விதி ஒன்று ஏற்படுத்திக் கொள்வோம். அங்ஙனம் விதி—உறுதி—சூள் என்று செய்து கொள்வது யார்க்கும் எளியது. ஆனுல் அதனைக் காப்பதோ அரிது. ஆகவே அவ் விதியை எந்த நாளுங் காப்போம் என்று உறுதி கொள்வோம்!

அது என்ன விதி?

எவனுகிலும் ஒருவன்—தனித்து விடப்பட்டவனுன அகதி—அனுதை எனும் நிலையினனுயினும் ஒருவன் உணவு இல்லாது இருக்க நேரின் அதற்குக் காரணமான 'ஜகத்'தினை அழித்தே தீருவோம்!

எல்லா உயிர்களிலும் நான்தான் இருக்கிறேன் என்று கண்ணபெருமான் நவின்ருர். எல்லாரும் அமிழ்தம் அருந்திய அமரர் ஆகலாம். அந்த அமரத்துவ இரகசியம்—பிரம்ம வித்தை—இந்தியாவிடம் இருக்கிறது. அதை இந்தியா உலகிற்கு அளிக்கும். போரும் பூசலு மின்றிப், பொலிக பொலிக, கலியும் கெடும் கண்டு கொண்மின் என்று கண்கூடாகப் பேரின்ப வாழ்வை உலகிற்கு இந்தியா கற்பிக்கும். ஆம் அதில் ஐயம் எதுவும் வேண்டா.

உடலுக்கு வேண்டிய உணவும் நுகர்வும் இருக்க, உயிருக்கு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வேண்டிய ஆரமுதும் இருக்க, அவற்றை அனைவரும் அடைந்து ஆனாத இன்பத்து அமர வாழ்வில் நிலைத்திருக்க வேண்டுமென்னில் மிகச் சரியான சமதருமநெறி, ஒத்துரிமை, நடப்புக்கு வரவேண்டும். எல்லாரும் ஒரு குலம், ஓர் இனம், எல்லாரும் இந்தியா மக்கள். இங்குப் பிறந்தோர் யாவரா யினும் இந்தியாவின் மக்கள். எந்த வித ஏற்றத் தாழ்வோ, சலுகையோ, சாதகமோ, தனி உரிமங்களோ தரக் கூடாது. எல்லாரும்—அவர் எவரேயாயினும் அவர்க்கு நிறை, எல்லார்க்கும் உரிய நிறையளவு தான். எல்லார்க்கும் உரிய விலை தான் அவர்க்கும் உண்டு. நாம் எல்லாரும் இந் நாட்டு மன்னர். ஆம் அறுதியிட்டுச் சொல்கிறோம் நாம் எல்லாருமே இந் நாட்டு மன்னரே!

இந்தப் புதிய ஒன்றியம்—சமுதாயம்—வாழ்க வாழ்க! வெல்க வெல்க!

எண்ண அலைகள்

○

பொதுமைப் பொருளியல், வேதாந்த விழுப்பம், புது உலகுக்கான புரட்சி, மேலாம் இலட்சியம் என்பன யாவும் இசைந்து, இசையோடு கலந்து, இனிதாக எளிதாக அதே சமயம் திட்பமாக உருப்படியாக விளங்கும் இந்தப் பாட்டுக்கு நிகரான கருத்துச் செறிவும் கவியழகும் காரிய நோக்கமும் பெருமிதச் சுவையும் கலந்த ஒரு பொது தேசியப்பாட்டு இந்திய மொழிகளுள் வேறெதிலும் (இந்த நூலாசிரியர்க்கு வேறு எம்மொழியும் தெரியா விடினும்) இராது என்று திடம்பட நம்பலாம்.

இன்றைய சீனத்தின் புதிய அரசியல் சட்டத்தின் ஆதார மந்திரம் 'நவீனப் படுத்துவது' என்று இருப்பது போன்று, இந்தியாவுக்கு வேண்டிய ஆதார மந்திரத்தையும் அதற்கான ஆதார சக்தியையும் அளிக்கும் இந்தச் செந்தமிழ்ப் பாட்டை விட வேறு விழுமிய தேசிய கீதம், சிறந்த நாட்டுப் பண் இருக்க முடியாது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

○

இந்தச் செய்திறம் செந்தமிழ்க் கவிஞர் பாரதிக்கு எவ்வாறு வந்து சேர்ந்தது?

வல்லாங்கு வாழ்தும் என்னது நீயும்
எல்லார்க்கும் கொடுமதி மனைகிழ வோயே

என்று, தான் குமணனிடம் பெற்ற அன்பளிப்பை எல்லாம் பலர்க்கும் கொடுத்து உதவுமாறு சொன்ன

பெருஞ்சித்திரனாரும்,

எல்லாம் (உண்பன, உடுப்பன, துய்ப்பன) ஒரொக்கும் என்று பொதுவுரிமை போதித்த நக்கீரரும்

'உண்டாயிற் பதங்கொடுத்து இல்லாயின்
உடனுண்ணும் இல்லோர் ஒக்கல் தலைவன்'

என்று பாராட்டிய ஔவையும் பாராட்டுப் பெற்ற அதிகனும் போன்றோர் பிறந்து பண்படுத்திய தொன்னிலம் இந்த நன்னிலம் என்பதொடு,

பரந்து கெடுகஇவ் வுலகியற்றி யான்!

என்று பழங்காலத்து அறம்பாடிய வள்ளுவரின் வழிவழி வந்தவர் என்பதொடு, கலி கெடுத்துக் கிருத யுகத்தை நிலைநாட்டுதல் என்பதனை ஆளுவோன் பெருமையாகக் கூறிய இன்பத் தஞ்சைவாணன் கோவை முதல் இறைவன் பெருமையாகக் கூறிய பேரின்பத்து ஆழ்வார் பாடல் வரைக்கும் உரைத்த அக் கடப்பாட்டைத் தன் தலை மீது கவிக் கடமை எனச் சுமத்திக் கொண்டு பொறுப்புணர்ச்சி யோடு, வேதாந்தத்தின் நடைப்பியல் விழுப்பத்தினை விவேகானந்தரின் வழியில் கூர்த்துணர்ந்து, காலத்தின் தேவையறிந்து கூவும் சேவலென இயல்பால் எய்த உணர்ந்து, புதிய உருசியா ஆற்றிக் காட்டிய யுக மாற்றத்தை அக மகிழ்வோடு வரவேற்று, அவ் வழியில் புதியதோர்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பொதுவுடைமைப் பொன்னுலகை இந்தியாவிற் காண வேண்டும் என்று வேணவாக் கொண்ட கவிஞரின் ஆன்மிகப் பண்ணமுதே உள்ளிருந்து பொள்ளெனப் புறம் போந்து பாய்ந்து தெள்ளு தமிழ்ச் சொல்வடிவு கொண்டது என்பதனுல் அது சாத்தியம் ஆயிற்று.

ஆகவே, இது பாரதி குரலில் வெளிவந்த இந்தியத் தாயின் கொள்கைப் பிரகடனம்—பொதுவுடைமைச் சாசனம் என்பதொடு, ததீசி முனிவர் தம் வலியெல்லாம் திரண்ட முதுகெலும்பைத் தந்தாற் போன்று, தாம் வலிந்து மேற்கொண்ட வறுமைப்பாடு மிக்க வாழ்நாளெல்லாம் தேடித் திரட்டிய இதய வேட்கையை இதில் கவிஞர் பண்பட அமைத்துக் கொடுத்துள்ளார் என உறுதியாகக் கூறலாம்.

எனவே தான் இந்தப் பாட்டுக்கு நிகராக இந்திய மொழியில் எந்தக் கவிக் கனியும் இராது என்று திடம்படக் கூறுதல் இயல்கின்றது. தமிழிலும் கூட, பாரதியாரின் சமகாலத்துக் கவிதைகளில் இதற்கான கருத்துக் கூறுகள் காணப்படினும் இந்தத் தொலைநோக்கும் துல்லியமும் ஆவேசமும் இருத்தற் கில்லை. தேசிய ஆவேசத்திற்கு வேண்டுமானுல் 'வாழிய எழில் பாரத நிலம், வாழியவே பாரத வீரர் சமூகம்!' என்று தொடங்கும் பழைய (பாரதிதாசன்) பாடல் நெருங்கி வரக் கூடும். அவ்வளவே.

இஃது இவ்வாருக, பாரதிக்குப் பின்னர் இக் காலத்துப் 'புதுப் புதுமைக்' கடைவிரிக்கும் கவித் தோன்றல்களிடையே இது போன்ற ஒன்று தோன்றக் கூடும் என்று எண்ணவும் தயக்கம் ஏற்படுகின்றது. அதற்குக் காரணம் அவநம்பிக்கை உணர்வு அன்று. பாரதியின் வேதாந்த நெஞ்சமும், மன்பதை யுணர்வும் ஆழ்ந்த கவியுளமும் கவிஞானியர்க்கே உரிய தூய்மையும் எளிமைப் பெற்றியும் தியாகச் செய்கையும் இற்றை நாள் சூழலில் வாய்த்தல் அரிது என்பதே ஆகும்.

புதுமை, முற்போக்கு, பொதுவுடைமை, மனிதாபிமானம் என்றெல்லாம் ஆர்த்தும் போர்த்தும் பேசினுலும் பாடினுலும் உள்ளே ஒளிந்துகொண்டிருக்கும் வாணிபப் பேராசை, சாதி மத கட்சி வெறுப்பு சுயகாரிய நோக்கு என்பன. கல்லைக்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கட்டிக் கடலிற் பாய்ச்சினுற் போல எல்லாவற்றையும் மூழ்கடித்து விடுகின்றன.

உண்மையிலே கல்லைக் கட்டிக் கடலிற் பாய்ச்சினும் கலங்காமல் 'சொல்லும் நா சோஷலிசமே, புரட்சியே!' என்று துணிந்து நிற்பதென்பது, விளம்பர மோகமும் பொருள் பதவி ஆசையும், சாதி மத வெறியும் கடந்த உறைப்புள்ள மனிதாபிமானிகளுக்குத் தானே இயல்வதாகும்?

எனவே தான் புறச் சூழ்நிலைகளில், இந்திய விடுதலைக்குப் பிறகு ஏற்றங்கள் பல எய்தியிருந்தும், புதுக் கவிதையோ, எழுத்துக்களோ மக்கள் மன்றை ஈர்த்து மாபெரும் பொதுமையை, புது உலகப் படைப்பை நோக்கித் தீவிர நடை போடுதற்குத் தூண்டும் ஆற்றல் அற்றுப் போய் விட்டன; பாலிலே ஊறிய பொரி போலப் படுத்துக் கொண்டுவிட்டன.

பாரதி காலத்துப் பொருளாதார வறுமையானது அவர் காலத்துப் பாடலில், எழுத்துக்களில் செழுமையைக் கொடுத்தது. இக் காலத்துப் பொருளாதாரச் செழுமையானது, எழுத்துக்களில் பாவனையையும் பேச்சில் 'பம்மாத்'தையும் பாடல்களில் உயிரிலாப் போலிக் கிளர்ச்சிகளையும் கொண்டுள்ளது!

○

தேசியமும் தெய்விகமும் ஒன்ருகக் கைகோத்து வந்ததான பாவிகப் பண்பு உடையது பாரதியாரின் கவிதைத் தொகுதி. அதில் தேசியம் மெல்ல மெல்லத் தயங்கிக் கடைசியில் ஓரிடத்தில் வந்து உட்கார்ந்து கொண்டது. தெய்விகமே அவரது பாக்களை அதிகம் ஆட்கொண்டு வந்தது. பிற்கூறில் தெய்விகம் மட்டுமே நவிற்சி பெற்று நின்றது.

அங்ஙனம் தேசியம் வந்து தங்கி இறுதியாக அமர்ந்து விட்ட இடம், இந்தப் 'பாரத சமுதாயப்' பாடலே யாகும்.

பாரத சமுதாயம் என்ற பாடலுக்குப் பிறகு அவரது தேசியக் கவிக்கடன், வாழ்க்கைக் கனவு, முடிந்து விட்டது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அத்துடன் சிறிது காலம் செல்ல, அவர் தமிழுக்கு ஆற்ற வந்த கவிக்கடன் நிறைவு பெற்றதாகக் கருதிக் கொள்கிருர் என்பதும் தெரியவருகிறது.

எவ்வாறு எனின்,

கவிதையைத் தமது மிக இளம் வயதிலே காதலிக்கத் தொடங்கிய பாரதியார், 'நமக்குத் தொழில் கவிதை' என்று திட்டவட்டமாக முடிவு செய்து கொண்டார். 'இவன் புவி காப்பான்' என்று தேவாதி தேவர்கள் தம்மிடம் பொறுப்பை ஒப்படைத்து வாழ்த்தி வரம் தருவதாகக் கவிக் காட்சியிற் கண்டு அதற்கே தம்மை ஒப்படை செய்தார். புதுவையில் வாழ்ந்த காலே தமது கடமையைச் செவ்வே செய்து முடித்து விட்டதாகக் கருதுகிருர்.

இது, அவர் புதுவையினின்றும் புறம் போந்து கடையத்தில் வந்து தங்கிய நாளில்—மே 1919 இல்— எட்டையபுரத்து நிலக்கிழாருக்கு எழுதிய சீட்டுக் கவியில் தெளிவுபெறத் தென்படுகின்றது.

சீட்டுக் கவியின் வாசகம் வருமாறு:

புவியனைத்தும் போற்றிடவான் புகழ்படைத்துத்
தமிழ்மொழியைப் புகழிலேற்றும்
கவியரசர் தமிழ்நாட்டுக் கில்லையெனும்
வசை என்னுற் கழிந்ததன்றே

பாரதியார் எழுதிய சீட்டுக் கவி, பொருள் முதலியன கேட்டு வழக்கமாக எழுதப் படும் சீட்டுக் கவியாக மட்டுமன்றி, தன்னைப் பற்றிய—தன் எழுத்துத் தொழில் பற்றிய—சுய மதிப்பீட்டு உரையாகவும் அமைந்துள்ளது.

அதற்கு மேலும், அவர் தமது கவிதை வாழ்க்கைக்கு ஒரு நிறைவுரை கூறி விடைபெற்றுக் கொள்வதாகவும் அமைந்துள்ளது.

உண்மையும் அப்படித் தான் இருக்கிறது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பாரதியார் புதுவையை விட்டு வெளியேறினரா? அங்ஙனம் அவர் வெளியேறிய காலத்தும், அதற்குப் பிற்பாடு அவர் இயற்கை எய்துங் காறும் இந்திய தேசிய அரங்கில் எத் துணையோ நிகழ்ச்சிகள் நடைபெற்றன. அவர் அவற்றி னின்றும் ஒதுங்கி விட்டார், அறவே ஒதுங்கி விட்டார்.

இந்தியப் பெருநாடு அனைத்தையும் நிலநடுக்கத்தினை விடக் கடுமையாக உலுக்கிய ஜாலியன்வாலா பாக் படுகொலையும் அதன் பின் இயன்ற நிகழ்ச்சிகளும் பாரதியாரின் கவனத்தைப் பாதித்ததாகத் தெரியவில்லை.

அவருடைய சமகாலத்து இதழாசிரியர்கள், நூலாசிரியர்கள் அது பற்றிக் கண்ணீரும் கடுமையுமாக எழுதியிருக்கப் பாரதி யாரின் தேசியக் கவியெழுதுகோலில் மை உலர்ந்து போய் விட்டது. அவர் களைத்துப் போய்விட்டார்.

காலனே வாடா என்பது போன்ற பாக்கள் அவரது நெஞ்சி லிருந்து வந்தன. பழைய பாடல்களை மேடையில் பாடுதலும் பேசுதலும் ஒரோவொரு கால் நடைபெற்றன. ஆனால் மரண மிலாப் பெருவாழ்வு என்ற ஒரு பொருள் பற்றித் தான் தம் மால் பேசமுடியும் என்ற திட்டமான முடிவுக்கு வந்துவிட்டார் என்பதை அவரது வாக்கினாலே அறிய முடிகிறது. பத்திரிகைப் பணியில், மங்கியதோர் நிலவொளியில் காணும் பொருள் போலத் தேசியம் பற்றிய உரைகள், சர்வதேசியம் பற்றிய எதிரொலிகள், துணுக்குகள் என்பன அவர் வரைந்து வந்தார் என்பது உண்மை.

ஆகவே தேசியம், சமுதாயம் என்பனவற்றைத் தழுவிய கவிதைக்கு நிறைவுரையை—மங்களப் பாட்டை—பாரத சமுதாயத்தில் அரங்கேற்றி, தம் கவி வாழ்வின் முடிமணியாக அதனைப் பதிவு செய்து மிளிரக் காண்பதோடு விடை பெற்றுக் கொள்ள முன்வந்து விட்டார் அவர் என்று கூறுகிறோம். விடைபெற்றுக் கோடலைச் சீட்டுக் கவியில் ஐயந் திரிபறத் தெரிவித்து விடுகிறார் என்பதையும் அறிந்தோம்.

○

ஆரார் என்பவர் தான் எழுதியுள்ள **சிம்பலிசம்** என்ற நூலில்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

''பாரத சமுதாயப் பாடல் நாட்டின் வளத்தைக் கூறி வாழ்த்துகிறது; சமுதாய பொருளாதார நீதிகளைக் கூறிப் புதிய இந்தியா எப்படி அமைய விருக்கிறது என்று தெரிவிக்கிறது; கண்ணன் கூறிய மெய்ப்பொருளை உலகெங்கும் ஒளிரச் செய்ய வேண்டிய கடமை — எல்லாரும் அமரநிலை எய்தும் நல்வழியைக் காட்டுகிற கடமை இந்தியாவுக்கு இருக்கிறது என்று — நாட்டுப் பற்று, சமுதாய உணர்ச்சி, மெய்யுணர்வு ஆகிய மூன்றுள் எது பாரதி பாடலில் விஞ்சி நின்றது என்று சொல்ல முடியாத முனைப்புடன் மூன்றும் இருத்தற்கு இந்தப் பாடலை மேற்கோளாகக் காட்டி,

இந்தப் பாடலின் கருத்தே குயில் பாட்டில் கனவாக—கதையாக — உட்பொதிந்த கருத்தாகக் குறியீட்டு வழியில் கூறப்பட்டுள்ளதாக விரித்துரைக்கிறார். அவரது ஆய்வுரை, சிந்தனையாளர்க்கு இன்பம் தரும் விருந்தாக உள்ளது.

O

தனி ஒருவனுக்கு உணவில்லை எனில் உலகினை அழித்திடுவோம் என்று கூருமல், கவிஞர், 'ஜகத்தினை அழித்திடுவோம்' என்று கூறியதற்குக் காரணம் உரைப்பவராக அந்த சிம்பலிசம் ஆசிரியர், 'ஜகத்' என்ற சொல்லுக்குரிய பொருளைச் சுவாமி சித்தீஸ்வரானந்தரின் **meditation through yoga vedanta** என்ற நூலிலிருந்து மேற்கோள் காட்டுகிறார். அது:

The word 'Jagat' by which the universe is signified implies in fact that perpetual movement of things. They constitute current of forms. It is therefore, towards the central reality the static aspect that the aspirant ought to direct his investigation.

இந்த மேற்கோள் வாக்கில் ஆன்மிக வளர்ச்சி பற்றிய குறிப்பு உள்ளது.

''ஜகத்'' என்ற சொல் என்ன தெரிவிக்கிறது?

அது இந்தப் பிரபஞ்சத்தில் உள்ள பொருள்களின் இடையரு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இயக்கத்தைத் தெரிவிக்கிறது. பொருள்கள், ஓய்விலாது தோற்றங்களை அடுத்தடுத்துத் தாங்கி வருகின்றன. ஆகவே சாதகன் என்ன செய்யவேண்டும்? நிலையாக உள்ள சக்தியை, நடுவணதாக இருக்கும் உண்மையை, நோக்கித் தன் விசாரணையை நடாத்த வேண்டும் —

இது ஆன்மிக சாதகனுக்குச் சித்தீஸ்வரானந்தர் கூறும் வழித் துணை வாக்கு.

இந்த ஆன்மிகம் குறித்த மேற்கோளின் வழி, பாரதியின் 'ஜகத்'தினைப் பற்றிச் சிந்திப்போம். சமுதாயமானது, ஆதி காலத்தில் ஒருவகைச் சமதருமத்தில் இயங்கி வந்தது. பிறகு நிலவுடைமை கால் கொண்டது. தொழிற்புரட்சிக்குப் பிறகு முதலாளித்துவம் மேலோங்கி நிற்கின்றது. நம்முடைய நாட்டில் இந்த மாறுதல்கள் — சமுதாய மாற்றங்கள் — ஓரளவு ஏற்பட்டன. அங்ஙனம் ஏற்பட்டதோடு பழைய அமைப்புகளின் மிச்ச மிகுதிகளும் பலத்துடன் இருந்து வருகின்றன.

இந்தப் பழைய அமைப்புகளுக்கு விடைகொடுத்து அறிவியல் ஆக்கமான சமதருமத்தைக் கொண்டுவர வேண்டும். அதுவே நிலையான சிறப்பை — நீள் இன்பத்தைக் — கொடுக்கும்.

இந்தக் கருத்துக்களை உள்ளடக்கியே 'ஜகத்' என்ற சொல் வந்திருக்கிறது என்று கருதலாம்.

இதனால்

படிமுறையிலான மாறுதல்களைத் தெள்ளத் தெளிவாக எதிர் பார்த்துப் பாரதியார் அந்தச் சொல்லை ஆண்டார் என்று கூற முடியாது. ஆயினும், மாறுதல் என்பது பிரபஞ்ச இயற்கை; தீய அமைப்புகளைத் தீர்த்துக் கட்டி, ஆக்கம் தரும் சீரிய அமைப்பை — கிருத யுகத்து வாழ்வு போன்ற நல்வாழ்வை நாட்டவர்க்கு நிரந்தரமாக அளிக்க வல்ல பொதுவுடைமை அமைப்பை — ஏற்படுத்த வேண்டும் என்ற அடிப்படைக் கருத்து கவிஞர் நெஞ்சின் இடையறாத் துடிப்பாக இருந்ததால் அந்தக் கருத்திற்கு உகப்பவே 'ஜகத்' என்ற சொல்லை விரும்பி இவ்விடத்தில் கையாண்டார் என்று உறுதியாகக் கூறலாம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

○

எல்லா உயிர்களிலும் நானே இருக்கிறேன் என்றுரைத்தான் கண்ண பெருமான்.

—இதனையே காக்கை குருவி எங்கள் சாதி — நீள்
கடலும் மலையும் எங்கள் கூட்டம்

என்று பிரபஞ்சம் அளாவிய கருத்தாக ஜெயபேரிகை என்ற வேதாந்தப் பாடலில் கவிஞர் விரித்து விளம்பியுள்ளார்.

அவர் பகவத் கீதைக்குத் தந்துள்ள தமிழாக்கத்தின் முன்னுரையில், 5 ஆம் இயலின் 18 ஆம் நூற்பாவை எடுத்துக் கூறி,

''எனவே கண்ண பெருமான் மனிதருக்குள் ஜாதி வேற்றுமையும் அறிவு வேற்றுமையும் பார்க்கக் கூடாது என்பது மட்டுமேயன்றி எல்லா உயிர்களுக்குள்ளேயும் எவ்வித வேற்றுமையும் பாராதிருத்தலே ஞானிகளுக்கு லட்சணம் என்று சொல்லுகிறார்...

ஏற்றத் தாழ்வு பற்றிய நினைப்புகள் உடையோர் எக்காலத்தும் துக்கங்களிலிருந்து நிவிர்த்தியடைய மாட்டார்... எல்லாவித வேற்றுமைகளும் நீங்கி நிற்பதே ஞானம்; அதுவே முத்திக்கு வழி'' என்று தெளிவு படுத்துகிறார்.

வேதாந்தம் இங்ஙனம் அறிவு பூர்வமாகவும் அன்பு பூர்வமாகவும் சமத்துவத்தைப் போதிக்கிறது, வலியுறுத்துகிறது என்பதனை ஈங்குப் பாரதியார் வாயிலாகவும் அறிந்து கொள்கிறோம்.

○

இந்தப் 'பாரத சமுதாயப்' பாடலில் கூறப்படுகின்ற சோஷலிசம், வேதாந்த சோஷலிசமாகும் என்று 1931 இல் எழுதினர் சுத்தானந்த பாரதியார். அது மனம் கொள்ளுதற்குரியது.

பாரதி ஒரு வேதாந்தி. வேதாந்தத்தை விட்டுப் பாரதியாரைப் பிரித்துப் பார்க்க முடியாது. அங்ஙனம் பார்ப்பது திசை மாறிய

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

திறனாய்வுப் பார்வையாகும் அல்லது திசை மாற்றும் திறனாய்வுப் பார்வையாக இருக்கும்.

விடுதலை, முத்தி, சுயராச்சிய சித்தி என்பன தொன்றுதொட்டு நம் நாட்டு மெய்ஞ்ஞானிகளால் மானிடத்திற்கு முன் நிறுத்தி வைக்கப்பெற்ற இலட்சியங்களின் பெயர்களாகும். அவை தனி மனித விடுதலை, சீவன் முத்தி, கேவலப் பேரடைவு என்பவற்றையே குறித்து வந்தன.

தேசம், விடுதலையை நோக்கி அடிமேல் அடிவைக்கத் தொடங்குகையில், இந்த நாட்டுத் தேசபக்தரும் மெய்ஞ் ஞானிகளுமாகத் துலங்கிய சிலர், விடுதலை, முத்தி, சுயராச்சிய சித்தி என்பவற்றைத் தேசத்துக்குரிய குறிக்கோள்கள் ஆக்கினர்; தாங்கள் வழக்கம் போல் ஆன்மிக விடுதலைக்கும் முயன்று வந்தனர்; பெற்று மகிழ்ந்தனர். ஆன்மிக விடுதலை பெற்று அந்தமில் இன்பத்து அரசாள் வேந்தராக இருந்தும் அவர்கள் தேச விடுதலையை — சமத்துவத்தை — வேதாந்த விழுப்பொருளை வலியுறுத்தி வழிகாட்டினர்; போராட்டத்தி லும் பங்கு பெற்றனர். விவேகானந்தரும் நிவேதிகா தேவியாரும் இதற்குத் துலாம்பரமான சான்றுகப் பலராலும் அறியப் பட்டவர்கள்.

இன்னொரு பக்கம், தேச விடுதலையை எண்ணிக் கவியும் கட்டுரையும் எழுதியவர்கள், பத்திரிகைப் பணிபுரிந்தவர்கள், அரசியல் கிளர்ச்சிகளில் ஈடுபட்டவர்கள் நாளாவட்டத்தில் ஆன்மிக வேட்கை கொண்டு அப்பக்கம் அடியெடுத்துச் சிற்பர நாட்டத்தில் நிலைபெற்றனர். சிவா, பாரதி, நீலகண்ட பிரம்மச்சாரி, அவருள் ஒரு சிலர். காந்தியப் பணிக்கூடங்கள், அரவிந்த ஆசிரமம், இராமகிருஷ்ண இயக்கம் முதலியவை இத்தகு வேட்பாளரைத் தம்பால் ஈர்த்தன. அவர்கள் பேரும் விளம்பரமும் வேண்டாராகிப் பொதுநலம் கருதித் துறவறம் பூண்டனர்.

○

பாரதியாரை வேதாந்தி என்று கூறுங்கால், அவரை வேதாந்தச் சிமிழில் அடைக்க வேண்டாம் என்று வ. ரா. கூறியதைத் தொடர்ந்து பலரும் எழுதி வரும் வாடிக்கை நம் நினைவுக்கு வருகிறது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வேதாந்தம் என்பது சிமிழும் அன்று; குமிழும் அன்று. அது 'வியனுலகு அனைத்தையும் அமுதென நுகரும் வேத வாழ்வில் தெள்ளி எடுத்த நல்லமுது. மாந்தர் கடைப்பிடித்து ஒழுகவல்ல வாழ்க்கை வழி; கடைத்தேற்றம் அளிக்க வல்ல சீரிய வாழ்க்கை நெறி; மெய்யறிவு புகட்டும் மேலாம் கலாசாலை; ஞானமும் விஞ்ஞானமும் பிணைந்து மானிடத்தை மேம்படுத்தற்குக் கைகொடுக்கும் நுண்மைத் தொழிற் கூடம்.

வேதாந்த மானது, பொதுவுடைமைக்கு மாறானது அன்று. ஆயின், பொதுவுடைமை நோக்கினர் வேதாந்தத்தை எதிர்க்கின்றனரே எனில் அஃது அரசியல் பொய்கையில் கிடைக்கலாம் சிறுமீன்களாகிய ஆதாயம் கருதியதாக இருக்கலாம்; அன்றி வேறு காரணங்களும் இருக்கலாம்.

ஆனல் வேதாந்தமோ, கோயில்— பூசை; மடம்— மடாதிபதி, மதப்புரட்சி — மதவாதிகளின் ஆட்சி என்பவற்றை எதிர் பார்த்து நிற்கவில்லை. அவை எல்லாம் வேதாந்தத்திற்கு உறுதுணை புரியலாம். ஆனல் அவற்றின் உதவியை எதிர் பார்த்து நிற்கவில்லை வேதாந்தம். ஆகவே தான் சொல் கிறோம். வேதாந்தம் பொதுவுடைமைக்கு எதிரானது இல்லை யென்று. அதற்குப் பதில் பரிவோடு மனிதாபிமானம், மனித குலத்தின் நலன் கருதிப் பொதுவுடைமையை வரவேற்கவே செய்யும் வேதாந்தம்.

அவ்வாறே பொதுவுடைமையானது, வேதாந்தத்தை அறிவு பூர்வமாகப் போற்றி உணர்ந்து வரவேற்க வேண்டும். வேதாந்தமே இந்தியாவின் அருவுருவம். அதனைப் போற்ற விடில் பொதுவுடைமை இங்கு வெற்றி பெறவோ, ஏன், காலூன்றவோ கூட முடியாது.

தனக்கு வேண்டாத சிலரை எதிர்க்கத் தொடங்கி — பிறகு அந்தக் கூட்டத்தார் அனைவரையும் எதிர்த்து அதுவும் வெற்றி பெறுத நிலையில் சமயம் கோயில் தத்துவம் எனும் யாவற்றையும் தாக்கித் தாக்கிப் பிறகு, சிறு தொலை ஒருவழிப் பயணத்தில் எதிர் நின்ற பெரிய குறுக்குச் சுவரினைக் கண்டு, போன வழியிலே திரும்பி வந்து விடுதல் போன்று பின்னடித்து விட்ட தமிழகத்து நாத்திகமும் சரி,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பொருள் முதல் வாதமும் சரி,

கருதரிய தியாகங்கள் புரிந்தாலும், வேதாந்த மெய்யறிவைப் போற்றிக் கொளாவிடில், அவை கருதிய பயனை அடைய மாட்டா என்பது நிச்சயம். அதனைக் கடந்த காலத்து வரலாறு உள்ளங்கை நெல்லிக்கனியாய்க் காட்டி நிற்பதைக், கண்டு கொள்ளுதல் கடினம் அன்று. அதனை ஓராது மேலும் மேலும் அவை வேதாந்த விழுதுகளை வெட்டி வீழ்த்த முயன்றால் அவற்றுக்கு நன்மை வராது என்பது மட்டுமன்றி வேறு பிற சக்திகளுக்கு அவை ஒரு கால் ஆக்கம் தரலாம். அந்தச் சக்திகள் தாமும், வேதாந்தம் போன்று பொதுவுடைமைக்கோ உலகியற் கொள்கைக்கோ வரவேற்புக் கொடுக்க மாட்டா; மாறாக, பொதுவுடைமைக்கு வேரிலே வெந்நீரைப் பாய்ச்சும் என்பதை அறியத் தவறலாகாது.

○

வேதாந்தம். பொதுவுடைமையை வரவேற்கும் என்பதற்குப் பாரதியாரே மலைபோன்ற ஒரு சான்றாக உள்ளார்! வேறு என்ன இங்கு வேண்டும்?

○

இனி, கண்ணனைப் பற்றிப் பேசுமிடத்து, நான்கு வருணங்களையும் நானே உண்டாக்கினேன் என்கிறாரே கண்ண பெருமான் என்றொரு கேள்வி இங்கு எழத்தான் செய்யும்.

நான்கு வருணங்கள் என்பவை நிற வேற்றுமையோ பரம்பரைத் தடைச்சுவரோ அல்ல எனவும் செய்தொழில் ஆற்றலைக் குறித்து வருவன எனவும் பெரியவர்கள் அதற்கு விளக்கம் தருகிறார்கள். அறிவுழைப்பு, படைத்தொழில், வாணிகம், உடலுழைப்பு எனப்படும் இந்த நால்வகை அமைப்பும் ஏதாவது ஒரு வடிவில் சமுதாயத்தில் இருந்து வரும் என்று ஒரு சமயம் திரு. வி. க.வும் எழுதினார்.

அங்ஙனம் இருப்பினும் இவ்விடத்து, பி. இராமமூர்த்தி ஒரு சமயம் வேடிக்கையாகவும் வேதனையாகவும் கேட்ட கேள்வி ஒன்று நம் நினைவுக்கு வருகிறது. அவர் கேட்டது,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இந்த நால் வருணத்தை வேறு எந்த நாட்டிலாவது கண்ண பெருமான் உண்டாக்கி இருக்கக் கூடாதா? சண்டை சச்சரவு கள், வேற்றுமைகள், கலகங்கள், குழப்பங்களை அங்கே உண்டாக்கி யிருக்கக் கூடாதா? பாவம், இந்தியாதானு அவருக்கு அகப்பட்டது? ஏழை நாட்டில் தானு அவரது ஏற்றத் தாழ்வுச் சோதனையைச் செய்யவேண்டும்? என்ப தாகும். நமக்கும் அவ்வாறே கேட்கத் தோன்றுகின்றது.

நல்ல நோக்கத்தோடு அவ்வப்பொழுது புதிய அமைப்புகள் ஏற்படுத்தப்படுகின்றன. அவை எவ்வளவு நல்லனவாக இருந்தாலும், எவ்வளவு உறுதிபெற அமைக்கப்பட்டிருந் தாலும், ஆன்றோர்களின் திருக்குறிப்புக்கேற்ப உருவாக்கப் பட்டிருந்தாலும் நாளாவட்டத்தில் ஊழலுக்கு இடமாகி விடுகின்றன. காலம் இருக்கிறதே, அதன் பிடியில் அகப் படாத அமைப்பு எதுவும் இருக்க முடியாது! காலத்துக்கு எதுவும் தப்பமுடியாது. அது எதன் மீதும் கறைபடியச் செய்து விடும் என்று ஆர்தர் அரசன், கருணை மறவனுள பெடிவியரிடம் கூறுவதாக டெனிசன் எழுதியிருப்பது முற்றவும் சரியேயாகும்.

ஆகவே, வேதாந்தத்தை, செய்ம்முறை வேதாந்தமாக—கடைப்பிடித் தொழுக வல்ல வேதாந்தமாக—நடைமுறை வேதாந்தமாக—ஆக்கிய விவேகானந்தரின் சிந்தனைக்கு இணைகரமாகச் சிந்திக்கின்ற நம் கவிஞர் நால் வருணத்தை ஒரே வருணமாக்கி விடுகிருர்.

எல்லாரும் இந்நாட்டு மன்னர்-நாம்
எல்லாரும் இந்நாட்டு மன்னர்—ஆம்
எல்லாரும் இந்நாட்டு மன்னர்—வாழ்க

என்று கவிதை அழகோடு துணிவுபெற நிலைநாட்டுகிருர். பழமையில் புதுப்போக்கைக் காட்டிவிடுகிருர்.

''வருங்கால இந்தியா'' என்ற நூலில் விவேகானந்தர் தாமும், 'இனிப் பாட்டாளி மக்களின் ஆட்சியே நடக்கும். அங்ஙனம் வரப் போவதனை எந்தச் சக்தியாலும் தடுத்து நிறுத்தி விட முடியாது' என்று குறிப்பிட்டார். அந்தண் ஒளி யும் அரச வீறும் அனைவரும் எய்த வேண்டும் என்று தெரிவித்த

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அவர் எல்லோரையும் மேலோராக உயர்த்த வேண்டும் என்றும் கட்டளையிட்டார்.

பாரதியார் இந் நாட்டு மக்களை 'எல்லாரும் இந் நாட்டு மன்னர்!' என்று முரசறைந்து பிரகடனம் செய்கிறார்.

ஆரார் என்பவர் (சிம்பலிசம்) எழுதியது போலச் சமத்துவத் தராசை இந்தப் பாடலில் மிகச் சரியாகப் பிடித்துள்ளார் கவிஞர்.

இது பாரதியாரின் கீதை; நவீன கீதை; நம் அனைவர்க்கும் உரிய கீதை ஆகும்.

இவ்வாருகக், கவிஞனுக்குரிய கற்பனை, தொலைநோக்கு, வரலாற்றுணர்வு, சமுதாயச் சிந்தனை, மரபு அடிப்படை, புதியன கண்டபோது வரவேற்றல், உறுதிப்பாடு என்பன பாரதியாரை இடையருது இயக்கிக் கொண்டிருந்தன என்பதனை இப் பாடல் நமக்குத் தெரிவிக்கிறது.

○

இனி, இந்தப் பாடலைச் செவி குளிரக் கேட்டுச் சிந்தை கிளர்ந்த பெரியோரின் சான்றுரைகள் ஒன்றிரண்டை ஈண்டுத் தருவது வாசகர்க்கும் அந்த அனுபவம் கிடைத்தற்குத் துணை தரக் கூடும். அந்த வகையில் முதலாவதாக, சக்கரைச் செட்டியாரின் கூற்றைக் கவனிப்போம்:

"பாரதியாரின் கடைசித் தோற்றம், கடற்கரையில் நடந்த ஓர் ஒத்துழையாமைக் கூட்டத்திலாகும். அவரைத் தமது பாடல்களில் ஒன்றைப் பாடும்படி ஜனங்கள் கேட்டபோது, 'பாரத சமுதாயம்' என்ற பாட்லைப் பாடினர். அப்பாடல் துணிவான கருத்தும் உயர்ந்த மன எழுச்சியும் பொருந்தியதாகும். அதில் பின்வரும் அடிகள் என் மனத்தை மிகமிக இளக்கின:

இனியொரு விதி செய்வோம்—அதை
எந்த நாளும் காப்போம்
தனியொருவனுக் குணவில்லையெனில்
ஜகத்தினை அழித்திடுவோம். (வாழ்க)"

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

O

இனி, வ. ரா. வின் சொற்சித்திரத்தை காண்போம்:

'பாரதியாரின் சொற்பொழிவு வெறும் பிரசங்கமா? அது சண்டமாருதம் அல்லவா?' என்று அவர்களில் (சென்னை இளைஞர்களிற்) பலர் சொல்ல நான் கேட்டிருக்கிறேன்.

இவ்வாறு கூட்டப்பட்ட கூட்டங்களில் ஒன்றில் ஸ்ரீ சத்திய மூர்த்தியும் இன்னொருவரும் (அவர் பெயர் நினைவில்லை) முதலில் பேசிவிட்டார்கள்.

அது பாரதியாருக்காகவே கூட்டப்பட்ட கூட்டம்—என்பதைக் கூடக் கவனிக்காமல் சத்தியமூர்த்தி துடுக்காக, 'நீங்கள் வழக்கமாகக் கேட்கும் பாரதி நாளைக்குப் பேசுவார். இன்றைக்கு இத்துடன் கூட்டம் முடிவுபெற்றது' என்று அறிவித்து விட்டுப் போய்விட்டார். ஆனால் கூட்டம் கலையவில்லை.

பாரதியார் எழுந்திருந்தார். ஸ்ரீமான் சத்திய மூர்த்திக்கு அழகான சொற்களில் விதரணையாகச் சன்மானம் கொடுத் தார். பிறகு காட்டாற்று வெள்ளம் கரைபுரண்டு ஓடுவதைப் போல், ஓயாது என்று சொல்லும்படியான கர கோஷங்களுக் கிடையே, பாரதியார் பிரசங்க மாரி பொழிந்தார். அன்றிரவு கூட்டம் கலையும் பொழுது மணி பதினொன்று இருக்கும்.

அன்றைக்குத்தான், என்றும் உயிரோடு இருக்கக் கூடிய 'பாரத சமுதாயம் வாழ்கவே!' என்ற அற்புதப் பாடலைப் பாரதியார் பாடினார். கூட்டம் பதினொரு மணி வரையில் கலை யாமல் இருந்ததற்கு வேறு காரணமும் வேண்டுமா?

பாரதியாரைப் பின் காலத்தில் புகழ்ந்து கொண்டாடின ஸ்ரீ சத்திய மூர்த்தி கூட அக் காலத்தில் சரியானபடி அவருடைய பெருமையைத் தெரிந்து கொள்ளாமற் போனது தான் ஆச்சரி யம். சத்திய மூர்த்தியாக இல்லாவிடின், சகஜமாக நேரக் கூடிய சம்பவந்தான் என்று இதைப் பற்றிக் கவனம் செலுத் தாமலே விட்டிருக்கலாம். சத்திய மூர்த்தியின் சம்பந்தம் இருந்ததால் இதைப்பற்றிச் சொல்ல நேர்ந்தது. மேலும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

''பாரத சமுதாயம் வாழ்கவே'' என்ற அமுதமயமான பாடல் அரங்கேறிய நாளையும் வகையையும் குறிப்பிட வேண்டுமல்லவா? அதற்காகவும் இந்தச் சம்பவத்தைச் சொல்ல நேர்ந்தது...

மேலும் வ. ரா,

> ''தனி ஒருவனுக்கு உணவில்லையெனில்
> ஜகத்தினை அழித்திடுவோம்

இவ்வளவு அன்பும் ஆத்திரமும் பொங்கி வழிந்த கவிஞனை (பாரதியைத் தவிர) நீங்கள் பார்த்ததுண்டா? அல்லது கேள்விப் பட்டதுண்டா? எல்லாரும் இந் நாட்டு மன்னர் என்று பெருமையோடு சொல்லிக் கொள்ளும் சக்தி பாரதியாரின் தனிப் பொக்கிஷமாகும்''

எனவும் எழுதியுள்ளார்.

O

இவ்வாறு சக்கரைச் செட்டியார் (சென்னைக்) கடற்கரை யிற் கேட்டு உளம் உருகியதாகவும், வ.ரா அங்ஙனமே கடற்கரையில் அரங்கேறியதாகவும் கூறியுள்ள இந்தப் பாடல்,

பாரதியார் புதுவையில் இருக்கும் பொழுது 'புதியவருஷத்தில் புதிய பாடலைக்' கேட்கச் சொல்லித் தமது வீட்டிலே வவேசு அய்யரும் மற்றவர்களும் இருக்கும் பொழுது பாடிக் காட்டி னார் என்று யதுகிரி அம்மாள் தம் 'பாரதி நினைவுகளி'ல் எழுதியுள்ளார். பாடலின் தோற்றம் பற்றி அவர் கூறுவது பொருத்தமானது. அதற்கு மேல் வேறு சான்று தேவை கிடை யாது. அதனைச் சுருக்கமாகக் காண்போம்:

ஆண்டுத் தொடக்கம், ஒரு நாள். பொங்கல், வேளாண்மை, தானியங்கள், பற்றிப் பேசிக் கொண்டிருந்தார்கள். பேச்சு முடியும் தருணத்தில் பாரதியார், 'புது வருஷம் பிறந்ததே, புதிய பாட்டு கேட்பதில்லையா?' என்று சொல்லிவிட்டு,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'பாரத சமுதாயம் வாழ்கவே!' என்ற புதிய பாட்டைப் பாடினர்.

மேலும் சிறிது நேரம் வேறு ஏதோ பேசிக் கொண்டிருந்த பின் அய்யரும் மற்றவர்களும் பாரதியின் வீட்டினின்று தத்தம் வீடு நோக்கிப் புறப்பட்டார்கள்.

வ. வே. சு. அய்யர். 'இதில் பாரதி, தனி ஒருவனுக்கு உண வில்லை எனில் ஜகத்தினை அழித்திடுவோம்' என்று பாடியிருப்பது புகழத் தக்கதே என்று வழி முழுதும் அந்தப் பாட்டின் பொருளைத் தனக்குத் தெரியும்படி சொன்னர் என்று யதுகிரிஅம்மாள் எழுதியுள்ளார்.

○

கடைசியாகப், பொதுவுடைமை என்ற வார்த்தை பற்றி ஒரு வார்த்தை.

பாரதியார் பத்திரிகையாளர்.

பத்திரிகையாளர்கள், புதுச் சொற்களை வேகமாக உருவாக்கி விடுவார்கள். பிறர் உருவாக்கி விட்டவற்றை விரைந்து எடுத்துப் போற்றிக் கொள்வார்கள். பழைய சொற்களில் தோன்றல் திரிதல் கெடுதல் செய்தோ, ஒப்புமைப் போலியா கவோ வேறு வகையாகவோ தேவையான சொற்களைப் புழக் கத்திற் கொண்டு வந்து விடுவார்கள்.

இந் நிலையில், பொதுவுடைமை என்று இந்தப் பாடலில் வரும் சொல், தமிழ்க் கவிதையில் முதன்முதலாகப் புழக்கம் பெற்றிருக்கிறது. பொதுமை என்பது சங்ககால முதலே உண்டு. இந்தப் 'பொதுவுடைமை'யைப் பாரதிதான் உருவாக்கினரா, உருவாகி வந்ததைப் பயனுறச் செய்தாரா என்று திட்டமாக நம்மால் சொல்ல முடியவில்லை.

ஆயினும், மூத்த தேசபக்தர், போராட்ட வீரர், பத்திரி கையாளர் என்ற நிலையில் எழுச்சியோடு இருக்கும் ம.பொ.சி. பின்வருமாறு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

''மகாகவி பாரதியார் 'சுதந்திரம்' என்பதனை 'விடுதலை' என்றும், 'கம்யூனிசம்' என்பதனைப் 'பொதுவுடைமை' என்றும் தமிழில் கூறினர். பாரதியார் புதிதாகத் தந்த இந்தச் சொற்கள் தமிழக அரசியல் வட்டாரத்தில் இன்று மிகுந்த செல்வாக்குப் பெற்றுவிட்டன.

திரு. வி. க அவர்கள் 'பார்லிமெண்ட்' என்ற ஆங்கிலச் சொல்லைப் 'பாராளுமன்றம்' என்றும் 'மகாத்மா' என்பதனை 'அடிகள்' என்றும் தமிழ்ப் படுத்தினர். வ. உ. சி; வவேசு; கல்கி கிருஷ்ணமூர்த்தி ஆகிய தேசிய வாதிகள் ஏராளமான பிறமொழிச் சொற்களைத் தமிழ்ப் படுத்தினர்கள்'' என்று எழுதியுள்ளார்.

ஆகலின், 'பொதுவுடைமை' என்பது பாரதியின் தமிழாக்கமே என்பதனைத் தற்சமயம் நினைந்து மகிழ்கிறோம்.

O

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

21

ஆணை! ஆணை! ஆணை!

- சபதம் கூறிப் போர்க்களம் புகுவதற்குச் சரித்திரத்திற் சான்றுகள் பல உண்டு.
- வஞ்சினக் காஞ்சி என்று தொல்காப்பியம் அதற்குத் துறைப் பெயர் சூட்டியுள்ளது.
- பாரதியார் பாடிய சபதங்கள் இரண்டு. அவற்றுள் ஒன்று மாஜினியின் சபதம் அல்லது பிரதிக்ஞை.

---

21 மாஜினியின் சபதம்

பேரருட் கடவுள் திருவடி யாணை

கருத்து வைப்பு

ஒன்று

பேரருளாளன் ஆகிய கடவுளின் திருவடி மீது ஆணை! எங்களுக்கெல்லாம் பிறப்பை ஈந்து காப்பதும், வையகத்திற்கு விளக்காகத் திகழ்வதும் ஆகிய என் அருமை நாட்டின்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சிறந்த பெயர் மீது ஆணை! தாய்த்திரு நாட்டின் பணி புரிதற்காக வெந்துயர்ச் சுமைகளைத் தாங்கிப் பலவகையிலும் துன்புற்ற வீரர்கள், நாடு வாழ்தற்காகத் தாம் வீழ்ந்த மேலோர்கள் ஆகியோர் மீது ஆணை!

இரண்டு

எனக்கும் என்னுடன் பிறந்த எல்லோர்க்கும் இறைவனால் இயற்கையாக அளிக்கப் பெற்ற நாடு இன்புறும் பொருட்டு அவ் இறைவன் பணித்துள்ள சிறந்து உயர்ந்த அறங்களின் மீது ஆணை! எம் அன்னையைப் பெற்றதும், எமக்குப் பின்னர் வரும் தோன்றல்களையெல்லாம் ஏற்று உறையுளாக இருப்பதும் ஆகிய நாட்டின் மேல் ஆசைகொண்டிருப்பது எல்லார்க்கும் இயல்பல்லவா? அந்த இயற்கையான அன்பின் மீது ஆணை!

மூன்று

தீச் செயல், முறையிலாது வரும் செல்வம், செம்மையிலாத அரசியல், அநீதி ஆகியவற்றின் மேல் இயற்கையாக என் நெஞ்சில் எழுகின்ற பகையுணர்ச்சியின் மேல் ஆணை!

எனக்கு நாடு ஒன்றும் இன்றைக்கு இல்லாது போயிற்று. தூயசீர் விடுதலை மணிக்கொடி பறவாது போனது. இத்தகு நாட்டில் பிறந்திருக்கின்றேன்.

நான்கு

ஆகவே மற்ற நாட்டவர்முன் நிற்கும் பொழுது என் நெஞ்சிலே வெட்கம் மண்டுகிறது. அந்த வெட்கத்தின் மீது ஆணை! முழுமையான விடுதலை பெறுவதற்கென்றே படைக்கப் பெற்று அதனைச் செய்து முடிக்க உரனின்றிச் சுழல்கிறது என் உயிர். அந்த உயிரிலே பொதிந்து கிடக்கும் ஆர்வத்தின் மீது ஆணை! நல்ல தவம் புரியவே இவ்வுயிர் பிறந்திருக்கிறது. ஆயினும் சோம்பற் பண்பால் ஆற்றலற்று இருக்கிறது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஐந்து

அந்த உயிரிலே பொருந்தி அந்தத் தவத்தினை எண்ணி வளர்ந்து கொண்டிருக்கிற ஆசையின் மீது ஆணை!

மிக்க சிறப்பினையுடைய எம் முன்னோரது பெருமையின் மேல் நான் கொண்டிருக்கும் நினைப்பின் மீது ஆணை! இந் நாள் நாங்கள் மெலிந்து வீழ்ந்து கிடக்கும் வீழ்ச்சியாகிய உணர்ச்சியின் மீது ஆணை! பொன்போற் புதல்வர் தூக்குண்டு இறந்தனர். புல்லிய சிறைக் களத்தில் மாண்டனர்.

ஆறு

நாடு கடத்தப்பட்டு உருக்குலைந்து மடிந்தனர். அவற்றைப் பொறுக்க இயலாத எம் நாட்டுத் தாய்மார் அழுகின்ற கண்ணீரின் மீது ஆணை! எதிரிகள் எங்கள் மக்கள் தொகைக்கு வகுத்துக் கூற முடியாத துயர்கள் இழைக்கின்றனர். அந்தத் துயர்களின் மீது ஆணை!

யான் ஏற்ற இந்த ஆணைகள்
அனைத்தின் மீதும்
மேற்கொண்டு புரியும்
சபதங்கள் இவையாகும்:

ஏழு

இறைவன் இந் நாட்டிற்கு அளித்த திருக்கட்டளை, அந்தக் கட்டளையைத் திடம்பட நிலைநாட்ட முயலுதல், இந்தத் தேயத்தே பிறந்தவர்க் கெல்லாம் ஒத்த கடமை — இவற்றின் மேல் பூரணமான நம்பிக்கை கொள்கிறேன்.

விரிந்த உலகில் ஓர் இனத்தை இறைவன் உருவாக்கப் பணிப்பானாகில்.

எட்டு

அது உருவாவதற்கு உரிய திறமையையும் அந்த இனத்திற்கு அளிக்கிறான் என்பதை அறிகிறேன். அந்தத் திறமை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

யைப் பெற்ற மக்கள் தாமும், தம்மைத் தவிர்த்துப் பிறரைத் துணையென்று எதிர்பாராமல் தம் திறமையைத் தாமே பயன் படுத்துதல் வேண்டும், அதனால் வருகின்ற சுமைகளையெல் லாம் பொறுத்துக் கொள்ளுதல் வேண்டும் என்பதுவே வெற் றிக்கு உரிய உபாயம் என்பதை அறிகிறேன்.

ஒன்பது

கடமையைச் செய்தலும் தன்னலத்தைச் சிறிதும் கருதிடாது உழைத்தலுமே தருமம் என்று அறிகிறேன். ஒற்றுமையோடு, தளர்வற்ற சிந்தனை கொண்டிருத்தலே பெருமை சான்ற வலிமையாகும் என்றும் அறிகிறேன்.

இந்த அறிதல்கள், மனத்தினின்றும் பெயர்ந்திடாவாறு உறுதி கொள்கிறேன். அந்த உறுதியின் பேரில், முற்கூறிய ஆணைகளின் மேல் சபதங்கள் உரைக்கிறேன். அவை:

பத்து

என்னொடு கூட அறத்தினை மேற்கொண்டோர் இணக்க முற்றுள்ள இந்த 'வாலிபர் சபை'க்கு உடல் பொருள் ஆவி யெல்லாம் காணிக்கை யாக்குகிறேன். எங்கள் பொன்னாட்டை ஒற்றுமைப் படுத்திச் சுதந்திரம் பெறச் செய்து பிற நாட்டின் சார்பில்லாததாக்கிக் குடியரசாக இலங்கச் செய்வேன்.

பதினொன்று

இக் குறிக்கோள் நிறைவேற இச் சபையாரொடு இணங்கி வேறு தொழில் எதுவும் இன்றித் தவப்பெரு முயற்சி செய்யக் கடவேன் நான். எப்பொழுதும் சொல்லாலும் எழுத்தாலும் கேடிலாச் செயலாலும் இயலும் அளவு எம் நாட்டவர்க்கும் புதியதாம் இந்தச் சபையினது பெருங்கருத்தை அறியுமாறு செய்குவேன்.

பன்னிரண்டு

உயரும் இந் நோக்கம் நிறைவுபெற இணக்கம் ஒன்றே வழி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

யென்பதனையும் வெற்றி நிலைபெற அறமே கடைப்பிடித்தற் கான நெறி யென்பதனையும், எம் நாட்டார் நெஞ்சிற் போற்றுமாறு செய்யக் கடவேன், வேறெந்த ஓர் சபையுடனும் நான் தொடர்பு கொள்ள மாட்டேன்.

பதின்மூன்று

நாட்டின் ஒருமைக்காக, என்னெடும் குறிக்கொண்டு இந்தச் சபையின் தலைவராயிருப்போர் இடும் ஆணைகள் எவ்வெவற் றையும் பணிந்து தலைக்கொள்ளுதற்கு என்றென்றும் கடம் பூண்டிருப்பேன். என் உயிர்போயினும் இவர்களது பணியை வெளியே சாற்ற மாட்டேன். உயரிய செயல் சொல் என்பவற் ருல் அவர்களுக்கு இயன்ற அளவு உறுதுணை புரிவேன்.

பதினன்கு

இன்றும், இனிவரும் நாட்களும் இவற்றை ஆற்றுவதினின் றும் தவற மாட்டேன். இது மெய். இது மெய்.

இவற்றில் பிழையுண்டாக நான் இழுக்குவேன் என்ருல் இறைவன் எனக்கு அழிவைத் தருவானுக! மக்களெலாம் என்னை வெறுத்து இகழ்வார்களாக! பொய்ம்மைக் கேடுகள் என்னை வந்து எய்துமாக! தீ எரியும் எழுவாய் நரகத்தில் வீழ்ந்து நாள்தொறும் நான் உழல்வேனுக!

பதினைந்து

நான் மொழிந்த பெரிய பிரதிக்கினையானது குற்றமின்றி நிறைவேறுமாறு எளியேனது இதயத்தில் இருக்கும் இறைவன் வாழ்த்தி அருளுமாக!

இந்தப் பாடலைப் பற்றி எழுதும் பிரேமா நந்தகுமார்

As a political journalist Bharati had to comment on freedom movements in foreign countries, and these interests were crystallized in the poems on Belgium and

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

Russia, and the well — known poem on Mazzini's oath before the **Association of young Italy** to free the country from alien rule. In fact, "Mazzini's oath" can be read as Bharati himself taking ah oath to free his own motherland from the burden of British rule:

> My wealth, body soul itself
> I cede to 'Youth Association'
> founded for patriots
> determined like myself.
> Our **dharma** will unify
> the motherland, make it free,
> Independent of others
> and a Republic now!
>
> I shall make people
> realise for their good
> Unity is the sole means
> to achieve our goal;
> righteousness the only way
> to make victory endure.
> I shall see that the alien
> rules my land no more.

Foreign (Austrian) tyranny, disunity among the constituent Italian States, the fervour and tribulations of the exiled patriots, all struck responsible chords in the Indian situation, and Bharati's poem exploits the parallaleism in a purposeful way. (Poems of Bharati p.18)

என்று குறிப்பிடுகின்றூர்.

○

இணக்கம் என்ற சொல்லுக்கு, அடைப்புக் குறிகளிடை Association என்று அமைத்துள்ளார் சுத்தானந்த

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பாரதியார். இந்தப் பாடலில் சபதம் பற்றி அவர் எழுதும் பொழுது, 'ஜொசெப் மாஜினியார் இளைய இத்தாலிய வீரரைச் சேர்த்துச் சங்கம் நிறுவி நாட்டுப்பணி புரிந்த நாளில் சங்கத்தின் முன்னே செய்து கொண்ட பிரதிக்கினைகள் எந் நாட்டு வீரருக்கும் ஏற்றவையே. நம் நாட்டில் பிரதாப சிங்கன் அதனினும் தீவிரமான விரதம் பூண்டான் (சுப்ரமண்ய பாரதியார். ப. 106)

என்று சுட்டிக் காட்டுகிருர்.

O

மாஜினி, இத்தலி என்ற பெயர்கள் இந்தப் பாட்டகத்து வரவில்லை. பாட்டில் கருத்து வன்மையும் சொன்னயமும் இருப்பினும் அது நம் நெஞ்சைத் தொட மறுக்கிறது. பாரதியின் ஆவேச முத்திரை இதில் இல்லாமைதான் காரணமோ?

O

எவ்வெவற்றின் மேல் ஆணை என்று ஆணை இடுதல் ஆறு பாக்களில் வருகிறது. 'இன்னது பிழைப்பின் இது வாகியர்' என்ற வஞ்சின இலக்கணம் சரியாக இருக்கிறது. பேரருட் கடவுள் என்பது நல்ல தொடராகும். பேரறிவு பேரின்பம் பெருந்தலைமை பேரருள் என்ற மிகைநவிற்சி உரித்தொடர் கள் இறைவன் ஒருவற்கே உரியன. ஆக்கினை (ஆக்ஞை) பிரதிக்கினை (பிரதிக்ஞை) என்ற தமிழ் வடிவுகள் தக்கன.

O

இந்தப் பாடலை வ.உ.சி. கேட்டுக் கொண்டதன் பின் விரைந்து இயற்றினர் என்பதனை வ.உ.சி தரும் வரலாற்றுக் குறிப் பால் அறிகிருேம்.

''ஒரு நாள் இத்தாலி நாட்டுத் தேசாபிமானி மாஜினியின் தேச ஊழிய யௌவன இத்தாலி சங்கத்தின் அங்கத்தினராகச் சேர்ந்தவர் செய்து வந்த விசுவாசப் பிரமாணச் செய்யுளை ஆங்கிலப் பாஷையில் எனக்குப் படித்துக் காட்டினர். அதைக்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கேட்டதும் நான் சொக்கிப் போனேன்! அச் செய்யுளைத் தமிழ்ப் பாட்டாக மொழி பெயர்த்துத் தருமாறு பாரதியாரை வேண்டி னேன். அவர் அன்றே அந்த இடத்திலேயே அதைத் தமிழில் கவிதையாக மொழிபெயர்த்துத் தந்தார். அது தான் 'பேரருட் கடவுள் திருவடியாணை' எனத் தொடங்கும் பாட்டு. (வி.ஓ.சி. கண்ட பாரதி. பக் 10. 11)

○

இவ்விடத்தில் மாஜினி (1805—1872) பற்றி நினைவுகூர்தல் நல்லது. வெ. சாமிநாத சர்மா தரும் செய்திகள் சிலவற் றைக் காண்போம்.

கி. பி. பத்தொன்பதாம் நூற்றுண்டில் இத்தலி சுதந்திர வாழ்வு பெற்றது. இதற்காகப் பாடுபட்டவர் மூவர். ஒருவன் மாஜினி. இன்னொருவன் கரிபால்டி. மற்றொருவன் காவர். இப்படி வருணிக்கிருன் ஜார்ஜ் மெரிடித் என்ற ஆங்கிலக் கவிஞன்.

இந்த மூவரும் ஒரே இலட்சியத்திற்காக அதாவது இத்தலி யின் சுதந்திரத்திற்காகப் போராடினுர்கள். அதற்காக ஒன்று சேர்ந்தார்கள். ஆனுல் மூவரும் வேறு வேருன சுபாவமுடைய வர்கள், பரஸ்பரம் பகைமையும் பொருமையும் கொண்டவர் கள் ...

மாஜினி புரட்சிகள் பல நடத்தினுன். ஆனுல் தோல்வியே கண்டான். ஒரு சாண் ஏற்றமானுல் இரண்டு சாண் இறக்கம் என்கிற மாதிரி அவனுடைய அரசியல் வாழ்வு இருந்தது. இத்தாலியக் குடியரசுக் கனவையே அவன் கண்டுவந் தான். ஆனுல் முடியரசாகவே பலித்தது. இப்படி யெல்லாம் ஏற்பட்டாலும் அவன் சோர்வடையவில்லை; தன் குடியரசுக் கொள்கையைக் கடைசி மூச்சு இருக்கிறவரை கைவிடவில்லை. எந்த ஒரு விவகாரத்திலும் மனிதத் தன்மையிலிருந்து சிறிது கூட நழுவவில்லை; பணத்திற்கோ பதவிக்கோ புகழுக்கோ தன் ஆத்மாவை விற்றுவிடவில்லை. உண்மைக் கொடியை உயர்த்தியே பிடித்து வந்தான்.

அவன் உள்ளம் அழுக்கில்லாதது, விசாலமானது. குறுகிய தன்மைகளுக்கு அதில் இடமிருக்க வில்லை. இதனுல் தான்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அவன் இத்தலியின் விடுதலையை நாடியது போல், உலக சகோதரத்துவத்தையும் மானிட சமுதாயத்தின் ஒற்றுமையையும் நாடினுன்...

புதிய ஐரோப்பாவின் நிர்மாணகர்களில் ஒருவன் என்று கருதப்படுகிற ஜோசப் மாஜினி (Giuseppe mazzini) 1805இல் ஜூன் 22 ஆம் நாள் ஜெனேவாவில் பிறந்தான். 1830 இல் ஸாவானே சிறைக்கு அனுப்பப்பட்டான். சிறையில் 'யௌவன இத்தலி' (young Italy) சங்கத்துக்கான திட்டங்கள் வகுக்கப்பட்டன. ஆறுமாதச் சிறைவாசத்திற்குப் பிறகு ஸாவோனு சிறையிலிருந்து வெளிவந்தான். உடனே தேசப் பிரஷ்டம். பிரான்சிலுள்ள மார்சேல் (marseilles) நகரம் வந்து சேர்ந்தான். அப்பொழுது வயது 26. 1832 இல் ''யௌவன இத்தலி'' சங்கம் ஸ்தாபிதமானது. ஒரு சிறிய வாடகை அறையிலிருந்து கொண்டு செல்வமும் செல்வாக்கும் இல்லாத ஒரு சில இளைஞர்களைத் துணைவர்களாகச் சேர்த்துக் கொண்டு பணபலமும் ஆயுதபலமும் மிக்க மகத்தான ஆஸ்திரிய ஏகாதிபத்தியத்தின் ஆதரவு நிழலிலே சுய உணர்வு இல்லாமல் படுத்து உறங்கும் பலவர்ணப் பட்சி போன்ற இத்தலியைத் தட்டியெழுப்பத் தீர்மானித்து விட்டான் மாஜினி. என்ன துணிச்சல்! எவ்வளவு தன்னம்பிக்கை! (வெ. சா. சர்மா மாஜினி. ப. 38)

'யௌவன இத்தலி'யின் முக்கிய நோக்கம் ஜனங்களைச் சிந்திக்கச் செய்வது; அவர்களைச் செயலுக்கு உந்துவது.

''ஜனங்களுக்கு அவர்கள் ஏன் இந்தக் கேவல நிலைமைக்கு வந்தார்கள் எப்படி வந்தார்கள் என்பவைகளை எடுத்துக் காட்டி இவற்றிற்குப் பரிகாரத்தையும் சொல்லுங்கள். ஏழை மக்களின் பக்கந்தான் கடவுள் இருக்கிருர் என்பதை அவர்கள் நம்பும்படி செய்யுங்கள். இவ்விரண்டையும் செய்துவிட்டீர்களானுல் உங்கள் இலட்சியம் எளிதில் கைகூடும்'' என்று மாஜினி அடிக்கடி தன் நண்பர்களிடம் கூறுவான். இதனுலேயே, இவன் தேசியத்தை ஒரு மதமாகப் போதித்து வந்தான். ''கடவுளும் மகா ஜனங்களும்'' என்ற இரண்டு வார்த்தைகள் தான் இவனுடைய யௌவன இத்தலி சங்கத்திற்கு இரண்டு அஸ்திவாரச் சுவர்கள் போலிருந்தன.

ஜனங்களைச் செயலுக்குத் தூண்ட வேண்டுமானுல் தலைவர்கள்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கர்ம வீரர்களா யிருக்கவேண்டும். இப்படிப்பட்ட கர்ம வீரர் களைச் சிருஷ்டித்துக் கொடுப்பது ''யௌவன இத்தலி''யின் வேலைகளில் ஒன்று. (வெ. சா. சர்மா. மாஜினி. ப. 36)

O

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

22

உளத்திலே உறுதி கொண்டாய்

○ உருளுக தலைகள் ஓங்குக மானம் ...

○ துயருண்டோ துணிவுள்ளோர்க்கே?

---

22 பெல்ஜியத்திற்கு வாழ்த்து

அறத்தினுல் வீழ்ந்து விட்டாய்

ஒன்று

அறத்தினைக் காக்கத் தலைப்பட்டு அதனுல் வீழ்ந்துபட்டாய்! அன்னியனே வலிமை மிக்கவன். அவன் மறத்தொடு வந்து செய்த கடுமையைப் பொறுத்துக் கொண்டாய். முறத்தினுல் புலியை எதிர்த்துக் காத்த குறிஞ்சி நிலத்துப் பெண் போல எதிர்த்து நின்ருய். வாய்ப்பு வளங்களில் எளிய நிலையில் இருந்தாலும் செய்கையினுல் உயர்ந்து நிற்கின்ருய் நீ!

இரண்டு

பிறர்க்கு உதவும் வள்ளன்மை காரணமாக வீழ்ந்து பட்டாய்!

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கடல் போல வந்த பகைவனது படைகள் உன்னை நெருக்கும் பொழுது நீ மனம் மெலியவில்லை. ஒளி பொருந்திய புகழே உயர்வு என்று உறுதி கொண்டாய். உண்மையை நாடும் கோல நாட்டாரின் உரிமையை அதனால் காத்து நின்றாய்.

மூன்று

மானம் பெரிதென்று மதித்ததனால் வீழ்ந்துபட்டாய்! நன் மதிப்பில்லாத பகைவேந்தன் வானுயர் பெருமை கொண்ட வனேனும் அதற்காக மனக்குறை கொண்டு ஊக்கம் குன்றி ஒதுங்குவது உனக்கு உடம்பாடு இல்லை. இயன்றதைச் செய்வோம் என்று, அவனது வருகைக்கு எதிர்ப்புக் காட்டி நின்றாய்.

நான்கு

வீரத்தைப் போற்றி அதன் காரணமாக வீழ்ந்துபட்டாய்! மேலேயிருந்து மலைப்பாறைகள் உருண்டு வரும் பொழுது அதற்காக ஓரத்தில் ஒதுங்கி ஒளிந்து உன்னைக் காத்துக் கொள்ள உடம்படாமல் பெரிய பாரத்தினை எளிதென எண் ணிக் கொண்டாய்; கொடிய பாம்பினைச் சிறிய புழுவே என் றாய். தக்க நேரத்தில் பகைவனை 'நில்' என்று கூறி முனை முகத்து நின்றாய்.

ஐந்து

நெஞ்சத் துணிவின் காரணமாக வீழ்ந்துபட்டாய்! கணக்கில் லாத படைகளொடும் அவற்றோடு கூடி வளரும் செருக்கினோ டும் பெரும்பகை வந்து எதிர்த்தது. நீ அப்பொழுது பணிதல் என்பதைக் கருதவில்லை; பதுங்குவது பயன்தரும் என்றும் நினைக்கவில்லை. தணிதலும் எண்ணவில்லை. எதிரியை நோக்கி 'நில்' என்று தடுத்தல் செய்தாய்!

ஆறு

அஞ்சுதல் அறிவுடைமை என்று நீ கருதவில்லை. எதிர் பாராது வந்துறும் இடரினை ஒரு பொருட்டாக எண்ணவில்லை. சுருண்டு வீழ்ந்து எழும் அலைகளையுடைய வெள்ளம் போல் எண்ணிலாப் படைகளை நடத்தி மயங்கிய பகைவன் இறு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மாப்புடன் வந்த வேளை ''உருளுக தலைகள், ஓங்குக மானம்!'' என்று எதிர்த்து நின்றாய்.

ஏழு

படை கொண்டு வருவோன் உனக்குப் பகைவன் இல்லை. யாருக்கோ பகைவன் அவன். எவரையோ நோக்கிச் செல்லுகிறான். ஆனாலும் போர்க்கோலம் பூண்டு உன்னுடைய ஊருக்குள் எல்லை தாண்டி உத்தரவு கேளாது புகுந்தான். அவனது 'செருக்குக் காட்டை' வேரோடு வெட்டி வீழ்த்துவேன் என்று நின்றாய்!

எட்டு

வேள்வியில் வீழும் பொருள்களெல்லாம் வீரமும் புகழும் மிக உடையனவாக இவ்வுலகில் மீண்டு வந்து சேரும் என்பது மறைநூல்கள் கூறும் விதி என்று அறிந்தோர் கூறுவர்.

முயற்சியொன்றில் முனையும் பொழுது அறத்தின் காரணமாக அயர்ந்து வீழ்ந்துபட்டோர் மறுபடியும் கிளர்ச்சி கொண்டு எழுவர் என்பது நாம் கேள்வியுற்று அறியவரும் செய்தியாகும்.

ஒன்பது

விளக்கின் ஒளி குன்றிய நிலையில், பொன்னாலாகிய மாளிகையும் இருளில் மூழ்கிக் கிடக்க நேரும். வெயில் ஒளி தோன்றும் வரை அவ்வாறு இருக்கும். பொழுது விடிந்தால் அது பொன்னொளி வீசும். அவ்வாறே. அளக்கலாகாத் தீமை இருள் சூழ்ந்தாலும் அதற்காக அச்சம் கொள்ளாதவர்கள் நடுக்கம் எய்தாமல் ஓங்கி நிற்பார்கள். துணிவுடையவர்க்குத் துயரம் உண்டோ?

குறிப்புகள்

பாரதியார் தம் 32 ஆம் வயதில் இப்பாடலை எழுதியுள்ளார். ''பிறர் துயரைத் தன் துயராப் பேணும்'' வைணவ மாண்பு அவரிடம் ஆழ்ந்து அமைந்திப்பதனை இப்பாடல் தெரிவிக்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கிறது. 'பிறிதினேய் தன்னேய் போல் போற்றும்' அறிவுடைமை மிகுந்திருக்கிறது.

ஆதிக்க வெறி கொண்ட அரக்கன் ஒருவனை எதிர்த்து நிற்கும் இலட்சிய இளைஞன் போல, ஜெருமன் படைகளை உலக முதற் பெரும் போரில் எதிர்த்து நின்றது சின்னஞ் சிறிய நாடான பெல்ஜியம்.

நியாயத்தைக் காக்க முனைந்து அதனுல் வீழ்ந்த பெல்ஜியம் நாட்டின் தார்மீகத் துணிவு பாரதியாரின் கருத்தைக் கவர் கிறது. அறம் வென்ருல் அதற்குப் பாராட்டு அளிப்பதும் தோற்ருல் பரிவும் ஊக்கமும் அளிப்பதும் கவிவாணரது கடமையாகும். அறத்திற்கு அடுத்தடுத்துச் சோதனைகள் வரத்தான் செய்யும்.

இடம் பொருளுக்கு ஏற்ப வளைந்துகொடுத்து எப்படியாவது வாழ்ந்தாற் போதும் என்று எண்ணுவார்க்கு மனத்தின் உறுத்தல் இல்லை. ஆகவே எல்லாம் எளிதாக இயையும். ஆனுல் அறம் மானம் வண்மை இலட்சியம் என்றெல்லாம் எண்ணுவார்க்குச் சத்தியத்தின் சோதனை மிகுதியாக ஏற் படும் ''தருமத்தின் வாழ்வுதனைச் சூது கவ்வும்''. இறுதி வெற்றி அவர்களுக்குத் தான் என்ருலும் இடையில் அவர் களுக்கே இறுதி ஏற்படவும் இடம் உண்டு. அத்தகைய இறுதி இரந்துகொள்ளத் தக்கதே யாகும். புதிய வாழ்வின் தொடக்கம் அது. ஆன்மா புது வலுவுடனும் பொலிவுடனும் மீண்டும் உயிர்த் தெழுதற்கு வாய்ப்பாகும் அஃது.

வீழ்ந்து பட்ட தரும சக்திகள் எவ்வெவற்றுக்கும் ஆறுதலும் ஆன்மிக வூக்கமும் அளிக்கவல்ல இந்தக் கவிதை அந்நாளைய அடிமை இந்தியாவுக்குப் புதிய தெம்பும் துணிவும் தருதற்கு ஒரு தூண்டு கோலாக அமைந்து இருக்க மிகவும் பொருத்த முடையதே யாகும்.

○

''தனது வீர வாக்கால். மந்திரக் கோலால் அதர்மத்திற்குப் பலமான அடி கொடுக்கிருர் பாரதியார்'' என்று இக் கவிதை பற்றிக் குறித்தெழுதும் சுத்தானந்த பாரதியார் ''பிறரை அடிமைப் படுத்துவோர் வீழ்வதும், அடிமை வருந்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தினோர் மீண்டும் துளிர்த்து வாழ்வதும் உலகில் மிகப் பெருஞ் செயல்கள். உலகத்தில் சாப்ராஜ்யங்கள் தங்கள் (அட்டுழியங் களால்) நியாயமாகவே அழியும்; அந்த சாப்ராஜ்யங்கள் மக்கள் நினைப்பினின்றும் மறந்தொழியும். ஆனல் இத்தகைய வீர விடுதலை வீரச்செயல் அழியக் கூடாது'' என்று ஆங்கிலக் கவி சொல்வது நமது கவியின் எண்ணங்களில் மிளிர்கின் றன'' என்று இப்பாடலுக்கு மேற்கோள் காட்டி வரைந்துள் ளார்.

○

''ஜெர்மன் படையெடுப்பை எதிர்த்த பெல்ஜியத்தின் வீரப் போராட்டம் பற்றிய பாரதியின் அழகான பாட்டு, ஆங்கிலக் கவி பைரனின் எழுச்சி மிக்க பாடல் தூண்டுதலின் பயன்'' என்று தெளிந்து நவிலும் ஆசிரியர் வை. சச்சிதானந்தன், ''ஒரு சிறிய நாடு, நாணல் தட்டை போன்றது பெல்ஜியம். அது புயல்போலப் படுஅடி கொடுக்கும் ஜெர்மெனியின் வலிமையை எதிர்த்து நிற்கத் துணிந்தது பாரதிக்கு வியப் பளித்தது. வீழ்ந்தாலும் தன் பெருமையை மெய்ப்பித்தது பெல்ஜியம்... பெல்ஜியத்தின் புனிதப்போர் பற்றிய பாரதி யின் பாடலை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து அந்த நாளில் வெளியிட்டிருந்தால் அவர் ஒரு தற்காலத்துப் பைரன் என்று அழைக்கப்பட்டிருப்பார் என்பது உறுதி'' என்று எழுதியுள் ளார்.

○

''ஆத்ம ஜெயம் பெற்ற பாரதியார் தனது பாரத நாட்டின் வீழ்ச்சியை நினைந்து வருந்துங்கால் பெல்ஜிய நாட்டின் வீழ்ச் சியை நினைந்தும் வாடுகின்ருர். இதுவன்றே உயிர்நேயம்'' என்று பாராட்டும் ப. மீ. சுந்தரம், ''நன்மைக்காகப் பாடு படும் நாடுகளும் மக்களும் நம் பாரதியின் அருமைத் தோழர் கள். அவர்கள் செய்யும் வீரச் செயல்கள் கவிஞர் உள்ளத் திற்குத் தேன் சொரிவன'' என்று மேலும் வரைந்துள்ளார்.

○

ஆறு சீர் விருத்தங்கள் ஒன்பது இந்தக் கவிதையில் அடங்கி யுள்ளன. இதில் மையக் கருத்து ஒன்று. அது ஒவ்வொரு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

செய்யுளிலும் அலையலையாக வந்து அழகுற ஒலிப்பது சுவை நலம் மிக்கு நம் கருத்தைக் கவர்கிறது. குறித்த ஒரே இடத்தில் கற்கள் அடுத்தடுத்து விழுவது போல, முதல் ஐந்து விருத்தங்களின் தொடக்கமும் பரிவுகலந்த பீடுடன் எழுகின்றது. சிறிய வேறுபாட்டுடன் ஒரே அலைவரிசையில் தொடருகின்றது.

அறத்தினுல் வீழ்ந்து விட்டாய் ...
வண்மையால் வீழ்ந்து விட்டாய் ...
மானத்தால் வீழ்ந்து விட்டாய்...
வீரத்தால் வீழ்ந்து விட்டாய்...
துணிவினுல் வீழ்ந்து விட்டாய் ...

அவ்வாறே முதல் ஏழு செய்யுட்களின் இறுவாயும், உயர்ந்து நின்ருய் ... காத்து நின்ருய் .. எதிர்த்து நின்ருய் என்று முடிவதோடு இடையிலுள்ள ஒரே செய்தியும் வேறுவேறு சொற்களால் வேகத்துடன் உணர்ச்சித் திரைகளை எழுப்பிக் கொண்டு வருகிறது,

திறத்தினுல் எளியை யாகிச்
செய்கையால் உயர்ந்து நின்ருய்

என்று வரும், முதற் செய்யுள் இறுதியடிக் கருத்துமுரண் அழகான பாராட்டாக அமைந்துள்ளது. அதற்கு முன்னர் உள்ள

முறத்தினுற் புலியைக் காக்கும்
மொய்வரைக் குறப்பெண் போல

என்பது பொருத்தமான உவமை. 'தமிழ்ப் பெண்மையின் வீரத்தை எவ்வாறு நுட்பமாகக் காட்டுகிருர்' என்று சுத்தானந்த பாரதியார் எழுதியுள்ள குறிப்பு கருதத் தக்கது.

'பாம்பினைப் புழுவே என்ருய்'...
'செருக்குக் காட்டை
வேருக்கும் இடமில்லாமல் வெட்டுவேன்'

என்பன உருவக வழிவரும் நல்ல தொடர்கள்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

''இருளில் மூழ்கும் கனக மாளிகை'' அழகான உவமை யாகும், அதனையடுத்து.

அளக்கரும் தீதுற் ருலும்
அச்சமே உளத்துக் கொள்ளார்
துளக்கற ஓங்கி நிற்பர்
துயருண்டோ துணிவுள் ளோர்க்கே!

என்பது நல்ல ஊக்க மருந்து. ''துணிந்தவனுக்குத் துக்கம் ஏது?'' என்பது வழக்குரை யல்லவா?

○

பத்திரிகைச் செய்திகளைப் படித்துத் தம் படைப்புகள் சில வற்றை உருவாக்கியுள்ளார் பாரதியார் என்பதனைச் சிலர் எடுத்துக் காட்டியுள்ளனர். பெல்ஜியத்திற்கு வாழ்த்து என்ற இந்தப் பாடலும் அந்த வரிசையில் உள்ளது தான். ஆயினும் சிந்தனைக் குரிய ஒரு குறிப்பு, இந்தப் பாட்டகத்து பெல்ஜியம் ஜெருமனி என்ற உரிப் பெயர்கள் சுட்டப் பெறவில்லை. காலக் குறிப்பும் இல்லை. காலத்தையும் இடத்தையும் கடந்து காலங் காலமாக விளங்குதற்கான தன்மையை அதனுல் இது பெறு கின்றது என்று கூறலாம். ''கோல நாட்டார்'' என்ருெரு தொடர் அழகிய நாட்டார் என்று இங்குப் பாட்டுப் பெறும் நாட்டாருக்குப் பாராட்டுத் தொடராக இருப்பினும் அது பெல்ஜிய நாட்டாருக்கு உரியது என்பது உள்நின்று மெல்லத் தெரிவிக்கிறது. Gaul என்பது Celt of ancient Gaul (the area now known as France and Belgium) என்ற பொருளது என்பது இங்குக் குறிப்பிடத் தக்கது.

○

அறத்தாறு ஓம்பலும் வேதத்தின் ஆதாரமும் பாரதியாரின் எழுத்துக்களுக்கு அடிப்படை வலிமையூட்டி நிற்பவை. அவை இலட்சிய நம்பிக்கையும் மனவுறுதியும் ஞானத் தெளிவும் நல்லின்பம் நல்க வல்லவை. இந்தப் பாடலும் அவற்றின் ஒளிச்சேர்க்கை கொண்டுள்ளது.

○

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

23

மனித குலப் 'புதிய ஏற்பாடு'

- யாரும் இப்போது அடிமையில்லை.
- குடிமக்கள் விரும்பும் குடிமை நீதி கொண்ட குடியரசு உதயமாகியது.
- புதிய இன்பயுகம் எழுக!

---

23 புதிய ருஷியா

ஜார் சக்கரவர்த்தியின் வீழ்ச்சி

மாகாளி பராசக்தி உருசிய நாட்டினில்

ஒன்று

மாகாளி பராசக்தி உருசிய நாட்டின் மேல் தன் கடைக்கண் பார்வையைச் செலுத்துகிருள். அவளது அருள்நோக்கு பலிக்கிறது! ''ஆகா!'' என்று வையமும் வானமும் வியக்க அங்கே யுகப் புரட்சி பொங்கி எழுகிறது. அவ்வளவில் கொடிய காலன் அலறி வீழ்கிருன். அமரர்கள் தங்கள் அழகிய தோள்களைத்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தட்டி ஆர்க்கிறார்கள். பேய்கள் கண்ணீரும் வெளிவராதவாறு வருந்திப் புகைந்து மடிந்தன. உலகோரே, இந்தப் புதுமையைக் காண்பீராக!

இரண்டு

உருசிய நாட்டில் இதுகாறும் ஜார் என்னும் பேர் கொண்ட பாவி ஆண்டு வந்தான். தானே அனைத்தும் என்று இரணியன் போல் இறுமாந்து ஆண்ட கொடுங்கோலன் அவன். நாட்டின் நல்லோரும் சான்றோரும் புகலின்றி அதனால் தத்தளித்தார்கள். தருமத்தைப் புல்லென மதித்தான் அந்த மடவன். ஆகவே என்ன நடந்தது? அந்த நாடு காடாகியது. பொய்யும் சூதும் தீமைகளும் பாம்புகள் போல் அங்கு மலர்ந்து வளர்ந்து பெருகின.

மூன்று

உழுது விதைத்து அறுத்துப் பாடுபடுவார்க்கு அங்கு உண்ண உணவு கிடையாது. ஆனால் பிணிகள் பல உண்டு. பொய்யைத் தொழுது அடிமைத் தனம் பேணுவார்க்கோ செல்வங்கள் ஏராளம். உண்மையை எவரேனும் சொல்லத் துணிந்தால் அவர்கட்கெல்லாம் எழுதவொண்ணுக் கொடுமை மிக்க சிறைக் கோட்டம் உண்டு. தூக்குக் கிடைக்கப் பெற்று வாழ்வு முடிவதுண்டு. முழுக்க முழுக்கப் பேய்கள் உலவித் திரிந்த சைபீரியப் பாழ்வெளியில் ஆவிபோக அலைக்கழிபட்டு அழிவதும் உண்டு.

நான்கு

மக்களின் உயிர் நலம் கருதி எவரேனும் 'இம்' மென்னும் ஒலியை மிடற்றில் எழுப்பினால் போதும், சிறை வாழ்வு பெறுவது உறுதி. அதற்கு மேலும் வாயைத் திறந்து 'ஏன்' என்று வினவி விட்டாலோ கொடிய பனிப்பாலையில் வனவாசம் புக நேரும்! இவ்வாறு அங்கே எல்லாம் தலைகீழாகிச் செம்மை நிலை 'சீரழிந்து, அறத்தின் இடத்தில் கொடுமை குடி புகுந்து கோலோச்சி நிலை கொண்டு விட்டது. தக்க தறுவாயில் அன்னை சக்தி உளங் கொண்டாள். மனம் கனிந்தாள். தன் சேவடி பரவும் மெய்யடியார்களை முக் காலத்தும் காக்கும் விழியாலே நோக்கினாள். தொலைந்தான் காலன்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஐந்து

இமயமலை வீழ்ந்து விட்டதோ என்னுமாறு ஜார் அரசன் படு வீழ்ச்சி யடைந்தான். அவனைச் சுற்றி வளைத்துக் கொண்டு சமய சந்தர்ப்பங்களுக்கு ஏற்பப் பொய் கூறி அறத்தை யழித்துச் சதிகளாலே சதிராடி வந்த சார்பிலார் சடசடவென்று உருண்டு வீழ்ந்து நொறுங்கினார்கள். காட்டிலுள்ள நெடுங் காலத்து மரங்களெல்லாம் பெருஞ்சூறைக் காற்றில் வேரோடு பெயர்ந்து உருண்டு பறந்து சிதறினாற் போலப் பொய்யடிமைக் கூட்டம் வீழ்ந்து சிதறி மாண்டது.

ஆறு

அங்கே பாரீர்! பழைய ஊழி படாரென்று முடிகிறது. ஒரு நாழிகைப் பொழுதிலே புதிய குடியரசு எழுகின்றது. குடிமை நீதி மணம் வீசுகின்றது. குடிவாழ்வு மேன்மையுறக் குடியாட்சி மலர்ந்தது என்று உலகறியச் சாற்றப் பெறுகிறது. அடிமைக்குப் பிணிப்பு இல்லை இப்பொழுது. அந்த வார்த்தை எதற்கு? அடிமை என்று இப்போது எவருமே இல்லையே! இதனை அறிவிப்புச் செய்து விட்டார்கள். இடிபட்ட சுவர் போலக் கலி வீழ்கிறான். கிருதயுகம் எழுவது அதனால் உறுதியாகி விட்டது. எழுக கிருதயுகம்! எழுக புதிய இன்ப யுகம்!

○

குறிப்புகள்

○

எடுத்த எடுப்பிலேயே உச்சி நிலையை அடைகிறது நாடகக் காட்சி. பேராற்றலின் இருப்பிடமான காளியின் கண்ணசைவு அதோ தெரிகிறது!

ஆ! ஆ! என்று ஊழிப் புரட்சி உண்டாகிறது. வெடிமருந்துப் பெருங்கிடங்கு வெடிப்பது போன்ற ஓசை கேட்கிறது. கொடுமையின் வடிவான காலன் தூக்கி எறியப் படுகிறான். பேய்கள் புகைமூட்டத்தில் திக்குமுக்காடுகின்றன. வானத்து அமரர்க்கு வரம்பிகந்த மகிழ்ச்சி! வையகம் கண்டு வரவேற்க வேண்டிய புதுமையல்லவா இந் நிகழ்ச்சி!

அமரருள் ஒருவன் அங்குள்ள மேடை மீது ஏறி நிற்கிறான்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

காரண காரிய நியாயங்களை உலகறிய எடுத்து மொழிகிறான். கேளுங்கள்!

நாடகக் காட்சி பின் நோக்கி முன் நிலையைத் தெளிவு படுத்துகிறது.

இரணியன் போன்றவன், தான்தோன்றி, மூடன், பாவி, சால்பின் எதிரி, பாம்புப் பண்ணை அதிபன், கலிபுருடனின் தனிப் பிரதிநிதி அவன்! கண் மூடித்தனத்தின் கடைசி விளிம்பிலிருந்து பொல்லாக் கொடுங் கோல் ஆட்டம் போடுகிறான். கூளிகள் மானிடக் குருதியைக் குடித்து அவன் ஆட்சியில் வெறி நடம் இடுகின்றன.

அன்னையின் பொறுமைக்கு ஒரு முடிவு வந்துவிட்டது. ஒரு பார்வையை வீசுகிறாள். காலன் அலறி வீழ்ந்தான்!

இமயமலை போன்ற ஒரு பேருருவம் வீழ்கிறது. அதனைச் சுற்றிக் கும்மி கோலாட்டம் போட்ட கும்பல் அடியற்ற மரமாக விழுகிறது. மரம் விறகுக் காடாகி விட்டது!
கதை முடிந்தது;

கவனத்துடன் நோக்குங்கள்!

அழிவிலிருந்து ஆக்கம் பிறக்கிறது.

இடிபாடுகளிலிருந்து எழுநிலை மாடங்கள் எழுகின்றன. கொடுமை போனது. நடுவு நிலை சமைகிறது. தன்னலம் அழிகிறது. பொதுமை பூக்கிறது.

தோள்புடைத்த அந்த அமரன் புதிய அறிவிப்பை முழக்கமிட்டுரைக்கிறான்! புதிய குடியரசு, புதிய ஊழி எழுகிறது என்கிறான். வையமறிந்திடா வரலாறு வாழ்க! கிருதயுகம் எழுக! என்று அனைவரும் ஆரவாரம் செய்கின்றனர்.

ஓரிடத்தில் ஒரு கடிகைக்குள் ஒருமித்த பெருஞ்செயல் ஒன்று திடுமென எழுந்து மரமாகிக் கனிகுலுங்குவது போன்ற வியப்புணர்ச்சி ஓங்கிப் புருவங்களை உயர்த்த வைக்கிறது, கால ஒருமை, இட ஒருமை, செயலொருமை என்று முன்னை நாடக நூலார் நவின்ற இலக்கணம் செம்மையுற அமைவு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பெற்று மெய்சிலிர்க்க வைக்கிறது, கவித்திறம் கொழிக்கும் நாடகச் சுவை நலம்!

○

வியத்தகு காட்சி ஒன்றைக் கண்டு பார்வை அதிலே நிலை கொண்டு நின்றாற் போன்று இந்தப் பாட்டின் சொல்லும் பொருளும் ஓசையும் உடங்கியைந்து நம் உள்ளத்தின் உணர்ச்சிகளை ஊக்கி ஒரு பிரமிப்பில் நிறுத்துகின்றன. அந்த உணர்ச்சிகள் நமது நெஞ்சை இறுகப் பற்றிக் கொண்ட பின் விட்டு அகல மறுக்கின்றன. காலப் போக்காலோ கருத்துப் போக்காலோ மனமாற்றம் நேர்ந்தாலும் பாடல் காட்டும் காட்சிகள் மனக் கண்ணிலிருந்து மாற்றம் பெறுவது மிகவும் கடினம். தன் முத்திரையை அப்படிப் பதிக்கிறது இதிலுள்ள முழுமையான மன வெழுச்சி ஓவியம்.

○

1917 அக்டோபர் புரட்சியைப் போற்றிசைக்கும் இந்தப் பாடல் அதற்கு முந்திய நிலைமைகளை யெல்லாம் தன்னுள் அடக்கிக் கொண்டிருக்கிறது. கவிதையல்லவா? வரலாற்றை விழுங்கி வீறுகொண்டு திகழ்கிறது.

○

உலகை உலுக்கிக் குலுக்கிப் புதிய ஏற்பாடு ஒன்றை ஊன்றி உறுதி பெறச் செய்த இந்த நிகழ்ச்சியைத் தீட்டும் இவ்வாறான ஒரு சொற்சித்திரத்தை அது களங்கொண்டு நடந்த நாட்டிலோ அதனை அடுத்துள ஐரோப்பிய நாடுகளிலோ எந்த ஒரு எழுது கோலும் தீட்டியிருக்கிறதா என்பது ஐயமே!

○

பாரதியாரின் வையக உணர்விற்கும் பரந்த மானிட நேயத்திற்கும், புறநிகழ்ச்சியை அகத்தொடு பொருத்தி அடிமனத்தில் அலசியெடுத்து ஆவேசத் தேன் கலந்து கவிதையாக்கும் ஆற்றலுக்கும் இந்தப் பாட்டு ஒப்பற்ற சான்றாக உள்ளது.

○

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

24

பிற்சேர்க்கை

நகைத்தனள் சுதந்திரை

○

நெஞ்சைக் கிழித்து நிலத்தின்மேலே
இரத்தம் பெருக்கித் தேவியின்
தாகத்தைத் தீர்க்க
யார் வருகின்றீர்'' என்று
கேட்டான் குருகோர்விந்த சிங்கமாம்
கோமகன். அப்பொழுது அங்கே
ஒரு வீரர் கூட்டம்
உருவான வரலாறு, உணர்ச்சி மிக்க
நாடகமாகக் கவிஅரங்கு ஏறுகிறது இங்கே.

---

24 குரு கோவிந்தர்

ஆயிரத் தெழுநூற் றைம்பத் தாறு

காட்சி ஒன்று

காலம்: விக்கிரம ஆண்டு. ஆயிரத்தெழுநூற்று ஐம்பத்தாறு.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இடம்: ஆனந்தபுரம்

பாஞ்சால நாட்டில் உலாவுகின்ற சிங்கக் கூட்டத்தை வகுத்து அளித்த குருமணி, அறிவிலே பெருங்கடல், சிறந்த இசைக் கவி, வானம் வீழ்ந்து நொறுங்கினாலும் அதனைத் தன் வாள் முனையாலே தடுத்து நிறுத்தும் வீரர் தலைவன், உலகம் காத்த குருகோவிந்த சிங்கன் என்ற கோமகன், வீரருக்கு அமுதம் போன்ற ஆனந்த புரத்தில் தங்கி யிருந்தான்.

அவனுடைய ஆணையைக் கேட்டறிந்து பாஞ்சாலத்துப் படை வல்லோர் பல திசைகளிலிருந்தும் ஒவ்வொரு நாளும் ஆயிரம் ஆயிரமாக ஆனந்த புரத்திற்கு வந்து சேர்ந்தார்கள்.

செழிப்புள்ள சோலைகளும் புன்னகை பூத்த புதிய மலர்க் கூட்டமும் பசுமை விரிந்த வயல் பரப்புகளும், 'வருக வருக' என்று ஆரவாரம் செய்து அவர்களது வருகையை வரவேற்பது போல் இருந்தன.

இவ்வாருகப் புண்ணிய நாள் ஒன்றில், புகழ் மிக்க குருதேவனின் நன்மொழிகளைக் கேட்கச் சீடர்கள் வந்து சேர்ந்தார்கள். அவன் என்ன உரைப்பான், எங்களுக்கு என்ன அருள் செய்வான், என்ன ஆணை பிறப்பித்து ஏழேழ் பிறவியையும் இன்பம் உடையதாக ஆக்குவான் என்று பலவாருக எண்ணமிட்டவாறு, திருமாலுக்கு முன்னர் அவருடைய ஆணையை அறிவதற்காக விழிகளை உயர்த்தி ஆவலோடு துடித்துக் கொண்டிருக்கும் தேவர்களைப் போல அவர்கள் காணப் பட்டார்கள்.

காட்சி இரண்டு

அப்பொழுது திடுதிப்பென்று அழகிய ஓர் உருவம் அங்கிருந்த பீடத்தின் மீது ஏறி நின்றது. இளமையும் ஆற்றலும் தலைமைத் தகுதியும் அமைந்த உருவம் அது. கண்களிலே தெய்வக் கனல் வீச, அதன் முடியைச் சூழ்ந்து ஒளிவட்டம் திகழ, உயர்த்திய அதன் கையிலே, உரைத்தற்கரிய அச்சம் தரும் கூரிய வாள் இருக்க, எண்ணற்ற வீரர்கள் யாவரும் வானத்தினின்றும் இறங்கிய ஒரு மாந்திரிகனுக்கு முன்னால்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சிங்கக் கூட்டம் ஒன்று திகைத்திருப்பது போல வாய்மூடி அடங்கி அந்த உருவத்தை வணங்கி நின்றுர்கள். அப்பொழுது மேன்மை மிக்க குருதேவனுகிய அவன் தன் கையிலிருந்த வாள் நுனியைக் காட்டித் தன் இதயத்திலிருந்த கருத்துக் களைச் சொல்லத் தொடங்கினுன்.

அவனது அழகிய உதடுகள் அசைந்தன. எரிமலை பொங்கி வருவது போல் வாய்ச் சொற்கள் வெளிவந்தன. அவன் புகலத் தொடங்கினுன்:

இந்த வாளை மனிதர் மார்பிலே குளிக்கச் செய்ய விரும்பு கிறேன். தீராத் தாகம் கொண்ட தருமத் தேவதை குருதிப் பலி கேட்கின்றது. ஆகவே, அன்பர்களே, உங்கள் நெஞ்சைக் கிழித்து நிலத்தின் மீது இரத்தத்தைப் பாய்ச்சி, தேவியின் தாகத்தைப் தணிப்பதற்கு யார் முன் வருகிறீர்கள்?

இந்த வினைவைக் கேட்டதும், சீடர்கள் ஒரு கணம் திகைத்து நடுங்கினுர்கள். ஒருவரும் நா அசைக்க வில்லை. ஒரு கணப் பொழுது கழிந்தது. ஆங்கிருந்த ஆயிரக் கணக்கான பேர் களுள் ஒருவன் முன் வந்தான். ''குருமணியே, உம்முடைய வெற்றி வாளால் நெஞ்சம் கிழிக்கப்படவும் தாகம் தீராத தருமத் தேவதைக்கு நான் இரையாகவும் மாய ஆயத்தமாய் உள்ளேன். ஏற்றருள் புரிக'' என்ருன்.

குரவர் கோமகனின் புனித வதனம் புன்னகை கொண்டது. வந்த வீரனைக் கோயிலுக்குள் கொண்டு சென்றனன். அவன் திரும்பி வரும் பொழுது மடுவிலிருந்து நீர் பெருகி வந்தது போலக் குருதி நீர் பாய்ந்தோடுவதை அங்கிருந்தோர் கண்ட னர்.

அதோ பாருங்கள்! சற்குரு கோவிலிலிருந்து சடுதியில் வெளி வருகின்ருன். முதற்பலியை முடித்து விட்டு முகமலர்ச்சியோடு, மின்னல் போல் பாய்ந்து வருகிருன். அங்கே திரண்டிருந் தோரின் முன்னுல் வந்து நிற்கின்ருன்.

மீட்டும் ஒருமுறை அவன் இரத்தம் தோய்ந்த வாளை வான் நோக்கித் தூக்கினுன். பின்வரும் சொற்களைக் கூறினுன்:

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அன்பர்களே, மானிடரது நெஞ்சில் இந்த வாளைத் தோய்க்க நான் எண்ணங் கொண்டேன், தருமத்தேவி இன்னும் ஒரு பலி வேண்டுமென்று கேட்கிறுள். ஆகவே உங்களுக்குள் இன்னும் ஒருவன் குருதி கொடுத்துக் காளியின் தாகம் தணித்திட முன்வர வேண்டும். அத்தகையோர் யார் இருக்கின்றுர்?

இதைக் கேட்ட அளவில் துணிவுமிக்க வீரன் ஒருவன் தனது இசைவினை விருப்போடு தெரிவித்தான். உடனே அந்தக் குருமகன் இவனையும் கோயிலுள் அழைத்துச் சென்று இரண்டாவதான பலியையும் முடித்துத் திரும்பினன், இதனைக் கண்ட கூட்டம் முழுதும் நடுங்கியது. இவ்வாறே மறுபடியும் மறுபடியும் ஆக ஐந்து பலிகளை மொத்தம் அந்தப் பெரியோன் அங்குக் கொடுத்து முடித்தான்.

காட்சி மூன்று

அறத்தினை நன்கறிந்து அதனைத் தமது அறிவிலே வைத்துப் போற்றும் மானிடர் சிறப்புப் பெற மாட்டார்கள். அறம் தழைத் தோங்கத் தமது நெஞ்சத்தைக் காட்டி வாளால் வரும் குத்தினைப் பெற்று மாய்பவர்களே பெரியவர்கள். 'முக்தர்கள்' எனப் படுவோரும் அவர்களே. இங்குத் தோன்றும் நூருயிரம் தொண்டர்களுக்குள் அத்தகைய நல்லோரைத் தேர்ந்து அறிய விரும்பி, குளிர்ந்த அருட்கடலாகிய குருமணி, கொடுமையான சோதனை செய்யக் குறிக் கொண்டான்.

அன்பின் மிகுதியால் தம் ஆருயிரையும் கொடுக்கக் கூடியவர்கள் ஐந்து பேரைக் கண்ட பிறகு, அத்தகையோர் ஈங்கு எண்ணிலவர் இருக்கின்றனர் என்று துணிந்து மகிழ்ச்சியடைந்தான்.

வெம்மையான செங்குருதி பொழிந்து வீழ்ந்து இறந்து சுவர்க்கம் புக்கனர் என்று எல்லோரும் நினைத்திருந்த ஐந்து நன் மணிகளாம் ஐந்து முத்தர்களையும் கோயிலுக்குள் இருந்து அங்கே கூடியிருந்த அவையோர்க்கு முன்ஞல் உடனே கொணர்ந்து நிறுத்தினன்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தொண்டர்கள் ஆரவாரம் செய்தார்கள். வியப்பு மிகக் கொண்டார்கள். விழிகளைத் துடைத்துக் கொண்டு துருவிப் பார்த்தார்கள், 'ஜெய ஜெய குருமணி' 'ஜெய குருசிங்கம்' என்று கூறி யாவரும் வாழ்த்துப் பாடினார்கள், ஆடினார்கள்.

அருளே பிறப்பெடுத்தாற் போன்ற குருகோவிந்த சிங்கன் கதிரவன் ஒளிபுரிந்தது போலப் புன்னகை பூத்தான். குறைவிலா முத்தர் ஐந்து பேரையும் நெஞ்சுறத் தழுவினான். வாழ்த்துக் கள் வழங்கினான். அதன்பின் அவையினரை நோக்கிக் கடல்முழக்குப் போன்று உரை முழக்குத் தொடங்கினான்:

காளியும் நமது தாய்நாடாகிய அன்னையும் ஒருவரே எனத் தெரிந்து கொண்ட அன்பர்களே, நீங்கள் நடுக்கம் எய்துமாறு நான் ஐந்து தடவையும் பலிகொடுக்கச் சென்றேன். அது வெறும் பாவனைதான். என்னுடைய கையாலா உங்கள் உயிரை வாங்குவேன்? ஐந்து தடவையும் அந்த அன்பர்களை மறைத்து உங்கள் இதயத்தினுள் சோதனை நடத்தினேன் நான். தாய்த்திரு நாட்டின் உண்மையான மைந்தர் நீங்கள் என்பதைத் தெரிந்துகொண்டேன். என்னுடைய கைவாளால் நான் இன்றைக்கு வெட்டியவை ஐந்து ஆடுகளாகும். நான் செய்த சோதனையினால் உங்கள் துணிவினைக் கண்டேன். என் நெஞ்சம் மகிழ்ந்தது. கவலைகள் நீங்கின.

காட்சி நான்கு

குரு கோவிந்தன் ஏற்படுத்திய தருமம், ''சீடர் மார்க்கம்'' என்று புகழ் பெற்றது. இன்றும் அந்த நெறியில் நிற்போரைக் காலசா (கால்சா) என்று அழைக்கிறார்கள். 'கால்சா' என்பதற்கு முத்தர்களின் சங்கம் என்பது பொருளாகும். முத்தருடைய சபைக்கு முதன்மையானவர்களாக முற்கூறிய வீரர்கள் ஐந்து பேரையும் மேலோனாகிய குருகோவிந்தன் அருள் புரிந்தான். காலசா என்னும் சங்கம் உதயம் ஆகியது.

பாரதம் என்ற பழம் பெருநாட்டு மக்கள் ஆவி ஒடுங்கி அழியவில்லை, ஆண்மை அழியவில்லை, வீரமும் பற்றுறுதியும் அழிந்திலர் என்று இதன் வாயிலாக அறியும்படி குருமுனி செய்த

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ன் அந்த (தொல்பழங்) காலத்தில் முகுந்தன் (திருமால்) உலகத்தில் அவதாரம் செய்தது போலத் தெய்விகமான தலைவன் ஒருவன் சிறப்பாகத் தோன்றிக் குற்றமற்ற உயர்ந்த சொற்களால் எழுப்புவானேயாகில் நம் அன்னை இளமையும் துணிவும் கொண்டு எழுந்திருப்பாள் தன் மக்களின் பெருமையை நிலைநிறுத்த முற்படுவாள் என்று குருமுனி உலகினருக்கு இதன் வாயிலாக அறிவுறுத்தினன்.

இறைவன் ஐம்பெருங் கூறுகளால் இந்தப் பேருலகனைத்தையும் உருவாக்கியது போல இப்பொழுது அந்தக் குருமுனி ஐந்து சீடர்கள் வாயிலாக ஒளி பொருந்திய இந்திய இனம் ஒன்றை வகுத்தான். அதனால் அறம் தழைத்தது. கொடுங்கோலர் நடுங்கத் தொடங்கினர். சுதந்திர தேவி நகைத்தனள்.

காட்சி ஐந்து

விக்கிரம ஆண்டு ஆயிரத்தெழுநூற்று ஐம்பத்தாறு.

உயர்ந்த புகழ் வாய்ந்த குருகோவிந்தன் கொற்றம் மிக்க சீடர்களைக் கூட்டித் தெய்விகத் திருவோலக்கம் ஒன்றை ஏற்படுத்தினன். காண்பதற்கு அரிய காட்சி அது. அந்தக் குருமுனி அழகிய அரியாசனத்தில் அமர்ந்தான். உயிர் கொடுக்க வந்த தொண்டர் ஐவரும் அவனைச் சூழ்ந்து இருந்தனர். அவர்களுக்குத் தன் திருக்கைகளால் பொன்னுடை போர்த்து மாலைகள் அணிவித்து மதிப்புச் செய்து கனிவுற வாழ்த்தினன். அங்கிருந்த அவையினரை நோக்கினன்.

""பாரீர்! இவர்கள்தாம் முதல் 'காலசா'. நாடும் அறமும் நன்கு காப்பதற்கு அமைந்தது இந்தச் சங்கம். அறிவீராக! என்று அறிமுகம் செய்தான்.

அங்கு அருகில் ஓடிய ஆற்றிலிருந்து இருப்புச்சட்டி ஒன்றில் தண்ணீர் கொண்டு வரச் செய்தனன். அதனை வாள்முனையினால் அடித்துக் கலக்கி மந்திரம் ஓதினன். வெற்றித் திருமகள் அப்பொழுது அந்த ஓலக்கத்திலே வந்து குதித்து நின்றாள். அவன் தன்னுடைய வாளால் அடித்தானே, அது ஆற்றுநீரா? அன்று. அயர்ந்து போய்க் கிடந்த இந்திய மக்களின் புகழ்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மிக்க திறமைகளை அதன் வாயிலாக இயக்கிப் புத்துயிரை அல்லவா கொடுத்தான்! அதன் காரணமாக நாடே புது இயக்கம் கொண்டது.

வீரர் ஐவரைத் தன் முன்னால் நிறுத்தி மந்திர நீரை அவர்கள் மேல் தெளித்து, அருள் மயமாகி அவர்களது விழிகளைத் தீண்டினான்.

காட்சி ஆறு

உலக மாந்தரே பாரீர்!

மேலோனாகிய அவன் தன் கைகளால் மெய்த்தவ வீரரின் விழிகளைத் தீண்டிய பொழுதே நாடு முழுமைக்கும் நல்வழி தோன்றியது. சீடர்கள் எல்லாம் தீட்சை பெற்றனர். ஐயன் அவர்களைப் பார்த்துச் சாற்றத் தொடங்கினான்;

நீங்கள் அடைந்த தீட்சையின் பெயர் அமிழ்தம் என்று அறியுங்கள். இதனை அடைந்தோர் அரும்பேறு அடைந்தோராவர். நீங்கள் இனிக் கடைப்பிடிக்க வேண்டிய அறத்தை உரைப்பேன், கேளுங்கள்.

கடவுள் ஒன்றே. உலகில் தோன்றிய மானிடரெல்லாரும் உடன்பிறந்தோரே, சமநிலையுள்ளார், விடுதலை உடையார். சீடர்களே, குலத்தாலும் செயலாலும் நீங்கள் அனைவரும் ஒருவரே. பிரிவுகளை அகற்றுங்கள். பிரிவே வீழ்ச்சி. பிரிவே சாவு. நம்மிடையே ஆயிரம் சாதிகள் சொல்லுவோர், சொல்லி அழிக. தருமம் கடவுள் சத்தியம் சுதந்திரம் என்பவற்றைக் காக்கப் பிறந்த வீரர் இனத்தைச் சேர்ந்தோர் நீங்கள்.

அநீதியையும் கொடுமையையும் அழிக்கும் இனம், முகத்தை மழிக்காத வன்முக இனம், இரும்பு வளையம் இறுகிய கச்சை கையினில் வாள் என்பவற்றை அகற்றாத இனம், உடன் பிறப்பு நட்பு தொடர்ந்து சூழும் இனம் உங்கள் இனம்.

உங்களுக்கு அரசன் இல்லை, தெய்வமே அரசு, மானிடர்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

துணேவர், அதருமமே பகை—என்று கொண்டு குடியரசைப் போற்றும் கொள்கை உங்கள் கொள்கை.

அறத்தை வெறுக்காதீர். தீமையைப் பொறுக்காதீர். தாய்த் திரு நாட்டை என்றென்றும் போற்றிப் புகழொடு வாழுங்கள்.

இங்ஙனம் புகன்று இன்பம் கனிய வாழ்த்தினன்.

குருகோவிந்த சிங்கக் கோமகன் நாட்டிய கொடி உயர்ந்து அசையத் தொடங்கியது. உலகம் மகிழ்ந்து புகழ்ந்தது. அவுரங்கசீபின் ஆட்சி அழிந்தொழிய ஆட்டங் கண்டது.

வரலாற்றுக் குறிப்புகள் சில

''கோவிந்தன் பதினைந்து வயதுப் பாலகன். அவன் தலையில் தகப்பனுடைய கொலையைப் பழி வாங்கும் பாரமும் பாரத நாட்டினின்று கொடுங்கோலரசை ஓட்டும் பாரமும் வீழ்ந்தன. இந்தக் கடமைகளை நிறைவேற்றும் ஆற்றலைச் சம்பாதிப்பதற்காக, அவன் இருபது வருஷ காலம் காடுகளில் சஞ்சரித்துக் கொண்டு கல்வி கற்றும் கடுந்தவம் புரிந்தும் வந்தான். தேகபகதூரின் (தகப்பனர்) ஆசீர்வாதம் அவனுக்குப் பரிபூரணமாகப் பலித்தது. நானக தேவனுடைய (நானக் என்ற முதல் குரு) பக்தியும் நிஷ்டா சக்தியும் அவனுக்குச் சித்தித்தன. ஆயுதப் பயிற்சியில் தனக்கு யாரும் இணையில்லை என்று சொல்லும்படி ஒவ்வோர் ஆயுதத்தையும் கையாடுவதில் அவன் நிபுணனகி விட்டான். அவன் விடும் அம்பு ஒன்றே கால் மைல் தூரம் செல்லும் என்று சிஷ்யர் வியப்புடனும் பெருமையுடனும் சொல்லுகிறுர்கள்.

குதிரைகளைப் பழக்குவதிலும் குதிரை மீது சலியாமல் சவாரி செய்வதிலும் அவனுக்கு இணை அவன் தான். அவன் முக்கியமாக வழிபட்ட உபாசனமூர்த்தி சர்வலோக சரண்யையான சண்டிதேவி யாவள். அவன் ஸமஸ்கிருத பாஷையிலும் பார்ஸீ பாஷையிலும் மகா பண்டிதனகி ஹிந்தியில் மகா கவியாகவும் ஆகிவிட்டான். அவனது சண்டி ஸ்தோத்திரம் உயிரற்றவருக்கும் உயிர் கொடுக்கும் வன்மை வாய்ந்தது. தனது ஆத்ம சரித்திரத்தைக் காவியமாகச் செய்து, அதற்கு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'விசித்திர நாடகம்' என்று பெயர் கொடுத்து அதைப் படித்துத் தன் சிஷ்யர்களுக்கு வீராவேசத்தையும் தர்மாவேசத்தையும் அவன் கிளப்பி வந்தான். அவனுக்குத் தைரியம் கொடுக்க ஔரங்கஜேபை நூறு போர்களில் வென்று சத்திர பதி என்னும் மகுடம் சூடிய சிவாஜியின் உதாரணமும், சிவாஜி இறந்த பிறகும் மகாராஷ்டிரரின் தீரத்தைக் குன்ற விடாமல் பாதுகாத்த ராஜாராமன், தாராபாயி இவர்களுடைய உதாரணமும் விளங்கின.

தவம் செய்யச் செய்ய, உபாசனை புரியப் புரிய, அவனுடைய தைரியமும் நம்பிக்கையும் வளர்ந்தன. ''வில்லாளர்களுக்கெல்லாம் அர்ஜ்ஜுனன் எவ்வாறு முதல்வ ஞயினுனே அந்த இரகசியத்தை எனக்குக் கற்பிக்க வேண்டும், அன்னையே!'' என்று மகா காளியை வேண்டி வேண்டியே அவனது வில் திறமும் போர்த்திறமும் வளர்ந்தன.

கற்க வேண்டிய வெல்லாம் கற்ற பிறகு, ஆற்ற வேண்டிய தவங்களை யெல்லாம் ஆற்றிய பிறகு, குரு கோவிந்தராயி தனது முப்பத்தைந்தாவது வயதில் மகா காளியின் பிரசாதத்தைப் பெறுவதற்காக ஓர் மகாயாகம் செய்ய யத்தனித்தான். அந்த யாகம்தான் நாம் இச் சரித்திரத் துவக்கத்தில் வர்ணித்த யாக மாகும்''

என்று குரு கோவிந்த சிங்கன் என்ற நூலில், ஆசிரியர் வ.வெ.சு. அய்யர் 'In medias Res' என்ற காப்பிய மரபுக் கேற்ப யாக வருணனையைக் கூறி, கதைத் தலைவனின் தோற்றம் நிலைமையைத் தெரிவித்துப் பின்

''அவன் தான் குருகோவிந்தன் என்பான்!'' என்று அறிமுகம் செய்து, சீக்கிய (சிஷ்ய) தருமத்தை நிறுவிய குரு நானக் முதல் குரு கோவிந்தன் தந்தை தேக பகதூர், மத மாற்றத்துக்கு இசையாததால் ஔரங்கசீபின் ஆணைப்படி சிரச்சேதம் செய்யப்பட்டது வரையிலான 'பூர்வோத்திரத்தை'ப் புகன்று மேற்காட்டியவாறு விவரம் தெரிவிக்கிருர்.

பாரதியார் இந்த 'யாகபலி'யில் தான் தன் கவிதை நாடகத்தைத் தொடங்கியுள்ளார். அதிலுள்ள செய்திகள் பற்றிச்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சற்றுக் கூடுதலாகத் தெரிந்து கொள்ள வவெசு அய்யரின் நூலை அடிப்படையாகக் கொண்டு இரண்டொன்றை இங்கே பார்ப்போம்.

பலிக்கு யாரும் முன்வராத நேரத்தில் முதலில் வந்தவன் 'அடியேன் ஓர் ஏழைக் கத்திரி (க்ஷத்திரியர்கள் கீழாகப் பாவிக்கிற ஒரு ஜாதி). என் பெயர் தயாலால். என் தேகம் சண்டி தேவிக்கு உகக்குமானுல் நான் ஆயத்தமாக இருக்கிறேன்' என்று கூறிக் கைகூப்பிக் கொண்டு நின்ருன்.

இந்த அற்பனைக் கோவிந்தராயி ஏற்க மாட்டான் என்று பலரும் கருதினர்.

அவனே ஆனந்த பரவசமாயினுன்.

அந்த பலித் தியாகம் ''பிறப்பன்று மேன்மையைத் தருவது, செல்வமன்று பெருமையைத் தருவது, மற்றுத் தியாகமும் தன்னடக்கமும் தீரமும் தான் மனிதனை உயர்த்துகின்றன'' என்ற உணர்ச்சியை அனைவரிடத்தும் உண்டாக்கியது.

அதன் பிறகு பலிக்கு முன் வந்தவன் ஒரு நாவிதன், ஸாஹப்தாஸ் என்பவன். மூன்ருமவனுக வந்தவன் தென்னுட்டுப் பிராமணன் தருமன் என்பவன். ''அடியேன் ஓர் ஏழைப் பிராமணன். தட்சிண தேசத்தான். என் பெயர் தருமன். நான் தீர்த்த யாத்திரை செய்வதற்காக என் நாட்டை விட்டுப் புறப்பட்டவன்.

நம் நாடு தற்போதிருக்கிற மகா கோரமான நிலைமையில் ஆயிரம் காசி யாத்திரைகளை விட, நம் ஜாதிக்குப் பலமும் வெற்றியும் வருவதற்காகத் தங்கள் ஆக்கினையைப் பூர்த்தி செய்து சண்டி தேவிக்கு இவ்வுடலை அர்ப்பணம் செய்வதே மேலான தர்மம் என்று தேவரீருடைய திருவாக்கும், இந்தப் புண்ய புருஷர்களுடைய அரும் பெரும் தியாகமும் எனக்கு அறிவுறுத்தி விட்டன. அடியேனையும் ஸ்வீகரித்துக்கொள்ளத் திருவுளம் கொள்ள வேண்டும்'' என்று கூறினுன்.

அடுத்த பலிக்கு ஒருவரும் முன் வரவில்லை. அந்த இடத்தில் வவெசு அய்யர்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

''மனிதனுக்குப் புகழும் கீர்த்தியும் இனிதாக இருக்கிறது. தியாகத்தின் ஒளியை மனிதன் நன்கு உணருகிருன். தான் தியாகியாக விளங்கவேண்டும் என்று அடிக்கடி தீர்மானித்துக் கொள்ளுகிருன்.

ஆனல் தியாகம் அழைக்கிற காலத்தில், தன் இரத்தத்தைக் கொடுக்க வேண்டிய சமயம் வந்து விட்ட காலத்தில், சுக சௌக்கியங்களை விடவேண்டிய நேரம் வரும்போது, பஞ்சபூதங்கள் பின்வாங்குகின்றன; உடலும் மனமும் தவிக்கின்றன. ''இந்த முறை மன்னித்துவிடேன்! அடுத்த முறை பின் வாங்காமல், மறுவார்த்தை பேசாமல் நாங்கள் நெருப்பில் வேண்டுமானலும் வீழ்கிருேம்'' என்று சொல்லிக் கெஞ்சுகின்றன. என்னே மனிதனுடைய பலவீனம்! என்று அழகாக எழுதுகிருர்.

அடுத்தபடி உயிர்ப்பலிக்கு வந்தவர்கள் ஹிம்மதன் என்ற வியாபாரி. மோஹனன் என்ற ஜாட்டன் (வேளாளன்). அதன் பிறகு வீர சரிதம் தொடர்கிறது.

கோவிந்தராயியின் பாட்டன் ஹரிகோவிந்தன் தான் சிஷ்யரை (சீக்கியரை)ப் படைஞராக முதல் முதல் ஆக்க முனைந்தவன். இப்பொழுது கோவிந்தராயி, காலசா—மூல புருஷர் கோஷ்டி—என்ற சிங்கர்களை அந்த ஐந்து பேரை முதலாகக் கொண்டு தொடங்கித் தானும் கோவிந்த சிங்கன் ஆனன். காலசாவுக்குள்ளும் அகாலியர் என்ற தனிக்குழுவை—சர்வ தியாகியரை— உருவாக்கினன்.

பின்பு அவனது போர்ச் செயல்கள்—வெற்றி தோல்விகள்— நடைபெறுகின்றன.

அவனுடைய இரண்டு மைந்தர்கள் பாலகர்கள் மொகலாய சுபேதாரால் கவர்ச்சிகரமான மதமாற்ற ஆணைக்கு ஒப்பாததால் கொஞ்சம் கொஞ்சமாகக் கால்முதல் தலைவரை சுவரோடு வைத்துச் சுவர் எழுப்பி உயிரோடு சமாதி வைக்கப்படுகிருர்கள். 'குழந்தைகளின் ஒவ்வொரு இந்திரியமும் வரிசையாக உணர்ச்சியிழந்து வெந்தது'.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இன்னும் இரண்டு மக்கள் போர்முனையில் மரணம் அடைகிறார்கள். குருகோவிந்தன் தனியன் ஆகிறான்.

பின்பு ஔரங்கசீப் .மனமுடைந்தவனாகப் பாசறையில் இறந்தான். அவன் மகன் பகதூர் ஷா காபூலிலிருந்து தில்லிக்கு வந்து சிம்மாசனம் ஏறினன்.

குருகோவிந்தனுக்குத் தொல்லைதர விரும்பாமல் கௌரவமாக நடத்த முடிவு செய்தான். கோதாவரிக் கரையோரம் ஏகாதிபத்தியத்துக்காகப் படைகளுடன் சென்று சத்துருக்களைத் தாக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறான். குரு அதற்கு இசைந்து தன்படையை அழைத்துக்கொண்டு தெற்கு நோக்கிப் புறப்பட்டான்.

''கோதாவரிக் கரையோரம் வந்து குரு அடைந்தான். ஒரு காலத்தில் பட்டான் நாட்டுக் குதிரை வியாபாரி ஒருவன் தன்னை அவமதித்தற்காகக் கோவிந்தன் அவனைத் தன் வாளால் கொன்று விட்டிருந்தான். ஆனல் அந்தப் பட்டாணியின் மைந்தர் நிர்க்கதியாயிருத்தல் கண்டு அவன் அவர்களைத் தன் குழந்தைகளைப் போலவே வளர்த்து வந்தான். அன்னவர்கள் வயதான பிறகு தங்கள் தகப்பன் குருவினல் கொல்லப் பட்டுப் போயினன் என்று கேள்வியுற்ற தினத்திலிருந்து கோவிந்தனைக் கொன்று பழி தீர்த்துக் கொள்ள வேண்டுமென்று கறுவிக் கொண்டே வந்தார்கள். கடைசியாக நதேடத்திற்குக் குரு வந்து சேர்ந்த காலத்தில், அற்றம் பார்த்துக் கொண்டு வந்த பட்டாணி வாலிபர் குரு தனியாக இருந்த நேரம் பார்த்து அவனைத் தம் கூரிய வாளால் மர்மத்தில் வெட்டி விட்டார்கள்.''

சிஷ்யர்கள் அவர்களைத் தேடிப் பிடித்தனர். ஆனல் கோவிந்தன், அவர்களை மன்னித்து விட்டான். சிஷ்யர்களைப் பார்த்து 'புத்திரர்களே கவலைப்படாதீர்கள்' என்று ஆறுதல் உரைத்து, 'குருக்களின் பரம்பரை என்னேடு தீர்ந்து விட்டது. இனி குருவைப் பார்க்க விரும்புபவர் நானக தேவனது கிரந்த சாஹிபை (புத்தகம்)ப் பார்க்கட்டும். ஈசுவரன் காலஸாவை ரக்ஷிக்கக் கங்கணம் கட்டிக் கொண்டு நிற்கிறான். பந்தாவின் (தென்னட்டுப் பிராமணனன இன்னெரு சிஷ்யன்)

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தலைமையின் கீழ் நின்று நீங்கள் அறத்தைக் காவுங்கள். ஐந்து சிஷ்யர்கள் நடுநிலைமையோடு, மனச் சாந்தியோடு எங்குக் கூடியிருக்கிறார்களோ அங்கு அவர்களுக்கிடையே நான் சூக்ஷ்ம தேகியாக இருப்பேன்' என்று உறுதி கூறி உயிர்நீத்தான்.

முடிவுரையாக வவெசு அய்யர் ''குரு கோவிந்தனுடைய வாழ்க்கை விபலமாகப் போயிற்று என்று சிலர் கருதலாம். ஆனால் அறிந்தவர் அவ்வாறு கருதமாட்டார்கள். அவன் தன் சிஷ்யர்களை வைத்துக் கொண்டு பெரியதோர் யுத்த களத்தில் ஏகாதி பத்திய சைனியத்தை ஓர் முறை கூட முறியடிக்க வில்லை என்பது வாஸ்தவம். சிஷ்யரை ஒரு தனி ராஷ்டிரமாக, ஓர் தனிக் கணமாக, அவன் அமைத்து வைக்கவில்லை என்பதும் உண்மை... பந்தா, மொகலாயப் வசம் அகப்பட்டுத் தர்ம பலியான பிறகு சிஷ்யர் இருக்குமிடம் தெரியாமல் பதுங்கிக் கொண்டிருக்க வேண்டி வந்தாலும், ஓர் ஐம்பது வருஷத்துக் கெல்லாம். காலஸா மறுபடியும் தலையெடுத்துப் புஞ்சாபிலும் காஷ்மீரத்திலும் ஓர் பெரிய ராஜ்ஜியத்தை ஸ்தாபித்தது...

''ராஜாளிகளை அடிக்கும் வன்மையைக் குருவிகளுக்குத் தருகிறேன்'' என்று தான் செய்த சபதத்தின் பிரகாரம் அவர்களை அசகாய சூரர்களாக்கி, தான் இறந்து இருநூறு வருஷங்களுக்கு மேலாகியும் தன் முத்திரை அன்று வைத்த படியே நிலைத்து நிற்கும்படி செய்த சக்தி கோவிந்தனதே'' என்று குறிப்பிடுகிறார்.

C

தமிழ் நாட்டு மக்களைச் சிஷ்யர்கள் (சீக்கியர்) போலவே படைவீரக் கொள்கையராகப் பயிற்றிப் புது இனமாக மாற்ற ஆசைப்பட்டார் வவெசு அய்யர். ஆனால் எலி மேட்டுக்கு இழுக்க தவளை தண்ணீருக்கு இழுக்க என்றாற் போல இங்கே மூண்டுகொண்டிருந்த பிராமண-பிராமணரல்லாதார் பூசலால் அது குருத்திலே உலர்ந்து போனது. அவரும் பாபநாசம் அருவியில் எதிர்பாராத விதமாக அகால மரணம் அடைய நேர்ந்தது. அந்த ஆசை அவரோடு முடிந்துவிட்டது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

○

தமிழ் நாட்டு மக்கள் சீக்கியர்களைப் போல ஒரு முகமாக இருக்கவில்லையே என்று தலைவர் ஒருவர் வருந்தி உரைத்த தாக அண்மையில் செய்தித் தாளில் வந்திருந்தது. 'சுக்க மிளகா சுதந்திரம் கிளியே' என்று பாரதிதாசன் பாடியது போலப் படையாண்மையும் ஒற்றுமையும் சுதந்திரமும் சுக்கு மிளகல்ல. மேடைப் பேச்சும் அரசியல் ஆதாய நோக்கமும் தன்னல அடிப்படையிலான சாதிப்பகைமையும் தம்மைத் தான் அறுவடைக்குக் கொண்டு வருமே தவிர ஒற்றுமை யையும் உள்வலியையும் தியாகத்தையும் கொண்டுவர மாட்டா. விதையொன்று போடச் சுரை ஒன்று முளைக்கும்?

○

தேசியத் தலைவர்கள் என்ற பகுதியில் பாரதியார் முன்னை வரலாற்று அடிப்படையில் குருகோவிந்தன் வரலாற்றுப் பகுதியில் நடுவான ஒரு பகுதியைத் தேர்ந்து நாடக பாணியில் குறுங்காப்பியமாகத் தந்துள்ளார். சிவாஜியின் வீர உரை ஒன்றும் வடித்துள்ளார். தேசிய எழுச்சி நோக்கத்துடன் அவர் தேவையான பகுதியைத் தேவையான அளவு பயன் படுத்துவது வரலாற்று நாவலுக்குக் கூறும் வரையறைக்கு உகப்ப இருக்கிறது என்பது குறிப்பிடத் தக்கது.

○

அறத்தினை வெறுக்கிலீர் மறத்தினைப் பொறுக்கிலீர் தாய்த்திரு நாட்டைச் சந்ததம் போற்றிப் புகழொடு வாழ்மின் புகழொடு வாழ்மின் என்ற குருவின் வாக்கு குறைவிலாது என்றென்றும் நிலைபெறுமாக.

○

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பிற்சேர்க்கை

25

பரமனுக்குப் பின்வந்தோன்

○

விண்ணுளும் தேவர்கோன் சினந்தாலும் அதற்காக அறத்தினின்றும் பிறழாதவன், மண்ணுளும் மன்னர் சிறைசெய்தால் மருண்டு விடுவானு?

பரிதியின் ஒளியை விரும்பாத ஆந்தை போன்ருேர் அவனைச் சிறையிட்டால்தான் என்ன? மாந்தரெல்லாம் கண்ணுகக் கருதி அவன் புகழோதி மனம்களிக்கின் ருரே!

என்ன இருந்தாலும் அவன் பெருமானின் தம்பியல்லவா? தேசியத் தன்மான வீரர், நாட்டன்பு மிக்க மெய்யறிஞர், தொலை நோக்காளர், வழி காட்டி என்றெல்லாம் இந்தியா ஏத்தும் விவேகானந்தருடைய தம்பியல்லவா அந்தப் பூபேந்திர நாத தத்தர்?

○

1906 இல் இராஜத் துரோகக் குற்றம் சாட்டி அவரைச் சிறை செய்தது அயலரசு. தேசமெங்கும் பெருகிவரும் 'சுதந்திர வாஞ்சை' அதனுல் குறைந்தா போய்விடும்? மூண்டுவரும் புரட்சி நெருப்பு பொன்றியா போய்விடும்? போகாது, போகாது. அதற்கு அப்பொழுது எழுந்த இந்தப் பாடலே அங்கை நெல்லிபோல் அழகான சான்ருக உள்ளது!

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

25 பூபேந்திர விஜயம்

பாபேந்திரியம் செறுத்த எங்கள்

கருத்தோட்டம்

முதல் விருத்தம் விவேகானந்தரின் இளவல், இந்திய நாட்டின் அடித்தொண்டர் என்று பூபேந்திரரை அறிமுகம் செய்கிறது. இரண்டாவது, அவர் நடத்திய யுகாந்தர் என்ற பத்திரிகையின் உறுதி மிக்க கொள்கையை எடுத்துக் கூறுகிறது. மூன்றும் நான்கும், அவரைச் சிறையிட்ட அயலாட்சியாளரின் அறியாமையையும் அவரது உயர் பண்புகளையும் உரைக்கின்றன.

ஒன்று

பாவங்களைப் புரியத் தூண்டும் ஐம்புலத் தொடக்குகளை வென்றவன் எங்கள் விவேகானந்தப் பெருமகன். அறிவிலும் அழகிலும் சிறந்த வேந்தன் அவன். அவனுடைய தம்பி பூபேந்திரன் என்னும் பெயர் உடையவன். விண்ணுலகை ஆளும் தேவேந்திரனே சினந்தாலும் அதற்காக அச்சம் கொண்டு அறத்தைக் கைவிடாதவன். இந்திய நாட்டிற்குத் தொண்டு புரிதலே அணிகலமாகக் கொண்டு அவ்வாறே செய்து வாழ்பவன்.

இரண்டு

பாழ் செய்யும் கலியின் காரணத்தால் தருமம் வீழ்ச்சி அடையவும், பழி பாவம் கிளைவிட்டுத் தழைக்கவும், மேலோரைத் தாழச் செய்து கலியின் கூட்டாளிகள் முன்னேற வைத்து

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அதனால் நிலை புரண்டு கிடக்க வைத்தும், தீமை ததும்பி நிற்கும் இந்த யுகம் நீங்கி மற்றொரு யுகம் அடுத்து நெருங்கி வருவதான நிலையை வெளிப்படத் தெரிவிக்கும் வயிரமுடைய மன உறுதியுடன் யுகாந்தரத்தை எடுத்துக் காட்டி நின்ருன்.

மூன்று

மண்ணுளும் ஆட்சியாளர்கள் அவனைச் சிறையில் அடைத்து விட்டார்கள். ஆனாலும் மக்களெல்லாம் அவனைத் தம் கண்ணுக் கருதி அவனது புகழைப் புகன்று புகன்று மனம் மகிழ்கிருர்கள். பலருக்குப் பிடித்தமான பொருள் ஒரு சிலருக்குப் பிடிக்காமல் போகக் கூடும் அல்லவா? நல்லதன் நலனை எண்ணிப் பாராது அதனைத் தீது எனத் தெரிப்பாரும் இருப்பார் அல்லவா? பரிதியின் ஒளியால் வானகமே நிரம்பியிருக்க, அதனை வெறுத்து ஒதுங்கக் கூடிய ஓர் உயிரினமும் இருக்கிறதல்லவா? இருளிற் பதுங்கி அதனை இனிதென விழையும் ஒரு பறவையும் உண்டல்லவா? அதைப் போல இருக்கிறது ஆளவந்தாரின் இச் செய்கை.

நான்கு

அவனே எவர்க்கும் தீங்கு நினைக்க மாட்டான். தாய் நாட்டிற்காக இரங்கி இதயம் நைந்து வேதனைப் படுபவன். பகைவர் என்று அவனுக்கு எவரும் இல்லை. உலகனைத்தும் ஒருயிர் என்று உணர்ந்த ஞானி அவன். அவனைச் சிறைப் படுத்தினர்களே, மேலோரின் பெருமையை அறியும் திறம் இல்லாதவர்கள்! அதனாலென்ன? துன்பமில்லாமல் இன்பம் வராது என்பது மெய்யல்லவா? அது முன்னோர் மொழிந்த மொழியல்லவா?

குறிப்புகள்

○

''பூபேந்திரப் பெயரோன் பாரத நாட்டிற்கு அடிமை பூண்டு வாழ்வோன்'' என்று பூபேந்திரரை அறிமுகம் செய்து அவர் பாரதத்தின் தாசன் என்று பெருமையோடு தெரிவிக்கும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கவிஞர், பாரத தேவியின் அடிமை என்ற ஒரு பாடலில் வெய்ய சிறைக்குள்ளே புன்னகையோடுபோம் ஐயன் பூபேந்திரனுக் கடிமைக் காரன் என்று தேசபக்தன் சொல்லுவதாகக் குறிப்பிடுகிருர். அன்னியர்தமக்கு அடிமை யில்லே, பாரத தேவிக்கு அடிமை, பாரத நாட்டு அடியார்க்கு அடிமை என்று கூறும் பொழுது தாசானு தாசனுக, அடியார்க்கு அடியாராக இருப்பதில் பெருமை கொள்வதாகப் பகரும் கவிஞர், ''கொடுமையான சிறைக் கோட்டத்துள் புன்னகையோடு செல்லும் தலைவன்'' என்று பூபேந்திரரைப் பெருமைப்பட எழுதியுள்ளார்.

)

இந்தப் பாடலை ஒட்டி, பாரதியாரும் இராமகிருஷ்ண இயக்கமும் என்ற நூலில் பெ. சு. மணி குறிப்பிடுவதும், விவேக பானுவிலிருந்து அவர் மேற்கோளாகக் காட்டுவதும் கருதற்குரியன

தேசபக்தர்கள் சுவாமி விவேகானந்தரிடம் மிக்க ஈடுபாடு கொள்ளச் சுவாமிகளின் இளவல் பூபேந்திரநாத தத்தரும் காரணம் ஆவர்... புரட்சி வாதியான பூபேந்திரநாத தத்தர் சுவாமி விவேகானந்தரின் தேசியக் கனலின் ஒளிப் பிழம்பு களை எல்லாம் அவரைப் பற்றிய நூலில் விரிவாகக் காட்சிப் படுத்தியுள்ளார்... யுகாந்தர் என்னும் பூபேந்திரரின் புரட்சி ஏட்டிற்கு ஏற்றமளித்தனர் தமிழகத் தீவிர தேசிய வாதிகள்... பூபேந்திரநாத தத்தரை இராஜத் துரோக வழக்கிட்டுச் சிறைப் படுத்திய பொழுது எழுந்த பாடல் இது...

பாரதியார் சுவாமி விவேகானந்தரின் சிறப்பைக் கொண்டு பூபேந்திரநாத தத்தரை அறிமுகப் படுத்தியது போன்று தேசியத் தமிழறிஞர் திரு மு. ரா. கந்தசாமிக் கவிராயர் (வ. உ. சி., பாரதி - நண்பர்) பூபேந்திரரைக் கம்பன் தமிழ் கொண்டு அறிய வைக்கிருர்.

யுகாந்திர பத்திரிகையின் அதிபராகிய பாபு பூபேந்திரநாத் தத்தரின் மீது கொண்டுவரப்பட்ட ராஜநிந்தனைக் கேஸ் மிஸ்டர் கிங்க்ஸ்போர்ட் முன் விசாரணை செய்யப்பட்டது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அப்பொழுது அவர் கொடுத்த வாக்கு மூலத்தில் 'என் கடமையைச் செய்தேன், விசாரணை தேவையில்லை' எனக் கூறினர். இவ்வாறு சுதேசமித்திரனில் வெளிவந்த செய்தியைக் குறிப்பிட்டு திரு மு. ரா. கந்தசாமிக் கவிராயர் எழுதுகிருர்.

தேசாபிமானச் சிம்ம ஏருகிய சுவாமி விவேகானந்தரின் தம்பி இவர்தான் என்பதற்கு ஆட்சேபணை என்ன?...

மேலும் சுவாமிகளைக் கொண்டு பூபேந்திரரை அறிமுகப்படுத்துவதற்காகப் பின் வரும் கம்பராமாயணப் பாடலின் ஈற்றடியைப் பொருத்திக் காட்டுகிருர்.

நம்பியுமென் நாயகனை யொக்கின்ரு னயல்நின்ருன்
தம்பியையு மொக்கின்ருன் தவவேடம் தலைநின்ருன்
துன்பமொரு முடிவில்லை திசைநோக்கித் தொழுகின்ருன்
எம்பெருமான் பின்பிறந்தார் இழைப்பரோ பிழைப்பென்ருன்

எனக் கூறிய இக் கவியின் இறுதியடி இவ் விடத்து முற்றும் பொருந்தும்.

○

பாபேந்திரியம் செறுத்த எங்கள்
விவேகானந்தப் பரமன் ஞான
ரூபேந்திரன் றனக்குப் பின்வந்தோன்
விண்ணவர்த முலகை யாள்ப்ர
தாபேந் திரன்கோப முறினுமதற்
கஞ்சியறந் தவிர்கி லாதான்
பூபேந் திரப்பெயரோன் பாரதநாட்
டிற்கடிமை பூண்டு வாழ்வோன்.

இதில் ''பாபேந்திரியம் செறுத்த எங்கள்... பூபேந்திரன்'' எனும் எதுகைகள் பண்டைப் புலவோர்ரின் எடுப்பைப் போலிருக்கின்றன என்று சுத்தானந்த பாரதியார் எடுத்துக் காட்டிப் பாராட்டியுள்ளார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இந்தப் பாடல் முழுவதுமே 'பண்டித நடை' என்று கூறுவார்களே அந்த நடையில்தான் இருக்கிறது. மிடுக்காக அடிகள் நடைபோடுகின்றன.

பண்டித நடையோ பாமரநடையோ எதுவாயினும் கருத்தின் உயர்வும் சொல்லின் இனிமையும் காலத்தின் தேவைக்கு இன்றியமையாமையும் கற்பனையின் பொருத்தமும் கவிதைக்கு உயிரோட்டம் தருகின்றன. எளியநடையில் உள்ளன என்பதற்காகச் சாரமற்ற சக்கைகளைப் போற்றமுடியுமா? காமவிகாரக் குப்பைகளைக் கொண்டாட முடியுமா? அவ்வாறே புலமை நடையில் பொலிந்திருக்கின்றன என்பதற்காகப் பழப்பாகு போன்ற படைப்புகளைத் தவிர்க்க முடியுமா? உறுதிப் பொருள் உரைக்கும் உயர்கவிதைகளை ஒதுக்க முடியுமா?

()

தமது காலத்தில் மக்களின் கவனத்தைக் கவர்ந்த தேசிய நிகழ்ச்சிகளையோ சமுதாய நிகழ்ச்சிகளையோ ஒட்டிய நேரங்களில் தம் உணர்ச்சிக்கும் பத்திரிகையின் தேவைக்குமாகப் பாடுவது தான் பாரதியார்க்குப் பழக்கம் என்று தோன்றுகிறது.

அதனால் தான் தனது சிந்தனையொழுங்கிற்குப் பலத்த ஆதாரமாக அமைந்த கருத்துக்களை வையமெங்கும் தூவிய விவேகானந்தரைப் பற்றி அவர் பாடல் எதுவும் பாடியதாகத் தெரியவில்லை. (விவேகானந்தர் இறைமை எய்தியது 1902 இல் ஆகும்). ஆனால் அவருடைய தம்பியைப் பாடுகிறார்.

அவ்வாறே தம் காலத்து நிகழ்ச்சிகளை ஒட்டித் தம்மை யாராவது கவியெழுதக் கேட்பாராகிலும் அது தம் உளத்துக்கு ஒத்ததாயிருப்பின் அப்பொழுதும் தனிப்பட்டோரைப் பாடியுள்ளார். அதனால் உவேசா மகாமகோபாத்தியாய (பெரும் பேராசிரிய)ப் பாராட்டுப் பெற்ற பொழுது தம் பாலப் பருவத்துத் தோழர் சோமசுந்தர பாரதியார் கேட்டுக்கொண்டபடி வாழ்த்துக் கவி புனைந்து பாடிக்கொடுக்கிறார். அதே சமயம் அவர் காலத்திலிருந்த பெரும்புலவர் பலரை அவர் பாடினரில்லை என்பது கவனிக்கத் தக்கது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஆனால் புதுவை வாழ்க்கைக்குப் பின் அவர் பெரும்பாலும் மாறிவிட்டார் என்றே கருதத் தோன்றுகிறது. கண்களின் பொலிவு மாறி உடம்பின் வலுக் குறைந்து ஆளே மாறிவிட்டார் என்பது ஒருபுறம் இருக்க மனப்போக்கும் சில சமயம் மாறியது போல் இருந்தார் போல் தெரிகிறது.

பாராட்டும் பரிவும் அவருக்குரிய தேசிய, இலக்கிய மதிப்புகளும் கொடுக்காத தமிழகத்தின் அடிமை மனப்பான்மை அதற்கு ஒரு காரணம் ஆகும். அந்நிலையில் அவர் எட்டைய புரம் சமஸ்தானத்தின் வரலாற்றைப் புதிய முறையில் எழுதித் தருகிறேன் என்று வலிய முன்வந்தார். ஹிஸ் ஹைனஸ் (மாட்சிமை தங்கிய) என்று எட்டையபுரம் நிலக்கிழார் (மகாராஜா) போட்டுக் கொள்வதை இந்தியா இதழில் விகடமாக எழுதிய பாரதியார்தானா இவ்வாறு முன்வந்தார் என்பதை நினைக்கும் பொழுது நம் நெஞ்சில் ஆழ்ந்த சிந்தனை உறைபனியாக அடர்ந்து கொள்கிறது. பின்பு கானாடு காத்தானில் அவருக்குச் சின்னாள் ஆதரவுக் கரம் தந்தவர் மீது அவர் பாடிய செட்டிமக்கள் குலவிளக்கு என்ற புகழ்மாலையில் அந்தப் பாட்டுக்கு உடையவரே 'என்னை இப்படியெல்லாம் புகழ்கிறீர்களே' என்று திகைப்படைந்து கேட்குமளவுக்கு மிகுதியாகப் பாடிவைக்கிறார்.

இவ்வாறே பாரதிதாசனை இந்திய தேசியப் போர்முகத்தில் மீண்டும் இயைந்து தம் திறமையைத் திருப்பிவிடுமாறு அன்போடு அழைத்த காலத்தில், 'எமை நத்துவாய் என எதிரிகள் கோடி இட்டழைத்தாலும் தொடேன்' என்று பாடியவர், தேசியம் என்பது கட்சியாக மாறிவிட்ட காலத்து அந்தக் குழாத்தில் சேர்ந்த திரைப்பட நடிகர் ஒருவரைத் தேடிச் சென்று தன் கடைசி காலத்தில் பாட்டுப்பாட்டாகப் பாடி வைத்தார்.

''நும்மோர் அன்ன செம்மலும் உடைத்தே' (மன்னராகிய உம்மைப் போல் எங்களுக்கும் புலமை காரணமாகத் தலைமை உண்டு) என்று கோவூர்கிழார் பாடியது போன்ற தலைமைப் பெருமிதத்திற்கான மேன்மை இருந்தும் அது தாழ்ந்த தமிழகத்தில் கிட்டாமையும், உண்மைக்கும் போலிக்கும் உள்ள

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வேறுபாடு தெரியக் கிடந்தும் கண்ணை மூடிக் கொண்டு சுய காரியத்தைப் பெரிதென மதித்துப் பொதுநலனைப் போற்றாத தமிழகத்தின் பேதைமையால் அறிவாளர்க்குக் கிடைக்கும் புறக்கணிப்பும், இத்தகைய வருந்தத் தக்க நிலைகள் வருதற்குக் காரணமாகின்றன என்று கூறாமல் இருக்க முடியவில்லை.

○

இந்தப் பாடல் நடையால் மட்டுமல்லாது அடங்கிய அழகான கருத்தாலும், உவமையாலும், ஊட்டும் ஊக்கத்தாலும், நல்லது நாட்டுக்கு வரும் என்ற உத்தரவாதத் தன்னம்பிக்கையாலும் சிறப்புடையதாக இருக்கிறது.

○

வ.உ.சிக்கு 'இராஜத் துரோகக் குற்றத்திற்காக' 20 ஆண்டுகளும், 'அரசியல் குற்ற வாளியான சிவா'விற்கு இடமளித்ததற்காக 20 ஆண்டுகளும் விதிக்கப்பட்ட வழக்கு விசாரணைச் செய்திகள் இந்தியா முழுவதும் திகிலளிக்கும் தொடர்கதை போல் இதழ்கள் மூலம் பரவின. பூபேந்திரரின் யுகாந்தர் நாளேடு அந்த விசாரணை நடவடிக்கைகளைத் தினந்தோறும் வெளியிட்டது என்பது இங்கே நினைவுகூரத் தக்கது.

○

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பிற்சேர்க்கை

26

தமிழகத்தார் மன்னன்

○

எவரும் செய்யத் துணியாத காரியங்களை விடுதலைப் போராட்டத்தின் போது செய்யத் துணிந்தார். முதன்முதலாகத் தொழிற் சங்கத்தை நிறுவினர். முதன் முதலாக, வேலை நிறுத்தத்தை நடத்தினர். சுதேசிக் கப்பல் ஓட்டினர்.

பலன்:

வீரர் எவரும் அடையாத வேதனையை வெஞ்சிறையில் அனுபவித்தார். செக்கு இழுத்தார். தவறி விழுந்தாலோ கால் ஓய்ந்து நின்றாலோ கிடைத்தது சவுக்கடி.

வரவேற்பு:

சிறையினின்று விடுதலை பெற்றபோது வேறு எவருக்கும் கிடைத்தறியாத வரவேற்பு, கொடூரமான புறக்கணிப்பு அவருக்குக் கிடைத்தது. அவரை வரவேற்க வந்திருந்தோர் இரண்டே இரண்டு பேர்.

○

முற்போக்கு இயக்கங்களின் முன்னோடி அவர் என்று அடை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

யாளம் கண்டு ஆதாரத்தோடு வரையும் நா. வானமாமலை யின் கூற்று நூற்றுக்கு நூறு உண்மையே. ஆகவே தான் சிறைவீடு பெற்றுத் திரும்புங்கால் அவர் தமிழகத்தார் மன்ன னென மாண்புறுவார் என்று எதிர்பார்ப்பது நியாயமானதே. ஆனாலும் என்ன? தமிழகம் அந்த அளவுக்குத் தெரியாத் தனமாகவா இருந்து வருகிறது?

○

துணிவும் திறனும் தியாகமும் தேசபக்தியும் நிருவாகத் தேர்ச் சியும் மனிதாபிமானமும் புத்துலக நோக்கமும் இலக்கிய ஞானமும் நிரம்ப இருந்து விட்டாற் போதுமா? சாதி மந்தை யும் நிலபுலப் பின்புலமும் பணப் பிரகாசமும் மரம் விட்டு மரம் தாவும் சாகசமும் மதப்பட்டாளமும் இறக்குமதிப் பிறப்பும் தோல் மினுமினுப்பும் கட்சிக் கும்பலும் இவற்றுள் ஒன்றே பலவோ இல்லாமல் தமிழகத்தில் ஒருவர் தலைவராக எப்படி மதிப்புப் பெற முடியும்?

தமிழகமே மதிக்காத பொழுது, தமிழகத்தையே மதிக்காத ஆணவமிக்க வடபுலம் எப்படி அவரை மதித்துவிடும்?

○

விடுதலை பெற்று வந்த பிறகு அவர் தலைவராக இருக்க வில்லை. அவர் தொழில்முறை அரசியல்வாதி அல்லரே; கொள்கையுரம் கொண்ட தேசிய நிபுணர்தானே?

வறுமை ஒருபுறம் வருத்த, கப்பல் நிருவாகக் குழாமும் வழக்குரைஞர் குழாமும் ஆளுக்கொரு பக்கம் காலைவாரிவிடும் கைங்கரியம் செய்ய, அரசியல் பருவகால மாற்றம் ஒரு புறம் மறுக்க, அவர் ஒதுங்கி விட்டார். முழு அஞ்ஞாத வாசமும் அன்று. காந்தியடிகள் அளவுக்கு மேனின்று உடன் பாடான சமயம் ஆதரவு தந்தார்.

பசித்ததற்காக அவர் புல்லைத் தின்னவில்லை. பதவி எலும்பு களைத் தேடித் திரிய வில்லை. கருத்து மாறுபாடுகளுக்காக எவரோடும் காழ்ப்புணர்ச்சி கொள்ளவில்லை.

அவர் தமிழகத்தார் மன்னன் தான்!

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

26 வ. உ. சிக்கு வாழ்த்து

வேளாளன் சிறை புகுந்தான்

○

வ. உ. சியும் பாரதியாரும்

வ. உ. சி சிறையிற் புகுந்தார். திரும்புகாலை மன்னவனாக வருவார் என்று கூறும் பாரதியார் அவரைத் தம் கேண்மைக்கோ (நண்பராகிய அரசன்) என்கிறார். ஆகலின் அவர்களது நேயநிலை குறித்துச் சிறிது அறிதல் இங்கு அவசியமாகும். அதற்கு அதிகமும் ஆதாரமாக இருப்பது வ. உ. சி சுப்பிரமணியம் வெளியிட்ட வி. ஓ. சி. கண்ட பாரதி என்ற குறுஞ்சுவடியாகும். ''பாரதியாரும் நானும்' என்ற வ. உ. சியின் கட்டுரை சிதம்பரம் பிள்ளைக்கும் பாரதிக்குமுள்ள ஆன்ம நேயத்தைச் சித்திரிக்கிறது'' என்று அதுபற்றிக் குறிப்பிடும் நா. வானமாமலை,

வங்காளத்தில் தோன்றிய புரட்சித் தீயைத் தெற்கில் பரவச் செய்தவர்களில் பாரதியும் வ.உ.சியும் முக்கியமானவர்கள். அவர்களுடைய சுதேசிக் குழுவில் யாரும் முக்கியத்துவம் குறைந்தவர்களல்லர். ஆனால் அவர்களுள் செயல்வீரத்திலும் கவிதையால் மக்களுக்கு உணர்வூட்டுவதிலும் வ. உ. சி. யும் பாரதியும் இணையற்றவர்கள்.

என்று சரியாக மதிப்பிட்டுரைக்கிறார்.

○

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மாமா மருகன்

வ. உ. சி. யும் பாரதியாரும் சென்னை ''இந்தியா'' அலுவலகத்தில் சந்தித்த முதற்சந்திப்பில் அவர்களின் பேச்சினுல் ஏற்பட்ட உரிமைப் பிணைப்பு, வ. உ. சி தம்மைச் சோழனுகவும் பாரதியாரைக் கம்பனுகவும் நினைக்கும்படி செய்தது என்று கூறுகிருர். அன்றைக்கு மாலை கடற்கரைக்கு வருமாறு பாரதியார் அழைக்க அவர்கள் (நால்வர்) திருவல்லிக் கேணிக் கடற்கரையில் தேசிய, அரசியல், நிலைமைகளைப் பற்றி உரையாடிக் கொண்டிருக்கையில் பாரதியாரின் மிக்க ஆவேசமான கருத்துரைகள் காரணமாக,

'என் உள்ளத்தில் மின்மினிப் பூச்சி போன்று மின்னிக் கொண்டிருந்த தேசாபிமான நெருப்பு விளக்குப்போல் பிரகாசித்தது' என்று உள்ளூர உணர்ந்தார் வ. உ. சி. அதனை அப்பொழுதே பாரதியாரிடமும் தெரிவித்தார்.

அடுத்தடுத்த ஊர்க்காரர்களான அவர்கள் இருவருடைய தந்தைமார் ஏற்கெனவே ஒருவர்க் கொருவர் அறிமுகமானவர்கள். இப்பொழுது மைந்தர் இருவரும் தேச சேவைக்கு முன்வந்தகாலை இவ்வாறு சந்திப்பு நடந்தது.

பிறகு நாள்தோறும் ''இந்தியா'' ஆபீசு, அதிபர் வீடு, கடற்கரை என்று'' வ.உ.சி, பத்திராதிபரோடும் ஆசிரியரோடும் அளவளாவி வந்தார். முடிவில் 'சுப்பிரமணிய பாரதியும் நானும் சோழனும் கம்பனுமாயிருந்தது மாறிக் கடைசியில் மாமனும் மருமகனும் ஆயினேம்' என்று நெருக்கம் மிக்கது பற்றி அவர் குறிப்பிடுகின்ருர்.

○

ஈருடல் ஓருயிர்

1907 ஆம் ஆண்டு. சூரத் மாநகரில் நடைபெறவிருந்த காங்கிரசுக்குத் தலைமை வகிப்பதாக இருந்த மிதவாதத் தலைவர் செல்வச் சீமான் ராஷ் விகாரி கோஷைத் தள்ளி விட்டு, அதுகாலை விடுதலையாகியிருந்த வீரர் லஜபதிராயைத்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தலைவராக்க வேண்டும் என்று விரும்பிச் சென்னையிலிருந்து பாரதியார் வ. உ. சிக்குத் தந்தி கொடுத்தார்.

தமிழகத்திலிருந்து நூறுபேர் புறப்பட்டு சூரத் சென்று அதனை நிறைவேற்ற வேண்டும், திலகர்க்கு ஆதரவாகத் தீவிரவாதத்தின் கையை ஓங்குவிக்க வேண்டும் என்று முடிவு செய்தனர். நூறுபேர்க்கு ஆகும் செலவில் பாதியை மண்டையம் குடும்பத்தாரும் பாதியை வ.உ.சி யும் ஏற்றுக்கொள்வதென்று முடிவாகி அவ்வாறே புறப்பட்டுப் பாரதியாரின் தலைமையில் சூரத் சென்றனர்.

அங்கே காங்கிரசு மாநாட்டில் கலவரம் நடந்தது. மாநாடு உடைந்தது. தீவிர வாதிகள் மறுநாள் தனியாகக் கூட்டம் போட்டனர்.

''இந்த மகாநாட்டில் பாரதி மாமாதான் முன்னின்று வேண்டுவன செய்தார். பல்வேறு மாகாணத்தார்களுடன் அவரவர் பாஷையில் பேசி அவர்களைத் தம்வழிப் படுத்தினர். மாமாவுக்கு ஆங்கிலம், ஸம்ஸ்கிருதம், ஹிந்துஸ்தானி, தெலுங்கு முதலிய பலபாஷையும் தெரியுமென்று பின்னால் அவரிடம் கேட்டுத் தெரிந்துகொண்டேன்'' என்று எழுதுகிறார் வ. உ. சி.

முடிவில் ''பம்பாய் மாகாணத்திற்குத் திலகரும் வங்கத்திற்கு அரவிந்தரும் சென்னை மாகாணத்திற்கு நானும் காரியதரிசியாகத் தேர்ந்தெடுக்கப் பெற்றோம்'' என்று வ. உ. சி.யின் குறிப்பு கூறுகிறது.

இங்கே காண வேண்டுவது பன்மொழி வலவராகவும் செயலார்வம் மிக்க சூரராகவும் பாரதியார் அப்பொழுது இருந்தார் என்பதும் திலகர் அரவிந்தர் ஆகியோர்க்கு நிகராகத் தென்னாட்டுக்குத் தனிப் பெருந்தலைவராக வ.உ.சி. இருந்தார் என்பதும் ஆகும்.

அங்கிருந்து திரும்பிவந்து சென்னையில் விளக்கக் கூட்டங்கள் விவாத மேடைகள் என்பவற்றில் வ. உ. சி. யும் பாரதியாரும் ஒன்றாகவே தோன்றினார்கள், ஒன்றாக திரிந்தார்கள். 'மாமாவும் நானும் ஈருடலும் ஓருயிருமாக வேலை செய்தோம் என்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ருல் மிகையாகாது. எங்களைச் சிலர் 'இரட்டையர்' என்றே கேலியாகவும் குறிப்பிடுவர்' என்று நினைவு கூர்கிறார் வ.உ.சி.

○

சிந்தனை ஒன்றுடையார்

வ.உ.சி. கப்பலோட்டியது இந்திய வரலாற்றில் தமிழகத்தின் பெருமைக்கு மறுமலர்ச்சி தந்த தனிப்பெரும் சாதனையாகும். கண்ணீராலும் செந்நீராலும் நிகழ்த்திய தறுகண் ஆண்மையின் விளைவாகும். பலருடன் கூடி அதனை நிறைவுறுத்தினார் ஆயினும் அதன் உயிர் நாடியாக இருந்து உழைத்து இயக்கியும், எதிர்ப்புகளைத் தகர்க்கும் ஈட்டிமுனையாகவும் இருந்தவர் அவர் தான். பாரதியாரின் பேனாமுனையும் அதற்கு அவ்வப்போது ஆதரவு தந்தது என்பதும் உண்மை தான்.

கப்பலோடு வருவேன் அல்லது மேலைக் கடலில் செத்து மிதப்பேன் என்று எழுதியது வ.உ.சி.யின் செயல் பெருமிதம். அது கண்கூடாகிய பிறகு அதனைக் கைவிட்டு விட்டால் ஒரு இலட்ச ரூபாய் கையூட்டாகத் தருகிறோம் என்று இருளில் பிரகாசித்த கவர்ச்சிகரமான தேசத்துரோக மோகினிக்கு மசியாத அவரது வன்கண்மை, தொல்காப்பியர் கூறும் இசைமைப் பெருமிதத்துக்கு வரலாற்றில் ஒரு தனிச் சான்றாக அமைந்தது.

தொழின்முயற்சி, வாணிபம், பொருளாதார வளர்ச்சி, ஏகாதிபத்திய முள்ளை முள்ளால் எடுத்தல், விடுதலைக்கு நிரந்தரமான வழி, வாய்ப்பந்தல் போடாத தமிழாண்மை என்று இத்தகையன இணைந்து வருகின்ற இராசதந்திரங்களை உள்ளடக்கியது கப்பலோட்டியதான போர்த்திறம். அதனை அவரது ஆரவாரமற்ற வார்த்தைகளில் பார்க்கும் பொழுது,

"தேச ஆட்சியின் மீட்சிக்கான முதல்வழி வியாபாரம் செய்து வந்த வெள்ளையர்களை வெருட்டியடிக்க வேண்டும் என்பது தான். வெள்ளையர்களை விரட்டுவதென்றால் நம்மவர்க்குக் கடல் ஆதிக்கம் வேண்டும். ஒரு காலத்தில் மேற்கே உரோம் தேசத்திற்கும் கிழக்கே ஜாவா சுமத்ராவுக்கு அப்பாலும் தமிழ்க் கப்பல் போய்வந்தது. அவர்கள் சுதந்திரமாக வாழ்ந்து வந்தனர். எனவே தமிழர்கள் கடல்மேல் செல்வது

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

எவ்வாறு என்பதாகத் திட்டமிட்டேன். இத்திட்டத்தின் விளைவுதான் சுதேசி ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனி ...1906 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது''

என்று கச்சிதமாகக் காணப்படுகிறது.

கப்பல் கம்பெனி நிறுவியதும் நண்பர்களோடு விடுதலைக்குக் கிளர்ச்சி செய்ததும் காரணமாக 1908 மார்ச்சு 12 இல் வ. உ. சி யும் சிவாவும் கைது செய்யப்பட்டனர்.

'வங்காளத்தில் அரவிந்தர் மீதும் பம்பாய் மாகாணத்தில் திலகர் மீதும் சென்னை மாகாணத்தில் என் வகையார் மீதும் ராஜத் துவேஷ வழக்குகள் ஒரே சமயத்தில் தொடரப்பட்டன'' என்று வரையும் வ. உ. சி. மேலும்,

'என் வகையார் கைது செய்யப்பட்டதும் சென்னை நண்பர்களான ஸ்ரீமான் ஸ்ரீநிவாஸாச்சாரி, சுப்பிரமணிய பாரதி முதலியோர் திருநெல்வேலிக்கு வந்து சேர்ந்தனர். அப்பொழுது நாங்கள் மூவரும் (வ.உ.சி., சிவா, பத்மநாப அய்யங்கார்) பாளையங்கோட்டை மத்திய சிறையில் விசாரணைக் கைதியாக இருந்தோம்...என்னைக் கண்டதும் மாமா அப்படியே ஆலிங்கனம் செய்துகொண்டார். அவர் கண்களில் நீர் மல்கியது. 'பிள்ளைவாள், என்ன காரியம் செய்துவிட்டார்கள் பார்த்தீர்களா?' என்று மாமா அங்கலாய்த்தார். நான் சமாதானம் கூறி அவரைத் தேற்றினேன்,

அப்பொழுதுதான், மாமா எனக்கும் கலெக்டர் வின்சு துரைக்கும் நடந்ததாக உருவகப் படுத்திய கீழ்க்கண்ட பாடல்களை எழுதித் தந்தார்...'' என்று குறிப்பிடுகின்றார்.

அந்த இருபாடல்களும் முறையே கலெக்டர் வின்ச் ஸ்ரீசிதம்பரம் பிள்ளைக்குச் சொல்லுதல், கலெக்டர் வின்சுக்கு ஸ்ரீசிதம்பரம் பிள்ளை சொல்லும் மறுமொழி என்ற தலைப்பில் வெளிவந்த பாடல்களாகும்.

கலெக்டருக்கும் தனக்கும் நடந்த வாக்குவாதம் குறித்த உருவகப் பாடல்கள் இவை என்று வ.உ.சி. கூறுகிறார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

''தோன்று தோற்றித் துறைபல முடிப்பினும்'' அடக்கமாக விளம்பும் இயல்புடைய வ.உ.சி. அதுபற்றி வேறெதுவும் கூறவில்லை. என்ன பேசினேம் எப்படிப் பேசினேம் என்று எதுவும் குறிப்பிடவில்லை. அது பற்றி நா. வானமாமலை 'இந்தச் சந்திப்பு பற்றிய ஆதாரங்கள் எதுவும் இப்பொழுது கிடைக்கவில்லை. ஏறக்குறைய பாரதி பாடிய முறையில் தான் விஞ்சுதுரைக்கும் சிதம்பரம் பிள்ளைக்கும் இடையே உரையாடல் நிகழ்ந்திருக்க வேண்டும்'' என்று எழுதுகிருர்.

பாரதியாரின் பாடல்களில் உள்ள முறையில் உரையாடல் நடந்திருக்கலாம் அல்லது கூடுதலான கடுமையுடனும் நடந்திருக்கலாம். ஆணவத் திமிர் மிக்க ஆட்சியாளனுக்கும், பார்த்தால் பசு பாய்ந்தால் புலி என்ற இயல்புடையவ.உ.சிக்கும் மிகக் கடுமையாகச் சொற்போர் நடந்திருக்கலாம். இல்லாவிட்டால் நீதிபதி பின்னே (பின்கே), ''அவர் வெறுக்கத்தக்க ராஜத்துரோகி. அவருடைய எலும்புகள் கூட, சாவிற்குப்பின் ராஜத் துவேஷத்தை யூட்டும்'' என்று தீர்ப்பில் எழுதுவானு?

எப்படியாயினும் விடுதலைவீரச் சொற்போருக்கு அற்புதமான பா வடிவம் கொடுத்த பாரதியாரின் சொற்றிறம் வியக்கத் தக்கது என்பது மட்டும் மறுக்கவொண்ணுதவாறு உள்ளது. ஒவ்வொரு சொல்லும் சுண்டினுல் குருதிகொட்டும் அளவுக்கு ஒப்பற்ற முறையில் உயிராற்றல் ததும்பி நிற்கிறது. காலத்தால் அழிக்க முடியாத இளமை கொழிக்கும் வரலாற்றுச் சித்திரமாகச் சொற்கள் இயைபுபெற்றிருக்கின்றன. வ.உ.சியும் பாரதியாரும் 'இதயத்துள்ளே இலங்கு மகாபக்தி'யின் ஒற்றுமை காரணமாகச் சிந்தனை ஒன்றுடையாராக இருந்தவர் என்பதனை இது காட்டி நிற்கின்றது.

O

வேளாளன் சிறை புகுந்தான் – ஒரு கவிதை மடல்

வ.உ.சிக்குச் சிறைத் தண்டனை தரப்படுகிறது. முதலில் பாளையங்கோட்டை. பிறகு கோவை. கோவையில் இருந்த அவரைக் காண்பதற்குப் பரவி நெல்லையப்பபிள்ளை என்ற

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தேசபக்தர், எழுத்தாளர், 1910இல் ஒரு சமயம் கிளம்புகிறார். முதலில் பாரதியாரைப் போய்ப் புதுவையில் பார்க்கிறார். பாரதியார்க்கு அவர் உடன்பிறவா உண்மைத் தம்பி. பாரதியைப் போய்ப் பார்த்துக்கொண்டு கோவைக்குப் புறப்படுகிறார். பாரதியார் அவரிடம் தம் நண்பர்க்குப் பாடல்கள் எழுதியனுப்பினார். அதில் ஒன்று இது என்று சென்னை அரசாங்கப் பதிப்புக் குறிப்பிலிருந்து அறியமுடிகிறது.

அந்தப் பாடல்தான் வ.உ.சி.க்கு வாழ்த்து என்ற மகுடத்தில் இருக்கும் இந்த ஒரே விருத்தம்.

கருத்தமைதி

என் நண்பரசே! ஊருக்கு உழைக்கும் உபகாரியும் வேளாண் நெறியினருமான சிதம்பரம்பிள்ளை தேசமக்கள் நலம் கருதித் தாமே சிறை புகுந்தார். திரும்பி அவர் வருவார். அங்ஙனம் வரும்பொழுது தமிழகத்து மக்கள் எம் மன்னவன் வந்தான் என்று இதயங்களித்துப் பொங்கும் மகிழ்ச்சியில் எங்கும் கொண்டாட, இதற்கு முன்பு இது போன்று எங்கும் நடந்ததில்லை என்று கூறுமாறு, கேட்டறியாப் புதுவரலாற்றை விரைவிலே கேட்பாய் நீ!

இன்றுனக்கு வாய்த்துள்ள கொடுந்தண்டனைக்காக வருந்தாதே. நீ வருந்தமாட்டாய் என்பதை அறிவோம். சிறையில் நீ வதியும் காலத்தே நாங்கள் வாளாவோ இருப்போம்? முயற்சி சிறிதளவு தானோ செய்வோம்?

இறைவனை நினைந்து உற்றநோய் நோன்று சிறைத்தவம் புரிந்து வருவாயாக. அந்தத் தவங்களின் பயனாக நாங்கள், நின் நண்பரும் உடன்பிறப்புகளும் ஆகிய நாங்கள், தமிழகத்து மக்கள், வாளாண்மை பெறுக என்று எம்மை வாழ்த்துவாயாக. எம்மை வாழ்த்தும் நீ வாழிய வாழிய!

C

இந்தப் பாடலின் கருத்துப் பற்றி நா. வானமாமலை எழுதியுள்ளது சிந்தனை பொதிந்தது. அது வருமாறு.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

''உயர்நீதி மன்றத்தின் நீதிபதிகள் தங்கள் தீர்ப்பில் பின் வருமாறு குறிப்பிட்டனர்:

பிள்ளையினது வாழ்க்கையின் அரசியல் நோக்கம் ஆங்கிலேயர்களை இந்திய அரசியல் அரங்கிலிருந்து வெளியேற்றுவதாகும். இந் நோக்கத்தை மறைக்கவே அவருடைய மற்ற நடவடிக்கைகள் இருந்தன. அவர் ராஜத் துரோகி என்ற பின்னே (நீதிபதி)யின் கருத்தை நாங்கள் ஒப்புக் கொள்கிறோம்.

உயர்நீதி மன்றமும் பிள்ளையின் அரசியலை (மாவட்ட நீதி மன்றத்தின் கருத்தையே) ஒப்புக் கொண்டது. ஆனால் மக்கள் சார்பில் பாரதி, வ உ.சிக்கு வாழ்த்துக் கூறினர். ''சிறை புகுந்த சிதம்பரம்பிள்ளை தமிழகத்தார் மன்னன் என மீள்வார்'' என்ற நம்பிக்கையைத் தமிழக மக்களுக்கு உண்டாக்குகிறார். சிதம்பரம் பிள்ளை சிறையில் இருக்கும் பொழுது அவரது அரசியல் நடவடிக்கைகளைத் தொடர்ந்து நடத்தத் தமிழகத்தார் உறுதிகொள்ள வேண்டும் என்று பாரதியார் விரும்புகிறார்.

தலைவர்கள் மீது விதிக்கப்பட்ட தண்டனையைக் கேட்டுச் சோர்ந்துபோன மக்களுக்கு உற்சாகம் உண்டாக்குவதற்குப் பாரதி, மீண்டும் சீக்கிரம் வருவார் என்ற நம்பிக்கை யூட்டுகிறார். ''நாங்கள் நீ போட்டிருந்த திட்டங்களை நீயில்லாத போதும் நிறைவேற்றுவோம்'' என்று மக்கள் சார்பில் வாக்குறுதியளிக்கிறார். வ. உ. சி சிறையில் இறைவனுக்குத் தவங்கள் ஆற்றி வரங்கள் பெற வேண்டுகிறார். வெளியிலுள்ள தம் துணைவர்கள் வாளாண்மை (வாள் வீரம்) பெற வேண்டுமென விரும்பித் தவம் இயற்றித் திரும்பவேண்டுமென பாரதி வாழ்த்துகிறார்.''

''இந்தப் பாடலில் சோகம் இல்லை. வ. உ. சி சிறைவாழ்க்கையைக் கூட மக்கள் அரசியல் உணர்வு தாழாமல் பாதுகாக்கப் பயன் படுத்துகிறார்'' என்று கருதும் வானமாமலை, பாரதியார் பாடலில் எதிர்பார்த்தது நிறைவேறியதா என்ற கேள்விக்கு விடையளிப்பவராகப் பின் வருமாறு வரைகிறார்:

சிதம்பரம் பிள்ளை சிறைக்குச் செல்லும் பொழுது அவரை வழியனுப்பியது ஒரு மாபெருங் கூட்டம். அவரது தண்டனை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

யைக் கண்டித்து எழுச்சி மிக்க எதிர்ப்பியக்கம் நடைபெற்றது. இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர் அவர் கோவைச் சிறைக்கு மாற்றப்பட்டுக் கொண்டு செல்லப்படும் பொழுது உற்சாக மிக்க கூட்டங்கள் ரயில் நிலையம் தோறும் வழியனுப்பியது.

ஆனல் 1912இல் நிலைமை மாறியது...பிரிட்டிஷ் கொடுமைகளை எதிர்க்கத் தலைமை தாங்கும் அணித் தலைமை சிறைக்குள் அடைக்கப்பட்டு விட்டது.

பாரதியார் எதிர்பார்த்தது போல, வேளாளன் சிறை புகுந்தான் தமிழகத்தார் மன்னன் என மீள்வான் என்ற வாக்குப் பொய்த்துப் போய்விட்டது. அவரைச் சிறைவாயிலில் வரவேற்கக் காத்திருந்தவர் ஒரே ஒருவர்தான். அது அவரது விசுவாசமிக்க போராட்டத் தோழர் சிவா தான். சேலம் சிறையில் அவருக்குப் பெரும் வியாதி கண்டதால் விடுதலை செய்துவிட்டார்கள். அவர் சேலம் மாவட்டத்தில் சுதேசி இயக்கத்தில் பல இன்னல்களை ஏற்றுச் செயல்பட்டுக் கொண்டிருந்தார். அவரைச் சிறையில் வரவேற்க வந்தவர் அவர் ஒருவர் தான்.

வ. உ. சி விடுதலையாவதற்கு முன்னர் சுதேசிக் கப்பல் கம்பெனியின் முதலாளித்துவ டைரக்டர்கள், அக் கம்பெனியைப் பல சாகசங்களால் அழிக்கவும் வ.உ.சியைச் சிறைக்கனுப்பவும் முயன்று வெற்றி கண்ட பிரிட்டிஷ் கப்பல் கம்பெனிக்கே விற்றுவிட்டார்கள். இச் செய்தி அவர் மனத்தில் பெருங்கவலையை ஏற்படுத்தியது. இவ் வதிர்ச்சியிலிருந்து விடுபட அவருக்குப் பல ஆண்டுகள் ஆயின...

○

கேளாத கதை

''கேளாத கதை விரைவில் கேட்பாய்'' என்ற கூற்றில் வரும் கேளாத கதை என்பதில் முரண்குறிப்பு அமைந்து விட்டாற் போல் இருக்கிறது. இதுவரை ''கேள்விப்பட்டறியாத கதை'' என்ற பொருளில் வந்த தொடர், கேளாத கதை என்ற

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பொருளையே கொடுக்க நேர்ந்தது, எதிர்பாராத ஒரு யதார்த்த மாகவே நடந்துவிட்டது.

○

கேட்ட கதை

வேளாளன் சிறை புகுந்தான் என்ற தொடர் 'வேளாளர் தீப் புகுந்தார்' என்ற தொண்டை மண்டல வரலாற்றுக் குறிப்பை எதிரொலிப்பது போல் இருக்கிறது. சொன்ன சொல் காக்கத் தீக்குட் புகுந்து வேளாளர் எண்ணுயிரவர் உயிரை மாய்த்துக்கொண்டனர். பின்பு இறைவன் திருவருளால் அவரெலாம் உயிர்பெற்று மீண்டனர் என்ற வரலாறு சேக்கிழார் பிள்ளைத் தமிழாலும் அறியக் கிடக்கின்றது.

○

வேளாளன் சிறைபுகுந்தான் புனல் நாட்டார் மன்னனென மீண்டான் என்று நடந்ததொரு வரலாறு உண்டு. எதிரிகளின் சூழ்ச்சிகளால் சிறை எய்தி நெருப்புக்கு நெருக்கமாகித் தப்பித்து வந்த ஓர் வேளாண் இளைஞன் கூர்த்த மதியுடைய களிற்றினுல் மாலை சூட்டப்பட்டுச் சோணுட்டிற்குரிய தன் அரியணையைப் பெற்றுக் கரிகாற் பெருவளத்தான் என்று நாடு முழுதும் ஏத்த நல்லாட்சி நடத்திய கதை முன்னைக் காலத்து வரலாற்றுச் செய்தியாகும்.

○

வாளாண்மை

'வாளாண்மை நின் துணைவர் பெறுகெனவே வாழ்த்துதி நீ' என்று வ.உ.சியை வேண்டிக் கொள்கிருர் கவிஞர்.

மிதவாதத்தை விரட்டித் தீவிரவாதம் அரங்கேறிய காலம் திலகர் அரவிந்தர் வ.உ.சி பாரதியார் காலம். அந்தக் காலத்தில் அவர்கள் உயர்ந்து நின்ருர்கள். அடுத்து 'அகிம்சா காலம்' வந்ததும் தீவிரவாதம் கடைகட்டுவதைத் தவிர

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அதற்கு வேறு வழியில்லாமற் போய்விட்டது. வாளாண்மையில் நம்பிக்கை கொண்டவர் என்பதால் தான், ஆஷ் கொலையுண்ட செய்தியையும் வாஞ்சிநாதன் தற்கொலை செய்து கொண்ட செய்தியையும் அவரிடம் சிறை டாக்டர் இரகசியமாகக் கூறியபொழுது வ.உ.சி ''இந்த நல்ல செய்தியை வரவேற்கிறேன்'' என்று மகிழ்ச்சியோடு கூறினர்.

வ.உ.சி. முதலானேர் கருதியபடி இந்திய தேசிய வீரர்கள் வாளாண்மை பெற்றிருந்தால்...என்று கற்பனைக்குக் கூர்தீட்டிப் பார்ப்போமானுல்...என்ன முடிவு விடையாகக் கிடைக்கும்?

பாரதியார் பாடிய 'சேதமில்லாத' இந்தியா நமக்குக் கிடைத்திருக்கும். ஐயமே இல்லை.

அடுத்தவர்களின் பண்பாடு, கடவுட் கொள்கை, நாகரிகம் என்பன அறவே பிடிக்காத கொடூரமான கொள்கையுடன் அடக்குமுறையைக் கையாண்ட அவுரங்கசீபின் ஆட்சியை மராத்தியவாளும் இராசபுத்தானத்து வாளும் பஞ்சாபிய வாளும் மற்றும் பிறவாளும் தான் முறியடித்தன என்பதை மறந்து விட முடியாது.

இரத்தம் சிந்தி, தூக்கில் ஏறி, சிறைக் கிடந்து, நாடு கடந்து, வாழ்க்கையைப் பலி கொடுத்துத் தேசபக்தர் பல்லாயிரர் அயலரசோடு போராடி விடுதலை பெற நெருங்கும் சமயத்தில், அயலரசின் அரவணைப்போடு இந்தியரையே கொன்று குடலை உருவிக் குறுக்கு வழியில் இந்தியாவைப் பிரித்துக் கொண்டு போனது அவுரங்கசீபின் ஆவி என்பதை மறந்து விட முடியாது. வாளுக்கு வாள் பதில் சொல்லியிருக்குமானுல் அந்த ஆவி தன் கல்லறையை விட்டு வெளியவே வந்திருக்காது.

வாளாண்மை பெற்றுத்தான் சீனத்து வேளாண்மைக் குடிகள் பூதாகாரமான அமெரிக்க கோமிங்க்டாங் பேய்க்கூட்டத்தை ஓட ஓட விரட்டித் தத்தம் பதுக்கைகளில் கிடக்குமாறு ஒடுக்கினர் என்பது உலகறிந்த ஓர் இரகசியமாகும்.

இந்தியத் தேசிய வீரர் வாளாண்மை மரபில் வளர்ந்து

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

விடுதலை அமிருதம் பருகியிருப்பார்களானால் நாட்டைப் பிடித்த ,பலவிதமான நோக்காடுகள் பக்கத்தில் வராமல் பலகாத தூரத்துக்கு அப்பாலேயே நின்றிருக்கும்.

இந்திய விடுதலை வீரர் வாளாண் நெறியில் முதிர்ந்து வந்திருப்பார்களானால் ஆப்பிரிக்கர்கள் இந்தியர்களைக் கொல்கிறார்கள், இசரேலியர்கள் கொல்கிறார்கள், எல்லை ஓரத்தில் கொல்லுகிறார்கள், இங்கிலந்தில் கொல்லுகிறார்கள், கேவலம் இலங்கையில் கொல்லுகிறார்கள் என்ற செய்திகள் பத்திரிகைகளில் வருவதற்கே பயந்து நடுங்கியிருக்கும்.

இந்தியாவுக்குள்ளும் கத்தி வைத்திருப்பவர், கத்தி வைத்தி ராத காருண்யமிக்க அப்பாவிகளைக் குழந்தைகளைக் கொல்லும் விசித்திர வீரமும் அவர்களது கூட்டம் இந்திய ஒன்றிய அரசியலில் கை ஓங்கி இருப்பதும் நிகழ்ந்திருக்கவே மாட்டா.

ஆகவே வ.உ.சி, திலகர் கொள்கை மரபு சரி என்று கருத வேண்டியிருக்கிறது. சிறையிலிருந்து விடுதலைபெற்ற வ.உ.சி யைத் திலகர் 1915இல் புனேக்கு வருமாறு அழைத்தார்.

முதல் உலகப் போர்நிலவரம் குறித்தும் ஜெருமெனியின் உதவியுடன் இந்தியாவில் புரட்சி நடத்துவது குறித்தும் அவர்கள் ஆலோசனை நடத்தினார்கள் என்று தெரிகின்றது. நத்தைக் கூட்டுக்குள் நெடுந்துயிலில் கிடக்கும் சோர்ந்த சக்தியை அந்த அளவுக்கு அப்போது எழுப்ப முடியாது என்றோ வேறு எதனாலோ அவர்கள் கைவிட்டார்கள். முடிவின் காரணம் தெரியவில்லை.

O

"தமிழ் நாடு உயரவில்லை"

நம் மக்கள் வாளாண்மை பெறுமாறு இறையருள் பெற்று வாழ்த்துக என்று வ.உ.சி.யிடம் பாரதியார் கேட்டதும், யாம் தாளாண்மை (முயற்சி) மிகப் புரிவோம் என்று வாக்கு றுதி தந்ததும் ஒருபக்கம் பிழைபட்டுப் போயின. அதற்கு யாரை நோவது? "நதியின் பிழையன்று நறும்புனலின்மை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

...விதியின் பிழை'' என்று கம்பராமன் கழறியது போன்று விதியின்பேரில் பழியைப் போட்டால்தான் ஆறுதல் சிறிது கிடைக்கும் போல் இருக்கிறது!

சிறைக்குள் இருந்த வ.உ.சி க்கு ஊக்கம் அளிக்கப் பாரதியார் பாடினர் இந்தப் பாடலை என்ருலும் அவருடைய கவிதை மனத்தின் சோகமானது எண்ண அலையைச் சுருட்ட, ஆவேசம் அதனை விரட்டிக் கரைமோதிக் கொண்டிருந்தது என்பதையும் காணமுடிகிறது. அவருடைய நேசமிக்க தேசபக்த நெஞ்சத்தில் வ.உ.சி இடம்பிடித்திருந்த நிலையில் சுதந்திர தாகம் என்ற பாடலில்,

மேலோர்கள் வெஞ்சிறையில் வீழ்ந்து கிடப்பதும்
நூலோர்கள் செக்கடியில் நோவதுவுங் காண்
கிலேயோ?

மாதரையு மக்களையும் வன்கண்மை யாற்பிரிந்து
காத லினைஞர் கருத்தழிதல் காணுயோ

என்று இதயம் புழுங்கிப் பாடுகிருர்.

ஆக, வந்தேமாதரம் பிள்ளை என்று மதிப்புற அழைக்கப் பட்ட வ.உ.சியை விஞ்சின் குற்றச்சாட்டில் வைத்து

கூட்டங் கூடிவந் தேமா தரமென்று
கோஷித்தாய்—எமைத்—தூஷித்தாய்
ஓட்ட நாங்களெ டுக்கவென் றேகப்பல்
ஓட்டினுய்—பொருள்—ஈட்டினுய்

என்று கப்பலோட்டியதைச் சிறப்பித்தும் மற்றவற்றைத் தெளிவுபடுத்தியும் அவரது தேச சேவையை 'நிந்தாஸ்துதி' யாகப் பாராட்டிய கவிஞர், விஞ்சுக்கு வ. உ. சி. செப்பும் மறுமொழியில் வைத்து அவரது இதயத் துடிப்பை அப்படியே ஒலிப்பதிவு செய்து காட்டுகிருர். பின் வ. உ. சி. க்கு வாழ்த்து என்று நாம் காண எடுத்துக் கொண்ட ஒரு தனி விருத்தத்தில் அவரைத் தமிழகத்தார் மன்னன், தம் கேண்மைக்கோ என்று அரியாசனத்து அமர்த்துகிருர். சுதந்திர தாகம் என்ற பாடலிலோ கண்ணீர் மலர்களை அன்பளிப்பாக்குகிருர்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இவ்வாருக ஒருமுறைக்கு மும்முறை பாரதியாரால் பாடப் பெற்ருர் வ.உ.சி. அந்த வீரரின் சிறுநுண் பிரதிபிம்பமாக விளங்கிய அவர் குமாரன் 'குட்டிச் சிதம்பரம் பிள்ளை' என்று பாரதியாரால் தட்டிக் கொடுக்கப் பட்ட உலகநாதன் மீதும் அவர் கவிதை சூட்டிஞராம். அந்தப் பாடல் சிறைக்கு அனுப் பப்பட்டதென்றும், அந்த மைந்தன் தனது இருபத்திரண்டாம் வயதில் அகால மரணமடைந்தது போலவே அந்தப் பாடலும் காணுமற் போனதென்றும் வ.உ.சி. குறிக்கிருர்.

இனி, சுதந்திர தேவி என்ற பாடலில்

இதந்தரு மனையி னீங்கி
இடர்மிகு சிறைப்பட் டாலும்
பதந்திரு இரண்டு மாறிப்
பழிமிகுத் திழிவுற் ருலும்
விதம்தரு கோடி யின்னல்
விளைந்தெனை யழித்திட் டாலும்
சுதந்திர தேவி நின்னைத்
தொழுதிடல் மறக்கி லேனே

என்று தொடங்கித் தேவியை வேண்டும் பொழுதும் அவரு டைய நினைவில் வ. உ. சி. யின் சிறைவாழ்வும் சீர்குலைவும் ஆழ்ந்து இருந்திருக்க வேண்டும்.

பாடலில் வருவது போல் பாரதியார் சிறை செல்லவில்லை என்பதுண்மை. ஆயினும் ''அங்கே (புதுவையில்) பத்து வருஷம், அரணில்லாது தானே சுமத்திக் கொண்ட சிறையில் விலங்கற்ற கைதியாய் வறுமை நோய் முதலிய துன்பங்களுக் காளாய் வெளியில் புகழ்பவரின்றி நெஞ்சில் நேசிப்பாரும் ஆதரத்துடன் ஆதரிப்பாரும் இன்றிப் பலவாறு வருந்திஞர்' என்று சோமசுந்தர பாரதியார் வரைந்திருப்பது முழுக்க உண்மை.

ஆக வ.உ.சி, பாரதியார் இருவருமே இருவகைச் சிறைகளில் அலக்கண் பட்டார்கள். சுதந்திர தேவியைத் தொழுதிடல் மறக்கவில்லை.

வ. உ. சி விடுதலை பெற்ற பிறகு, புதுவையில் இருந்த

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பாரதியார் அரவிந்தர் வவேசு அய்யர் மாடசாமிப் பிள்ளை முதலிய தேசபக்தர்களைப் பார்க்கச் செல்கிறார். பாரதியாரின் வீட்டில் தங்குகிறார். அளவளாவல், உரையாடல், வாக்குவாதம் என்பன அவ்வப் பொழுது அங்கு நடைபெறுகின்றன. சுதேசிக் கப்பல்களில் ஒன்று எதிரிகளிடமே முதலாளித்துவ அடியார்களான அதிகாரிகளின் துரோக நினைப்பால் விற்கப் பட்டது தன் நெஞ்சில் உதிரத்தைப் பெருக்குகிறது என்பதை வ உ.சி. பாரதியாரிடம் கூறுகிறார். அதற்கு அவர் ஆவேசம் கொண்டு சொல்லிய சொற்கள், தான் புதுவையை விட்டுப் பிரியும்போது தன் உள்ளத்தில் ஒலித்துக் கொண்டிருந்தன என்று வ.உ.சி. குறிக்கிறார்.

''சிதம்பரம், மானம் பெரிது! மானம் பெரிது! ஒரு சில ஓட்டைக் காசுகளுக்காக எதிரியிடமே அக் கப்பலை விற்று விட்டார்களே, பாவிகள். அதைவிட அதைச் சுக்கல் சுக்கலாக நொறுக்கி வங்காளக் குடாக்கடலில் மிதக்க விட்டாலாவது என் மனம் ஆறுமே! இந்தச் சில காசுகள் போய்விட்டாலா தமிழ் நாடு அழிந்து விடும்? பேடிகள்''

என்று எவ்வளவோ கடுஞ்சொற்கள் கூறினர் என்று வரையும் வ.உ.சி ''என் செய்வது? தமிழ்நாடு உயரவில்லை என்றுதான் சொல்லவேண்டும். புதுவையிலிருந்து நான் என்னுடன் கொண்டுவந்தவை புஸ்தகங்கள் படுக்கைகள் மட்டுமல்ல; மாமாவின் இந்த மணிவாசகமும் தான்''

என்று உணர்ச்சிகள் உள்ளடங்கிய எளிய சொற்களில் எழுதுகிறார் வ.உ.சி.

கருத்து வேறுபாடு

அதன்பிறகு பாரதியார், சென்னையில் வ.உ.சியை அவருடைய இல்லத்தில் கட்டையான ஒரு அழுக்குச் சாமியாரோடு சென்று காண்கிறார். அவர்களுக்கு வேண்டிய ஊண் உடை எல்லாம் கொடுத்த வ.உ.சி அவர்கள் இலேகியம் தின்பதையும் வெறிகொள்வதையும் ஆடிப்பாடுவதையும் கடுமையாகக் கண்டிக்கிறார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இவ்வாறு அவர்களிடையே, தேநீர்க் குவளையில் தோன்றும் குமிழிகள் போன்று கருத்து வேறுபாடுகள் எழாமல் இல்லை.

தமிழில் இல்லாத ஒலிகள் என்று சொல்லப்படுவனவற்றின் வரிவடிவுகளை அப்படியே தமிழில் பெய்து Fரான்ஸ் (பிரான்ஸ்) Ζென் (zen] என்றாற் போன்று எழுதலாம் என்று பாரதியார் எழுதியதை எதிர்த்து அவை தேவையில்லை, அங்ஙனம் எழுதுவது முறையற்றது என்று எதிர்த்தெழுதினார் வ.உ.சி.

பிராமணரல்லாதார் இயக்கம் என்பது தவிர்க்க முடியாத ஒரு சக்தி என்ற நிலையில் வேர்கொண்டு விட்டபோது பாரதியார் அதனைக் கடிந்து எழுதுகிறார். அவ்வளவுதான் அவரால் முடிந்தது. அந்த இயக்கம் தேசப்பகை இயக்கமாகி விடலா காது என்று தேசநிபுணத்துவக் கொள்கையுடையவராக அதனை அதனோடு உடன்சென்று தேசிய நெடுஞ்சாலையில் செலுத்த வேண்டும் என்று வ.உ.சி. பிராமணரல்லாத தேசிய வழக்குரைஞர் சங்கத்திற்குத் தலைமை தாங்க முன்வந்தார்.

வாழ்த்துகிறார் வ.உ.சி

பின்னர் அவ்வப்போது சென்னையில் சுதேசமித்திரன் அலுவலகத்திற்குச் செல்லும் பொழுதுகளில் அதன் துணை ஆசிரியராக இருந்த பாரதியாரைக் கண்டு பேசி விட்டு வரும் வழக்கமுள்ள வ.உ.சி, மித்திரனில் அவர் எழுதிய எழுத்துக் கள் தமக்கு ஆனந்தம் ஊட்டின என்று தெரிவிக்கிறார்.

கொஞ்ச நாளில் பாரதியார் காலஞ்சென்றார் என்ற செய்தி கேட்டு வ.உ.சி "திடுக்கிட்டுத் துக்கக் கடலில் தத்தளித்தார். நல்லார்க்கு அதிக காலம் இல்லை போலும்" என்று நினைத் தார். கடைசியாக அதுபற்றி எழுதும் அவர்

"மாமா இவ்வுலகை விட்டு மறைந்துவிட்டாலும் அவரது தேசிய கீதங்களும் மற்றைய பாடல்களும், கதை கட்டு ரைகளும் இவ்வுலகம் உள்ளளவும் நிலைத்துப் புகழ்வீசும் என்பதில் ஐயமில்லை. அவருடைய பெயர் தேசாபிமானிக

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ருடைய சரிதத்தில் மட்டுமல்லாமல் கவிதா மேதைகளின் சரிதத்திலும் வைரம் என ஒளிவிடும்.

அவருடைய பாடல்களின் அருமை பெருமையையும் சிறிது இயம்ப வேண்டும் என்று நினைத்தேன். ஆனால் எனக்கு ஆற்றலின்மையாலும் அவகாச மின்மையாலும் அவ் வேலையிற் புகாது நின்று, கவிச் சக்ரவர்த்தி சுப்பிரமணிய பாரதியின் பாடல்களையே நம் தேசத்து மக்கள் என்றென்றும் படித்துவர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்'' என்று நிறைவுபடுத்துகிறார்.

இங்கே பாரதியாரைக் கவிச்சக்கரவர்த்தி என்று அடை கொடுத்து எழுதுவதையும் வழக்கமாகக் காணப்படும் அடக்கத்தை விட அதிக அடக்கத்துடன், அவருடைய பாடல் களைப் பற்றி எழுதத் தனக்கு ஆற்றலில்லை என்று தயங்குவ தையும் வாசிப்போர் கவனிக்கக் கூடும்.

வ.உ.சிக்கு வாழ்த்து

பாரதியார்க்குப் பிறகு பத்து பதினைந்து ஆண்டுகள் கழித்து வ.உ.சி விடை பெறுகிறார். சுதந்தரக் காற்றைச் சுவாசிக் காமல் போகிறோம் என்ற வருத்தம் தவிர வேறு உலகியல் வருத்தம் எதுவும் அவரை உறுத்தவில்லை.

கடைசி நேரத்தில் பாரதியாரின் தேசிய கீதங்களை, நல்ல குரலுடையார் பாடக் கேட்டுக் கொண்டே உயிர் விடுகிறார். பாரதியின் விடுதலை முழக்கொலியில் வ.உ.சியின் உயிர் மூச்சு இரண்டறக்கலந்து காற்றோடு காற்றாக யாண்டும் பரவி விடுகிறது.

உலகம் உள்ளளவும் பாரதியாரின் பாடல்கள் நிலைத்துப் புகழ் வீசும் என்று வ.உ.சி. உறுதி பெறக் கூறுகிறார். அங்ஙனம் பாரதியாரின் பாடல்கள் புகழ் வீசுங் காலமெல்லாம் வ.உ.சி. யின் மாசுமறுவற்ற தேசபக்தியும் தியாகமும் அழிவின்றித் துலங்கிவரும் என்பதில் எள்ளளவும் ஐயமுண்டோ?

மகாராஜாக்கள், இராஜாதி ராஜாக்கள், 'சர்'கள், மந்திரி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பிரதானிகள், தலைவர்கள் பெயர்களெல்லாம் தெருவெல்லாம் பொறிக்கப் பெற்று முச்சந்திகளெல்லாம் சிலைவடிவில் நிறுத்தப் பட்டாலும் காலம் அவற்றின் மீது தூசியைக் கொட்டிக் கொட்டி இருந்த இடம் தெரியாமல் மறைத்து விடும்.

வ.உ.சி; பாரதியார் ஆகிய இருவரும், விலைமதிக்க முடியா மிகச்சிறந்த நன்மணிகள். அவர்கள் தூய வாழ்க்கை வாழ்ந்தவர்கள். மனிதகுலத்திற்காகத் தங்கள் தனிநலம் குடும்பநலம் யாவற்றையும் ஆகுதியாக அளித்தவர்கள். தம்மைப்போல உண்மையாகவே மற்றவர்களையும் பேதமிலாது நேசித்தவர்கள். எல்லார்க்கும் தன்னம்பிக்கையும் தைரியமும் ஊட்டியவர்கள். தாராளமாக அன்பும் அருளும் பொழிந்தவர்கள். முற்போக்கு இயக்கங்களின் முன்னோடிகள் அவர்கள்.

அவர்களுள் பாரதியார் உலக சுதந்திரமகாக் கவிகளுள் ஒருவர். வ.உ.சி இந்திய தொழிற்சங்க இயக்கத்தின் பிதாமகன. விடுதலை இயக்கத்தின் தமிழகத்து மன்னன். உலக சுதந்திர மகாவீரர்களில் ஒருவர்.

பட்டாபி சீதாராமையாவின் காங்கிரசு வரலாற்றில் வ.உ.சி பற்றி ஒரு வரியும் இல்லை என்று, அறிந்தார் பலரும் வருந்தி வரைந்துள்ளனர். அந்தப் பட்டாபியைக் காங்கிரசுத் தலைவர் தேர்தலுக்கு நிறுத்தி அவர் சுபாஷ் போசினால் தோற்கடிக்கப் பட்ட போது பட்டாபியின் தோல்வி என் தோல்வி என்று இரங்கிய காந்தியடிகளின் பங்கையாவது காங்கிரசு வரலாற்றில் பட்டாபி எழுதியிருப்பார் என்று நம்புகிறோம்.

தென்னாப்பிரிக்காவில் இருந்த பாரிஸ்டர் காந்திக்கு வ.உ.சியைத் தெரியும் என்பதும் வ.உ.சியின் தீரமும் தியாகமும் அவருக்கு வியப்பும் மதிப்பும் அளித்தன என்பதும் ''அன்புள்ள வ.உ.சிதம்பரம் பிள்ளைக்கு மோ.க.காந்தி'' என்று தனக்குத் தெரிந்த தமிழில் எழுத்துக் கூட்டிக் கடிதங்கள் எழுதியதும் பிறவும், கண்ணாடி போடாமலே தெரிந்து கொள்ளக் கூடிய வெளிச்சமான வரலாற்று உண்மைகளாகும். பின்பு அந்த முடி சூடாமன்னன் காந்தியடிகளின் இந்திய இயக்கத்தில் சிலவற்றுக்கு ஆதரவு தந்தும் சிலவற்றுக்கு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

எதிர்ப்புக்காட்டி ஒதுங்கியும் தனிவீறுடன் விளங்கி வந்தார் என்பதும் அதிகம் அலட்டிக்கொள்ளாமல் அறியக் கூடிய உண்மைகளாகும்.

திலகரையும் காந்தியடிகளையும் தெரியக் கூடியவர்கள் வ.உ.சி யைத் தெரியாமல் இருக்கமுடியாது.

இன்றைக்கு நூற்றாண்டு மேடை போடும் காங்கிரசின் பம்பாய்த் திருவிழாவில் தென்னாட்டுத் தலைவர்களின் படங்கள் காணப்படவில்லை என்று மெல்லிய குரலில் தமிழகத்து நாளேடுகள் எழுதியுள்ளன.

திலகர் மகாத்மா படங்களாவது அங்கு இருந்திருக்குமானால் அதுவே ஆறுதல் அளிக்கக் கூடியதாகும். சிதம்பரம் இல்லாமல், தென்னாட்டு மண் அவரால் சிவப்பு ஏறாமல், இருந்திருந்தால் திலகரும் மகாத்மாவும் தத்தம் பெருமைப் பரிமாணத்தில் நிறைவு பெற்றிருப்பார்களா என்பது ஐயமே. அவர்களது தேசியப் பெருமைகளில் வ.உ.சி, பாரதிக்குப் பெரும்பங்கு உண்டு என்பது கண்கூடு.

கடைசியாக ஓர் ஆசைக் கற்பனை. பாரதியார் முந்திக் கொள்ளாமல், வ.உ.சி. மறையும் பொழுது இருந்திருப்பாரானால் 'தமிழகத்தார் மன்னனாகிய தம் கேண்மைக்கோ' பற்றி என்ன நினைந்திருப்பார், என்ன உரைத்திருப்பார் என்று ஒரு கணம் நினைத்துப் பார்க்கிறோம்.

சில கண்ணீர்த் துளிகளுக்குப் பிறகு, பாரதியார் தம் கவிதை வழிகாட்டிகளில் ஒருவராகிய ஔவையை நினைந்திருப்பார். அதிகனை அவர் பாடிய

ஆதல் நின்னகத்து அடக்கிச்
சாதல் நீங்க எமக்களித்தனையே!
நீல மணிமிடற்று ஒருவன் போல
மன்னுக பெரும!

என்ற சொற்களை முணுமுணுத்திருப்பார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அதன்பின், அவருக்கு உகப்பான சிலப்பதிகார ஆசிரியர் அதே கருத்தை விரித்துச் சொன்ன இசைவரிகளான

விண்ணோர் அமுதுண்டும் சாவ,
ஒருவரும் உண்ணாத நஞ்சுஉண்டு
இருந்தருள் செய்குவாய்!

என்பதனை வாய்விட்டுச் சொல்லி, சில கண்ணீர்ப் பூச் சிந்தி
மன்னுக எம் கோண்மைக் கோவே
வாழிநீ வாழிநீ
என்று உரக்க வாழ்த்தியிருப்பார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

Forwarded free of cost and with the compliments of the Department of Education, Government of India, New Delhi.

சிறப்பான புதிய தலைப்புகள்

சதுரகிரிப் பாண்டியன்

116884

வால்ட் விட்மன்
— அமெரிக்க மக்கள் கவி

லாங்க்ஸ்டன் ஹியூஸ்
— அமெரிக்க நீகிரோ கவி

पुस्तकालय
पुस्तकालय
गुरुकुल कांगड़ी विश्वविद्यालय

ஞானம் தம்பி

இரண்டாவது நானூறு —
ஆங்கிலப் பழமொழிகள்
பெர்னார்ட் ஷாவின் செயின்ட் ஜோன்

ஆரார்

கிழவனும் கடலும்
— கதையும் கருத்தும்
ஹாவ்லக் எல்லிஸ்
— பால் உளவியல் நிபுணர்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

Dr. R. RAJAGOPALAN,
M A (Tamil) M A (English) Ph.D.,
ANNA NAGAR, MADURAI ROAD,
TIRUPPATTUR (P.T.T.) 623211.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

GURUKUL KANGRI LIBRARY
Accos on ११.२९।
Class on
Cat on
Tag etc.
Checked
Any Other

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஒலிகள்
எதிரொலிகள்

ஆரார்

○

பாரதியாரின் பாடல்களில் தேசிய கீதங்கள் தனிச் சிறப்பு உடையவை. அவற்றுள் 26 பாடல்களுக்கு இங்கே பொருளும் இக்காலத் துக்கான பொருத்தமும் ஆராயப் படுகின்றன.

○

இது பாரதி நூற்பரப்பில் தனிவகையான ஒரு புது நூல்.

○

இது ஒரு அறிவரங்கம் வெளியீடு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar